# வரலாறு



கங்காதரர்

## எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்

புதிய கல்வெட்டுகள், பதிப்பிக்கப்படாத பாடங்கள், விட்டுப் போன தொடர்ச்சிகள் இம்முப்பிரிவுகளிலும் வலஞ்சுழிச் சடை முடிநாதர், சேத்ரபாலர் கோயில்களின் கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. இவற்றைக் கண்டறியவும் படிக்கவும் படியெடுக்கவும் துணைநின்ற அன்புள்ளங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி.

மூன்று குடைவரைகளும் மூன்று கற்றளிகளும் இந்த இதழிற்காக ஆய்வுசெய்யப்பட்டன அவற்றுள் திருநகர்க் கோயில் பேரளவினது மாடக்கோயிலாக அமைந்துள்ள அக்கட்டுமானம் இவ்விதழில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. ஆய்விற்குத் துணை நின்ற பால பத்மநாபன் நன்றிக்குரியவர். மூன்று குடைவரைகளுள் தென்பரங்குன்றம் விரிவான விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டுள் ளது உண்மைகளைத் தேடும் பயணத்தில் ஊகங்களுக்கு இட முண்டுதான். என்றாலும், அந்த ஊகங்களை வளர்ப்பதற்கும் மெலிதான அளவிலேனும் சான்றுகள் இருத்தல் வேண்டும். கூந்தலை விரிப்பது போல் ஊகங்கள் எனும் போர்வையில் கற்பனைகள் வளர்ப்பது, ஆய்வாளர்களுக்கு அழகன்று.

2007, டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத் தின் வெள்ளிவிழா ஆண்டு. இருபத்தைந்து ஆண்டுகளாக வரலாற் றாய்வில் ஏற்பட்ட அனுபவங்களைப் பதிவு செய்யக் கருதியே 'திரும்பிப்பார்க்கிறோம்' என்ற தலைப்பில் எழுதத் தொடங்கியுள் ளோம் முதல் தொகுதி இந்த இதழின் இணைப்பாக நூறு பக்கங்களுடன் உங்கள் கைகளில் தவழ்கிறது. தொடரும் தொகுதிகள் அடுத்தடுத்த இதழ்களுடன் இணைந்து வரும்.

இந்த இதழை வெளியிட இந்திய வரலாற்றுக் ஆய்வுக் கழகத் தின் நல்கையுடன் வரலாறு டாட் காம் ஆசிரியர்கள் ச. கமலக் கண்ணன், ம. இராமச்சந்திரன், மா. இலாவண்யா நல்கிய கொடை யும் அடிப்படையாயின வரலாற்றை நேசிப்பவர்களின் கைகளை விட வரலாற்றைத் தாங்க வேறெது வேண்டும்?

அன்புடன்,

இரா கலைக்கோவன்.

நன்று கருது

# வரலாறு 17

ஆய்விதழ்

2007


இரா. கலைக்கோவன்

பொறுப்பாசிரியர்

மு. நளினி

அர. அகிலா

துணை ஆசிரியர்கள்



வெளியிடுவோர்

**டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்**

*C87, பத்தாவது குறுக்குச் சாலை, தில்லைநகர் மேற்கு,*

*திருச்சிராப்பள்ளி - 620 018.*

*வரலாறு 17 (2007)*
*டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்*
*திருச்சிராப்பள்ளி - 620 018.*

VARALARU 17

Journal of Dr.M.Rajamanikkanar Centre for Historical Research
Thiruchirappalli - 620 018.

இவ்விதழ் இந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் (Indian Council of Historical Research) நல்கை உதவியுடன் வெளியிடப்பெறுகிறது. இவ்விதழில் வெளியிடப்படும் செய்திகளுக்கு அவ்வக் கட்டுரை ஆசிரியரே பொறுப்பு. இந்திய வரலாற்று ஆய்வுக் கழகம் எவ்விதத்தானும் பொறுப்பன்று.

'கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்'

## இந்த இதழில் . . . .

**1. புதிய கல்வெட்டுகள்**

1. சடைமுடிநாதர் கோயில் கல்வெட்டுகள் 5
- அர. அகிலா, மு. நளினி, இரா. கலைக்கோவன்

**2. பதிப்பிக்கப்படாத பாடங்கள்**

1. சடைமுடிநாதர் கோயில் கல்வெட்டுகள் 16
- அர. அகிலா, மு. நளினி, இரா. கலைக்கோவன்

**3. விட்டுப்போன தொடர்ச்சிகள்**

1. சேத்ரபாலர் கோயில் கல்வெட்டுகள் 25
- மு. நளினி, இரா. கலைக்கோவன்

**4. ஆய்வுக்கட்டுரைகள்**

1. கோகர்ணம் குடைவரையும் கல்வெட்டுகளும் 30
- மு. நளினி, இரா. கலைக்கோவன்

2. திருக்கண்ணபுரம் திருவாலி திருநகர் 55
- இரா. கலைக்கோவன்

3. தென்பரங்குன்றம் குடைவரை 81
- மு. நளினி, இரா. கலைக்கோவன்

4. மாங்குளம் குடைவரை 105
- மு. நளினி, இரா. கலைக்கோவன்

**5. பொதுப்பகுதி**

1. பெருமைச் சுவடுகள் 109
- ஐராவதம் மகாதேவன்

2. அங்கும் இங்கும் 114

3. அன்புள்ள உங்களுக்கு 120

4. அறக்கட்டளைப் பொழிவு - 6 — 123

- கா. ராஜன்

5. உண்டாலம்ம இவ்வுலகம் — 140

- இரா. கலைக்கோவன்

இணைப்பு

திரும்பிப்பார்க்கிறோம் — 1 - 100

- இரா. கலைக்கோவன்

---

**அலர் எழுந்தது! அவர் பிரிந்தார்!**

*மிகமிக இரகசியமாகச் சந்தித்தே காதல் வளர்த்தோம். 'பேய் தான் கண்ட கனவைக் கூறாது' என்பார்களே, அது போல, மாண்பமைந்த நுட்பமான எங்கள் காதலையும் மறைபொருளாகவே காத்து வந்தோம். யாரும் அறிந்திருக்கவில்லை என்ற எங்கள் நம்பிக்கையில் இடிவிழுந்தது!*

*வெற்றி பொருந்திய வேலையும் வீரம் மிக்க படையையும் உடைய பொறையன் பசிய பொன்னாலான அணிகலன்களை அணிந்த மார்பினன். தெய்வம் விரும்பி உறையும் பரந்துபட்ட கொல்லி மலை அவன் ஆட்சிக்குட்பட்ட இடம். அலையும் மேகங்கள் அந்த மலையை விரும்பி மகிழ்வுடன் உரசிப் பொழிவித்த மழை கொல்லியின் உச்சியில் இருந்து அருவியாய்க் கொட்டுகிறது! அந்த நீர்வீழ்ச்சியில் தான் எத்தனை பேரொலி!*

*நெஞ்சமே! அந்த ஒலியினும் பெரிதாய் ஊர்ப் பேசியது, 'நானும் அவரும் காதலிக்கிறோம்!' என்று. அலராய் எழுந்த அந்தப் பேச்சைத் தொடர்ந்தே அவர் பிரிந்தார். - அகம் 303.*

# 1. புதிய கல்வெட்டுகள்

## 1. சடைமுடிநாதர் கோயில் கல்வெட்டுகள்

அர. அகிலா, மு. நளினி, இரா. கலைக்கோவன்

*கல்வெட்டுக் களஞ்சியமாகத் திகழும் வலஞ்சுழிச் சடைமுடிநாதர் கோயில் வளாகத்திலிருந்து தம் அயராத உழைப்பினால் பால. பத்மநாபன் பல புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்தார். அவற்றுள் இரண்டு இங்கு இடம்பெறுகின்றன.*

### முதற் கல்வெட்டு

**இடம்:** *மையக் கோயில் - ஹேரண்ட முனிவர் பின்புறக் கூரை உறுப்புகள், தெற்குக் கூரை உறுப்புகள், சுவர்.*

**செய்தி:** *நமிநந்தியடிகள் முதலியோரால் இராஜேந்திர சோழன் திருமடம் அமைக்கப்பட்டது. இம்மடத்திற்கு முதல் குலோத்துங்கரின் தேவி தீனசிந்தாமணி மடப்புறமாக நிலக் கொடையளித்தார். நில விற்பனை, தரமிடல் குறித்த அரிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.*

**காலம்:** *முதல் குலோத்துங்கர்; கி. பி. 1091.*

1 *ஸ்வஸ்திஸ்ரீ திருமுகப்படி திரிபுவன சக்கரவர்த்திகள் கோநேர் இன்மை கொண்டான் உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டுத் திருவலஞ்சுழி உடைய மஹாதேவர் கோயிலில் ஸ்ரீகாரியஞ் செய்*

2 *வார்க்கும் ஸ்ரீமாஹேச்வரர்க்கும் ஆக இக்கோயிலில் நமக்கு நன்றாகச் சிவஜொக்கண உள்ளிட்ட நமிநந்தியடிகள் உள்ளிட்ட அந்திஷோம ஸாதுமாஸ்யாஜி எடுப்பித்த ராஜேந்திர சோழந் மட*

3 *த்துக்கு மடப்புறமாக கொலோத்துங்க சோழ வளநாட்டு இன்னம்பர் நாட்டு பராந்தக சதுப்பேதிமங்கலத்து ஸபையார் ஸபை விலை விற்ற பிரமாணப்படியே இந்நில*

4 *ம் மடப்புறமாக நாமும் தந்தோம் இந்நிலம் மடப்புறமாகக் கைக்கொண்டு திருத்திப் பயிரேற்றி அநுபவித்து இறையிறுத்து பிரமாணப்படியே கல்வெட்டுவிக்கவெந்று திருமந்திரஓலை*

5 சரணாலைய மூவேந்த வேளார் எழுத்திநால் யாண்டு இருபத்தொந்றாவது நாள் நூற்றொருபதிநால் பிரசாதஞ் செய்தருளி வந்த திருமுகப்படி கல்வெட்ட திருவாய் மொழிந்தருளித் தந்மிபாலர்க்காக ஸ்ரீகர

6 ணும் நந்தியநல்லூருடையாந் வீரபத்திரந் திருச்சிற்றம்பல முடையானும் ஸ்ரீமாஹேச்வரருக்காக ஸ்தானபதிகள் குலபதி நமிநந்தி அடிகள் உள்ளிட்ட அந்திஷோம ஸாது மாஸ்யாஜியாரும் திருக்குடமூக்கில் மூலபருடையா

7 ர்க்காக கண்காணி கௌவுணியந் மகாதேவந் தாழையும் சிவப்ராஹ்மணற்காக தேவர்கந்மி மாடிலந் செல்வந் முத்தாழியும் கண்காணியாகவும் வெண்ணமங்கலமுடையான் சுந்தரந் வலஞ்சுழி கணக்காகவும் இஸ்ரீபராந்தகச் சதுப்

8 பேதிமங்கலத்து மஹா சபையாரும் புரவுவரித் திணைக் களத்தாருள்ளிட்ட ஸ்ரீகரணத்தார்களும் ரக்ஷையாகவும் கணக்காகவும் சக்கரவத்திகள் கொலோத்துங்க சோழ தேவர் நம்பிராட்டியார் நாரா

9 யணந் தீநசிந்தாமணியாரான புவநமுழுதுடையார் இக்கோயிலில் ராசேந்திர சோழந் மடத்துக்கு மடப்புற மாகச் செய்த தீநசிந்தாமணி விளாகத்து நிலம் பிரமாணப் படி கல்வெட்டி .....

10 லும் ஆறாந் துண்டத்து பொது துண்டத்துப் பொது நிலம் மாகாணி முந்திரிகையும் ஒந்பதாங் கண்ணாற்று நாலாந் து

11 ண்டநிலம் காலே காணி அரைக்காணி முந்திரிகையில் கொள்ளிடன் கொண்ட நிலம் முக்காணி அரைக்கா

12 ணி முந்திரிகை நீக்கிப் பொது நிலம் நாந்மாவரையும் இங்கேய் அஞ்சாந் துண்டநிலம் எட்டு .....

13 ழ் நாலு மாக்காணி அரைக்காணியால் உடைப்பும் ஓடையும் நிலம் ஒரு மாவரை அரைக்காணிக் கீழ் நாலு மாக்காணி

14 அரைக்காணியும் நிந்ற நிலம் அறுமாவரையும் இங்கேய் ஆறாந் துண்டத்து உடைப்பு நிலம் இரண்டு மா அரைக்கா

15 ணிக் கீழ் அரை உட்பட நிலம் காலேய் அரைக்காணிக் கீழ் அரையும் பத்தாங் கண்ணாற்று அஞ்சாந் துண்டத்

16 து கூறிடும் உள்பட பொது நிலம் ஒரு மா முக்காணிக் கீழ் அரையே இரண்டு மா முக்காணி முந்திரிகையும் ஆக ஓ

17 டையும் உடைப்பும் தரமிலி களர்ப் பாழும் நிலம் ஆறு மா முக்காணி அரைக்காணிக் கீழ் ஒந்பது மாக்காணி அரைக்காணி உட்ப

18 ட நிலம் ஒன்றரையே மும்மாவரையிந் கீழ் எழு மாக் காணி இந்நிலம் ஒன்றரையே மும்மாவரையின் கீழ் எழு மாக்காணியில் முந்

19 புறம் கொண்ட சோழச்சேரி கோட்டையூர்ச் சாவாந்தி வாளை ரேவந் உத்தந் விலை கொண்டு அந்தறத்த சரகத்தே

20 சொல்லி விலை அழித்தபிந் இவர்கள் விலையேற்றிக் கொண்ட காசு பதினைஞ்சு இக்காசு பதினைஞ்சும் இத்

21 தேவர் கோயிலில் தந்மஞ் செய்ய நம்பிராட்டியார் புவன முழுதுடையார் வைத்த காசில் இந்நமிநந்தி அடிகள் கைய்யால் நா

22 ங்கள் கொண்ட காசு பதினைஞ்சு இக்காசு பதினைஞ் சும் கொண்டு இந்நிலம் ஒன்றரையே மும்மாவரையின் கீழ் எழு மாக்கா

23 ணியும் விற்றுக் குடுத்தோம் இச்சண்டேச்வரதேவர் உள்ளிட்ட ஸ்ரீமாஹேச்வரர்க்கும் சிமகா ஸபையோம் இந்நிலம் விற்

24 றுக் குடுத்துக் கொண்ட காசு பதினைஞ்சும் இன்னிலம் செப்பி இவ்வூர்க் குண்டிகைஇலே இப்பேரால் வைத்துக் கொண்டதா

25 லேய் இன்னிலத்துக்குப் பொருள் மாவறுதிப் பொருள் சிலவோலையாவதாகவும் இன்னிலங்கள் திருத்தப் பெறாது அபோவந

26 மாய்க் கிடந்தமையில் இந்நிலந் திருத்தி பயிர்ச் செய்து கொள்ளுமிடத்து இன்னிலத்துக்கு இவ்வாண்டு இட்ட தரமே

27 என்றுந் தரமாவதாகவும் தரமிலியாய்க் கிடந்த நிலங்கள் திருத்தி விளைநிலமாக்கி அவையிற்றுக்கு அசறத்தரமே தரமா

28 வதாகவும் இந்நிலத்தால் வந்த மடக்குக்கு பெருவரி இறுத்து சில்வரியும் வெள்ளாந் வெட்டியும் இம்மடத் துக்கு உடலாவதாக

29 வும் இப்படி இந்நிலங்கள் ஒன்றரையே மும்மாவரைஇந் கீழ் எழு மாக்காணியும் இம்மடப்புறமாக விற்று விலை யாவணஞ் செய்

30 து குடுத்தோம் இமஹா ஸபையோம் இப்படி பணித்தார் ஸ்ரீராஜேந்திர சோழச் சேரி அசுகூர் நாராயண நக்க பிரான்

31 ப்ரிய பட்டனும் ஸ்ரீஉத்தம சோழச் சேரி மாதவர் மதுரை நாராயணன் பட்டனும் ஸ்ரீகோவிந்தனும்

32 ஸ்ரீராஜராஜ சேரி வட்டமணி சங்கர நாராயண பட்ட னும் ஸ்ரீபராந்தகச் சேரி காரம்பிச் செட்டு கந்தாடைச் சக்கரபாணி க்ர

33 மவித்தனும் ஸ்ரீதிரிபுவநமாதேவிச் சேரி நாராயண மங்க லத்து உலோச்சனனுந் சிரிராமனும் ஸ்ரீகுந்தவைச் சேரி காரம்பிச் செட்

34 டுச் சங்கர நாராயண பட்டனும் ஸ்ரீவீரநாராயணச் சேரி காரம்பிச் செட்டு நாராயணக் கோளரி ஸஹஸ்ரஸ்ய ஸோமயாஜியாரு

35 ம் ஸ்ரீமும்முடிச் சோழச் சேரி திருப்புத்தூர் திருச்சிற்றம்பல முடையான் ஜாதவேத ஸஹஸ்ரநும் ஸ்ரீமண்ணைகிடா

36 ந்தகச் சேரி இறையாந் சேரி இளைய திருக்கதவன் நாரா யணநும் ஸ்ரீவிக்ரம சோழச் சேரி ஆதநூர் திவாகரந் வீரநு

37 ஸ்ரீமுடிகொண்ட சோழச் சேரி ஆதநூர் யஞ்ஞநகாணி திருப்பணியால் மத்யஸ்தன் அலங்காரத்தான் புள்கை யாந்வூரன் மஹாய

38 ந் எழுத்து இப்படி அறிவேன் இவ்வூர் மத்யஸ்தன் மன்றத்துளாடி பெருமானான ஸ்ரீகிராமப்ரியனேன் இப்படி அறிவேன் இவூர் ம

39 த்யஸ்தன் வெண்காமன் ஆடவலானான ஜனவாரப்ரிய னேன் இப்படி அறிவேன் இவ்வூர் மத்யஸ்தன் அரவணை யான் நாராயணநா

40 நப் ப்ரியனேன் இப்படி அறிவேன் இவ்வூர் மத்யஸ்தன் அரங்கந் மாலறி கேசுவநேந் இப்படி அறிவேன் இவ்வூர் மத்யஸ்தன் அ

41 ம்பலத்தாடி பிரியாதானேன் இப்படி அறிவேன் இவ்வூர் மத்யஸ்தன் அம்பலத்தாடி அரங்கத்தரசனேந் இவ்வூர்

42 மத்யஸ்தந் வேளாந் திருவரங்கமுடையாநேந் இப்படி அறிவேன் இவ்வூர் மத்யஸ்தன் முந்நூற்றுவந் சிராம னேந் இப்படி அறிவேன் இவ்வூ

43 ர் மத்யஸ்தன் மலைக்கினிய நிந்றாந் சிகாரி மாறனேன் இப்படி அறிவேன் இவ்வூர் மத்யஸ்தன் திருவரங்கன் பெரியாநா

44 ந திருச்சிற்றம்பல ப்ரியனேன் இப்படி அறிவேன் இவ்வூர் மத்யஸ்தன் - -

45 நேன் இப்படி அறிவேன் இவ்வூர் சிவப்ராஹ்மணன் காசியபன் காடகச் சோமாசியாநேந் இப்படி அறிவேன் இவ்

46 வூர் சிவப்ராஹ்மணன் திருவெண்காடன் செட்டி பெரியாநேந் இப்படி அறிவேன் இவ்வூர் - -

47 . . . . இப்படி அறிவேன் இவ்வூர் குசவந் பன்னிருவநேன் இது பன்மாயேசுவர ரக்ஷை

## இரண்டாம் கல்வெட்டு

*இடம்:* பெருமண்டபக் கிழக்குச் சுவர்.

*செய்தி:* முதல் இராஜேந்திரர் சிவசரணசேகரர் என்றும் அறியப்பட்டார். தம் மூன்றாம் ஆட்சியாண்டின்போது வலஞ்சுழிக் கோயிலுக்கு வருகை தந்த இப்பேரரசர், கோயிலின் மேற்குப்புறத்தே 'வியாள கஜமல்லன்' எனும் பெயரில் அமைந் திருந்த நந்தவனத்தில் உணவருந்தியதுடன் வலஞ்சுழிக் கோயில் நிவந்தங்களுக்காக நிலக்கொடையளித்தார். நிவந்தங்கள் பற்றிய விரிவான தரவுகள் பதிவாகியுள்ளன.

*காலம்: முதல் இராஜேந்திரர்; கி. பி. 1013.*

1 ஸ்வஸ்திஸ்ரீ
2 பூர்வ தேசமும்
3 கெங்கையு
4 ம் கடாரமும் கொண்
5 டருளிந கோப்பர
6 கேஸரிபம்மரான உடை
7 டயார் ஸ்ரீராஜேந்த்ர சோள
8 சிவசரணசேகர
9 தேவர் குடுத்
10 தருளிந ஊர்
11 வரியில்லி
12 ட்டபடி கல்
13 வெட்டியது கோப்பரகேஸ
14 ரிபன்மரான உடையார் ஸ்ரீரா
15 ஜேந்த்ர சோள தேவர்
16 கு யாண்டு மூன்றாவது மு
17 தல் தேவதாநங் குடு
18 த்த திருவலஞ்சுழி ம
19 ஹாதேவ
20 ர் தேவதாந
21 ம் க்ஷத்ரிய
22 சிகாமணி வளநா
23 ட்டு திருநறையூர்
24 நாட்டு ஆடிப்பு
25 லியூரு தண்ணம்பைக்
26 கரம்பைய்ம் யிது யாண்
27 டு மூன்றாவது நாள் ஐ
28 ம்பத்தைஞ்சினால் உ
29 டையார் ஸ்ரீராஜேந்த்ர சே
30 சாள தேவர் திருவலஞ்
31 சுழி உடையார் கோயிலி
32 ன் மேல் பக்கத்து நன்தவாந
33 ம் வியாள கஜமல்லநிற் கா
34 வணத்துத் திருவமுது செய்த
35 ருளாவிருந்து க்ஷத்ரிய சிகாமணி வளநாட்
36 டுத் திருநறையூர் நாட்டு ஆடிப்புலியூ
37 ருந் தண்ணப்பைக் கரம்பையும் வெ
38 ள்ளான் வகையில் முதல் யா
39 ண்டு மூன்றாவது முதல் தவிற்
40 ந்து இவ்வூர் அளந்தபடி நி
41 லன் பன்நிரண்டே முக்காலே

42 மூன்று மா முக்காணி அரைக்காணி

(தொடரும் கல்வெட்டு வரிகளின் இறுதிப் பகுதிகள் கட்டுமானத்தில் சிக்கியுள்ளன.)

43 முந்திரிகைக் கீழ் முக்காலே ஒரு மாவின் கீழ் முக்காலே

44 ம் நிலன் நாலு மாவின் கீழ் ஆறு மாவும் இவ்வூர் ரநுபோயப் புரவி

45 யக்காலால் நிலன் அரையே நாலு மாவின் கீழ் முக்காலே

46 ணி முந்திரிகைக் கீழ் நாலு மாவும் குளத்தால் நிலன் காணி

47 காணிக் கீழ் முக்காலே ஒரு மாவரை அரைக்காணி நீக்கி இரு பூ விளை

48 ன்றே முக்காலேய் நான்மாவரையின் கீழ் முக்காலே நான்மாவ

49 கீழெட்டு மாவினால் வேலி நூற்றுக்கல வரிசையால் நெல்

50 நூற்றுத் தொண்ணூற்றெழு கலநே இருதூணிக் குறுணி அறு நா

51 ம் நிலன் ஒரு மாவின் கீழ் அரையே காணி அரைக் காணிக் கீழ் எட்

52 பத்தைங்கல வரிசையால் நெல்லு கலனேய் முக்குறுணி ந

53 நீக்கி நிலன் பன்னிரண்டே அரைமா முந்திரிகைக் கீழ் அரையின்

54 கல நெல்லு ஆயிரத்தொரு நூற்றுத் தொண்ணூற்றொன் பதின் கல

55 ம் திருவலஞ்சுழி மஹாதேவற்கு வேண்டும் நிவந்தங் களுக்கு யாண்டு

56 த் தேவதானமாக வரியிலிட்டுக் குடுக்கவென்று திருவாய் மொழிந்தருளி

57 உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டு இறை யான் சேரி உடையான்

58 த்தினாலும் திருமந்திரவோலை நாயகம் நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து

59 ள் தீர்த்தகரனாந வில்லவன் மூவேந்த வேளானேன் பாண்டி குலாசநி வளநாட்டு எயில் நாட்டு

60 கண்டன் கண்ணனும் உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு கே[ரளாந்தகச் சதுப்பேதிமங்கலத்]

61 து கிருஷ்ணன் ராமனாந ராஜேந்திர சோழ ப்ரஹ்மா ராயனும் நித்தவிநோத வளநாட்டு பா[ம்புணிக் கூற்றத்து அரைசூருடையா]

62 ன் ஈராயிரவன் பல்லவரையனான உத்தமசோழ பல்லவ ரையனேன் ஒப்பிட்டு புகுந்த [நம் தீட்டின்படியே வரியிலிட்]

63 டுக் கொள்கவென்று அதிகாரிகள் உதய திவாகரன் தில்லையாளியாரான ராஜராஜ மூவேந்த [வேளானும் அருமொழிதே]

64 வ வளநாட்டு இங்கணாட்டு ஊரிகுடையார் வேளான் கூத்தநாரான பிராந்தகன் மூவேந்த வேளானும்

65 யெ உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு வயலூருடையார் தத்தன் சேந்தனா[ந இராஜேந்திர சோழப் பல்லவரையனும்]

66 இன்னாட்டுப் பேராவூர் நாட்டுத் தேவன்குடையார் மாணிக்கன் எடுத்த பாத[மான சோழ மூவேந்த வேளானும் ஏ]

67 வ புரவுவரி திணைக்களம் மணற்குடையானும் தலை மகனும் சாக்கூருடையானும்

68 யானுஞ் சிறிஞார் கிழவனும் நிலனூருடையானுஞ் செம்புறை உடையானும்

69 புன்றைக் கிழானும் இருந்து யாண்டு மூன்றாவது நாள் தொண்ணூறினால் வரியிலிட்டு

70 அரையே முக்காலே மூன்று மா முக்காணி யரைக்காணி முந்திரிகைக் கீழ் முக்

71 லே ஒரு மாவினால் காணிகட நீக்கில் நீக்கிப் புன்செய் நிலனுட்பட நிலன் பன்றி

72 காலே ஒரு மாவினால் காணிக்கடன் நெல்லு ஆயிரத் தொருநூற்று தொண்ணூற்றொன்ப

73 செல்வி இராஜகேசரியோடொக்குந் திருவலஞ்சுழியன் மரக்காலால் நெல்லு ஆயிரத்து நாநூ

74 தூணிப்பதக்கே முநாழி உரி ஆழாக்கு நிவந்தஞ் செய் யாண்டு ஐஞ்சாவது நாளிருபத்தைஞ்

75 ட்டாரும் அதிகாரிகள் சோழ மூவேந்த வேளான் ஏவ ஏவல்படி புரவுவரி திணைக்கள

76 சிறிஞார் கிழவநும் இருந்து நிவந்தஞ் செய்தபடி - - ஸந்தி மூந்றுக்குப் போநகப் பழவரிசி - - இரண்டைஞ்சாக்கி நெல்லு பதக்கு நானாழி

77 உழக்குக்கு நெல்லு நாழி உரியும் மிளகிடு கறியமுதுக்கு - - சர்க்கரை நாற்பலமும் ஆக நிறை இ . . . . . பலத்துக்கு நெல்லு நாழியும் உப்பமுது ஆழாக்குக்கு நெல்லு முக்கா

78 ல் செவிட்டுக்குமாக நெல்லு - - க்கு ஆக நெய்யமுது . . . . . . செவிடே காலுக்கு நெல்லைஞ்ஞாழியுந் தயிரமுது நாழிக்கு நெல்லு நாழி

79 கு நெல்லு நாழியும் வாழைப்பழ அமுது நாலுக்கு நெல்லு - - க்கெட்டுக்கும் இலையமுது தெரி இருபத்து நாலுக்கு நெல்லு நாழியும் அக்கய வாத்ய ஆசமணிய த்ரவ்யங்க ளுக்கு நெல்லு முழாக்கும் பசு மஞ்சள்காப்பு அறு பலத்து

80 த்துக்கு நெல் உரியும் சந்தணக்காப்பு ஒரு பலத்துக்கு - - நெல்லு நாழியும் திருவிளக்குப் பத்துக்கு நெய் உழக்குக்கு நெல்லுக் குறுணியுந் திருப்பள்ளித்தாமமுந் திருமடைப் பள்ளியுந் திருமஞ்சணமுந் தண்ணீரமுதுந் திரு

81 - - இருபத்தி நாலுக்கு நெல்லு நாழியும் - -

82 நெல்லு எழு குறுணி - - நெல்லு இருநூற்றிருபத்தெண் கலனேய் இருதூணிக் குறுணியும் திருப்பரிசட்டம் ஆறுக்குக் காசு ஆறு காசு - - சட்டம் முறித்திடு . . ஆறுக் கும் திருப்பாவாடை முறித்துக்குத் தி

83 ஒன்றும் திருப்பள்ளி மெத்தையில் விரிக்கும் திருப்பள்ளி - - ன்றுக்கும் கொட்டை நாலுக்கும் உறையிடக் கூறை . .

84 - - பன்னிரண்டுக்கு நெல்லு இருபத்திரு கலமும் நம்பிராட்டியாருக்கு இரவை

85 நெல் அஞ்ஞாழியும் பருப்பமுது ஆழாக்குக்கு நெல்லு - - பொரிக்கறியமுது ஒன்றுக்கும் ஆக கறியமுது நிறை பன்நிரு பலத்துக்கு நெல்லு உரியும் உப்பமுது இருசெவி டரைக்கு நெல்லு ஆழாக்கும் மிளகு

86 நெய்யமுது ஒரு செவிடே காலுக்கு நெல்லு நாழியும் திருஅமுது உழக்கும் - - யமுது வெறும்பாக்கு இரண்டுக் கும் இலையமுது தெரி ஆறுக்கும் நெல்லு உழக்கும் ஸந்தி விளக்கு இரண்டுக்கு நெய் இரு செவிட்டுக்கு நெல்லு நாழி உரியும்

87 திருப்படிமாற்றுக்கு நெல்லு குறுணி ஒரு நாழி மூவுழக் கேய் - - கலமும் உடையார்க்கு எரியுந் திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு நித்த . . . . . . நெல்லுக் குறுணியாக ஓராட்டைக்கு நெல் முப்பதின் கலமும் ஆடி அருளு வார்க்கும் நம்பிராட்டியா

88 ர்க்கும் சத்தி தநினாயக தேவர்க்கும் நம்பிராட்டியார்க் கும் திருவமுதரிசி நானாழி - - ண்டைஞ்சாக்கி நெல்லு பதக்கு நானாழியும் பருப்பமுதுக்கு நெல்லு நாழி உரியும் மிளகிடு கறியமுது ஒன்றுக்கும் பொரிக்கறி அமுது ஒன்றுக்கும் ஆக கறியமுது

89 ஆழாக்குக்கு நெல்லு உழக்கும் - - க்குக்கு நெல்லு நாழியும் தயிரமுது நாழிக்கு நெல்லு - - கறியமுது ஒன்றுக்கும் பாக்கு எட்டுக்கும் இலையமுது தெரிய் இருபத்து நாலுக்கும் நெல்லு

90 . . . . . சித்திரை விஷுவுக்கும் ஐப்பிகை விஷுவுக்கும் - - ஆடியருளும்படி ஒந்றுக்கு நெல்லு முப்பதின் கலமாக - - க்கு நெல்லு நாற்பதின் கலமும் திருப்புதியதமுது செய்தருளும் நாளுக்கு

91 . . . . . . . . அளக்கும் நெல்லு ஐங்கல - - யமுது செய்தரு ளுகைக்கு . . . . . வதுக்கு நெல்லுப் பதினை - - க்கு நெல்லு இருபதின் கலமும் சித்திரைத் திருநாள்த் திருக்கொடி யேற்றுக்கு வேண்

92 . . . . ந்நமாக அஸந்த்ரயாகப்படி - - திருவமுதுகளும் உள்ளி - - இவையிற்றுக்கு நெல்லு முப்பத்து ஐங்கலமும் செங்கழுநீர் திருப்பள்ளி

93 . . . . . . . நெல்லு முப்பதின் கலமும் ஹத - - நெல்லு கலமும் தளிகளில் - - பெருமாள் தளியும் அவனிநாராயண ஈச்வரத்து தளியும் முள்ளூர் நக்கன் தளியும்

94 . . . . . . ந்து செய்கைக்கு வேண்டும் - - அரிசி உள்பட நெல்லு பன்திரு கலமும் ஸ்ரீபாதம் தாங்குவார்க்கு நெல்லு

95 - -

96 - - உள்ளிட்ட - - திருப்பரிசட்டம் - - உள்ளிட்ட வேண்டு வன வயிற்றுக்கும் நெல்லு எண்ணூற்று . . பத்து ஒந்பதின் கலம் நீக்கிய நெல்லு

97 - - இருக்கும் ப்ராஹ்மணன் - - நெல்லு முக்குறுணியும் - -

98 - - திருப்பள்ளிதாமம் - -

99 - - செய்யும் சிவயோகிகள் உள்ளிட்டார் இருவர்க்கு வேண்டு நெல்லு பதக்கு நானாழியாக நெல்லு ஐங்குறுணி யும் உ . . . . . கய வாசிக்க வல்ல ப்ராஹ்மணன் உள்ளிட்டச் சிவஸ்ரீமாஹேச்வ

100 - - நுக்கும் குடியாய் திருப்பள்ளித்தாமம் ஆக்கித் . . . . . . . முள்ளிட்டுப் பரித்த பணி - -

101 - - நெல்லு குறுணி நானாழிக்கு நெல்லு - - (இறுதி வரிகள் சிதைந்துள்ளன.)

---

**கங்குல் காதல்**

பேய் உலவும் நள்ளிரவில் எதற்கும் அஞ்சாது காவலர் உறங்கும் நேரம் பார்த்து, மதில் சூழ்ந்த காதலியின் வீட்டை நெருங்கி, வாயிற் கதவுகளைத் திறந்து நுழைந்து, அவளோடு மகிழ்ந்திருந்து அந்த மகிழ்வின் முத்தாய்ப்பில், 'நம்மைப் போன்று அன்பிற் சிறந்தோர் இவ்வுலகத்தே யாரும் இல்லை' என்று கூறிக் காதலியின் கூந்தலை வருடிக் களித்துப் பிரிந்த காதலனை அகம் 311ல் மாமூலர் படம்பிடித்துள்ளார்.

# 2. பதிப்பிக்கப்படாத பாடங்கள்

## சடைமுடிநாதர் கோயில் கல்வெட்டுகள் – 3

அர. அகிலா, மு. நளினி, இரா. கலைக்கோவன்

*இந்திய தொல்லியல்துறையின் கல்வெட்டுப் பிரிவால் படியெடுக்கப்படாத வலஞ்சுழிக் கோயில் கல்வெட்டுகள் சில தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையால் படியெடுக்கப்பட்டுப் பாடங்கள், 'திருவலஞ்சுழி கல்வெட்டுகள்' என்னும் நூலில் வெளியாகியுள்ளன. கோயிலில் உள்ள கல்வெட்டுகளுடன் இப்பாடங்களை ஒப்பிட்டுப் பார்த்தபோது பதிப்பில் சொற்கள், தொடர்கள் விடுபட்டும் மாறியும் இருந்தமை கண்டறியப்பட்டது. அதனால், கோயிலில் உள்ளவாறு கல்வெட்டுப் பாடங்கள் இங்குப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.*

*கல்வெட்டுகளைப் படியெடுக்க அநுமதி வழங்கிய துணை ஆணையர் ச. இலட்சுமணண், பொருளாதாரப் பின்புலமாக இருந்த சு. சுந்தர் பரத்வாஜ், களஆய்வில் துணைநின்ற ச. கமலக் கண்ணன், ம. இராமச்சந்திரன், மா. இலாவண்யா, சு. சீதாராமன், இரா. இலலிதாம்பாள், பால. பத்மநாபன், சு. இரமேஷ், த. இரவி, கோயில் அலுவலர்கள் நன்றிக்கு உரியவர்கள்.*

**30. க. எண்: 195 : 1978**

***இடம்:*** *இரண்டாம் சுற்றுத் தெற்குச் சுவர்.*

***செய்தி:*** *வலஞ்சுழிக் கோயில் வெள்ளைப் பிள்ளையாருக்கு அருமொழிதேவச் சேரி காராம்பிச் செட்டு தூறபவன் 4,200 காசுகளுக்குத் திருநாமத்துக்காணியாக நில விற்பனை.*

***காலம்:*** *மூன்றாம் இராஜராஜர்; கி. பி. 1229.*

*1 திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு 13 பதின்மூன்றாவது இஷப நாயற்று அபர பக்ஷத்து த்வா தசியும் திங்கள்கிழமையும் பெற்ற அ . . . . நாள் குலோத் துங்க சோழ வளநாட்டு வேளா நாட்டு - - சருப்பேதி மங்கலத்து அருமொழிதேவச் சேரி காராம்பி செட்டு*

தூற்பவ உரத்த ...... உடையார் திருவலஞ்சுழி உடையார் கோயில் வெள்ளைப் பிள்ளையாற்கு

2 தெற்கு முதல் கண்ணாற்று மேற்கடைய நிலம் 16 ..... நீக்கி தென்கிழக்கு தானத்தாலும் விலையாலும் பெற்றுடையேனாய் என்னு - - தென்வடல் முப்பத்திரு கோலும் விற்ற - - இவ்வதிக்கு கிழக்கு இவ்வாய்க்காலுக்குத் தெற்கு 2 சதிரத்து மேற்கடைய திருநாமத்துக்காணி - - தென்கிழக்கு என்னுதாந நிலம் இதில் திருநாமத்துக்காணியும் - -

3 ந்தார் இக்காசு நாலாயிரத்து இருநூறும் ஆவணக்களிக் காட்டேற்றிக் கைச்செலவறக் கொண்டு இன்நிலம் அரைக்காணிக் கீழாறு முக்காணி யரைக்காணியும் திருநாமத்துக்காணியாக விற்றுக் குடுத்தேன் வெள்ளைப் பிள்ளையாற்கு காராம்பிச் செட்டு தூற்பவ - - இன்னிலம் அரைக்காணிக் கீழாறுமா முக்காணி அரைக்காணியும் - - நூறும் கைக்கொண்ட ........ இவை காரம்பிச் செட்டு தூற்பவ - -

4 இவை என் எழுத்து இவர்கள் அருளிச் செய்ய இந்நில விலை பிரமாண இசைவு தீட்டு எழுதினேன் திருநின்றவூருடையான் கூத்தாடுவானேன் இவை என் எழுத்து

**31. க. எண்: 197 : 1978**

*இடம்:* மேலது.

***செய்தி:*** வலஞ்சுழிக் கோயில் வெள்ளைப் பிள்ளையாருக்குத் திருச்சிற்றம்பலமுடையான் பட்டன் கோயிலாரிடம் 24, 000 காசு பெற்றுக்கொண்டு தம்முடைய ஒரு மா நிலத்தைத் திருநாமத்துக்காணியாக விற்றார்.

***காலம்:*** *மூன்றாம் இராஜராஜர்; கி. பி. 1228.*

1 திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 12 ஸிம்ஹ - -

2 சோழ வளநாட்டு - - நாட்டு ப்ரஹ்மதேயம் இராஜேந்திர சோழ சருப்பேதிமங்கலத்து இராஜேந்திர சோழ - - வேல்வெட்டித் திருச்சிற்றம்பலமுடையான் பட்டன்

பக்கல் உடையார் திருவலஞ்சுழி உடையார் கோயில் வெள்ளைப் பிள்ளையார்க்கு திருநாமத்துக்காணியாக கொண் - - வதிக்கு கிழக்கு இராஜராஜ வாய்க்காலுக்கு தெற்கு 2 சதிரத்து . . வில் மேற்கடை - -

3 நான் என்னுதாய் அனுபவித்து வருகிற நிலம் 1 மா இந்நிலம் ஒரு மாவும் திருநாமத்துக்காணியாக விற்று குடுத்து கொள்வதான எம்மில் இசைந்த விலைப் பொருள் அன்றாடு நற்காசு 24000 (இக்காசு இருபத்து நா)லாயிர மும் ஆவணக்களிகை காட்டேற்றி - - வும் திருநாமத்துக் காணியாக விற்று விலைப் பிரமாண இசைவு தீட்டு குடுத்தேன் வேல்வெட்டி திருச்சிற்றம்பலமுடையா

4 - - இப்படி சம்மதித்து இக்காசு இருபத்து நாலாயிரமும் கைக்கொண்டு இந்நிலம் ஒரு மாவும் விற்றுக்குடுத்தேன் வேல்வெட்டி திருச்சிற்றம்பலமுடையான் பட்டனேன் இவை என் எழுத்து இப்படி அறிவேன் திருப்பட்டீசுர முடையான் பட்டன் (இவை என்)னெழுத்து - - கள் அருளிச் செய்ய இந்நிலவிலைப் பிரமாண இசைவு தீட்டு எழுதினேன் - - ன்னேன் எழுத்து இப்படி அறிவேன் இராயூர் சொ

5 ட்டை ரக்ஷா பட்டனேன் இப்படி அறிவேன் - - எழுத்து - - த்து நாயக பட்டனேன் இப்படி அறிவேன் வங்கி புறத்து செட்ட - - ரசன ஆழ்வான் பட்டனேன் இப்படி அறிவேன் காரம்பிச் செட்டு தூற்பவ - - பட்டனேன் இப்படி - - வெண்காடு பட்டனேன் இப்படி - -

**32. க. எண்: 198 : 1978**

இடம்: மேலது.

செய்தி: பெரிதும் சிதைந்துள்ள இக்கல்வெட்டிலிருந்து இராஜேந்திர சோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் வலஞ் சுழிக் கோயில் வெள்ளைப் பிள்ளையாருக்குத் திருஅமுது படிக்கு உடலாக ஆண்டுதோறும் சபாவிநியோகத்தில் இருந்து நூறு கலம் நெல் அளித்துவந்த செய்தி கிடைக்கிறது.

காலம்: மூன்றாம் இராஜராஜர்.

1 திருபுவனச் சக்கரவத்திகள் - -

2 அபர பக்ஷத்து ஏகாதசியும் புதன்கிழமையும் உத்தரட்டாதியும் பெற்ற ..... நாள் 323 முன்னூற்றிருபத்து மூன்றினால் குலோத்துங்க சோழ வளநாட்டு வேளா நாட்டு (பிரம்மதேயம்) ராஜேந்திர சோழச் சருப்பேதிமங்கலத்(து கிராமகாரியம் செய்)கிற கூட்ட சபையோம் எழுத்து - - திருக்குடமூக்கு உடையார் திருவலஞ்சுழி

3 ப் பிள்ளையார்க்கு திருவமுதுபடிக்குடலாக முன்பிலாண்டுகளும் ஆட்டைக்கு நூற்றுக் கல நெல்லு நம்மூர் ஸபா வினியோகத்திலே நியோகம் எழுதிவரக்கொண்டு இக்கோயிலிலே வெள்ளைப் பிள்ளையார்க்கு அமுது - - திருநாமத்துக்காணி ஸ்ரீப - - லம் பக்கலே ஒரு மாமடக்கு ஊர்க் - -

4 - - - - செய்யக் கடவதாக நிச்சயித்தமையில் உலகுடையபெருமாளுக்கு விஜயாத்த - - கொண்ட மடக்கிலே - - லனேய் பதக்கு நானாழியும் எதிராமாண் - - - -

**33. க. எண்: 202 : 1978**

இடம்: மேலது.

செய்தி: மதனமஞ்சரிச் சதுர்வேதிமங்கலத்து கோவிந்த பட்டன் வெள்ளைப் பிள்ளையாருக்குத் திருநாமத்துக்காணியாக நிலத்துண்டு ஒன்றை விற்பனை செய்தார்.

காலம்: மூன்றாம் இராஜராஜர்; கி. பி. 1222.

1 ..... சக்கரவத்திகள் ஸ்ரீராஜ - - 6 ஆவது மிதுன நாயற்று ஒரு நாள் நெடுமணல் ஆன மதனமஞ்சரிச் சருப்பேதி மங்கலத்து கோமடத்து எஞ்ஞோ புருஷன் கோவிந்த பட்டன் விசத்தடை பரிவத்தனையா கொ ..... ரேசுரவதிக்கு கிழக்கு - - நிலத்து மேற்கடைய நிலம் - - க்கி இதன் கிழக்கு - - இந்நிலம் விலை கொண்டு உடையேனாய் அனுபவிக்கிற - - இதில் பரிவர்த்தனை இவனே விற்ற - - திருநாமத்துக்காணி ஊர்க்கு இறையிலி - - நீக்கி விலையாக கொண்ட - - இந்நிலம் முந்திரிகைக் கீழ் அரைக்

காணியும் வெள்ளைப் பிள்ளையார்க்கு திருநாமத்துக் காணியாக விற்று குடுத்துக் கொள்வதான - - த்து ஒரு நூறும் ஆவணக்களியேக் காட்டேற்றி கைச்செலவற கொண்டு முந்திரிகைக் கீழ் அரைக்காணியும் வெள்ளைப் பிள்ளையார்க்கு திருநாமத்துக்காணியாக விற்

2 றுக் குடுத்தேன் கோமடத்து எஞ்ஞோ புருஷ கோவிந்த பட்டனேன் இவை என் எழுத்து உ

**34. க. எண்: 204 : 1978 (212: 1927-28)**

1 திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 8 வதின் எதிரா ஆண்டு கற்கடக நாயற்று அபர பக்ஷத்து திங்கள்கிழமை பெற்ற ரேவதி நாள் இவ்வூரில் . . சொட்டை சிங்க பிரான் பட்ட ஸோமாசியேந் மனைவி

2 வெள்ளைப் பிள்ளையார்க்கு திருநாமத்துக்காணியாக விற்ற . . . . வரி நிலங் கொல்லையில் கீழ்மேல் . வன் தெருவில் வடசிறகில் விற்ற மனை . . இந்நிலம் அரைக் காணிக்கும் ப்ரமாண விலைபடி காசு 900 இக்காசு தொளாயிரமும் ஆவணக்களிகை காட்டேற்றி கைச் செலவறக் கொண்டு . . இன்நிலம் அரைக்காணியும் வெள்ளைப் பிள்ளையார்க்கு திருநாமத்துக்காணியாக . . . . இராயூர் சொட்டை சிங்க பிரான் பட்ட ஸோமயாசி யேன் இவை என்னெழுத்து இப்படி சம்மதித்தேன் இவர் மகன் சங்கர குமார பட்டனேந் இவை - - இவர் மகன் . . நாராயண பட்டனேன் - - அறிவேன் இராயூர் சிகுமார பட்டனேன் இப்படி அறிவேன் - - சுந்தர பட்டஸ்ய

**35. க. எண்: 206 : 1978**

*இடம்:* மேலது.

*செய்தி:* மதனமஞ்சரிச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் வெள்ளைப் பிள்ளையாருக்குத் திருநாமத்துக்காணியாகவும் ஊர்க்கீழ் இறையிலியாகவும் நிலமளித்தனர்.

*காலம்:* மூன்றாம் இராஜராஜர்; கி. பி. 1227.

1 திரிபுவனசக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 11 கற்கடக நாயற்று - - கிழமை பெற்ற திருவோணத்து இராசேன்திர சோழ வளநாட்டு நெல்மலி நாட்டு (தேவ தானம்) நெடுமணலான மதனமஞ்சரி சருப்பேதிமங்க லத்து பெருங்குறி பெருமக்கள் எழுத்து (உய்யக்கொ)ண் டார் வளநாட்டு பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கில் உடையார் திருவலஞ்சுழி உடையார் கோயில் வெள்ளைப் பிள்ளையார் கோயில் தேவர்கன்மி கோவில் கணக்கன் - - க்கு உடலாக பதினொன்றாவது கார் முதல் ஊரரார் ஏற்றி இறுக்க ஊர் கைத்தடியில் பதினொன்றா வது கார் முதல் பிள்ளையார் சீபண்டாரத்து இறுக்க - - முன்திரிகை - - குடிமை ஸபா வினியோகம் உள்ளிட்ட மடக்கால் நெல்லும் இறுப்ப - - க் கூட்டிக் கொள்ளும் . . . . . கலி உட்பட தங்களுக்கு

2 - - இவ்வரி கழித்துக் கொண்டபடி ஊர்க்கணக்கு - - செய்யக் கடவர்களாகவும் சினைப்பட்டு இறுக்க வருவன - - நிலம் உடையவர்கள் குடிமையாகச் சினைப் பட்டு இறுக்க வருவன இறுக்கவும் குடிமையில் - - பிட்டு வருவன செலவிட்டுக் கடமை கொளக் கடவர்களாகவும் வெள்ளைப் பிள்ளையார்க்கு குடுக்க நிச்சயித்த நெல் . . . . . . குடி ஊரரார் கரைக் கூட்டிக் கொள்ளும் நெல்லு உட்பட நாற்பதின் கல - - கடவதல்லாதாகவும் இப்படி சன்திராதித்தவரை இறையிலியாக செல்லக் கடவதாக வும் சொன்னோம் பணியால் ஊர்க்கணக்கு - - இவை ஆதனூர் தாமோதிர பட்டன் மகன் . . .(கேசவ பட்டன்) இப்படிக்கு இவை சிராம பட்டஸ்ய இப்படிக்கு இவை கோமடத்து கோவின்த

3 - - காசுரை கேசவ பட்டனேன் - - மாற பட்டஸ்ய நாக தேவ பட்டன் எழுத்து இப்படி அறிவேன் மாங்கள்ளூர் ப்ரஹ்மதத்த பட்டனேன் இப்படிக்கு கோமடத்து பஸுர பட்ட னெழுத்து இப்படிக்கு இவை - - ப்ரக்ருது வாஜியார் மகன் . ரஸுதர பட்டஸ்ய இப்படிக்கு இவை ஆதனூர் ஸ்ரீகண்ட ஸ்ரீக்ருஷ்ண பட்டஸ்ய ஆதனூர்

மஹாதேவன் யோகிச்வர பட்டஸ்ய - - ப்ரக்ருதுவாஜி யார் . . . . . . பட்டனெழுத்து இப்படிக்கு இவை ஆதனூர் மோசி பட்டன் மகன் ஸ்ரீகண்ட பட்டஸ்ய இப்படி - - அற்சுன ஸாரதி பட்டஸ்ய இப்படிக்கு இவை இடையாற்றுக்குடி பூவன்த சித்த பட்ட எழுத்து இப்படிக்கு இவை கோவின்த பட்டன் மகன் - - எழுத்து இப்படி

4 - - இவை மாங்கள்ளூர் இராமதேவ பட்டஸ்ய ஸர்வ . . பட்டஸ்ய இப்படிக்கு இவை - - ஸ்ரீக்ருஷ்ண பட்டஸ்ய இவை ரவி நாராயண பட்டனெழுத்து

5

**36. க. எண்: 207 : 1978**

*இடம்:* மேலது.

*செய்தி:* உலகுடைய பெருமாளான அரசரின் நலத்திற்காகவும் ஊர் நலத்திற்காகவும் மதனமஞ்சரிச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் வெள்ளைப் பிள்ளையாருக்கான திருப்படி மாற்றுக்கு உடலாக ஊர்க்கீழ் இறையிலி செய்து நெல் கொடை

*காலம்:* மூன்றாம் இராஜராஜர்; கி. பி. 1227.

1 திரிபுவனச் சக்கரவத்திகள் இராஜராஜ தேவற்கு யாண்டு 11 வது மீன நாயற்று பூர்வ பக்ஷத்து தசமி - - ராசேந்திர சோழ வளநாட்டு நெடுமணல் ஆன மதனமஞ்சரிச் சருப்பேதிமங்கலத்து பெருங்குறிப் பெருமக்கள் எழுத்து உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டு திருக்குடமூக்கு உடையார் திருவலஞ்சுழி உடையார் கோயில் வெள்ளைப் பிள்ளையார் கோயில் தேவகன்மி கோயில் கணக்கர் கண்டு முன்பு இவ்வாட்டை கற்கடக நாயற்று வெள்ளைப் பிள்ளையார்க்கு திருப்படிமாற்றுக்குடலாக மகாஸபா நியோகம் எழுதின 11வது கார் முதல் கைய்த் தடியில் கழித்தட்டக் குடுத்த நெல்லு . . இம்மடக்கு நிலம் முந்திரிகைக் கீழ் எட்டு மாவுக்கும் வெட்டிக் கூலி உட்பட கழித்த நெல் 40 இந்நெல்லு நாற்பதின் கலத்துக்கு மேலேற்றி குடுத்த நெல்லு . . . . இருபத்திரு கலனே

தூணிப்பதக்கும் உலகுடைய பெருமாளுக்கு விஜயாத்த மாகவும் . . ச்சக்கராமத்துக் ரெக்ஷத்தமாகவும் இப்பரிசு முதல் . . . . கழித்து மடக்கு நிலம் . . இம்மடக்கு நிலம் கீழ்காலே ஒரு ம - -

2 - - திருநாமத்து கழித்து - - ஊரிலே ஏற்றி இறுக்கக் கடவ தாகவும் இந்நிலத்து சென்னீர் வெட்டி குடிமை ஸபா விநியோகம் உள்ளிட்டு எப்பேர்பட்ட வினியோகங் களாய் வருவனவும் தவிரக் கடவதாகவும் இப்படி சந்திராதித்தவற் ஸாதுதிகமாக இப்படி . . . . . . ஊர்க்கீழ் இறையிலியாக கைக்கொண்டு செல்லக் கடவதாகவும் சொன்னோம் இப்படி பணியால் ஊர்க்கணக்கு பல்லவன் மாதேவி உடையான் ஐஞ்ஞூற்று நாற்பதிம் பிரிய னெழுத்து ஆதனூர் தாமோதிர பட்டர் மகன் சுந்தரபாகு பட்டஸ்ய உழுத பெருமான் பட்டஸ்ய கோமடத்து திருவரங்கமுடையான் பட்ட(ஸ்ய) பெருமங்கலத்து ஸ்ரீராம பட்டஸ்ய கோமடத்து அற்ஜுன ஸாரதி பட்டஸ்ய சிகாரி மாற பட்டஸ்ய இராயூர் சிராம பட்டசிய அன்பில் சிராமன் சந்திரசேகர பட்டஸ்ய துக்கை எஜ்ஞாம பட்டஸ்ய பாஸ்கர பட்டஸ்ய கோமடத்து நாராயண பட்டஸ்ய இப்படிக்கு - - தாமோதிர பட்டன் எழுத்து மாங்கள்ளூர் யக்ஞோ புருஷன் தோணைய பட்டன் எழுத்து

3 - - மாங்கள்ளூர் நாராயண பட்டஸ்ய எடமாங்களூர் பம்மதத்த பட்டஸ்ய இப்படி அறிவேன் இராயூர் சொட்டை சர்வதேவ பட்டர் மகன் ஆதித பட்டஸ்ய இப்படிக்கு இவை இராயூர் உடைய எஞ்ஞவாத பட்டஸ்ய இப்படிக்கு இவை மாங்களூர் ஸ்ரீ - - இப்படிக்கு இவை மாங்கள்ளூர் அனந்த நாராயணன் ஸ்ரீபாததேவ பட்டன் எழுத்து ஆதனூர் ஸ்ரீகிருஷ்ண பட்டன் மகன் தெய்வங்க நாராய பட்டனெழுத்து பாலகுமார பட்டஸ்ய இப்படி அறிவேன் இராயூர் சொட்டை பவஉருத்திர பட்டஸ்ய இப்படிக்கு இவை ஸ்ரீராம பட்டன் மகன் லக்குமண பட்டஸ்ய குமார

பட்டஸ்ய இராயூர் சொட்டை யக்ஞவாத பட்டன் மகன் குமார விஷத்து பட்டஸ்ய இப்படிக்கு இவை மாங்கள் ளூர் ப்ராமதத்த பட்டஸ்ய மாங்கள்ளூர் செட்ட ஸ்ரீராம பட்டஸ்ய இப்படிக்கு இவை நரசிங்க பட்டஸ்ய மண லூர் சீரங்கநாத பட்டஸ்ய - - பட்டன் எழுத்து இப்படிக்கு இவை மாதவ பட்டஸ்ய . . . . புரத்து நாராயண பட்டஸ்ய புருஷ பட்டஸ்ய

4 - - ஆனனூர் . . . . . பட்டஸ்ய கோமடத்து உழுத - - இவை ஸ்ரீராம பட்டஸ்ய - - மாங்களூர் மகாதேவ பட்டஸ்ய இவை கோவிந்த பட்டஸ்ய பார்க்கர பட்டஸ்ய கோவிந்தன் ஸ்ரீராம பட்டஸ்ய அரிசு வாம பட்டஸ்ய சுகுமார பட்டஸ்ய

---

குருவிகள் போல் வருவாரோ!

பறம்புமலைக்குரிய பாரி உரைத்தற்கரிய பெரும் புகழ் வேந்தர். பொருளில் வறுமையும் அறிவில் வளமையும் மிக்க அறிஞர்கள் வரின், அப்பெருந்தகை, அவர்களைப் போற்றி மலை போன்ற யானைகளை யும் நல்ல அணிகலன்களையும் வழங்கி மகிழ்வார்.

அவர் மலையில் வாழும் குருவிகள் வரிசை யாகப் பறக்கும் இயல்பின. காலையில் பறம்பு நீங்கிப் பறக்கும் அவை, வளைந்த புறத்தினை உடைய சிவந்த நெற்கதிர்கள் சாய்ந்திருக்கும் இடங்களை வயல்வெளி களில் தேடித் தெரிந்து அவற்றைச் சேமிக்கும். துன்பம் தரும் மாலை தொடங்கும் நேரம், நாளெல்லாம் சேமித்த நெற்கதிர்களுடன் அந்தக் குருவிகள் பறம்பிற்கு மீளும்

மட நெஞ்சமே, காலையில் நீங்கி மாலையில் மீளும் அந்தக் குருவிகளைப் போலவே நம்மைப் பிரிந்த காதலரும் வந்திடுவார் என்று நினைத்து மகிழ்கிறாயே, இது என்ன பேதைமை! - அகம் 303.

# 3. விட்டுப்போன தொடர்ச்சிகள்
## சேத்ரபாலர் கோயில் கல்வெட்டுகள்

மு. நளினி, இரா. கலைக்கோவன்

*வலஞ்சுழிச் சடைமுடிநாதர் கோயில் வளாகத்துள்ள சேத்ர பாலர் கோயிலில் 1902ல் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளுள் இரண்டு, முழுமையாகப் படியெடுக்கப்படாத நிலையில் தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி எட்டில் பதிப்பிக்கப் பட்டுள்ளன. களஆய்வில் இக்கல்வெட்டுகளின் விட்டுப்போன தொடர்ச்சிகள் கண்டறியப்பட்டன.*

### முதல் கல்வெட்டு

*சேத்ரபாலர் கோயில் முகமண்டப வடபுறப் பட்டிகையிலும் குமுதத்திலும் இடம்பெற்றிருக்கும் இக்கல்வெட்டு, தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி எட்டில் 236ம் எண்ணிட்டுப் பதிப்பிக் கப்பட்டுள்ளது. ஏழு வரிகளுடன் அமைந்துள்ள இக்கல்வெட் டின் முதல் இரண்டு வரிகள் மட்டுமே, 'கல்வெட்டு முற்றுப் பெறவில்லை' என்ற குறிப்புடன் தொகுதியில் பதிவாகியுள்ளன.*

### பதிப்பில் 1 - 2 வரிகள்

1 *ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மரான ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு 3 ஆவது 221நால் உடையாடைய ஸ்ரீஇராஜேந்திர சோழ தேவர் திலபர்வதம் புக்கருளின இப்பிள்ளையார் சேத்திரபால தே(வர்)*

2 *ஸ்ரீபாத புஷ்பமட்டித் தொழுதருளின பொற்ப்பூ பன்னி ரண்டிநால் பொன் இருபத்து நாற் கழஞ்சே காலும் 247நால் நம்பிராட்டியார் வானவன் மாதேவியார் இட்ட பொற்பூக்களால் பொந் முக்காலே நாலு ம*

*தொகுதியில் பதிவாகாது விடுபட்டிருக்கும் 3 - 7 வரிகள் களஆய்வில் கண்டறியப்பட்டுப் படியெடுக்கப்பட்டன.*

### பதிப்பில் விட்டுப்போன தொடர்ச்சி

3 *ஞ்சாடியும் குன்றியும் நாள் 25 . னால் நம்பிராட்டியார் கிழானடிகளட்டித் தொழித நெரிந்திபூ 25 நால் பொன்*

கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் குன்றியும் நாது உடன் வந்து இட்ட பொற்பூ 1னால் பொன்னா

4 லும் நாள் 270நால் உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் நம்பிராட்டியார் ஒலோகமாதேவியார் ஸ்ரீபாதமட்டித் தொழுத பொற்பூ அறுபதிநால் நிறை பொந் ஐங்கழஞ் சும் ஆகப் பொந் முப்பத்திரு கழஞ்சே இரண்டு மஞ்சாடி

5 யும் யாண்டு நான்காவது நாள் 23 நால் நம்பிராட்டி யார் ஒலோகமாதேவியார் தேவர்க்கட்டி அருள பெண்டாட்டி வேளான் இலங்கவிச்சாதிரி வசம் பொன் கழஞ்சே இரண்டு மஞ்சாடியும்

6 குன்றியுமாகப் பொன் முப்பத்து முக்கழஞ்சேய் நாலு மஞ்சாடியும் குந்றியினால் படியாணி உள்பட பொன் குடிஞ்சைக் கல்லால் நிறை . . . . . . கழஞ்சே நாலு ம

7 ஞ்சாடியிநால் பொன் முப்பதினாலும் //

## இரண்டாம் கல்வெட்டு

சேத்ரபாலர் கோயில் முகமண்டப வடபுறப் பட்டிகையில் இடம்பெற்றிருக்கும் இக்கல்வெட்டு, தென்னிந்திய கல்வெட்டு கள் தொகுதி எட்டில் 237ம் எண்ணிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள் ளது. பதினைந்து வரிகளுடன் அமைந்துள்ள இக்கல்வெட் டின் முதல் மூன்று வரிகள் மட்டுமே, 'கல்வெட்டு கட்டமைப் பிற்குள் சிக்கியுள்ளது' என்ற குறிப்புடன் தொகுதியில் பதிவாகியுள்ளன.

### பதிப்பில் 1 – 3 வரிகள்

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மரான ராஜேந்திர சோள தேவர்க்கு யாண்டு மூன்றாவது உடையார் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 29பதாமாண்டு இஸ்ரீராஜராஜ தேவர் நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியாரான ஒலோக மகாதேவியார் ராஜேந்திரசிம்ஹ வளநாட்டு மண்ணி நாட்டு பிரஹ்ம

2 தேயம் வேம்பற்றூராகிய அவனிநாராயணச் சதுர்வேதி மங்கலத்து திருவிசலூருடைய மஹாதேவர் கோயிலில்

இந்நம்பிராட்டியார் ஒலோகமகாதேவியார் ஹ்ரண்ய கெர்ப்பம் புக்கருளின பொன்னில் உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கில்ப் பால்த் திருவ

3 லஞ்சுழி இந்நம்பிராட்டியார் எடுப்பித்தருளின திருக்கற் றளிச் க்ஷேத்ரபாலதேவற்கு சாத்தியருள குடுத்த பொற்பூ இரண்டில் பொற்பூ ஒன்றிநால் குடிஞைக் கல்லால் நிறை பொந் இரு கழஞ்சே முக்காலே மஞ்சாடியும் அறு மாவும் பொற்பூ ஒன்றிநால் மேற்படிகல்லால் நிறை பொ

தொகுதியில் பதிவாகாது விடுபட்டிருக்கும் 4 - 15 வரிகள் களஆய்வில் கண்டறியப்பட்டுப் படியெடுக்கப்பட்டன.

**பதிப்பில் விட்டுப்போன தொடர்ச்சி**

4 ன் இரு கழஞ்சரையேய் மூன்று மஞ்சாடியும் அறுமா வும் மேற்படி கல்லால் பொற்பூ நாற்பத்தைஞ்சினால் மேற்படி கல்லால் பொந் நூற்று முப்பத்தொன்பதின் கழஞ்சே காலும் ஆகப் பொற்பூ நாற்பத்தேழினால் பொன் நூற்று நாற்பத்து நாற் கழஞ்சே முக்காலே குந்றி

5 யும் தகட்டுத் திருமாலைய் ஒன்றிநால் மேற்படி கல்லால் பொந் அறுபதின் கழஞ்சும் தகட்டுப் பாஹு<sup></sup>வலயம் இரண்டினால் மேற்படி கல்லால் நிறை பொந் முப்பதின் கழஞ்சும் தகட்டுப் பாத சாயலம் இரண்டினால் மேற்படி கல்லால் நிறை பொந் நாற்பதின் கழஞ்சும் ஸ்ரீராஜேந்திர சோள தேவர்

6 இவ்வாண்டு தெக்ஷிணமயந ஸங்க்ராந்தியில் இத் தேவர்க்கு அட்டித் தொழுத பொற்பூ உரு ஆயிரத் தொருனூற்று ஒருபத்து ஆறினால் பொந் நாற்பத்தறு கழஞ்சும் பெருந்தனத்துச் செம்பியன் மங்கலப் பேரை யன் ஸ்ரீபாத புஷ்பமிட்டுத் தொழுத மோதிரம் ஒன்றி நால் பொந் மூன்று மஞ்சாடியும் இரண்டு

7 மாவும் ஸ்ரீராஜேந்திரசோழ தேவரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார் திரிபுவநமாதேவியார் இத்தேவரைப் பெருந்திருவமுது செய்வித்தருளி ஸ்ரீபாத

புஷ்பம் இட்டருளின பொற்பூ உரு இருபதினால் பொந் கழஞ்சே மஞ்சாடியும் அறுமா - - க்குச் சாத்தியருள வைத்த திருஉதரபந்தனம்

8 ஒன்றிநால் மேற்படி கல்லால் எடுக்க வந்த நிறை பொன் னாற்பத்தெழு கழஞ்சே காலும் உடைய பிராட்டியாரே இத்தேவர்க்கே குடுத்தருளின தட்டம் ஒந்றினால் அலகு நிலைப்படி பொன் இருபதின் கழஞ்சில் மேற்படி கல்லால் - - தொன்பதின் கழஞ்சே முக்கா

9 . . ந உடையார் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு பத்தாவது முதல் கல்வெட்டுப்படி உய்யக்கொண்ட தேவர் முன் சாத்தியருளும் சரணம் ஒன்றிநால் குடிஞைக் கல்லால் நிறை பொன் எழு கழஞ்சே காலே இரண்டு மாவோடு மேற்படி கல்லால் இட்டு உடலான பொன் எழு கழஞ்சும் ஆகச் சரணம் ஒன்றிநால் மேற்படி கல்லால் நி

10 றை பொன் பதினாற் கழஞ்சே காலே இரண்டு மாவும் ஆகத் திருவாபரணங்களால் நிறை பொன் முன்னூற்று ஐம்பத்தறுகழஞ்சே அறுமாவில் முந் கல்வெட்டுப்படி மேற்படி கல்லால் நிறை பொன் எழு கழஞ்சே காலே இரண்டு மா நீக்கி நிறை பொந் முன்னூற்று நாற்பத் தெண் கழஞ்சே முக்காலே குந்

11 றியும் முன் இந்நம்பிராட்டியார் ஒலோக மகாதேவியார் இத்தேவர்க்கே குடுத்த வெள்ளி மானவட்டில் ஒன்றி னால் குடிஞை கல்லால் நிறை பன்நிரு கழஞ்சே ஆறு மஞ்சாடியும் உடையார் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு இருபத்தொன்பதாவது பெருந்தனத்து தந்தி திட்டை யான சோழேந்த்ர சிங்க விழுப்பரை

12 யர் அரசியார் ஆச்சணந் வெம்பவையார் இட்ட கச்சோரம் ஒன்றினால் வெள்ளி நிறை ஒந்பதிந் கழஞ்சே முக்காலும் வெண்கலத் தளிகை ஒன்று நிறை ஐம்பதின் பலமும் மேற்படி தளிகை ஒந்றினால் நிறை இருபத்து நாற்பலமும் வெண்கல முண்டம் ஒன்றினால் நிறை முப்பலமும் மேற்படி கரகமுடி ஒன்று நிறை பதின்

13 பலமும் இலைத் தட்டுத் தலை வெண்கல நிறை நாற்பத்தொரு பலமும் இதிற் பாதமும் தண்டும் உள்கரு உள்பட தரா நிறை நூற்று நாற்பதின் பலமும் இவைய் இப்பரிசு கல்லில் வெட்டுவித்து போதுகவெந்று இந்நம்பிராட்டியார் பெண்டாட்டி வேளான் இலங்கவிச்சாதிரியைய் அருளிச் செய்து ஸ்ரீமுகம் வர ஸ்ரீமுகப்படி இவ்வேளான் இலங்கவிச்சாதிரியும் இத்திருக்

14 குடமூக்கில் மூலபரடையார்க்காகக் கணிவாரியஞ் செய்கின்ற பாரதாயந் தாமோதரன் சங்கர நாராயணநும் இக்காமக்காநி உதையணனும் மொகிலியந் முத்தக்ருஷ்ண நாராயணனும் வாரியமாகவும் இத்திருக்குடமூக்கில் மூலபரடையார்க்காக இஸ்ரீகோயில் கணக்கு வேளாந் கூத்தந் ஆயர் கொழுந்திந் கரணத்தாந் பல்லாரிக்ருஷ்ண நக்கனுக்காகவும்

15 இவ்வூர் சிவபிராமணந் மாடிலன் குமரந் தலசேநனும் பாரதாயந் ஆராமத்தி விக்கிரமனும் உள்ளிட்டார் கண்காணியாகவும் இபன்மாஹேச்வர ரக்ஷை

---

## சுரம் கடப்பேன் என்ற சுந்தரி

*யாரும் அறியாமல்தான் வைத்திருந்தோம். எப்படியோ வெளிப்பட்டுவிட்டது! எங்கள் காதல் ஊர்ப் பேச்சானது. வெட்கிய அவரோ விரைந்து பிரிந்தார். காலை பறந்து மாலை திரும்பும் பறம்புக் குருவிகளாய், போனவர் வந்திடுவார் என்று எதிர்பார்த்த நெஞ்சமும் ஏமாந்தது. இனியும் பொறுத்தல் இயலாது!*

*அவர் கடந்து சென்ற வழியில் வற்றல் மரங்கள் மிகுதி. அம்மரங்களில் உறையும் சிள்வண்டுகள், கூட்டமாய்ச் செல்லும் உப்பு வணிகர் தம் எருதுகளின் கழுத்து மணிகள் ஒலிப்பதைப் போல் பேரொலி செய்வன. நீர் வற்றும்போது அந்நீர்நிலை மீன்கள் உயிரைக் காத்துக் கொள்ளப் பக்கத்து நீர்நிலைக்குப் பாய்வது போல அவரைத் தேடி நானும் அந்தப் பாலை நிலத்தைக் கடக்கத்தான் வேண்டும்! -அகம் 303.*

# 4. ஆய்வுக்கட்டுரைகள்

## 1. கோகர்ணம் குடைவரையும் கல்வெட்டுகளும்

மு. நளினி, இரா. கலைக்கோவன்

சிராப்பள்ளிச் சாலை வழிப் புதுக்கோட்டைக்குள் நுழையும் நம்மை வரவேற்பது கோகர்ணேசுவரர் திருக்கோயில்தான்.[1] தெற்கு நோக்கிய அதன் எளிய கோபுர நுழைவாயிலை அடுத்துள்ள மிக நீண்ட திருநடையின் முதற்பாதியின் இருபுறமும் பெருந்தூண்களை உள்ளடக்கிய மேடைகள் கிழக்குச் சிறு வாயில்வரை பரவியுள்ளன. மேற்கில் கோயில் அலுவலகமும் வாகன மண்டபமும் அமைய, கிழக்கில் வாயிலுக்கான படிகள். நடைக்கூரையில் நாயக்கர் கால ஓவியங்கள் கருத்து விளக்கத்துடன் கண்சிமிட்டுகின்றன.

கிழக்கு மேடைக் கூரையிலும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஓவியங்கள் உள்ளன. எனினும், நடைக்கூரை ஓவியங்கள் அவற்றினும் நல்ல நிலையில் உள்ளன. கிழக்கு வாயில், பாறைகள் முளைத்த வறண்ட நிலப்பகுதியை வெளிச்சப்படுத்துகிறது. திண்ணைத்தூண்கள் முச்சதுர, இருகட்டு உடலுடன் முன்னொட்டாய் நான்முகத் தூண்களும் கொண்டுள்ளன. கீழ்ச்சதுரத் தலைப்பில் நாகபந்தம்.

நடையின் இரண்டாம் பாதியின் நடுவே தூண்களின் தாங்கலில் நிற்கும் சுவரற்ற சிறு மண்டபத்தின் கூரையில் உள்ள கற்சங்கிலிக் கணுக்கள் அதை ஊஞ்சல் மண்டபமாய்க் காட்டுகின்றன. மண்டபத்துள் கிழக்கிலும் மேற்கிலும் நீளமான அமர்வு மேடைகள் உள்ளன. அவற்றை அடுத்துக் கிழக்கிலும் மேற்கிலும் பக்கத்திற்கொருவராய்த் தூண்களில் ஒன்றிய ஆடவர் சிற்பங்கள். ஒன்பது முகங்களும்[2] இருபது கைகளும் உடைய இவர்கள் போரிடும் வீரர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். நடையின் இறுதிப்பகுதியின் மேற்கில் தொழுவமும் காசிவிசுவநாதர் திருமுன்னும் மண்டபம் ஒன்றும் உள்ளன. இப்பகுதியிலிருந்து கோகர்ணத்தின் இரண்டாம் வாயில் கோபுரம் நன்கு காட்சியாகிறது.

**காசிவிசுவநாதர் திருமுன்**

ஒருதள நாகரமாக உள்ள காசிவிசுவநாதர் விமானம், முன்னால் முகமண்டபமும் முன்றிலும் பெற்றுள்ளது. பாத பந்தத் தாங்குதளம் பெற்ற விமானத்தின் நான்முக அரைத் தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைக் கைகளால் உத்திரம் தாங்க, மேலே பிற கூரை உறுப்புகள். கபோதம்வரை கருங் கல்லால் ஆன இச்சிறு விமானத்தின் முன்னுள்ள முன்றில் தூண் களில் வணங்கிய கைகளுடன் கட்டமைப்பை உருவாக்கியவர் கள் காட்சிதருகிறார்கள்.

**மண்டபங்கள்**

காவலர்களுடன் காட்சிதரும் இரண்டாம் வாயிலை அடுத்து நீளும் நடை மூன்றாம் வாயிலில் முடிவடைகிறது. நடையின் மேற்கில் மிகப் பெரிய மண்டபம், மேற்கு ஓரத்தில் அலங்கரிக்கப்பட்ட மேடையுடன் உற்சவமண்டபமாய் காட்சி தருகிறது. அதன் தூண்களில் பல சிற்பங்கள். குறிப்பிடத்தக்கவர் நந்தியின் மத்தளமும் நான்முகனின் தாளமும் பெற்ற ஊர்த்வ தாண்டவர். பெண் ஒருவரின் தோளில் அமர்ந்தபடி வீணை வாசிக்கும் ஆடவரையும் குறிப்பிடலாம். சில தூண்களில் வணங்கிய நிலையில் அடியவர்கள். இரதியும் மன்மதனும் இணைந்து நிற்கும் சிற்பம் கிழக்குத் தூண் ஒன்றை அலங்கரிக் கிறது. காளியின் ஆடல் ஊர்த்வ தாண்டவருக்கு எதிரிலுள்ள தூணில் படம்பிடிக்கப்பட்டுள்ளது.

நடையை அடுத்த கிழக்குப் பகுதியிலும் ஒரு மண்டபம் உள்ளது. அளவில் சிறியதான இம்மண்டபத்திற்கு வர வடக்கிலும் ஒரு வழி உள்ளது. நடையின் நடுக் கூரையில் அறுபத்து நான்கு சிறு சதுரங்களுடன் பெருஞ் சதுரம் ஒன்று செதுக்கி, வெளிச் சதுரங்களைத் தாமரைப் பதக்கங்களாக்கியுள்ளனர். மூன்றாம் வாயிலின் கோபுரமும் முதற்கோபுரம் போல எளிமையானதே. இவ்வாயிலின் வலப்புறம் பிள்ளையாரும் இடப்புறம் முருகனும் உள்ளனர். வாயிலுள் நுழைந்ததும் மற்றொரு மண்டபம் வரவேற்கிறது. அதன் மேற்குப்பகுதியில் கிழக்குப் பார்த்த நிலையில் பிரகதாம்பாள் அம்மன் திருமுன்னும் அதற்குச் சற்றுத் தள்ளி முன்னிருக்கும் நிலையில் மகிழவனேசுவரர்

திருமுன்னும் உள்ளன. தென்மேற்கில் சுவரை ஒட்டியுள்ள மேடையில் அறுபத்து மூவர் இருத்தப்பட்டுள்ளனர்.

**அரைக்காசு அம்மன்**

*அரைக்காசு அம்மன் என்றும் அறியப்படும் பிரகதாம்பாள் திருமுன் வாயிலைப் பெண்காவலர் காக்கின்றனர். முன்னால் உள்ள நடையில் பெரிய அளவிலான பாவைவிளக்குக் காணப் படுகிறது. பிரகதாம்பாள் அம்மை முன் கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் இருத்திப் பின் கைகளில் தாமரை, நீலோத்பல மலர்களை ஏந்தியுள்ளார். சடைமகுடமும் மகர குண்டலங்களும் பட்டாடையுமாய்த் தாமரைத்தளத்தில் நிற்கும் இவ்வம்மையே இங்குப் பெருமைக்குரிய முதன்மையர். முன் மண்டபத்தின் வடபுறம் உள்ள பள்ளியறை வாயிலின் மேற் பகுதியில் யானைத்திருமகள் பொலிகிறார்.*

*அம்மன் திருமுன் முகமண்டபத்தை ஒட்டியுள்ள தென் பகுதியில் மேடையமைத்து எழுவர் அன்னையர், பிள்ளையார் சிற்பங்கள் இருத்தப்பட்டுள்ளன. அம்மனின் விமானம் பாத பந்தத் தாங்குதளம் பெற்ற இருதளச் சாலையாக அமைந்துள்ளது. அதன் கீழ்த்தளச் சுவர்களில் நான்முக அரைத்தூண்கள். வெட்டுத் தரங்கக் கைகளால் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளை அடுத்து பூமிதேசம். அம்மன் விமானத்தின் பின்னுள்ள பாறை யில் அமைக்கப்பட்டுள்ள சிறிய திருமுன்களில் பிள்ளையார், உமையுடனான நந்தி ஊர்தியர் உள்ளனர். அடுத்துள்ள சிறிய திருமுன் இலிங்கத்திருமேனி ஒன்றைப் பெற்றுள்ளது.*

**மகிழவனேசுவரர்**

*பிரகதாம்பாள் திருமுன்னை அடுத்துள்ள திருமுன் பூட்டப் பட்டுள்ளது. அதனையடுத்துச் சற்றுக் கிழக்கு நோக்கி முன் நகர்ந்து அமைந்த நிலையில் மகிழவனேசுவரர் திருமுன் உள்ளது. இருதளத் திராவிட விமானமும் முகமண்டபமும் கொண்டுள்ள அதன் கீழ்த்தளம் பாதபந்தத் தாங்குதளம் பெற்றுள்ளது. சாலைப் பத்தி முன்தள்ளி அமைய, ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள். சாலைப்பத்தியைத் தனிமைப்படுத்திக் காட்டுமாறு பாதபந்தத் தாங்குதளத்தின் மேலுறுப்பான பட்டிகை கபோதமாக மாற்றப்*

பட்டுள்ளது. இந்த உறுப்புவேறுபாடு சாலைப்பத்தியின் தாங்கு தளத்தைக் கபோதபந்தமாக்கி மகிழ்கிறது.

விமானக் கோட்டங்களில் தெற்கில் ஆலமர்அண்ணலும் மேற்கில் இலிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் உள்ளனர். கருவறையில் இறைவன் இலிங்கவடிவில் அமைய, முன்னால் உள்ள சிறிய முகமண்டபம் கீழ்த்தளக் கட்டமைப்பில் பொலி கிறது. மகிழவனேசுவரர் விமானத்தின் வடபுறம் சண்டேசுவரர் திருமுன் உள்ளது.

**மங்கலநாயகி**

மண்டபத்தின் கிழக்குப்பகுதியில் உள்ள தூண்கள் பல் வகைச் சிற்பங்களைக் கொண்டுள்ளன. வீரர்கள், ஊர்த்வதாண்ட வர், காளி, அடியவர் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கன. இங்குதான், தெற்குப் பார்வையாக மகிழவனேசுவரரின் தேவியான மங்கல நாயகியின் திருமுன் உள்ளது. ஒருதளத் திராவிட விமானமும் முகமண்டபமுமாய் அமைந்துள்ள நாயகியின் கருவறைத் தளம் பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று உயர்கிறது. கருவறையில் சடைமகுடமும் பட்டாடையு மாய்ச் சமபாதநிலையில் சிறிய திருமேனியராய் உள்ள அம்மனின் முன் கைகள் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் அமைய, பின் கைகளில் தாமரைமொட்டும் நீலோத்பலமும். சிறிய அளவினதான முக மண்டப வாயிலில் பக்கத்திற்கு ஒருவராகக் காவற்பெண்டுகள் இத்திரு முன்னின் மேற்கில் உள்ள வழி குடைவரையின் முன்னுள்ள மண்டபத்திற்கு அழைத்துச் செல் கிறது. தெற்கில் தலமரமான மகிழமும் கிழக்கில் மங்கள தீர்த்தமும் உள்ளன.

**பிற திருமுன்கள்**

மண்டபத்தின் வடமேற்கில் மகிழவனேசுவரர் திருமுன்னை அடுத்துள்ள பாறையின் ஒருபகுதியைச் சமன்செய்து கல்வெட்டு ஒன்று வெட்டப்பட்டுள்ளது. மேற்புறத்தே வடபகுதியில் அடுத் தடுத்து அமைந்துள்ள இரண்டு சிறிய திருமுன்களில் பழனி யாண்டியின் சிற்பமும் இலிங்கத்திருமேனி ஒன்றும் காட்டப்

பட்டுள்ளன. பாறையின் இறக்கத்தில் எழுவர் அன்னையர் தொகுதி செதுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள கூரைக் கற்கள் ஒன்றில் கல்வெட்டெழுத்துக்கள் உள்ளன. அன்னையர் தொகுதியை அடுத்துள்ள வாயில் குடைவரைக்கு முன்னுள்ள பெருமண்டபத்திற்கு வழிவிடுகிறது.

**மண்டபங்கள்**

பெருமண்டபம் குடைவரையைத் தழுவிப் பின்னாளில் எழுப்பப் பெற்றதாகும். குடைவரை இறைவனை நோக்கியவாறு மண்டபத்தில் உள்ள உயரமான தளத்தின்மீது செப்புத்திருமேனி யாய் நந்தி அமர்த்தப்பட்டுள்ளது. குடைவரையின் முன்னுள்ள தென்புறப் பாறைச்சுவரில் பழங் கல்வெட்டுகள் காணப்படுகின் றன. மண்டபத்தின் கிழக்கிலுள்ள வாயில் மேலிரு மண்டபங் களுக்கு வழிவிடுகிறது. வாயிலின் கிழக்குப்புறத்தே பக்கத்திற் கொருவராய் வாயிற்காவலர்கள். முதல் மண்டபத்தின் வடபுற முள்ள மேடை சுதையாலான மகரதோரண அலங்கரிப்புப் பெற்றுள்ளது. இரண்டாம் மண்டபத்தின் வடபுறம் மேற்றளப் படிக்கட்டுகள் தொடங்குகின்றன. மண்டபத்தின் நடுவில் அமைந்துள்ள சிறிய மேடையில் கோகர்ணத்து இறைவனைப் பார்த்தபடி மற்றொரு நந்தி. தூண்களும் கூரையும் பெற்றுள்ள இம்மேடையின் முகப்புத் தூண்களில் வணங்கிய நிலையில் பெண் சிற்பங்கள்.

**மேற்றளத் திருமுன்கள்**

படிக்கட்டுகளின் மேற்பகுதியில் பாறையைத் தளம் போல் செதுக்கிச் சோழர் கல்வெட்டொன்று வெட்டப்பட்டுள்ளது. இத்தளத்தின் மேற்குப்பகுதியில் பெருமண்டபத்துடனான முருகன் திருமுன் ஒருதளத் திராவிட விமானம் பெற்று அமைந் துள்ளது. அடுத்துள்ள நான்கு சிறு திருமுன்களில் சரசுவதி, மகாலட்சுமி, துர்க்கை, அன்னபூரணி அமைய, ஐந்தாவதில் ருத்திராக்க இலிங்கம் உள்ளது. கிழக்குப் பகுதியில் தென் பார்வையாக நான்முகன், ஜுரகரேசுவரர் சிற்பங்களும் மேற்குப் பார்வையாக பைரவர், சூரியன் திருமேனிகளும் தனித்தனித் திருமுன்களில் உள்ளன. நால்வரும் சந்திரனும் தண்டாயுத

பாணியும் ஒரு திருமுன்னைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். படிக்கட்டுகளின் வடபுறம் மலைச்சுனை அமைந்துள்ளது.

**எழுவர் அன்னையர் தொகுதி**

சரிவின் கீழ்ப்பகுதியில் வெட்டப்பட்டுள்ள எழுவர் அன்னையர் தொகுதி ஏறத்தாழ 3. 44 மீ. நீளமும் 70 செ. மீ. அகலமும் கொண்ட செவ்வகச் சமன்பகுதியில் உள்ளது. முன்னால் பரவியுள்ள பாறைத்தரையிலிருந்து ஏறத்தாழ 12 செ. மீ. உயரத்தில் அமைந்த கல்தளத்தின்மீது சிவபெருமானை முதல்வ ராகவும் பிள்ளையாரை இறுதியராகவும் கொண்டு அன்னையர் எழுவரும் அமர்ந்துள்ளனர். இத்தரையின் அகலம் வடக்கில் குறுகலாகிக் குறைகிறது.

ஏறத்தாழ, இதே காலகட்டத்தைச் சேர்ந்தவையாகப் பார்வைக்குக் கிடைக்கும் மலையடிப்பட்டிச் சிவன்கோயில், கோளக்குடிக் குடைவரை, பரங்குன்றம் குடைவரை, குன்றத்தூர்க் கன்னிமார் கோயில் எழுவர் அன்னையர் தொகுதிகளிலிருந்து இந்த எழுவர் அன்னையர் தொகுதி பலவிதங்களில் மாறுபட் டிருந்தாலும் ஒற்றுமைக் கூறுகளும் இல்லாமல் இல்லை.

**சிவபெருமான்**

கோகர்ணத்துத் தொகுதியின் முதல்வர் சிவபெருமான். இத்தொகுதியில் இடம்பெறும்போது வீரபத்திரராக அறியப் படும் இப்பெருமான் சற்றே முன்தள்ளி இலேசான வலச் சாய்வில் சம்மணமிட்டு அமர்ந்துள்ளார்.[3] கருவிகள் கொள்ளா நான்கு கைகளுள் பின்னிரண்டும் கடகத்தில் உள்ளன. தொடை மேல் இருத்தப்பட்டுள்ள முன்னிரண்டில் வலக்கை கடகத்தில் உள்ளது. தலையின் இருபுறத்தும் சிறிய அளவிலான கவரிகள். சடைமகுடம், பூட்டுக்குண்டலங்கள், கண்டிகை, தோள், கை வளைகள் அணிந்துள்ள இவரது முப்புரிநூல் நிவீதமாக அமைய, இடுப்பில் சிற்றாடையும் அதை இருத்தும் பாம்பணியும் உள்ளன.

**அன்னையர்**

சிவபெருமானை அடுத்து வரிசையாக சுகாசனத்தில் எழுவர் அன்னையர். முதன்மை வகிக்கும் நான்முகி மட்டுமே நான்கு கைகளும் கச்சை விழையா மார்பகங்களுமாய்க் காட்சிதருகிறார்.

சிவபெருமானைப் போலவே அம்மையின் நான்கு கைகளும் கருவிகளின்றி உள்ளன. பின்கைகள் கடகமாய் அமைய, முன் கைகள் தொடைமீது உள்ளன. வலக்கை, உள்ளங்கை மேல் இருக்குமாறு வலத்தொடைமீது இருத்தப்பட்டுள்ளது. இடக்கை இடைக்கட்டின் முடிச்சுத் தொங்கலைப் பிடித்தவாறு உள்ளது. முகப்புப் பெற்ற இரண்டடுக்குச் சடைமகுடமும் பூட்டுக்குண்டலங்களும் கண்டிகையும் நிவீத முப்புரிநூலும் பட்டாடையும் இடைக்கட்டும் அணிந்துள்ள இவ்வம்மையை அடுத்து மகேசுவரி காட்டப்பட்டுள்ளார்.

எழுவர் அன்னையர்களுள் நான்முகி தவிர, ஏனைய அறுவருமே இரண்டு கைகள்தான் பெற்றுள்ளனர். சாமுண்டி தவிர, மற்றவர்தம் இடக்கை நான்முகி போலவே இடைக் கட்டின் முடிச்சுத்தொங்கலைப் பிடித்தவாறு இடத்தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. வலக்கை ஒவ்வொருவருக்கும் மாறுபட்டு அமைந்துள்ளது. பட்டாடை, வைணவிக்கும் இந்திராணிக்கும் மட்டும் அமைய, இடைக்கட்டு அனைவருக் கும் உள்ளது. மகேசுவரி, கௌமாரி, வராகி, சாமுண்டி இவர்தம் இடையாடையைச் சிற்றாடையாகக் கொள்ளலாம். சுகாசனத்தில் உள்ள இவர்களுள், சாமுண்டி தவிர்த்த பிறர்தம் கீழிறங்கிய இடக் கால் பாதம் சமன் செய்யப்பட்ட தரைத்தளத்தில் இருத்தப் பட்டுள்ளது. சாமுண்டி மற்றவர்களினின்றும் வேறுபட்டு வலக் காலைக் கீழிறக்கியுள்ளார். அனைவர்தம் கைகளிலும் தோள், கை வளைகள். சாமுண்டி தவிர ஏனைய ஐவரும் மார்புக்கச்சும் நிவீதமாய் முப்புரிநூலும் அணிந்துள்ளனர். கௌமாரி தவிர்த்த நால்வருக்கும் பூட்டுக்குண்டலங்கள் காட்டப்பட்டுள்ளன. சாமுண்டி, வைணவி தவிர பிற நால்வருக்கும் கழுத்தில் கண்டிகை உள்ளது.

மகேசுவரியின் சடைமகுடம் நான்முகியின் சடைமகுட அமைப்பினின்று நன்கு வேறுபட்டு மிளிர்கிறது. வலக்கை கடகக் கையாக தொடைமீது இருத்தப்பட்டுள்ளது. அடுத்து அமர்ந்துள்ள வைணவி கிரீடமகுடம் அணிந்துள்ளார். வலக்கை, உள்ளங்கை மேல்நோக்கிய நிலையில் கடகமாய்த் தொடைமீது இருத்தப்பட்டுள்ளது. கழுத்தில் சரப்பளி. கௌமாரியைச் சென்னி அடையாளம் காட்டுகிறது. உருத்திராக்கங்களால்

அலங்கரிக்கப்பட்ட முறுக்கேறிய முப்புரிநூலுடன் விளங்கும் இவருக்கு இளமையான முகம். செவிகளில் பனையோலைச் சுருள்கள். கடக வலக்கை, உள்ளங்கை தொடை நோக்கிய நிலையில் இருத்தப்பட்டுள்ளது. தலையை அலங்கரிக்கும் கரண்ட மகுடத்தின் இரண்டாம் அடுக்கின் மேல் சடைக்குழல்கள் தவழ, பக்கங்களில் பூப்பதக்கங்கள்.

ஐந்தாவதாக உள்ள இந்திராணிக்குத் தனி மரியாதை காட்டப்பட்டுள்ளது. இவருக்கு மட்டும் பின்புலத்தில் மாடம் போலப் பாறை அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மற்ற அன்னையர்களினும் இவரது வடிவம் சற்றே பெரிய அளவிலும் பின் தள்ளியும் உள்ளது. தலையில் மாறுபட்ட கிரீடமகுடம். கழுத்தில் கண்டிகையோடு சரப்பளி. வலக்கை கௌமாரி போல் கடகக் கையாகத் தொடைமீதுள்ளது. வராகியின் சடைமகுடமும் நன்கு கட்டமைக்கப்பட்டுள்ளது. இருபுறத்தும் குழல்கள் சரிந்துள்ளன. கடக வலக்கை, உள்ளங்கை மேல் நோக்கிய நிலையில் தொடை மீது உள்ளது.

தனித்துவச் சிற்பமாக ஒளிரும் சாமுண்டி சுகாசனத்தில் இருந்தபோதும், மற்றவர்களினின்றும் வேறுபட்டு வலக்காலைக் கீழிறக்கியுள்ளார்.[4] இடக்கால் மடித்து மேடைமீது இருத்தப்பட்டுள்ளது. வலக்கை உயர்ந்தோங்கிய நிலையில் குத்துகின்ற முனைப்பில் குறுவாள் ஒன்றைப் பிடித்துள்ளது.[5] செவிகளில் வலப்புறம் பேரளவிலான பனையோலைக் குண்டலம். தொங்கும் இடச்செவிப் பிணக்குண்டலம் தோளைத் தழுவி மார்பில் தவழ்ந்துள்ளது. மண்டையோடுகள் கோத்த முப்புரிநூலுடன் கோரைப்பற்களும் பக்கங்களில் சுடர்முடியும் கொண்டு விளங்கும்[6] இவர் இடக்கை, தொடைமீது சிதைந்தநிலையில் கடகமாகியுள்ளது. மார்பகங்கள் காரைக்கால் அம்மை போல் திரங்கிய நிலையில் இருபுறத்தும் கச்சின்றிக் காட்டப்பட்டுள்ளன. கழுத்தில் சவடியுடன் வளையம் ஒன்றும் உள்ளது.

தொடரின் வடகோடியில் இடம்பிடித்துள்ள பிள்ளையார் இலலிதாசனத்தில் இடம்புரியராய் உள்ளார். பின் கைகளில் இடப்புறம் கரும்புத்தோகை. வலப்புறம் தந்தம். முன் கைகளில் வலப்புறம் மோதகம். இட முன் கை முழங்கால் மீதுள்ளது.

தலையில் கரண்டமகுடம். வலத்தந்தம் இல்லை. இடத்தந்தம் முழுமையாக உள்ளது. கழுத்தில் சரப்பளி. முப்புரிநூல் நிவீதமாக உள்ளது. இடையில் சிற்றாடை. உதரபந்தம் அணிந்துள்ளார். கைகளில் தோள், கை வளைகள்.

இந்தத் தொகுதியில் வீரபத்திரும் பிள்ளையாரும் எழுவர் அன்னையரிடமிருந்து மூன்று செ. மீ. அகலம், ஒரு செ. மீ. கனம் உள்ள சதுரப்பட்டியால் பிரிக்கப்பட்டுள்ளனர். சாமுண்டி தவிர்த்த ஆறு அன்னையர் கைகளிலும் வீரபத்திரர் கைகளிலும் கருவிகள் காட்டப்படாமை குறிப்பிடத்தக்கது.

**குடைவரைக் கோயில்**

முகப்பு, செவ்வக மண்டபம்,[7] கருவறை எனக் கிழக்குப் பார்வையாக அமைந்துள்ள கோகர்ணக் குடைவரையின் முன் உள்ள மண்டபம் பிற்காலத்து அமைப்பு.

**முகப்பு**

நடுவில் இரண்டு முழுத்தூண்களும் பக்கங்களில் இரண்டு அரைத்தூண்களும் பெற்றுள்ள குடைவரையின் முகப்பு, தென் வடலாக 4. 97 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 51 செ. மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பில் உள்ள இத்தூண்களின் கட்டுப்பகுதி சதுரங்களினும் இரண்டு மடங்கு உயரம் பெற்றுள்ளது.

தூண்களின் மேற்சதுரங்களின் மேல் அமர்ந்துள்ள போதிகைகள் பட்டை பெற்ற, வளைமுகமான தரங்கக் கைகளால் 14. 5 செ. மீ. உயரமும் 54 செ. மீ. அகலமும் பெற்ற உத்திரத்தைத் தாங்குகின்றன. இக்கைகளில் பெருந்தரங்க எழுச்சியின் பக்கமுகங் களில் சுருள் போல வளையும் செதுக்கல் உள்ளது. சிராப்பள்ளி இலலிதாங்குரம், மலையடிக்குறிச்சிக் குடைவரை, அதியர் குடை வரை, மலையக்கோயில் சீவரமுடையார் குடைவரை இவற்றில் காட்டப்பெற்றுள்ள சுருள்களை ஒத்தமைந்துள்ள இச்சுருள் அனைத்துப் போதிகைக் கைகளிலும் இடம்பிடித்துள்ளது.

உத்திரத்தையடுத்து வாஜனமும் அதையடுத்துக் கூரையின் வெளிநீட்டலாக அரைநிலா அமைப்பிலான பாறைநீட்சி, வடிவமைக்கப்படாத கபோதமாகவும் காட்டப்பட்டுள்ளன.

முகப்பின் வாஜனம், அரைத்தூண்களை அடுத்துச் சதுரப்பட்டியாகத் தரைவரை இறக்கப்பட்டுள்ளது. இப்பட்டியை அடுத்துள்ள வட, தென்பாறைப்பகுதிகள் ஏறத்தாழ 40 செ. மீ. அகல நான்முக அரைத்தூண்களாய் உருவாகியுள்ளன.

அவற்றைத் தொடர்ந்து வடக்கிலும் தெற்கிலும் விரியும் சீர்மை செய்யப்பட்ட பாறைச்சுவர்களில், தென்புறம் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. கனமான வடசுவரின் கீழ்ப்பகுதியில் 87 செ. மீ. உயரம் 44 செ. மீ. அகலம் உள்ள செவ்வகக் கோட்டம் அகழ்ந்து பாறையிலேயே ஆவுடையாருடன் அமைந்த இலிங்கத் திருமேனியை உருவாக்கியுள்ளனர். இது போன்ற கோட்ட இலிங்கத்திருமேனிகள் மலையக்கோயில், கோளக்குடி, குன்றக் குடிக் குடைவரைகளிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.[8]

**மண்டபம்**

முகப்பின் பின், தென்வடலாக 5.14 மீ. நீளத்திற்கும் கிழக்கு மேற்காக 1. 08 மீ. அகலத்திற்கும் அமைந்துள்ள செவ்வக மண்டபத்தின் மேற்குச் சுவர் நடுவில் இரண்டு அரைத்தூண்களும்[9] ஓரங்களில் அவற்றினும் சற்று அகலக் குறைவான இரண்டு அரைத்தூண்களும் நான்முகமாக வெட்டப்பட்டுள்ளன.[10] நடு அரைத்தூண்களுக்கு இடைப்பட்ட சுவர்ப்பகுதியில் 1. 74 மீ. உயரத்திற்கு 83 செ. மீ. அகலத்தில் கருவறை வாயில் திறக்கப் பட்டுள்ளது. இவற்றிற்கும் ஓர அரைத்தூண்களுக்கும் இடைப் பட்ட சுவர்ப்பகுதிகளிலும் வடகோடி அரைத்தூணிலும் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன.

தூண்களின் மேலுள்ள போதிகைகளின் பட்டை பெற்ற விரிகோணக் கைகள் உத்திரம் தாங்குகின்றன. இங்கும் கைகளின் திருப்பத்தில் உள்ள பெருந்தரங்கப் பக்கப்பகுதிகளில் சுருள்கள் வெட்டப்பட்டுள்ளன. உத்திரத்தையடுத்துக் கூரையைத் தழுவும் வாஜனம் ஓர அரைத்தூண்களை அடுத்து மேற்குச் சுவரின் இருபுறத்தும் சதுரப்பட்டியாய்த் தரைவரை இறங்குகிறது.

மண்டபத்தின் கூரை நன்கு சமன்படுத்தப்பட்டுள்ளது. தரை, கருவறை வாயிலுக்கு முன்னுள்ள பகுதியில் மட்டும் பாறைப் பாளங்களால் பிற்காலத்தே நன்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இதிலிருந்து கருவறை வாயிலின் கீழ்நிலை 28 செ. மீ. உயரத்தில் அமைந்துள்ளது. முகப்பின் தென், வடஅங்கணங்கள் கம்பித் தடுப்புகள் கொண்டுள்ளன. நடுஅங்கணம் கதவு பெற்றுள்ளது.

மண்டபத்தின் தென், வடசுவர்களில் கோட்டங்கள் அகழப் பட்டுள்ளன. இக்கோட்டங்களின் மேற்பகுதியையும் பக்கங்களை யும் சூழ்ந்துள்ள சுவர், பக்கங்களில் நான்முக அரைத்தூண்கள் போலவும் மேலே உத்திரம் போலவும் அமைந்துள்ளது. இக்கோட்டங்களில் தென்புறம் பிள்ளையாரும் வடபுறம் கங்காதரரும் இடம்பெற்றுள்ளனர்.

இச்சுவர்களின் மேல் கூரையை அணைத்தவாறுள்ள வாஜனம் மேற்கு, கிழக்கு வாஜனங்களின் தொடர்ச்சியாக உள்ளது. மேற்கிலுள்ளாற் போலவே கிழக்கிலும் அரைத்தூண் களை ஒட்டி மண்டபத் தரையைத் தொடுமாறு வாஜனத்தின் தொடர்ச்சியாக இறங்கும் சதுரப்பட்டிகள் காட்டப்பட்டுள்ளன.

வேறெந்தக் குடைவரையிலும் காணவியலாத அதிசயமாக முகப்பின் மேற்கு முகத்தில் உத்திரத்தின் மேல் பிதுக்கமாக ஒரு வாஜனமும் கூரையை ஒட்டி ஏனைய முத்திசைகளிலும் காட்டப் பட்டுள்ள வாஜனத்தின் தொடர்ச்சியாக மற்றொரு வாஜனமும் இங்குச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கூரையை ஒட்டியுள்ள இரண்டாம் வாஜனத்தை, 'வலபி' என அழைக்க இயலாதவாறு, அது பிறதிசை வாஜனங்களின் தொடர்ச்சியாக இருப்பதுடன், வலபி போல வளைமுகமும் கொள்ளாது சதுரப்பட்டியாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**கருவறை**

கிழக்கு மேற்காக 3. 16 மீ. அளவும் வடக்குத் தெற்காக 3. 23 மீ. அளவும் 2. 17 மீ. உயரமும் கொண்டு அமைந்துள்ள கருவறையின் தரை நடுவே, பாறையில் வெட்டப்பட்ட 1. 52 மீ. பக்கம், 6 செ. மீ. உயரம் உள்ள சதுரத் தளம் காணப்படுகிறது. அதன்மீது உபானம், ஜகதி, குமுதம், கம்புகளின் தழுவலில் பாதங்கள் பெற்ற கண்டம், பட்டிகை, மேற்கம்பு என உறுப்புகள் பெற்ற 87 செ. மீ. உயர, 1. 50 மீ. பக்கமுடைய சதுர ஆவுடையாரும்[11] அதன் நடுவே 69 செ. மீ. உயரமுடைய உருளைப் பாணமும் உள்ளன.

பாறையில் வெட்டப்பட்ட இந்த இலிங்கத்திருமேனியின் சிறு கோமுகம் வடதிசை நோக்கியுள்ளது. முழுக்காட்டு நீர் வாங்கப் பள்ளம் ஏதும் தரையில் வெட்டப்படவில்லை. ஆனால், குழிவாக உள்ள அப்பகுதியில் இருந்து தொடரும் கால், வாயில் வழியே மண்டபத்தில் இறங்கித் தென்கிழக்காய்த் தொடர் கிறது. கருவறை வாயிலில் பிற்காலக் கீழ்நிலை ஒன்று காட்டப் பட்டுள்ளது. கருவறைக் கூரையை ஒட்டி நாற்புறத்தும் வாஜனம்.

**சிற்பங்கள்**

**பிள்ளையார்**

மண்டபத் தென்சுவர்க் கோட்டத்தில் கோள வடிவக் கல் இருக்கையில் சம்மணமிட்டு இடம்புரியாக அமர்ந்திருக்கும் பிள்ளையாரின் துளைக்கையிலும் வல முன் கையிலும் மோதகம். இட முன் கை இடுப்பாடை முன் வளையமிட்டுள்ள இடைக் கட்டின் முடிச்சைத் தொட்டபடி முழங்கால்மீது உள்ளது.[12] வலப் பின் கையில் இதழ் விரித்த தாமரை. இடப் பின் கையில் தந்தம்[13] கரண்டமகுடமும்[14] வஸ்திர முப்புரிநூலும் சரப்பளியும் உதரபந்தமும் அணிந்துள்ளவரின் இடுப்பில் அரைப்பட்டிகை இருத்தும் பட்டாடை. கணுக்கால்கள்வரை காட்டப்பட்டுள்ள இவ்வாடையின் முன் அழகிய இடைக்கட்டு. வலத்தந்தம் இல்லை. இடத்தந்தம் சிறியதாகக் காட்டப்பட்டுள்ளது. கைகளில் தோள், கை வளைகள்.

**கங்காதரர்**

தமிழ்நாட்டுக் குடைவரைக் காலச் சிற்பங்களுள் கங்காதரர் தோற்றம் குறிப்பிடத்தக்கது. நான்கு குடைவரைகளில்தான் தமிழ்நாட்டில் கங்காதரரைக் காணமுடிகிறது. அந்த நான்கனுள் ஒன்றாகக் கோகர்ணம் பெருமையுறுகிறது. மண்டப வடசுவர்க் கோட்டத்தில் உள்ள கங்காதரர் நெடிய தோற்றத்தினர். இடக் காலை நேராக ஊன்றியுள்ளவர்,[15] வலக்காலை முழங்கால் அளவில் இலேசாக மடக்கிப் பாதத்தைத் திரயச்ரமாய்த் திருப்பி யுள்ளார். இடையில் அரைப்பட்டிகை இருத்தும் மரவுரியாடை[16] பட்டிகை முடிச்சின் வலத்தொங்கல் வலமுழங்கால்வரை நீள, இடைக் கட்டின் முடிச்சுத் தொங்கல்கள் இருபுறத்தும் உள்ளன.

வல முன் கை வலத்தொடையருகே கடகமாக, இட முன் கை கடியவலம்பிதத்தில் உள்ளது.[17] பின் கைகளில் வலப்புறம் அக்க மாலை. கடக இடக்கையின் இருவிரல்களுக்கும் இடையில் நீளும் இரண்டு[18] சடைப்புரிகள் கையையொட்டிக் கீழிறங்குகின் றன. நிவீத முப்புரிநூலும் கண்டிகை, சரப்பளி எனக் கழுத்தணி களும் செவிகளில் மகரகுண்டலங்களும் அணிந்துள்ள பெருமா- னின் சடைமகுடம், அழகிய முகப்பணிகளுடன் கட்டமைக்கப் பட்டுள்ளது. சடைப்புரிகள் சில தோள்களில் நெகிழ்ந்துள்ளன. கைகளில் தோள், கை வளைகள். இடுப்பின் இடப்புற நிமிர்வும் அதன் காரணமான மார்பின் வலச்சாய்வும் முகத்தின் இலேசான இடத்திருப்பமும் இச்சிற்பத்தின் கம்பீரம்; நளினம் இவற்றைப் பலமடங்கு மிகுவிப்பதை யாரே மறுக்கமுடியும்!

சிவபெருமானின் சடைப்புரிகளில் அமர விழைந்து வருமாறு போலக் கங்கை காட்டப்பட்டுள்ளார்.[19] கோட்டத்தின் இடப்புற உச்சி மூலையில், பெருமானின் மகுட அளவிற்குக் காட்டப்பட்டுள்ள கங்கை, மேகங்களுக்கிடையில் மண்டியிட்டு அமர்ந்த நிலையில் அஞ்சலித்த கைகளுடன் உள்ளார். தலையில் சடைமகுடம். செவிகளில் பனையோலைக் குண்டலங்கள், கழுத்தில் சவடி, கால்களில் தண்டை, இடையில் சிற்றாடை. பெருமானை நோக்கிய முகத்தில் பணிவும் பத்திமையும். தமிழ் நாட்டின் குடைவரைக் காலக் கங்கையருள் அழகில் இவருக்கே முதலிடம்.

**கல்வெட்டுகள்**

கோகர்ணம் கோயில் வளாகத்திலிருந்து இருபத்தைந்து கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் பதினெட்டுக் கல்வெட்டுகள் புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டுகள் தொகுதி யில் இடம்பெற்றுள்ளன.[20] ஏழு கல்வெட்டுகள் ஆவணம் 13, 14ம் தொகுதிகளில் வெளியாகியுள்ளன.[21] புதுக்கோட்டை மாநிலக் கல்வெட்டுகள் தொகுதியில் இடம்பெற்றுள்ள பதினெட்டனுள், பத்துக் கல்வெட்டுகள் தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி களிலும்[22] பதிவாகியுள்ளன. இக்கோயிலின் சுவர்களிலும் கூரை களிலும் படித்தறியப்படாத கல்வெட்டுகள் சிலவற்றைக் காண முடிந்தது. அடர்த்தியான சுண்ணாம்புப்பூச்சில் சிக்கி நிலை குலைந்துள்ள இவற்றைப் புதுக்கோட்டை மாவட்டக்

கல்வெட்டு ஆய்வாளர்கள் படித்துப் படியெடுப்பின் இக்கோயிலின் வரலாறு குறித்து மேலும் சில தரவுகளைப் பெறுதல்கூடும்.

கோகர்ணம் கோயில் வளாகத்திலிருந்து படியெடுக்கப் பட்டுள்ள இருபத்தைந்து கல்வெட்டுகளுள் காலத்தால் முற்பட்டது, குடைவரை முகப்பை அடுத்து வெளிப்புறத்தே விரியும் தென்பாறைச் சுவரில் காணப்படும், 'ஸ்தாபனாச் சார்யோ பாகத்தாச்சார்யஹ' என்னும் கிரந்தக் கல்வெட்டே ஆகும். அதைப் பல்லவ கிரந்தக் கல்வெட்டாகக் குறிப்பிடும் திரு. கே. ஜி கிருஷ்ணன், அதன் காலத்தைக் கி. பி. ஏழாம் அல்லது எட்டாம் நூற்றாண்டாகக் கணித்துள்ளார்.

இதை அடுத்த நிலையில் பழைமை வாய்ந்ததாகக் கோமாறஞ் சடையரின் பதினேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டைக் குறிப் பிடலாம். கல்வெட்டின் உள்ளீடு கொண்டு இம்மாறஞ்சடை யரை வரகுணராகக் கொள்ளலாம். பன்னிரண்டு கல்வெட்டுகள் சோழர்களுடையவை. அவற்றுள் முதற் பராந்தகர் காலத்தன வாகக் கொள்ளத்தக்க பரகேசரிக் கல்வெட்டுகள் இரண்டும் உத்தமசோழர் காலத்தனவாகக் கொள்ளத்தக்க பரகேசரிக் கல்வெட்டுகள் இரண்டும் அவருக்குச் சற்றுக் காலத்தால் முற்பட்ட இராஜகேசரிவர்மர் ஒருவருடையதாய்க் கொள்ளத் தக்க கல்வெட்டுகள் இரண்டும் அடக்கம்.

எஞ்சிய ஆறனுள் ஒன்று முதலாம் இராஜராஜரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டிலும் ஒன்று முதலாம் இராஜேந் திரரின் இருபத்து நான்காம் ஆட்சியாண்டிலும் வெட்டப் பட்டுள்ளன. ஒரு கல்வெட்டு இராஜேந்திரர் மெய்க்கீர்த்தியின் ஒருபகுதியை மட்டும் பெற்றுத் துணுக்குக் கல்வெட்டாய் அமைந் துள்ளது. முதல் குலோத்துங்கரின் பன்னிரண்டாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டுப் பாடல் கல்வெட்டாய் மலர, இரண்டாம் குலோத்துங்கரின் கல்வெட்டு, கலிங்கொன்று செய்யப்பட்ட தகவலைத் தருகிறது. மூன்றாம் இராஜராஜரின் இருபதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சோழநாட்டில் அப்போதிருந்த போசளர் ஆதிக்கத்தை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

பிற்பாண்டியர் கல்வெட்டுகளாய் மாறவர்மர் வீரபாண்டி யர், மாறவர்மர் குலசேகரர், சுந்தரபாண்டியர் இவர்தம்

கல்வெட்டுகள் நான்கும் விஜயநகரக் காலத்தினவாய்ச் சாயண உடையார், விருப்பண உடையார், பிரதாபதேவராயர் காலக் கல்வெட்டுகள் மூன்றும் உள்ளன. நான்கு கல்வெட்டுகள் மன்னர் பெயரற்ற நிலையில் வெட்டப்பட்டுள்ளன. இவ்விருபத்தைந்து கல்வெட்டுகளின் உள்ளீடுகளையும் பல்வேறு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தியபோது பயனுள்ள பல தகவல்கள் கிடைத்தன.

**கோகர்ணம்**

இங்குள்ள கல்வெட்டுகளில் காலத்தால் பழைமையான தான வரகுணரின் கல்வெட்டு, கோகர்ணத்தை வல்லநாட்டின் கீழிருந்த திருவேள்பூர் கோகர்ணமாய்ச் சுட்டுகிறது. முதலாம் பராந்தகரின் முப்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் கோகர்ணத்தை அது போலவே சுட்டி மகிழ்கிறது. முதலாம் இராஜராஜருக்கு முற்பட்ட இராஜகேசரி, பரகேசரிக் கல்வெட்டுகள் தென்கவிர நாட்டுத் திருவேட்பூர்க் கோகர்ண மாய் இவ்வூரை அடையாளப்படுத்துகின்றன. பிற்பாண்டியர் கல்வெட்டுகளும் கோகர்ணத்தைத் தென்கவிரநாட்டின் கீழிருந்த திருவேட்பூரின் ஒரு பகுதியாகவே காட்டுகின்றன.

விஜயநகரக் கல்வெட்டுகளில் தென்கவிரநாடு ஜயசிங்க குலகால வளநாட்டின் கீழிருந்த வருவாய்ப் பிரிவாக இடம் பெறுகிறது. இவ்வளநாட்டின் பெயர் திருவேட்பூரிலிருந்து படியெடுக்கப்பட்ட மூன்றாம் குலோத்துங்கர் காலக் கல்வெட் டொன்றிலும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.[23] பெரும் பாலான கல்வெட்டுகளில் திருவேட்பூரின் ஒரு பகுதி போல அடையாளப்படுத்தப்படும் கோகர்ணம், ஒன்றிரண்டு கல்வெட்டு களில் மட்டும் தென்கவிர நாட்டுக் கோகர்ணம் என்று திரு வேட்பூரின் துணையின்றித் தனித்த நிலையில் அறிமுகமாகி உள்ளது. சில கல்வெட்டுகள் திருவேட்பூரைத் தேவதானமாகக் குறிக்க, சில கல்வெட்டுகள் கோகர்ணத்தைத் தேவதானமாகச் சுட்டுகின்றன.[24]

**நாடு / ஊர்**

கோகர்ணத்துக் கல்வெட்டுகளில் தென்கவிரநாடு, பாம்பூர் நாடு, வல்லநாடு தவிர, திருவழுந்தூர்நாடு, தென்கவிரநாட்டுத்

தென்பனங்காட்டுநாடு இவையும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் திருவழுந்தூர்நாடு சோணாட்டுப் பிரிவாகச் சுட்டப்பட்டுள்ளது. பாம்பூர்நாடு இப்போதைய கும்பகோணம் வட்டத்தையும் தென்கவிரநாடு, தென்பனங்காட்டுநாடு, வல்லநாடு இவை ஆலங்குடி வட்டத்தையும் குறிப்பனவாகலாம்.[25]

கோகர்ணக் கல்வெட்டுகள் பதினெட்டு ஊர்களின் பெயர் களைத் தருகின்றன. அவற்றுள் நான்கு 'ஊர்' எனும் பின்னொட் டும் (திருவேட்பூர், பெருங்கவூர், வழுத்தூர், வடவூர்) இரண்டு, 'குடி' எனும் பின்னொட்டும் (அத்திக்குடி, விலாக்குடி) இரண்டு 'மங்கலம்' எனும் பின்னொட்டும் (மேற்கிள்ளி மங்கலம், நாட்டார்மங்கலம்) ஒன்று 'புரம்' எனும் பின்னொட்டும் (வீர சோழபுரம்) கொள்ள, ஒன்பது ஊர்கள் பல்வேறு பின்னொட்டு களுடன் அமைந்துள்ளன. (கல்குறிச்சி, கல்லாற்றுப்பள்ளி, ஆலங்குளம், மதுரை, சிவகங்கை, கோலப்பாடி, அதம்பார், புதுக்கோட்டை, துவாரசமுத்திரம்)

### நாட்டார்

மூன்று கல்வெட்டுகள் கவிரநாட்டு நாட்டாரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. குளப்பட்டியாகத் தரப்பட்ட நிலத்துண் டொன்றின் உரிமை ஆவணம் கொடையாளியால் கவிரநாட்டு நாட்டாரிடம் ஒப்புவிக்கப்பட்டது. திருவேட்பூர் அரையர் பெரிய வேளான் என்பார் நாட்டாரிடம் விலைக்குப் பெற்ற பெருங்கவூர் உள்ளிட்ட பற்றிலிருந்து கோகர்ணம் திருக் கோயில் செல்வக்கூத்தருக்கு வழங்க ஒப்புக்கொண்ட நெல், பணம் இவை பற்றிய ஆவணத்தின் கையெழுத்தாளர்களாக ஜயங்கொண்ட சோழப் பல்லவரையன், செம்பியன் கோனார், செம்பியன் வேளார், உத்தமக் கோனார், அழகிய சோழ வேளார், வல்லத்து வென்றார், ஜயதுங்க பல்லவதரையர், அரையன் உடப் பிறப்பழகியார், வல்லநாட்டு வேளார், செம்பியன் பல்லவ தரையர், வில்லவராயர், காடவதரையர் எனும் தென்கவிர நாட்டு நாட்டார்கள் சிலர் வெளிப்படுகின்றனர்.

தங்கள் காணியாட்சியான வயல் ஒன்றைக் கோகர்ணத்து இறைவனுக்கு நாட்டார் விற்ற தகவலைத் தரும் சாயண உடையார் காலக் கல்வெட்டு ஆவணக் கையெழுத்தாளர்களாக

விழுப்பரையன், குலோத்துங்க சோழ வேளார், எடுத்தகை அழகியான் செம்பியதரையன், பெருநற்கிள்ளிச் சோழ வேளான், செயங்கொண்ட சோழத் தென்கவிரநாட்டு வேளான், சுந்தர பாண்டிய விழுப்பரையன் முதலிய நாட்டார் பெருமக்களை அறிமுகப்படுத்துகிறது. நாட்டார் ஆவணங்களை நாட்டுக் கணக்குகளான அனந்தவீரியரும் உய்யநின்றான் மதுரை திருவாய்த்தானும் எழுதியுள்ளனர்.

நாட்டார் என்னும் ஆட்சி அமைப்பைப் பற்றி விரிவான அளவில் தகவல்கள் கிடைக்கவில்லை எனினும், கிடைத்திருக் கும் தரவுகள் நிருவாகத்தில் அவர்களுக்கிருந்த பங்களிப்பிற்குச் சான்றாவதுடன் அவர்தம் மேலாண்மையையும் நிறுவுவனவாக அமைந்துள்ளன.

**வரிகள்**

வரிகள் பற்றிப் பேசும் கோகர்ணக் கல்வெட்டுகள் சிலவே. கடமை, அந்தராயம், வினியோகம், தருவ்தான அச்சு, காரிய ஆராய்ச்சி, வெட்டிபாட்டம், பஞ்சுபீலி, சந்துவிக்கிரகப்பேறு எனும் வரியினங்கள் இரண்டு கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. மாறவர்மர் வீரபாண்டியர் ஆட்சிக்காலத்தில் நிலஞ்சார்ந்த வரியாகக் கொள்ளப்பட்ட வாடாக்கடமையின் அளவை நிர்ணயிக்கும் பொறுப்பு நாட்டாரிடம் இருந்தது. பெருங்கவூர்ப் பற்றுக்கு ஆண்டுக்கு அறுபது பணம் வாடாக் கடமையாகச் செலுத்தப்பட்டது.

**வேளாண்மை**

நன்செய், புன்செய், நீர்நிலம், விளைநிலம், திடல் என நிலங்கள் நீராதாரங்களைப் பொருத்தும் விளைதிறனுக்கு ஏற்பவும் வகைப்படுத்தப்பட்டிருந்தன. செய், வயல் எனும் சொற்கள் பெருவழக்காகவும் துடவல் எனும் சொல் ஒரோ வழியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெரிய குடியிலார் புன் செய், கட்டியார் புன்செய், காற்றன் புன்செய், மும்பன் வயல், புதுக்கோட்டை அரையர்கள் இறையிலி, செட்டி வயக்கல், மிழிச்சான் வயக்கல் என உரியவர் பெயரேற்ற நிலத்துண்டு களும் கணவதி வயக்கல், பிள்ளையார் புன்செய், திருக்கோகர்ண

முடைய நாயனார் கிழத்தி வயக்கல், உடையார் சார்ந்தாரைக் காத்த நாயனார் தேவதானம் என இறை சார்ந்து பெயரேற்ற நிலத்துண்டுகளும் அறியப்படுகின்றன.

இவை தவிர, வடவூர்ச் செய், நாட்டார்மங்கலம் வயல், அத்திக்குடி வயல் என ஊர்ச் சார்ந்தும் பனை வயல், வேலம் வயல், கருங்காலித் துடவல் என விளைவு சார்ந்தும் நிலத்துண்டு கள் பெயர்கொண்டிருந்தன. தரிசாக இருந்து உழைப்பால் நீர்வளம் பெற்று விளைநிலமாக்கப்பட்ட நிலங்கள் வயக்கல் எனப்பட்டன. அவற்றுள் சில மிழிச்சான் வயக்கல், செட்டி வயக்கல், அம்பட்டன் வயக்கல் எனப் பெயர் கொள்ள, இறைத் திருமேனிகளின் வழிபாட்டிற்குக் கொடையளிக்கப்பட்டவை அவ்வத் திருமேனிகளின் பெயரேற்றமையைக் கணவதி வயக்கல், பிள்ளையார் புன்செய், திருக்கோகர்ணமுடைய நாயனார் கிழத்தி வயக்கல் எனும் பெயர்கள் நிறுவவல்லன.

நெல் முக்கியப் பயிராக அமைய, கோடைப்போகத்தில் தினை, வரகு, எள் இவையும் விளைவிக்கப்பட்டன. இறைவனுக் கான மலர்களைப் பெறச் சில நிலத்துண்டுகள் நந்தவனங்களாகக் கொள்ளப்பட்டன. நாள் ஒன்றுக்கு இரண்டு நாழி மலர் பெறுமளவு இந்நிலத்துண்டுகளில் மலர்ச்செடிகள் பயிரிடப் பட்டன. நிலங்களை அளக்கப் பயன்பட்ட கோல் பதினெட் டடிக்கோல் எனப்பட்டது. இதனால் அளக்கப்பெற்ற 512 குழி நிலம் ஒரு மாவாகக் கொள்ளப்பட்டது.[26]

**நீர்ப்பாசனம்**

வெள்ளாற்றுப் பாசனம் குறிக்கப்பட்டாலும், ஏரி, குளப் பாசனமே பெருமளவிற்காய் இருந்தமையை அறியமுடிகிறது. கவிரநாட்டில் பெருநற்கிள்ளிச் சோழப் பேரேரி இருந்தது. அதன் பெருங்குமிழி, சிறுகுமிழி வழி நீர்பெற்று வளஞ்சுரந்த நிலங்களுள் அத்திக்குடிவயல், நாட்டார்மங்கல வயல், வடவூர்ச் செய் இவை அமைந்தன. இவற்றுக்கு நீரெடுத்துச் சென்ற வாய்க் கால்கள் விலாக்குடி வாய்க்கால், நாட்டார்மங்கல வாய்க்கால் எனப் பெயர் கொண்டிருந்தன. கவிரக்குளமும் பெரிய நீர் நிலையாக அமைந்து பல நிலப்பகுதிகளுக்குப் பாசனமளித்தது. இதிலிருந்தும் பெருங்குமிழி, சிறுகுமிழி வழியாக வாய்க்கால்கள்

நீரெடுத்துச் சென்றன. இக்குளத்துக்குக் குளப்பட்டியாக மேற்கிள்ளிமங்கலத்தைச் சேர்ந்த காஞ்சை நம்பிப்பிரான் கிரம வித்தனான அரிகுலகால பிரமாதராயன் நிலத்துண்டு ஒன்றை அளித்திருந்தார்.

நிலங்கள் விற்கப்பட்டபோது, அவற்றுக்குப் பாசனமளித்த குளங்களும் குளவாய்த்தலைகளும் சேர்த்து விற்கப்பட்டமை யைச் சாயண உடையார் கல்வெட்டால் அறியமுடிகிறது.[27] சரியான பராமரிப்பின்மை காரணமாகக் குளங்கள் சில நீர்வற்றிப் போனமையையும் அதன் காரணமாக விளைச்சலின்றிப்போன நிலத்துண்டுகள் வரிவிலக்குப் பெற்றமையையும் மற்றொரு கல் வெட்டு எடுத்துரைக்கிறது.[28] இரண்டாம் குலோத்துங்க சோழர் காலத்தில் இரும்பாழி மறவன் அரசன் தேவனான அநபாய நாடாழ்வான் இர்ாஜராஜன் கலிங்கொன்று செய்வித்தார்.

**கோயில் நிருவாகம்**

கோயில் வழிபாடும் நிருவாகமும் தளிஉபாசகர்களால் மேற்கொள்ளப்பட்டது. சோழர் காலக் கல்வெட்டுகள் மூன்று, கோயில் நிவந்தங்கள் சில தளிஉபாசகர்கள் பொறுப்பில் இருந்தமையைச் சுட்டுகின்றன. பரகேசரிவர்மர் காலக் கல்வெட்டு அறக்கட்டளை ஒன்றின் பொறுப்பை ஒப்புக்கொண்ட கோயில் சிவாச்சாரியார்களாக பாரதாயன் காடம் புசங்கன், சாத்தம் ஆரம் பல்லவன், சாத்தம் புசங்கன், மழபாடி நிச்சல் இவர்களைச் சுட்டுகிறது. இவர்களும் தளிஉபாசகர்களும் ஒரே அமைப்பினரா என்பதை அறியக்கூடவில்லை. பிற்பாண்டியர் காலத்தில் கோயில் நிருவாகத்தைத் தானத்தார் மேற்கொண்டிருந்தனர். கோயிலுக்கு அளிக்கப்பட்டிருந்த நிலத்துண்டுகள் சிலவற்றைப் பயிர்செய்துகொள்ளும் உரிமை அவர்களுக்குத் தரப்பட்டிருந் தமையை ஒரு கல்வெட்டால் அறியமுடிகிறது.

**விளக்கு, வழிபாடு, படையல்**

வீரசோழபுரத்துச் சாமநாயகன் குடையம்படான் கோகர்ணம் கோயிலில் சிறுகாலைச் சந்திவிளக்கு ஒன்று ஏற்று வதற்காக ஒரு கழஞ்சுப் பொன் அளித்தார். இப்பொன்னை ஏற்றுக்கொண்ட பாரதாயன் காடம் புசங்கன், சாத்தம் ஆரம்

பல்லவன், சாத்தம் புசங்கன், மழபாடி நிச்சல் இவர்கள் அவ்விளக்கைச் சோதி விளக்காக ஏற்ற ஒப்பினர். கோயிலில் நந்தாவிளக்கொன்று ஏற்றுவதற்காகத் தளிஉபாசகரிடம் பதினொரு கழஞ்சுப் பொன் தரப்பட்டது. இந்தப் பொன்னை முதலாகக் கொண்டு, இதன் வட்டி வழிக் கோயிலில் விளக்கேற் றப்பட்டது. கல்குறிச்சியைச் சேர்ந்த வரகுணபதி அரையனான நக்கஞ்செட்டி என்பார் இறைவன் திருமுன் நந்தாவிளக்கு ஒன்று ஏற்ற வாய்ப்பாகப் பதினைந்து கழஞ்சுப் பொன்னளித் தார். பொன்னும் அதன் வழியான அறக்கட்டளையும் கவிரநாட்டார் பொறுப்பில் விடப்பட்டன.

ஹொய்சள வேந்தரான வீரசோமேசுவரர் அன்னையார் சோமலதேவியாரின் சிறு பிள்ளைகளில் வாச்சியன் என்பார், தம் அன்னையார் மஞ்சவி, தந்தையார் பாருசதேவர் இவர்கள் நலம் போற்றி இக்கோயிலில் முன்பு அமைத்த நந்தாவிளக்குத் தொடரவும் உத்தராயணத்து முதல் நாள் முதல் மேலும் ஒரு நந்தாவிளக்கு அமையவும் நிலக்கொடையளித்தார்.[29] இந்நிலத் தின் ஒரு பகுதியில் இறைவனுக்கு நாள் ஒன்றுக்கு இருநாழி மலர்கள் வருமாறு பூச்செடிகள் பயிர் செய்யவும் திட்டமிடப்பட் டது. இந்நிலக்கொடையைப் பெற்றுக்கொண்ட சிவஅந்தணர் இவ்வறங்களை மேற்கொள்வதாக உறுதியளித்தனர்.

குளங்களின் சீர்குலைவால் கோகர்ணம் கோயிலுக்குரிய நிலங்கள் சில விளையாமல் போனமையால் படையலும் வழிபாடும் நெருக்குதலுக்கு ஆளாயின. இந்நிலையில் கவிர நாட்டார் தங்களுக்கு உரிமையுடைய மாவயலை இறைவனுக் கான அமுதுபடிக்கு உபையமாக இறைநீக்கித் தந்தனர். நாட்டாரி டம் விலைக்குப் பெற்ற பெருங்கவூர் விளைச்சலிலிருந்து திருவேட்பூர் அரையர் பெரிய வேளார் மாத்தால் பசானத்துக்கு மூன்று கலம் நெல்லும் கோடைப்போகத்தில் ஒன்று பாதியும் புன்செய்ப் பயிர் விளைவிற்காக ஆண்டிற்கு மூன்று பணமும் கோயில் செல்வக்கூத்தருக்கு அளித்தார்.

மாறவர்மர் குலசேகரர் ஆட்சிக்காலத்தில் கவிரநாட்டு நட்டார்களும் அரையர்களும் பல்லவராயருக்கு நிலத்துண் டொன்றை விற்றனர். இந்நில வருவாய் கொண்டு கோயிலில்,

'பல்லவன் சந்தி' எனும் பெயரில் சிறப்பு வழிபாடு அமைக்கவும் பல்லவன் திருநாள் கொண்டாடவும் வைகாசித் திருவிழா வின்போது சித்திரைத் தீர்த்தமாக இறைவன் எழுந்தருளவும் ஏற்பாடாயிற்று. இதே போல் பல்லவன் சந்தி, பல்லவர் திருநாள் அமைத்து ஆவணி மாதச் சித்திரைத் தீர்த்தமாக எழுந்தருள மற்றோர் இறைத்திருமேனிக்கும் நிலக்கொடை அளிக்கப் பட்டுள்ளது. கல்வெட்டுச் சிதைவால் இறைத்திருமேனியின் பெயரை அறியக்கூடவில்லை.[30]

வேளான் காரி என்பார் வரி கட்ட வேண்டியிருந்த கோயில் நிலத்தை வரியிலியாக்குவதற்காக நாட்டாரிடம் இருபது கழஞ்சுப் பொன்னளித்தார். இதை முதலாகக் கொண்டு இதன் வட்டியை வரிக்கு மாற்றாகக் கொள்ள ஒப்பிய நாட்டார், நிலத்தை வரியிலி செய்ததுடன், நிலவருவாய் கொண்டு மூன்று சந்தியிலும் இறைவனுக்குப் படையலிடவும் திருப்பலியின் போது உணவு இடவும் வழியமைத்தனர் பங்குனித் திருஉத்திரத் திருவிழாவும் கணபதி விழாவும் தளிஉபாசகர் பொறுப்பில் அமைந்தன. உத்திரத்தன்று இறைவனுக்குப் பெருந்திருவமுது அளிக்க எம்பெருமான் என்பார் துளைப்பொன் ஒன்று அளித்திருந்தார். அதன் வட்டியான மூன்று கழஞ்சுப் பொன் கொண்டு அமுது அளிக்கப்பட்டது.

திருவேட்பூர் உடையார் வேளார் வெண்காடன் கோயில் உபாசகரிடம் ஒன்பது காசுகள் ஒப்படைத்திருந்தார். அதன் வட்டியாக நான்கு நாழித் துணிப்பதக்கு நெல் தரப்பட்டது. ஆண்டுதோறும் பங்குனித் திருநாள் கொண்டாடப்பட்ட ஏழு நாட்களும் இந்நெல் கொண்டு இறைவனும் இறைவியுமான உற்சவத்திருமேனிகளுக்குப் பிடி அமுது வழங்கப்பட்டது. அரசு விழித்துறங்கும் பெருமாள் பல்லவராயர் வளமான வயல்கள் சிலவற்றைக் கோயில் பூசைக்கும் திருப்பணிக்குமாகக் கொடையளித்தார்.

### பெருநற்கிள்ளிச் சோழப் பெரும்பள்ளி

கோகர்ணத்திற்குச் சற்றுத் தொலைவில் உள்ள குன்று ஒன்றின் மீதுள்ள சமண தீர்த்தங்கரர் சிற்பத்திற்கு அருகில் காணப்படும் சுந்தரபாண்டியரின் கல்வெட்டு, தென்கவிர

நாட்டுக் கல்லாற்றுப்பள்ளியில் இருந்த பெருநற்கிள்ளிச் சோழப் பெரும்பள்ளி ஆழ்வாருக்கான திருப்படிமாற்று உள்ளிட்ட நிவந்தங்களுக்கு ஊர்ப் பள்ளி உடையார்கள் காணியான முக்கால் வேலி நிலம் மன்னரால் இறையிலிப் பள்ளிச்சந்தமாக்கித் தரப் பட்ட தகவலைப் பகிர்ந்துகொள்கிறது.[31] கல்வெட்டுப் பெரிதும் சிதைந்திருப்பதால் நிலத்துண்டுகளின் பெயர்களும் பரிந்துரைத் தவரின் பெயரும் அறியக்கூடவில்லை.

**கட்டுமானங்கள்**

சேமப்பிள்ளையாரின் நலம் கருதித் தென்கவிரநாட்டுத் திருப்பூமிசுவரம் உடைய நாயனாருக்கு விமானம் எடுப்பித்த உதையன் புவனசிங்க தேவனை வீரபாண்டியர் காலக் கல்வெட் டொன்று அடையாளப்படுத்துகிறது. இவர் மன்னரின் அகம்படி முதலிகளுள் ஒருவராக விளங்கியவர். பிரகதாம்பாள் திருமுன் உள்ள மண்டபத்தைப் பல்லவராய மாணிக்கத்தாள் எதியார் கட்டியதாக நள ஆண்டு தைத்திங்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக் கூறுகிறது.

இதே கோயிலின் சிற்பமண்டபக் கூரையிலுள்ள கல்வெட்டு அம்மண்டபம் இராயத் தொண்டைமானால் (கி. பி. 1686-1730) உருவாக்கப்பட்ட தகவலைத் தருகிறது. இங்குள்ள முதல் குலோத்துங்கரின் பாடல் கல்வெட்டு தென்கவிரநாட்டில் குளம், மதகு, கண்ணாறுகள் அமைத்து நாட்டின் வளம் பெருக்கிய தொண்டைநாட்டு அண்ணல் ஒருவரைப் பாராட்டிப் புகழ்ந் துரைப்பதுடன், குலோத்துங்கரைப் பேரம்பலம் பொன் வேய்ந்த பேரரசராகக் காட்டி மகிழ்கிறது. தூண் ஒன்றிலுள்ள கல்வெட்டு மல்லப்பன் என்பார் கோகர்ணத்து இறைவனை எப்போதும் சிந்தித்தவராய் இருந்தமையைச் சுட்டுகிறது.

**குடைவரையின் காலம்**

இங்குள்ள பல்லவ கிரந்தக் கல்வெட்டும் மாறஞ்சடையரான வரகுணவர்மர் கல்வெட்டும் குடைவரையின் காலத்தைக் கி. பி. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டினதாகக் கருதச் செய்கின்றன.

**குறிப்புகள்**

1. இக்குடைவரையை ஆய்வு செய்யத் துணைநின்ற சிவாச்சாரியார் திரு. வைத்தியநாதன், அன்பர் திரு. உலகநாதன், சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறைப் பேராசிரியர் திருமதி வெ. சீதாலட்சுமி, செல்வி ரேவதி இவர்கள் கட்டுரையாசிரியர்களின் நன்றிக்குரியவர்கள்.
2. பத்தாவது முகம் பின்னிருப்பதாகக் கருதலாம்.
3. அனைவருமே சுகாசனத்தில் இருப்பதாகத் தி. இராசமாணிக்கம், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி ஆகியோர் பிழையாகக் குறிப்பிட்டுள்ளனர். தமிழகக் குடைவரைக் கோயில்கள், கழகம், சென்னை, 1984, ப. 115; தமிழ்நாட்டுக் குடைவரைக் கோயில்கள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை, 2000, ப.175.
4. இடக்காலை இறக்கியிருப்பதாகக் கூறுகிறார் மா. சந்திரமூர்த்தி. பல்லவர் பாண்டியர் காலம் இரண்டாம் பகுதி, தமிழ் வளர்ச்சி இயக்ககம், 1997, ப. 369.
5. குன்றத்தூர்க் கன்னிமார் கோயிலிலுள்ள சாமுண்டிச் சிற்பமும் குன்றக்குடிக் குடைவரைகளின் முன்னுள்ள சாமுண்டிச் சிற்பமும் குறுவாளுடன் இருப்பது குறிப்பிடத்தக்கது. மு. நளினி, இரா. கலைக்கோவன், மதுரை மாவட்டக் குடைவரைகள், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 2007 பக். 30 - 54. மு. நளினி, இரா. கலைக்கோவன், தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள் தொகுதி 1, சேகர் பதிப்பகம், சென்னை, 2006. ப. 2.
6. விரிசடை என்கிறார் மா. சந்திரமூர்த்தி. மு. கு. நூல், ப. 370.
7. இதை அந்தராளம் என்கிறார் தி. இராசமாணிக்கம், மு. கு. நூல், ப. 113.
8. மு. நளினி, இரா. கலைக்கோவன், மலையக்கோயில் குடைவரைகளும் கல்வெட்டுகளும், வரலாறு 11, 2001, ப. 161; மு. நளினி, இரா. கலைக்கோவன், தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள் தொகுதி 1, ப. 78.
9. சு. இராசவேலும் அ. கி. சேஷாத்திரியும் தூண்கள் என்கின்றனர். மு. கு. நூல், ப. 174.

10. இத்தூண்களைக் குறிப்பிடுமிடத்து, 'கருவறைக்கும் அந்தராளத் திற்கும் இடையில் சதுரம் மற்றும் எட்டுப் பட்டையாகப் பகுக்கப்பெறாத இரண்டு தூண்களும் இரண்டு அரைத் தூண்களும்' இருப்பதாகப் பிழையாகக் குறிக்கிறார் தி. இராச மாணிக்கம். மு. கு. நூல், ப. 113. இவற்றைத் தூண்கள் எனப் பொதுச் சொல்லால் குறித்துள்ளனர் சு. இராசவேலும் அ. கி. சேஷாத்திரியும். மு. கு. நூல், ப. 174.

11. சதுர ஆவுடையார் பாண்டிய மரபு என்கிறார் தி. இராச மாணிக்கம். மு. கு. நூல், ப. 113. அனைத்து மரபுகளிலும் சதுர ஆவுடையாரைக் காணமுடியும்.

12. கடகத்தில் உள்ளதென்கிறார் மா. சந்திரமூர்த்தி. மு. கு. நூல், ப. 368.

13. தி. இராசமாணிக்கம், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி ஆகியோர் இப்பொருளை எழுத்தாணி என்கின்றனர். மு. கு. நூல்கள், பக். 114, 175. பின்கைகளில் பரசுவும் பாசமும் இருப்ப தாகக் கூறுகிறார் கே. வி. சௌந்தரராஜன். Rock-cut Temple Style, Somaiya Publications Pvt. Ltd., Mumbai, 1998, ப. 88. உருளையான தண்டாகக் காண்கிறார் மா. சந்திரமூர்த்தி. மு. கு. நூல், ப. 368.

14. கிரீடம் என்கின்றனர் சு. இராசவேலும் அ. கி. சேஷாத்திரியும். மு. கு. நூல். ப. 175.

15. இருக்கையில் ஊன்றியிருப்பதாகக் கூறுகிறார் மா. சந்திர மூர்த்தி. மு. கு. நூல், ப. 368.

16. 'Tightly worn kaccha which does not produce the symmetrical hem created in the Pandya usage' என்கிறார் கே. வி. சௌந்தர ராஜன். மு. கு. நூல், ப. 87.

17. வல முன் கை தொங்கிய கையாக, இட முன் கை இடுப்பில் உள்ளது என்கிறார் தி. இராசமாணிக்கம். மு. கு. நூல், ப. 114. கே. வி. சௌந்தரராஜன், சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி இவர்கள், இரண்டு கைகளும் கடி முத்திரையில் உள்ளன என்கின்றனர். மு. கு. நூல்கள், பக். 87, 174.

18. மூன்று என்கிறார் மா. சந்திரமூர்த்தி. மு. கு. நூல், ப. 369.

19. கங்கை தனியாகக் காட்டப்பட்டுள்ளமையால் இக்குடைவரை, சிராப்பள்ளிக் குடைவரைக்குக் காலத்தால் முற்பட்டதாகலாம் என்னும் சு. இராசவேலும் அ. கி. சேஷாத்திரியும் அதற்கான விளக்கங்கள் தரவில்லை. மு. கு. நூல், ப. 175.

20. IPS: 6, 27, 28, 36, 39, 41, 54, 72, 102, 120, 183, 239, 530, 532, 590, 649, 682, 691. இவற்றுள் 530ம் எண்ணின் கீழ்ப் பதிவாகி உள்ள கல்வெட்டு, கோகர்ணம் கோயில் வளாகத்தில் இடம் பெறாமல் சற்றுத் தொலைவிலுள்ள சடையாரிப் பாறையில் வெட்டப்பட்டிருந்தபோதும், இப்பகுதியில் இருந்த சமணப் பள்ளி ஒன்றை அடையாளம் காட்டுவதால் இங்கு இணைக்கப்பட்டுள்ளது.

21. இரா. பாஸ்கரன், திருக்கோகர்ணம் கல்வெட்டுகள், ஆவணம் 13, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 2002; இரா. பாஸ்கரன், கரு. இராஜேந்திரன், புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள் - I, II, ஆவணம் 14, 2003.

22. SII 7: 1043, 1044; SII 13: 174; SII 14: 25; SII 17: 339, 341; SII 19: 37, 82, 316, 435.

23. SII 17: 341.

24. IPS: 155.

25. IPS: 27, 41.

26. Y. Subbarayalu, Political Geography of the Chola Country, Dept. of Archaeology, Chennai, 1973, pp. 80, 40.

27. IPS: 590.

28. IPS: 682.

29. IPS: 691.

30. ஹொய்சள மன்னர் வீரநரசிங்கதேவர் கொடையளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார் ஜெ. ராஜாமுகமது. புதுக்கோட்டை மாவட்ட வரலாறு, புதுக்கோட்டை மாவட்ட ஆவணக் குழு வெளியீடு, 1992, ப. 191.

31. IPS: 532, 649.

32. IPS: 530.

## 2. திருக்கண்ணபுரம் திருவாலி திருநகர்

இரா. கலைக்கோவன்

### திருக்கண்ணபுரம்

நாகபட்டினம் மாவட்டத்தில் நன்னிலத்திலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள திருக்கண்ணபுரம் அப்பர் முக்தி பெற்ற இடமான திருப்புகலூரிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 129 பாசுரங்களைப் பெற்றுள்ள இவ்வூர்க் கோயிலைத் திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் இவர்கள் பாடியுள்ளனர். ஆண்டாளும், பெரியாழ்வாரும் ஊர்ப்பெயர் மட்டும் சுட்டி ஓரடி பாட, குலசேகர ஆழ்வாரும் நம்மாழ்வா ரும் தலைக்குப் பதினொரு பாடல்கள் தந்துள்ளனர். மங்கை யாழ்வாரே 105 பாடல்களால் திருக்கண்ணபுரத்து இறைவனை ஏத்தி மகிழ்ந்துள்ளார்.

இறைவனின் 'கீழைவீடு' என்று புகழப்படும் திருக்கண்ண புரத்துக் கோயில் 95 அடி உயரமுள்ள எழுநிலைக் கோபுரத்தைப் பெற்றுள்ளது. துணைத்தளமும் கபோதபந்தத் தாங்குதளமும் பெற்ற கோபுரத்தின் ஏழு பத்திகளாகப் பிரிக்கப்பட்டுள்ள சுவரைப் பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் அரைத்தூண்கள் அணைத்துள்ளன. ஓரப்பத்திகளை நான்முக அரைத்தூண்களும் பஞ்சரப்பத்திகளை உருளை அரைத்தூண்களும் சாலைப் பத்திகளையும் பெருஞ்சாலைப் பத்தியையும் எண்முக அரைத் தூண்களும் அணைவுசெய்ய, ஒடுக்கங்களில் இரட்டைக்கால் பஞ்சரம் இடம்பெற்றுள்ளது. கூரைஉறுப்புகளை அடுத்து வளையும் கபோதம் ஆழமற்ற கூடுகளைப் பெற்றுள்ளது. சுதை உருவங்களற்ற கீழ்த்தளங்கள் வெறுமை காட்ட, தேற்றுமாறு போல மேற்றளம் மட்டும் அவற்றைப் பெற்றுள்ளது.

விமானம், முகமண்டபம், பெருமண்டபம், முன்மண்டபம் என அமைந்துள்ள ஒருதளத் திராவிட முதன்மைக் கோயிலின் முதலிரு மண்டபங்களும் பேரளவின. முன்மண்டபத்தின் கிழக்குக் கோடியிலுள்ள திருமுன்னில் பெருமாளை நோக்கிய வராய் வணக்க முத்திரையில் கருடன் நிற்கிறார். மண்டபத்தின் வடபுறம் உள்ள திருமுன்னில் சக்கரவர்த்தித் திருமகன் மூலவ

ராகவும் செப்புத்திருமேனியராகவும் இலக்குவன், சீதையுடன் எழுந்தருளியுள்ளார். இந்த இராமர்தொகுதி இணையற்ற எழில் படைத்ததாகும்.

தாமரைத்தளத்தின்மீது இடுப்பை வலப்புறம் உயர்த்தி, இடக்காலை இலேசாக மடக்கி, வலத்திருவடியைத் திரயச்ரத்தி லும் இடத்திருவடியைப் பார்சுவத்திலும் இருத்தி, வில்லும் அம்பும் ஏந்திய மெய்ப்பாட்டில் இரண்டு கைகளையும் கடக மாக்கி, கிரீடமகுடமும் மகரகுண்டலங்களுமாய் நிற்கும் இராமரின் இடுப்பில் சிற்றாடை. சிம்மமுக அரைக்கச்சும், குறங்குசெறியும் பட்டையான உதரபந்தமும் பெற்றுள்ள அவர் கழுத்தில் அரும்புச்சரமும் சரப்பளியும் அமையக் கைகளில் தோள், கை வளைகள்.

பெருமண்டபத்தின் வாயிலைப் பின் கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி உள்ள பேரளவிலான காவலர் காக்கின்றனர். தெற்கரின் வல முன் கை எச்சரிக்க, இட முன் கை உருள்பெருந் தடிமீது இருத்தப்பட்டுள்ளது. வடக்கர் இதையே கைமாற்றிச் செய்கிறார். தாமரைத்தளத்தில் கிரீடமகுடமும் சிற்றாடையும் அணிந்து நிற்கும் அவர்தம் தோள்களில் இருந்து தொங்கும் மணிமாலை கால்களைத் தழுவி மேலேறுகிறது.

பெருமண்டபத்தின் மேற்கில் இருபுறத்தும் முகமண்டபம், விமானம் இவற்றைச் சுற்றிவர வாய்ப்பாக வாயில்கள் அமைந் துள்ளன விமானம் பிரதிபந்தத் தாங்குதளம் பெற்றுள்ளது. உபஉபானம், உபானம், கம்பு, ஜகதி, உருள்குமுதம், பிரதிவரி, மேற்கம்பு என அமைந்துள்ள தாங்குதளத்தின் மேல் வேதிகைத் தொகுதி உள்ளது. பிரதிமுகங்களில் ஒன்றிரண்டு யானைகளும் உள்ளன. மூலை மகரதலைகள் அழகுறக் காட்டப்பட்டுள்ளன. விமானத்தின் சாலைப்பத்தி பிதுக்கமாக இழுக்கப்பட்டுள்ளது.

சுவர்களை நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ளன. அவற்றின் உடலில் தானமும் தொங்கலும் வடிவமைக்கப்படாத செவ்வகங்களாய் உள்ளன. பிற மேலுறுப்புகளும் சிறிய அளவி லான பாலியும் கொண்டமைந்த அவற்றின் மேல், மொட்டுப் போதிகைகள் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், வலபி, கபோதம். வலபியில் இடம்பெற்றுள்ள பூதவரி வண்ணப்பூச்சால் பாழ் பட்டுள்ளது. கர்ணபத்திகளின் கபோதங்கள் இணைநாசிகைகள்

பெற, சாலைக் கபோதங்கள் தள்ளியமைந்த இரண்டு நாசிகை களைக் கொண்டுள்ளன. இந்த ஒருதள திராவிட விமானத்தின் கிரீவகோட்டங்களில் ஆலமர் அண்ணலும் யோக நரசிம்மரும் தேவியருடன் நான்முகனும் உள்ளனர்.

சாலைப்பத்திகளில் உள்ள சிற்பங்களற்ற கோட்டங்களைச் சட்டத்தலை பெற்ற நான்முக அரைத்தூண்கள் அணைக்க மேலே கூரையுறுப்புகள். கோட்டங்களை மேற்புறத்தே நிரவி யுள்ள மகரதோரணங்கள் ஆழமற்றுச் சிற்பச்செறிவின்றி உள்ளன. கருவறையின் நீர்வழி, பிரதிவரி அளவில் அமைந்துள்ளது. விமானமும் முகமண்டபமும் ஒரே காலத்துக் கட்டமைப்பின. கபோதபந்தத் துணைத்தளத்தின்மீது எழும் சுற்றுமாளிகையின் கூரையை முச்சதுர, இருகட்டு உடல் பெற்ற தூண்கள் பெரு மொட்டுப் போதிகைகளின் துணையுடன் தாங்குகின்றன. தூண் களின் கீழ்ச்சதுரங்கள் சிறிய நாகபந்தங்கள் கொள்ள, இடைச் சதுரங்கள் தாமரைப்பதக்கங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளன.

கருவறையில் நீலமேகப்பெருமாள் என்ற பெயருடன் நின்றகோலத்தில் காட்சிதரும் கண்ணபுரத்தாரின் வலப்புறம் திருமகளும் இடப்புறம் நிலமகளும் உள்ளனர். பெருமாளின் வல முன் கை அருள்குறிப்புக் காட்ட, இட முன் கை கடியவலம்பிதத் தில் உள்ளது. பின் கைகளில் சங்கும் எறிநிலைச் சக்கரமும். தலையில் கிரீடமகுடம். மகரகுண்டலங்கள், சரப்பளி, பெரு முத்துமாலை, முப்புரிநூல், தோள், கை வளைகள் அணிந்து பட்டாடையும் இடைக்கட்டுமாய்க் காட்சிதரும் பெருமாளின் தோள்களில் தோள்மாலை.

வலப்புறத் திருமகள் கரண்டமகுடராய் வலக்கையை நெகிழ்த்தி, இடக்கையில் தாமரை கொள்ள, இடப்புற நிலமகள் வலக்கையில் நீலோத்பலம் ஏந்தி இடக்கையை நெகிழ்த்தியுள் ளார். திருமகளின் மார்பகங்களைக் கச்சு மறைத்துள்ளது. கழுத்தில் சரப்பளி. கருவறையின் தென்சுவர் அருகே இருகை களையும் வணக்க முத்திரையில் இருத்தியவராய்ப் பட்டாடை யுடன் தண்டக மகரிஷி. வடசுவர் அருகே, அதே கோலத்தில் தலையில் கரண்டமகுடத்துடன் பனையோலைக் குண்டலங்கள் கை, தோள் வளைகள் அணிந்தவராய்க் கருடன். உற்சவர்களாய்த்

திருமகள், நிலமகள், பத்மினி, ஆண்டாள் சூழச் சவுரிராஜப் பெருமாள் எழுந்தருளியுள்ளார்.

வளாகத்தின் தெற்கில் கிழக்கு நோக்கிக் கோயில் கொண்டுள்ள கண்ணபுரநாயகியின் திருமுன் வண்ணப்பூச்சு களுடனான பெருமண்டபம் பெற்றுள்ளது. யாளித்தூண்களின் அணிவகுப்பில் உள்ள இம்மண்டபத்தை அடுத்து முகமண்டப மும் கருவறையும் உள்ளன. தாயார் கரண்டமகுடராய் முன் கையில் காப்பும் அருளும் காட்டி, பின் கைகளில் மலரேந்தி அர்த்தபத்மாசனத்தில் உள்ளார். பல சிறிய அளவிலான திருமுன்களைப் பெற்றுள்ள இக்கோயிலில் இருந்து 39 கல்வெட்டுகள் (494 - 532) 1922ல் படியெடுக்கப்பட்டுள்ளன.

**கல்வெட்டுகள்**

இம்முப்பத்தொன்பது கல்வெட்டுகளுள் பதினேழு சோழர் காலத்திலும் ஆறு பிற்பாண்டியர் காலத்திலும் ஒன்று விஜய நகரப் பேரரசுக் காலத்திலும் மற்றொன்று கோப்பெருஞ்சிங்கர் ஆட்சியின் போதும் வெட்டப்பட்டுள்ளன. அரச ஆணைகளாக அமைந்துள்ள ஏழு கல்வெட்டுகளிலும் கொடைக் கல்வெட்டு கள் ஐந்திலும் மன்னர் பெயர் இல்லை. எஞ்சிய இரண்டனுள் ஒன்று உள்வரி ஆவணமாக அமைய, மற்றொன்று சுந்தர பாண்டியரின் திருமுகமாக உள்ளது. இக்கல்வெட்டுகளுள் பெரும்பான்மையன படியெடுக்கப்பட்ட காலத்திலேயே சிதைந்தும் கட்டமைப்புகளில் சிக்கியும் முழுமையற்ற நிலையில் இருந்தன. இவற்றின் பாடங்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் கண்ணபுரம் கோயிலைப் பற்றியும் அக்கோயிலைச் சூழ்ந்தும் சார்ந்தும் வாழ்ந்த சமுதாயத்தைப் பற்றியும் பல பயனுள்ள தரவுகள் கிடைத்துள்ளன.

**வருவாய்ப் பிரிவுகள்**

முதல் இராஜராஜர் காலத்தில் சோழ நிலப்பரப்பு பல வள நாடுகளாகப் பகுத்தறியப்பட்டது. பின்னாட்களில் இவ்வள நாட்டுப் பிரிவுகள் பெயர் மாற்றம், எல்லை மாற்றம் பெற்ற போதும் வளநாடு என்னும் அமைப்பு மாறாதிருந்தது. கண்ண புரம் கல்வெட்டுகள் பாண்டியகுலாசனி வளநாடு, நித்தவிநோத வளநாடு, உய்யக்கொண்டார் வளநாடு, கெயமாணிக்க வளநாடு,

குலோத்துங்க சோழ வளநாடு, இராஜாதிராஜ வளநாடு, நடுவில் நாடான இராஜராஜ வளநாடு எனும் ஏழு வளநாட்டுப் பிரிவு களின் பெயர்களைத் தருகின்றன. இவற்றுள் கெயமாணிக்க வளநாட்டின் கீழிருந்த மருகல்நாட்டு உட்பிரிவுகளுள் ஒன்றாய்த் திருக்கண்ணபுரம் விளங்கியது. தொடக்கத்தில் தேவதான பிரமதேயமாக அறியப்பட்ட இவ்வூர், விக்கிரமசோழர் ஆட்சிக் காலத்தில் பிரமதேயமானது.

சோழர் காலத்திலும் பிற்பாண்டியர் காலத்திலும் ஒவ்வொரு வளநாட்டின் கீழும் பல இடைநிலை வருவாய்ப் பிரிவுகள் இருந்தன. இவை நாடு, கூற்றம் என்று அழைக்கப்பெற்றன. மருகல், முழையூர், மொண்ணையூர், ஆவூர், பனையூர், திருவாரூர், மேல்மலைப் பழையனூர், இடையாளம் என்பன, 'நாடு' எனும் பின்னொட்டுடனும் முத்தூறு, ஆர்வலம், தஞ்சாவூர் என்பன, 'கூற்றம்' எனும் பின்னொட்டுடனும் அமைந்த வருவாய்ப் பிரிவு களாகும். பிற்பாண்டியர் காலத்திலேயே நாடு எனும் பிரிவு, 'பற்று' என்றும் அறியப்பட்டது. திருப்புகலூர், கயிநல்லூர், குற்றாலம், வானூர், செக்கார், ஒக்கூர், பனையூர்ப்பற்றுகளைப் பிற்பாண்டியர், விஜயநகரக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது.

**ஊர்கள்**

கண்ணபுரம் கல்வெட்டுகள் அறுபத்தேழு ஊர்களின் பெயர் களைத் தருகின்றன. அவற்றுள் அந்தணர் குடியிருப்புகளாய் இருந்த பத்தொன்பது ஊர்களுள், பதினெட்டு, மங்கலம் எனும் பின்னொட்டுக் கொண்டு முடிய, ஓர் ஊர் மட்டும், 'பள்ளி' என்ற பெயரால் அறியப்பட்டது (507). இம்மங்கலங்களுள் கனகசபாபதிச் சதுர்வேதிமங்கலம் (531), உதைய திவாகர சதுர் வேதிமங்கலம் (496), கரவாள வீரச் சதுர்வேதிமங்கலம் (526) இவை புதிதாக உருவாக்கப்பட்ட அகரங்களாக அமைந்தன. இவற்றுள் கரவாள வீரச் சதுர்வேதிமங்கலம், திருவாய்மொழி நரசிங்கதேவரால் கண்ணபுரத்தில் உருவாக்கப்பட்ட அகரமாகும். இதில் குடியேறிய பட்டர்களுக்கும் கருஞ்சிறுக்க நாயனாருக்கும் பாஷ்யகாரருக்கும் குருதையாடியிலும் புவலோகத்திலுமாய் முப்பத்தைந்து வேலி நிலம் இறையிலியாகத் தரப்பட்டது (526).

பெரும்பாலான சதுர்வேதிமங்கலங்கள் அவற்றைக் கொடை யளித்த அல்லது கொடையாளரோடு தொடர்புடைய அரச

குலத்தவர் பெயர்களைக் கொண்டிருந்தன. அவற்றுள் ஒன்று குந்தவையின் பெயரில் இருந்தது. (504) விளா, காக்கை, வெள்ளை, கண்ண சேந்த எனும் எளிய முன்னொட்டுகளோடு அமைந்த பிராமண ஊர்கள் மங்கலம் எனும் பின்னொட்டையே பெற்றமைந்தன.

ஊர், குடி எனும் பின்னொட்டுகளுடன் அமையும் ஊர்ப் பெயர்கள் பொதுவாகப் பழைமை வாய்ந்த வாழிடங்களின் பெயர்களாகவே கருதப்படும். கண்ணபுரக் கல்வெட்டுகள் ஊர் என முடியும் பதினெட்டுப் பெயர்களையும் குடி என முடியும் எட்டுப் பெயர்களையும் தந்துள்ளன. வேளூர் எனும் மூன்றெழுத்துப் பெயரே, ஊர் என முடியும் பெயர்களுள் சிறியது. கோட்டூர், விழியூர், என்னூர் என்பன நான்கெழுத்துப் பெயர்களாக அமைய, அம்பப்புறத்தூர் நெடிய பெயராக உள்ளது. கொடிப்புங்கூர் குலோத்துங்க சோழப் பட்டினமாகவும் அறியப்பட்டது (497).

குடிகளுள் எனங்குடி, கிரங்குடி, புளிக்குடி, பூதங்குடி, சாயாக் குடி என்பன எளிய பெயர்களாக அமைய, கருப்பற்றூர்குடி இறைவனுக்கான திருமாலைப்புற நிலங்களைப் பெற்றிருந்த ஊராக அறிமுகமாகிறது. 'புரம்' என்று முடியும் ஊர்ப்பெயர் களாக கண்ணபுரமும் திருநீற்றுச் சோழபுரமும் அமைய, 'நல்லூர்' என்ற பின்னொட்டுடன் பந்தணநல்லூர், சோழகுல வல்லிநல்லூர், பெருங்கடம்பநல்லூர், வெண்ணெய்நல்லூர் என்பன வெளிப்பட்டுள்ளன. பல்வேறு பின்னொட்டுகள் பெற்ற ஊர்ப்பெயர்களாக பதினாறு உள்ளன. அவற்றுள் குறிச்சி, திருவாய்ப்பாடி எனும் ஊர்கள் பெருமாள் கோயில் பெற்றவை. அம்பர், வலஞ்சுழி, ஆனைக்கா, திருமழபாடி இவற்றில் சிவபெருமானுக்கான கோயில்கள் உள்ளன. திருப் பேரில் இரண்டு இறைகளுக்குமே அழகான கோயில்கள் உள்ளன. சங்க காலத்தை நினைவூட்டும் கழிக்கரைச்சேரி வீர பாண்டியன் பட்டினம் என்றும் அறியப்பட்டது.

### அரசு அலுவலர்கள்

அரசாணைகளாகத் திகழும் கல்வெட்டுகள், அரசரின் வாய்மொழி உத்தரவைக் கேட்டவர், அதை ஓலையில் எழுதியவர், எழுதியதைச் சரிபார்த்துக் கையொப்பமிட்டவர்கள் இவர்தம் பெயர்களைக் கொண்டுள்ளன. ஓர் அரசாணைக் கல்வெட்டில்

மீனவன் மூவேந்த வேளான் திருமந்திர ஓலையாகக் குறிக்கப் பட்டுள்ளார். சேதிராயர், சேதிகுலராயர், பிருதிவி கங்கரையர், அமரகோன், காங்கேயராயர், பல்லவரையர் எனப் பல அரசு உயர் அலுவர்கள் அரசாணைகளில் கையெழுத்திட்டுள்ளனர்.

அரசரின் இறையிலி ஆணைகளை நடைமுறைப்படுத்தும் நிலவரிப் பிரிவு அலுவலர்கள் புரவுவரித் திணைக்களத்தாராக அறியப்பட்டனர். விக்கிரமசோழர் காலத்ததாகக் கொள்ளத் தக்க அரசாணை ஒன்றில் புரவுவரி ஸ்ரீகரண நாயகங்களாக வயிர நல்லூராமூனும் ஒழுகரை உடையானும் வெளிப்படுகின்றனர். இறையிலி ஆணை நடைமுறைப்படுத்தப்பட்டதை உரியவருக்கு அறிவிக்கும் ஆணை உள்வரி என்றழைக்கப்பட்டது. கண்ணபுரக் கல்வெட்டுகளில் ஒன்று இத்தகு உள்வரியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (511).

இறையிலி அரசாணைகள் அக்காலத்தில் நிலவிய வரியினங் களை வரிசைப்படுத்துகின்றன. நெல்வரி, பொன்வரி, பஞ்சுபீலி, கார்க்கடமை, பசானக் கடமை, அந்தராயம், வாசல் விநியோகம், சந்துவிக்கிரகம், ஓலையெழுத்து, நாட்டு விநியோகம், தறியிறை, செக்கிறை, தட்டொலி, தட்டார்பாட்டம், ஏர்வரி, இனவரி, மனைவரி, மாவடை, மரவடை, புன்பயிர்க்கடமை, ஏரி மீன் பாட்டம், ஒழுக்கு நீர் ஆயம், பாசிப்பாட்டம், காரடை, ஆடிப் பச்சை, கார்த்திகைப் பச்சை, மானாவி, ஆதிரைப்பிள்ளையார் நோன்பி, ஆண்டெழுத்து, வெட்டியான், தச்சுத்தாழ்வு, யானைச் சாலை, குதிரைப்பந்தி, வீட்டுத்தேவை, மதிள் தேவை, கடமை, கருஞ்சரக்கு, அழுகல் சரக்கு, செக்காயம், விளைநிலத்து ஆய வர்க்கம், மேற்பாடிகாவல், கற்பூரவிலை, தரவெழுத்து விநியோகம், காணிக்கை, கொற்றிலக்கை, கடைக்கூட்டு இலக்கை, அரிசி காணம், புன்பயிர் ஆயவர்க்கம், இடையர்வரி, நம்வீட்டுத் தேவை, ஆள்தேவை, குற்றத்தெண்டம் என நிலங்களின்மீதும் பொருள் களின் மீதும் அரசின் தேவைக்கேற்பவும் பல வரியினங்கள் தண்டப்பெற்றன.

**வேளாண்மை**

விளைதிறன், பாசனவாய்ப்பு அடிப்படையில் நிலங்கள் தரம் பிரிக்கப்பட்டிருந்தன. கார், மறு, ஒரு பூ, இரு பூ, கடைப் பூ,

வம்பு எனப் பருவ விளைவுகள் பெயரேற்றிருந்தன. கரும்பு ஒரு கல்வெட்டில் நன்செய்ப் பயிராகவும் மற்றொரு கல்வெட்டில் புன்பயிராகவும் குறிக்கப்பட்டுள்ளது (497, 504). நெல் முதன்மைப் பயிராக விளங்கியது. வாழை, கொழுந்து, கமுகு, தெங்கு, மா, இலுப்பை, மா, பலா உட்பட்ட பயிர்கள் தண்டலைப் பயிர் களாக அறியப்பட்டன. பருத்தி, ஆமணக்கு, எள்ளு, கொள்ளு, பயறு என்பன புன்பயிர்களாக வளர்ந்தன. இறைவனுக்கான மலர்கள் பெறப் பூந்தோட்டங்களும் ஓடைகளும் பயன்பட்டன.

பல தனியர் நிலங்கள் பெயர் ஏற்றிருந்தன. வட்டக்காடு, படிப்பிடார நிலம், திட்டைச் செய், மரதகம், செய்யவாய்மணி, குறுநக்கன், நெடுங்கால், புத்தகை உடையான் இருப்பு, மாளிகை நத்தம் என்பன அவற்றுள் சில. இறைவனின் நிவந்தங்களுக்காக விடப்பட்டிருந்த நிலங்கள் திருமாலைப்புறம், திருவேட்டைப் புறம், திருவணைகுழி என அவ்வந் நிவந்தங்களின் பெயரால் குறிக்கப்பட்டன.

விளைந்தறியாத தரிசு நிலங்கள் பல விளைச்சலுக்குக் கொணரப்பட்டன. அத்தகு நிலங்கள், தங்கள் பெயர்களுடன் மயக்கல், வயக்கல், விளாகம் எனும் பின்னொட்டுகளைப் பெற்றிருந்தன. அரட்டமுக்கி விளாகம், ஸ்ரீகிருஷ்ண விளாகம், கோவிந்த விளாகம், பழியஞ்சி விளாகம், உத்தை வயக்கல், திருமழபாடி வயக்கல், ஸ்ரீராம மயக்கல் என்பன அவற்றுள் சில.

விளைநிலங்கள் வளமையான நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றிருந்தன. செம்பியன் பேராறு (501), வரிசை ஆவரணப் பேராறு (503), புத்தாறான குலோத்துங்க சோழன் பேராறு (522), முடிகொண்டான் ஆறு (525) இவற்றிலிருந்து பல வாய்க்கால்கள் நிலத்துண்டுகளுக்கும் குளங்களுக்கும் நீரெடுத்துச் சென்றன. திருக்கண்ணபுரத்தில் சோழகுல நாராயண வாய்க்கால், உட்சிறு வாய்க்கால், ஸ்ரீபூமி வதி இவை பாசனமளித்தன. செம்பியன் குருதையாடியில் பூப்பறியல் வாய்க்காலும் நரசிங்க மங்கல நிலத்துண்டுகளுக்கு ஸ்ரீநரசிங்க வாய்க்காலும் திருவரங்கவதியும் நீரளித்தன.

அருமொழிதேவ சதுர்வேதிமங்கலத்தில் மதுராந்தக வாய்க் காலும் கேரளமாதேவி வதியும் பாய்ந்தன. திருவரங்கமங்கலத்தில்

குணமாணிக்கப் பேரேரியும் ஓடைகளும் இருந்தன. குந்தவைச் சதுர்வேதிமங்கல நிலங்கள் மும்முடிச்சோழ வாய்க்காலாலும் குந்தவை வதியாலும் செழிப்புற்றன. குலோத்துங்க சோழன் பழையனூரில் அருமொழிதேவன் வாய்க்கால், அழகியமண வாள வாய்க்கால் இவை இருந்தன. குளப்பாசனமும் சில ஊர் களில் இருந்தமையை, ஏனாதிக்குளம், பிள்ளை ஆண்டாள் குளம், மாராயர்குளம் எனும் பெயர்கள் நிறுவுகின்றன.

## பெண்கள்

எட்டுக் கல்வெட்டுகள் பெண்கள் பற்றிப் பேசுகின்றன. அவற்றுள் இரண்டு ஸ்ரீதனம் தரும் வழக்கம் இருந்தமையைச் சுட்டுகின்றன. அம்மையாண்டாள் சானி, தேவகி பிராட்டி, செல்வம் உட்படப் பல பெண்கள் கோயிலில் விளக்கெரிக்கக் காசு தந்துள்ளனர். கோயிலாழ்வி சானி என்பார் இறைவன் கைகளில் நீர்வார்த்து நிலமொன்றைக் கொடையளித்தார் (496). விழைவு போல் கொடையளிக்கும் உரிமையும் கொடையளிக்கப் பொருள் பெற்றிருந்த வளமையும் மகளிர் மாட்டு இருந்த மையை இக்கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. பணிசெய் மகள் குடியிருப்பு எனும் கல்வெட்டுத் தொடர், பெண் பணியாளர் களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்துதரப்பட்டிருந்தமையை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

## கோயில் விளக்குகள்

திருக்கோயில்களில் விளக்கேற்றுவது அறமாகக் கருதப் பட்டதால் சோழராட்சியில் பல திருக்கோயில்கள் அளவற்ற விளக்குக் கொடைகளைப் பெற்றுச் செழித்தன. பத்துக் கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட பலவகையான விளக்குக் கொடைகளையும் அவற்றின் வழி ஏற்றப்பட்ட நந்தா, சந்தி விளக்குகளைப் பற்றியும் விரித்துரைக்கின்றன. ஈழச் சான்றான் முந்நூற்றுவப் பெருமானாகிய சோழவேல் ஏனாதி திருக்கண்ணபுரச் சபையாரிடம் நிலமும் குளமும் விலைக்குப் பெற்றுத் திருவிளக்குப்புறமாகக் கோயிலுக்களித்தார். அருமொழி தேவ சதுர்வேதிமங்கலத்து அருளாள பட்டர் நானூறு காசு தந்து சௌரிப்பெருமாள் கோயிலில் சந்திவிளக்கேற்றினார்.

இடையாற்றுக்குடியைச் சேர்ந்த ஒரு பெண் ஆயிரம் காசளித்து இக்கோயிலில் விளக்கேற்றியுள்ளார். தேவகி பிராட்டி, செல்வம் எனும் இரு பெண்கள் ஆளுக்கு ஐநூறு காசளித்து விளக்கேற்றச் செய்தனர். சிதைந்துள்ள ஒரு கல்வெட்டு இரண்டு பெண்களின் கொடையால் இங்குத் திருவிளக்குகள் ஏற்றப்பட்ட தகவலைத் தருகிறது. திருவீழிமிழலை அம்மை யாண்டாள் சானி நாற்பத்துநான்கு காசுகள் அளித்து இரவுச் சந்தியில் ஒரு விளக்கேற்றினார்.

கொங்கு வீரகேரளன் அதிராஜராஜதேவர் சந்திவிளக்கு ஒன்று ஏற்ற நிலம் வழங்கியதுடன், நந்தாவிளக்குகள் இரண்டு ஏற்ற வாய்ப்பாக பத்துமா நிலம் திருவிளக்குப்புறமாக அளித்தார். அத்துடன் காலையில் பத்தும், உச்சி வேளையில் பத்தும் இரவில் இருபதும் என நாற்பது சந்திவிளக்குகள் ஏற்ற, இருபது பசுக்களும் கொடையளித்தார். பசு ஒன்று ஒரு காசு விலையெனக் கோயிலுக்கு இருபது காசு தரப்பட்டது. திருஇலச்சினை பொறித்து விடப்பட்ட இப்பசுக்களைச் சிலர் தங்கள் பொறுப்பில் ஏற்றுக் கோயிலுக்கு நெய்யளக்க ஒப்பினர். சபை ஆணைப்படி, இந்த நெய் குலோத்துங்கன் நாழியால் ஸ்ரீவைஷ்ணவர் கண்காணிப்பில் அளக்கப்பெற்று நிவந்தக் காரர்கள் கைச்சாத்துப் பெற்றனர் ஆண்டுக்கு இவ்வகையில் முந்நூறு நாழி நெய் அளக்கப்பட்டது. கேரளனின் மந்திரி களுள் ஒருவரான மாற நாராயணன் உச்சி, இரவு வேளைகளில் வேளைக்கொரு சந்தி விளக்கேற்ற குத்துவிளக்கு ஒன்றும் பசு ஒன்றும் அளித்தார்.

பிரமதேயமாக விளங்கிய மருகலைச் சேர்ந்த ஸ்ரீராமன் புண்டரீகாட்சன் சௌரிப்பெருமாள் தாச சோமாஜியார் என்பார் கண்ணபுரம் கோயிலில் ஒரு கற்பூர நந்தாவிளக்கு ஏற்றச் செம்பாலான தம் உருவம் போல் செய்த விளக்கு நிலை ஒன்றைத் தந்ததுடன், விளக்கேற்ற வேண்டும் நெய்க்காக ஒன்பதரை மாற்றுப்பொன்னில் இருபது கழஞ்சு அளித்தார். அதன் வட்டியாக வந்த எட்டு மஞ்சாடிப் பொன் கொண்டு பகலும் இரவும் போதுக்கு ஓர் உழக்கு நறு நெய், ஒரு மா கற்பூரம் கொண்டு விளக்கேற்றப்பட்டது. கோயில் நிறுத்தல் அளவை யான ஆயிரவனால் 170 மாடை உள்ள விளக்கு நிலையாக தாசரின் அளிப்புக் கணக்கில் சேர்க்கப்பட்டது.

**வழிபாடும் படையல்களும்**

கண்ணபுரத்தானுக்கு வழிபாடு நிகழ்த்தவும் படையல்கள் இடவும் பலர் கொடை அளித்துள்ளனர். இறைவனின் வழிபாட்டிற்கும் இறைக்கோயில் திருப்பணிக்கும் உதவுமாறு திருக்கண்ணபுரம், பழையனூர், குற்றாலம், பெருங்கடம்பநல்லூர் முதலிய பல ஊர்களில் இருந்த கோயில் நிலத்துண்டுகள் பாண்டிய அரசரால் இறையிலியாக்கப்பட்டன. இறைவனின் அமுதுபடிக்கான நெய்யளிப்பதாக திருவாய்ப்பாடி நாட்டார் கோயில் திருவேளைக்காரரிடம் உறுதி கூறியதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது அரசர்களின் பெயராலும் அவர்தம் குடும்பத்தார் பெயராலும் கண்ணபுரத்தானுக்குச் சிறப்பு வழிபாடுகள் அமைக்கப்பட்டன.

மூன்றாம் இராஜேந்திர சோழர் தம் மகனும் இளவரசருமான சேமப்பிள்ளையின் பெயரால் அரசகண்டராமன் சந்தியை அமைத்து அதை நிறைவேற்ற நிலமளித்தார் (515). இராகுத்த மிண்டன் சந்தி என்ற பெயரில் ஒரு சிறப்பு வழிபாடு நிகழ்த்தக் கொடையளிக்கப்பட்டிருந்தது (528). சௌரிப் பெருமாளுக்கு சோமிதேவர் அமைத்த வீரபாண்டியன் சந்திக்கான வழிபாடு, படையல் இவற்றிற்கான செலவினங்களுக்காக நிலமளிக்கப் பட்டது. இந்நிலங்களை இறையிலியாக்குமாறு கெயமாணிக்க வளநாட்டு வடகாலில் கீழ்க்கூற்று நாட்டாருக்கு அரசாணை அனுப்பட்டது (498).

உலகுய்ய நின்றருளிய நாயனாராகக் கல்வெட்டுகளில் போற்றப்படும் எம்பெருமானுக்குத் திருவாராதனை செய்யவும் அவர் கோயில் திருப்பணிக்கும் உடலாக பல ஊர்களில் இருந்த எழுபது வேலி நிலம் அரசாணை ஒன்றினால் இறையிலியாக் கப்பட்டது. இறைவழிபாட்டிற்கான பூக்களை வழங்க அமைக்கப்பட்ட நந்தவனங்களும் ஓடைகளும் மேற்பூதங்குடி, மருகல் இவற்றில் அமைய, திருத்தோப்பும் பாகற்காய்ப்புறமும் காயாக்குடியில் இருந்தன. கருமுகை (இருவாட்சி) நந்தவனம், செங்கழுநீர் ஓடை என்பன கல்வெட்டுகளில் இடம்பெற்றுள் ளன. பள்ளி எனும் ஊரிலிருந்த நானூறு குழிக் குளத்தை இறைவனுக்கான செங்கழுநீர் ஓடையாக்க வேளூர் கிழவரான

காட்டுநாயகர் நானூறு பொன் சபைக்களித்தார் (507). இதைப் போற்றும் பாடலொன்றும் கல்வெட்டுடன் இடம்பெற்றுள்ளது.

முதற் குலோத்துங்கரின் நாற்பத்தோராம் ஆட்சியாண்டில் இராஜராஜ பிரும்மாதிராஜ கோவிந்தப்பிள்ளையின் பரிந்துரை யேற்று, காக்கைமங்கலத்தில் இருந்த நிலப்பகுதி கோயிலுக்கு அளிக்கப்பட்டது. 'அந்தராயம்' எனும் வரி நீக்கப்பட்ட இந்நில விளைச்சல் கொண்டு கோயிலில் இரண்டு அயனங்கள், இரண்டு விஷுக்களின்போது இறைவனுக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. இவ்வழிபாடுகளின்போது சௌரிப்பெரு மாள் மண்டபத்திற்கு எழுந்தருளி வழிபாடு ஏற்றார்.

படையலுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களாக பருப்பு, பலவகையான கறிகள், உப்பு, மிளகு, நெய், சர்க்கரை, தயிர், சீரகம், கண்டசருக்கரை, பாக்கு, வெற்றிலை, இளநீர் குறிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு வழிபாட்டின்போதும் இளநீர் 12 ஆகவும் பாக்கு 280 ஆகவும் வெற்றிலை 14 பற்றாகவும் அமைந்தன. இவை தவிர, விளக்குகள் ஏற்ற எண்ணெய், விறகு, மிடா, குருத்து இடும் ஊழியருக்கான ஊதியம் இவை கருதியும் நிலவிளைவு ஒதுக்கப்பட்டது. சித்திரைத் திருநாள், ஐப்பசி முளைப்பாரி, மாசிப் புனர்பூசம் விழாக்களில் நிகழ்த்தப்படும் சிறப்புப் பூசைகளுக்கும் நெல் ஒதுக்கப்பட்டது. இறைத்திரு மேனி வெளிவரும் நிகழ்வை, 'திருவடி புறம்பெழுந்து அருளிய' செயலாகக் கல்வெட்டுக் குறிக்கிறது.

கண்ணமங்கலம் அருளாளப் பெருமாள் தம்பிரானுக்குக் கோயில் திருநாமத்துக்காணிக் கொல்லையில் இறைவனுக்கான நந்தவனம் செய்ய அறுநூறு குழிநிலம் அன்றாடு நற்காசு இருபதுக்கு வழங்கப்பட்டது. சடையவர்மர் சுந்தரபாண்டியர் (1304 - 1319) பெயரால் அமைந்த கோதண்டராமன் சந்திக்கான படையல், வழிபாடு இவற்றிற்காகவும் திருப்பணிச் செலவுகளுக் காகவும் தத்தனூர், கூத்தனூர், எனங்குடி ஊர்களில் நூற்று ஐம்பத்தெட்டரை வேலி மூன்று மா நிலம் இறையிலியாக்கப் பட்டது. இந்நிலவருவாய் கொண்டு சுந்தரபாண்டிய காலிங்க ராயர் எடுப்பித்த எல்லாந்தலையான பெருமாளுக்கும் வழிபாடு, படையல்கள் நிறைவேற்றப்பட்டன.

பெருமாளுக்குரிய மலர் மாலைகளைக் கட்டும் நந்தவனப் பணியாளர்களுக்காகக் குன்றலூர்க் கிழவர் நூறு குழி நிலம் கொடையளித்தார். திருவிழாக்களின்போது நிகழும் வழிபாடு களுக்காகவும் நிலம் வழங்கப்பட்டது. ஸ்ரீஜயந்தித் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதற்குரிய நெய், பால் வழங்கும் பொறுப்பைத் திருவாய்ப்பாடி நாட்டார் ஏற்றிருந்த னர். இறைவனுக்குரிய நாள் படையல்களாய்த் திருக்கண்ணா மடை, பால், அப்பம் அமைந்தன. அரிசி, சர்க்கரை, வாழைப் பழங்களால் ஆன இனிய உணவே திருக்கண்ணாமடை என்று அழைக்கப்பட்டது.

இக்கோயிலில் பத்து நாட்கள் கொண்டாடப்பட்ட தேர்த் திருவிழாவிற்கான செலவினங்களுக்காகக் கந்தாடை ஐயங்கார் நிலம் அளித்திருந்தார். இந்நிலவருவாயின் ஐந்தில் மூன்று பங்கு கண்ணபுரத்தாருக்கும் இரண்டு பங்கு கண்ணமங்கையாருக்கும் என திட்டமிடப்பட்டிருந்தது. கண்ணபுரம் மேலைத் திருவீதியில் நாராயணதாதர் எழுப்பியிருந்த திருமாளிகையில் எழுந்தருளியிருந்த மங்கையாழ்வாருக்கான வழிபாட்டிற்காக அர்ச்சனா போக இறையிலியாக நிலம் அளிக்கப்பட்டது. இறைவனுக்கு வெள்ளி இலைத்தட்டு ஒன்றும் தராக்கெண்டி ஒன்றும் காளமும் அதிராஜராஜதேவரால் வழங்கப்பட்டிருந்தன.

வங்கிபுரத்து ஆச்சி ஐயங்கார் மகன் ரங்கராஜர் கோயில் ஊழியத்திற்காக வழிவழியாகத் தாம் பெற்றிருந்த நிலத்தைக் கொடையளிக்க முடியாத காரணத்தால், அதன் ஒரு பகுதியை இறைவனுக்கான தயிர்ச்சோறு படையலுக்காக அறுபத்தைந்து சக்கரத்திற்கு விற்றுத் தந்தார். தயிருக்கான பாலுக்காக மேலும் முப்பத்தைந்து சக்கரம் அளித்தார். இவர் பரம்பரையினர் உடையவர் காலத்திலிருந்து கோயில் பணியில் இருந்தவர்கள் என்கிறது கல்வெட்டு

கண்ணாளர் சத்ருகண்டனுக்கு நரசிங்கமங்கலத்தில் ஏழு மா நிலம் அன்றாடு நாற்காசு ஒன்றுக்குக் கோயிலாரால் விற்கப் பட்டது. பாழ் நிலமான அதை அவர் உழவுக்குக் கொணர்ந்து, விளைவின் ஒரு பகுதியைக் கோயில் நிவந்தங்களுக்கு அளிப்பது என உடன்பாடாகியிருந்தது (502). சௌரிப்பெருமாள் திருவீதி

யில் முக்கோலுக்கு எழுகோல் என மனை பெற்ற பயனாளிகள், அம்மனையின் ஒரு பகுதியில் தெங்கு நட்டு, ஆறாண்டுகள் கழித்து, காய் முற்றியதும் எண்ணெய் எடுத்துக் கோயில் பண்டாரத்தில் அளக்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது (512).

முடிகொண்டான் ஆற்றில் 'புவனேக வீரன் நீராவி' என்ற பெயரில் இறைவன் எழுந்தருள மண்டபம் கட்டவும் ஆற்றில் இருந்து இறைவன் முழுக்காட்டிற்கு நீர் கொள்ளப் பாதை அமைக்கவும் தோப்பொன்று அமைக்கவும் தோப்புப் பணியாளர், நீர் சுமக்கும் ஆட்கள் இவர்களுக்கு ஊதியம் வழங்கவும் கயிநல்லூர்ப்பற்றில் இறையிலி நிலம் ஒதுக்கப்பட்டது. இக்கல்வெட்டில் குறிக்கப்படும், 'புவனேக வீரன்' இரண்டாம் மாறவர்மர் விக்கிரம பாண்டியராகலாம்.

மூன்றாம் இராஜராஜரின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (503) இறைவன் திருவாய்மொழியாக அமைந்துள்ளது. இறைவனே மொழிவது போலவும் ஆணையிடுவது போலவும் திருமுகம் எழுதியனுப்புவது போலவும் அமைந்த இது போன்ற கல்வெட்டுகள் தமிழ்நாட்டுக் கோயில்களில் சிலவாய் உள்ளன. ஸ்ரீவில்லிபுத்தூர், திருவரங்கம், பண்டெழுவர் தவத்துறை என்பன அவற்றுள் சில. கண்ணபுரத்து இறைவனின் திருவாய்மொழிவு அவருடைய திருமணவிழாவின் ஐந்தாம் நாளில் சித்திரைத் திங்களில் கோயில் நீராவி மண்டபத்தில், 'இராவணாந்தகன்' என்று பெயரிடப்பட்டிருந்த முத்துப் பந்தலின் கீழ் நம்பி கலியன் என்றழைக்கப்பட்ட இருக்கையில் இறைவன் தம் தேவியருடன் இருந்து நம்மாழ்வார் பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த நிலையில் நிகழ்ந்தது.

சௌரிப்பெருமாள் பெருந்தெருவில் 1550 குழி நிலத்தில் மனை எடுத்துக் குடியிருந்து கடை கட்டிக்கொள்ள அனுமதிக் கப்பட்ட வணிகர்களுக்கு மனைகள் இறையிலியாக்கப்பட்டன. அதற்குப் பதிலாக வணிகர்கள் அவரவர் வணிகம் செய்யும் பண்டங்களுக்கேற்ற ஆயத்தைக் கோயிலுக்குச் செலுத்த வேண்டும். கோயில் கோவணவரும் வணிகர்களும் கூடிக் கலந்து பேசி இந்த ஆயத்தை முடிவுசெய்தனர். எந்த ஒரு வணிகராவது

தம் இடத்தை விற்றல், ஒற்றிவைத்தல், கொடையளித்தல் எனும் மூன்று செயல்களுள் ஏதேனும் ஒன்றுக்கு உட்படுத்த விழையின், கோயில் தானத்தாருக்கும் நகரத்தாருக்கும் தெரியப்படுத்த வேண்டும். அவர்கள் இசைவளித்த பிறகே இச்செயல்கள் அமைய முடியும். இறைவனின் இத்திருவாய்மொழிவை ஓலையில் எழுதியவராக சௌரிப்பெருமாள் பிரியன் குறிக்கப்பட்டுள்ளார். மனைகளை இறையிலியாக்குமாறு இறைவனுக்குப் பரிந்துரைத்த வர்களாகக் கண்ணபுரம் மகாமுனி, கலையிலங்கு மொழியாளர், கோவணவர், பாடுவோர் இவர்கள் அமைந்தனர்.

கண்ணபுரம் தோரணசூர பட்டரிடம் நிலத்துண்டு ஒன்றை வாங்கிய பூலோகமாணிக்கச் சதுர்வேதிமங்கலத்து இரதகரை அருளாள பட்டர், அழகிய மணவாள பட்டன், சௌரிராச பட்டன் இவர்கள் அந்நிலத்தை திருநாமத்துக்காணியாக இறை வனுக்குக் கொடையளித்தனர். ஊருக்கு நான்கு குடும்பமாக ஐந்து ஊர்களில் இருந்து கண்ணபுரத்தில் குடியேற்றப்பட்ட இருபது நெசவாளர் குடும்பங்கள் கோயிலுக்குத் தேவையான துணிவகைகளை நெய்தளித்து அதற்கு மாற்றாக ஊதியமும் கோயில் மரியாதைகளும் பெற்றனர் (508). கோயிலாழ்வி சானி என்பார் இறைவன் திருக்கையில் நீர்வார்த்து நிலத்துண்டு ஒன்றைக் கோயிலுக்கு அளித்தார்.

அரையன் சத்திவன நாயகரான காடவராயர் அன்றாடு நற்காசு 5350க்கு ஒன்றேமுக்கால் வேலி ஒரு மா நிலத்தைக் கோயிலுக்கு விற்றார். அந்த விலை ஆவணத்தைத் தாம் எழுதிய தாகப் பனிக்களத்து வாச்சியன் நெய்யுடையான் பட்டன் குறிப்பிட்டுள்ளார். அந்த நிலத்தை வாங்கக் கோயிலார் இறைவன் அணியும் நகைகளுள் ஒன்றான வீரராஜேந்திர சோழப் பதக்கத்தை அழித்துப் பதின்மூன்று கழஞ்சுப் பொன் பெற்றுத் தந்தனர். கண்ணபுரம் இறைவனுக்குரிய திருவிடையாட்ட நிலத்துண்டுகள், திருநாமத்துக்காணி நிலங்கள், ஊர்க்கீழ் இறையிலிகள், பிராமணர்பற்றுகள் பற்றிய விரிவான அட்டவணை ஒரு கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது. விளை நிலம் மட்டும் ஐநூற்று இருபத்தொன்பதே முக்கால் வேலி இருந்ததென அறியமுடிகிறது (531). கோயிலில் உடையவர்

இராமாநுஜர் திருமேனி எழுந்தருளுவிக்கப்பட்டமையை ஒரு கல்வெட்டால் அறியமுடிகிறது.

**கோயிலாட்சி**

கண்ணபுரம் கோயிலின் நடைமுறைகளை மேற்பார்வையிடவும் நிருவாகத்தை நடத்தவும் ஸ்ரீகாரியம், ஸ்ரீவைஷ்ணவக் கண்காணிகள், ஸ்ரீபண்டாரி, கோயில் கணக்கு இவர்கள் இருந்தனர். இவர்கள் தவிர கலையிலங்கு மொழியாளர், கோவணவர் இவர்களும் நிருவாகத்தில் உதவினர். விக்கிரம சோழர் காலத்தில் இக்கோயில் கணக்காக இருந்தவர் வைணவப் பெருங்கோ வேளான். ஊர்க்கணக்காகத் திருக்கண்ணபுரம் உடையார் இருந்தார். ஸ்ரீகாரியமாக உருத்தூர் உடையாரும் ஸ்ரீபண்டாரியாக வனவாசி சூமுகனும் அமைந்தனர். ஸ்ரீவைஷ்ணவ கண்காணிகளாக ஒன்பது அருளாளர் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

மாறவர்மர் குலசேகரர் காலத்தில் கோயில் கணக்காக அத்திப்புலியூர் உடையான் கலையிலங்கு மொழியான் பிரியனும் வைஷ்ணவக் கணக்காக கள்ளிக்குடையானும் ஸ்ரீவைஷ்ணக் கண்காணிகளாக கோவிந்த பட்டர், தெய்வநாயக பட்டர், இரவிதேவ பட்டர், இராமாநுஜ தாசர் இவர்களும் இருந்தனர்.

**திருமடங்கள், பிறகோயில்கள்**

கண்ணபுரக் கல்வெட்டுகளில் திருமடங்கள், அவற்றின் பணிகள், தலைவர்கள் பற்றிய தரவுகள் உள்ளன. சௌரிப் பெருமாள் கோயில் திருமடைவிளாகத்து வடக்கு வீதியில் வடகிழக்கு மூலையில் சூசகர் கருணாகர வீர மடம் இருந்தது. அம்மடத்தில் கோயில் திருநாட்கள் தோறும் வைணவர்களுக்கு உணவிடவும் மடத்தைப் பராமரித்துக் காப்பாற்றி வரவும் தென்னிலங்கை வளஞ்சியர் கருணாகர வீரர்கள் தலைக்கு இரண்டு காசு அளித்தனர். இக்கொடையை வழங்கிய வளஞ்சியர் திருநீற்றுச்சோழபுரம் உள்ளிட்ட ஊர்களில் வாழ்ந்தவர்களாவர். இக்கல்வெட்டு ஏற்கனவே இக்கோயிலில் இடம்பெற்றிருந்து அழிந்தமையால், மூன்றாம் குலோத்துங்கரின் பதினோராம் ஆட்சியாண்டில் மீண்டும் பொறிக்கப்பட்டது (505).

கோயிலின் மேலைவீதியில் இருந்த ஒரு மடத்தில் வருவாரையும் இருப்பாரையும் உண்பிக்கவும், உண்பிப்பார்க் கான ஊதியம், உணவுக்கான செலவினங்கள் இவற்றிற்காகவும் அம்பரைச் சேர்ந்த வாணாதராயன் நிலக்கொடை அளித்திருந் தார். ஓர் அரசாணை வழி அந்நிலம் இறையிலியாக்கப்பட்டது. கோயில் முதல் சுற்றுத் திருமாளிகையை எழுப்பிய பெருமையும் அவருக்குரியதே (513). பிற்பாண்டியர் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதத்தக்க கல்வெட்டொன்றில் திருக்கோவலூர் எம்பெருமா னார் ஜீயர் திருமடம் இடம்பெற்றுள்ளது.

வீரபாண்டியன் பட்டினத்திலிருந்த பரதவர் நாராயணப் பெருமாள் கோயிலில் ஊழியம் செய்ய, மொண்ணை மாமருதச் சதுர்வேதிமங்கலத்திலிருந்து பட்டர்கள் கொணரப்பட்டனர். அவர்களுக்கு வாழ்வூதியமாக குலோத்துங்க சோழபட்டினத்து சாகரம் உடையார்களில் கண்ணுடையான் மகன் சொக்கனார் முக்கியராயன் எட்டு வேலி நிலம் அளிக்க, அரசரால் அந்நிலம் இறையிலியாக்கப்பட்டது. (497).

வண்டுவாப்பெருமாள் கோயில், குலோத்துங்க சோழீசுவரம், பிரம்மீசுவரம் எனும் மூன்று கோயில்களுக்குரிய தேவதான நிலங்கள் கல்வெட்டொன்றில் சுட்டப்பட்டுள்ளன. இந்தக் கோயில்கள் விக்கிரம சோழச் சதுர்வேதிமங்கலத்தில் இருந்தன. இவ்விக்கிரம சோழச் சதுர்வேதிமங்கலம் கண்ணபுரத்திற்கு அடுத்திருந்தாற் போல் கல்வெட்டுச் சொல்லாட்சிகள் சுட்டு கின்றன. தற்போது கண்ணபுரத்தின் சுற்றுப்புறத்தில் இந்தக் கோயில்கள் இருப்பதாக அறியக்கூடவில்லை.

**திருவாலி**

'திருவாலி, திருநகர்' என்று இணைய அழைக்கப்பட்டாலும் திருவாலியும் திருநகரும் இரண்டு வெவ்வேறு ஊர் களாகவே உள்ளன. பிரபந்தப் பாடல்கள் திருவாலியையே குறிக்கின்றன. திருநகருக்குப் பாடல்கள் இல்லை. காகுத்தன் தாலாட்டில் குலசேகர ஆழ்வார், 'ஆலிநகர்க் கதிபதியே' என்று பெருமா ளைப் பரவுகிறார். 'தேராடும் திருவீதித் திருவாலி நகராளும்' என்று புகழ்வார் மங்கையாழ்வார். இந்தத் தொடர்களில் ஆலியே நகராகக் கருதப்பட்டுள்ளது எனக் கொள்ள முடியுமே

தவிர, ஆலி - நகர் என இரண்டு ஊர்கள் பாடப்பட்ட தாகக் கொள்ள வாய்ப்பில்லை.

மங்கை ஆழ்வாரின் நாற்பத்தொரு பாசுரங்களும் தென் ஆலி, பேராலி, வயலாலி என்று பலபட ஆலியைப் புகழ் கின்றனவே தவிர, நகரைத் தொடவில்லை. திருவேங்கடத்தான் திருமன்றப் பதிப்பான நாலாயிரத்திலும் திருஆலியே நூற்றெட்டு திவ்விய தேசங்களுள் ஒன்றாகக் குறிக்கப்பட்டுள்ளது. 'திவ்விய தேசக் கணக்கில் ஒன்றாயினும், இது இரண்டு தனி ஊர்களாய் உள்ளது' என்கிறது திவ்விய தேசப் பிரபாவம். அதனால், பாசுரப் புகழ் திருஆலியை முதலிலும் அதனுடன் ஒட்டிப் புகழ்பெற்ற நகரை அடுத்தும் பார்க்கலாம்.

சீர்காழியின் கிழக்கே ஏறத்தாழ எட்டுக் கிலோமீட்டர் தொலைவில் உள்ளது திருவாலி. மங்கையாழ்வாரின் பிறப்புத் தலமான குறையலூரின் வடக்கே உள்ள இவ்வூரில் எளிமையான கட்டமைப்பில் இலட்சுமிநரசிம்மர் கோயில் அமைந்துள்ளது. அதன் கோபுமரமற்ற வாயிலின் முன்னே நிற்கும் சிறிய அளவிலான ஒருதள வேசர விமானத்தில் கருடன். வாயிலை அடுத்து நீளும் கற்காரை நடைமண்டபத்தை நான்கு தூண்கள் தாங்குகின்றன. விமானம், முகமண்டபம், பெருமண்டபம் என அமைந்துள்ள இவ்வளாகத்தை வாயில் சூழ்ந்த மதில் அணைத்துள்ளது.

துணைத்தளத்தின் மீதெழும் பெருமண்டபம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகை, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரை இவை கொண்டு விளங்குகிறது. மண்டபத்தின் தென், வடசுவர்களில் ஆழமாகவும் வெறுமையாகவும் காணப்படும் கோட்டங்களைச் சாலை சிகரங்கள் மூடியுள்ளன. மண்டபத்தின் உட்புறத் தூண்கள் முச்சதுர இருகட்டுத் தூண்களாக அமைய, மேலே போதிகை தாங்கும் கூரையுறுப்புகள். மண்டபத்தில் ஆழ்வார் திருமேனிகள் சில காணப்படுகின்றன.

உறுப்புவேறுபாடற்ற துணை, தாங்குதளங்கள், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், கூரையுறுப்புகள் பெற்று எழும் விமானத்தின் சாலைப்பத்தி சற்றே முன்வந்துள்ளது.

அவற்றில் இடம்பெற்றுள்ள ஆழமற்ற கோட்டங்கள் மகர தோரணம் போன்ற அமைப்பால் மூடப்பட்டுள்ளன. விமானத்தின் முதல்தளக் கூரையின்மீது ஆறங்க ஆரஉறுப்புகள் அமைய, பின்னால் சிறிய அளவினதாய் இரண்டாம் தளம். வேசர கிரீவமும் சிகரமும் பெற்றுள்ள இதன் கிரீவகோட்டங்களில் கிழக்கில் இலட்சுமிநரசிம்மரும் தெற்கில் வராகரும் மேற்கில் கிருஷ்ணரும் வடக்கில் பரமபதநாதரும் சுதையுருவங்களாகக் காட்டப்பட்டுள்ளனர். ஆரச்சாலைகளிலும் தொடர்புடைய சுதையுருங்கள் உள்ளன.

முகமண்டபம் விமானத்தின் கீழ்த்தளத்தை ஒப்ப அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் நின்றநிலையில் இருகைகளையும் வணக்க முத்திரையில் அமைத்துத் தாடியும் மீசையுமாய்ப் பட்டாடையுடன் காட்சிதரும் பெரியவரைக் கோயிலார் பூரண மகரிஷி என்கின்றனர்.

கருவறையில் இலட்சுமிநரசிம்மர் சுகாசனத்தில் உள்ளார். வலத்தொடையில் வணக்க முத்திரையில் பட்டாடை அணிந்தவராய் இலட்சுமி. இறைவனின் இட முன் கை தொடைமீது அமர, வல முன் கை அம்மையை அணைத்துள்ளது. பின் கைகளில் சங்கு, சக்கரம். திருவாலி இலட்சுமிநரசிம்மர் கோயிலில் கல்வெட்டுகள் ஏதும் இல்லை.

**திருநகர்**

திருவாலியில் இருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள திருநகர் மிகப் பெரிய கோயில் வளாகமாகும். திருக்கண்ணபுரத்தினும் பேரளவினதாக அமைந்துள்ள இந்தக் கோயில் மூன்று திருக்கோபுரங்களையும் நான்கு திருச்சுற்றுக்களையும் பெற்றுள்ளது. மேற்கு நோக்கியுள்ள இதன் எழுநிலை முதற் கோபுரத்தின் கீழ்த்தளம், உயரமான துணைத்தளமும் பாதபந்தத் தாங்குதளமும் வேதிகையும் நான்முகத் தூண்கள் அணைத்த சுவரும் கூரை உறுப்புகளும் ஆரஉறுப்புகளும் பெற்றுள்ளது.

துணைத்தள நிலையிலிருந்தே சுவரின் சாலைப்பத்தி முன் தள்ளலாக அமைய, முதல்தள ஆரஉறுப்புகள் கர்ணகூடம், பஞ்சரம், சாலை, பஞ்சரம், கர்ணகூடம் என அணிவகுத்துள்ளன.

ஆரச்சுவரில் குறுநாசிகைகள். இவை அனைத்துமே ஆறங்கம் பெற்றவை. மேற்றளங்கள் சுதையுருவங்கள் இன்றி அளவில் குறுக ஒவ்வொரு தளத்தின்மீதும் ஆரவரிசை. கோபுர வாயிலின் இருபுறத்தும் உள்ள கோட்டப்பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன. இக்கோபுரமும் இதனுடன் தொடரும் மதிலும் அணைத்துள்ள வெளிச்சுற்று, நந்தவனமாக உருப்பெற்றுள்ளது. சுற்றின் வடபுறத்தே உடையவர் மண்டபமும் திருமுன்னும் உள்ளன.

இரண்டாம் நுழைவாயில் ஐந்துநிலைக் கோபுரமாக அமைந்துள்ளது. இதன் கீழ்த்தளமும் துணைத்தளத்தின் மீதமைந்த பாதபந்தத் தாங்குதளம், வேதிகை, நான்முக அரைத்தூண் சூழ்ந்த சுவர் கொண்டெழுகிறது. கூரை உறுப்புகளுள் வலபி வெறுமையாக உள்ளது. முதல் கோபுரத்தைப் போலன்றி இதில் ஆரஉறுப்புகள் இயல்பான அளவில் அமைந்திருப்பதுடன் மேற்றளங்களும் குறுகி உள்ளன. இதை அடுத்துள்ள திருநடை முச்சதுர, இருகட்டு உடல் பெற்ற தூண்களால் தாங்கப்படும் கூரை பெற்றுள்ளது. இக்கோபுரமும் இதனுடன் தொடரும் மதிலும் சூழ்ந்துள்ள சுற்றில்தான் அமிர்தவல்லித்தாயார், ஆண்டாள் திருமுன்கள் உள்ளன.

**தாயார், ஆண்டாள் திருமுன்கள்**

தென்புறமுள்ள அமிர்தவல்லித்தாயார் திருமுன் புதுக்கல் காரணமாக தன் பழைய முகத்தை இழந்துள்ளது. துணைத் தளமும் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளமும் நான்முக அரைத் தூண்கள் அணைத்த சுவரும் கொண்டெழும் இறைவியின் விமானம் இருதள வேசரமாக உள்ளது. இவ்விமானத்தின் சாலையிலும் கிரீவ கோட்டங்களிலும் தேவியின் சுதையுருவங்கள் இடம்பெற்றுள்ளன. கருவறையில் கரண்டமகுடத்துடன் கிழக்குப் பார்வையாக அர்த்தபத்மாசனத்தில் உள்ள தாயார் முன் கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் கொண்டு பின் கைகளில் மலரேந்தியுள்ளார். செவிகளில் பனையோலைக் குண்டலங்கள்.

விமானத்தின் முன் அதே அமைப்பில் முகமண்டபமும் அதன் முன் செங்கல் கட்டுமானமாய் முன்றிலுடன் பெரு மண்டபமும் உள்ளன. வடபுறமுள்ள ஆண்டாள் திருமுன்னும்

அதே அமைப்பில் இருதள வேசரமாக அமைந்துள்ளது. கருவறை யில் கிழக்குப் பார்வையாக சமபாதத்திலுள்ள ஆண்டாள் வலக் கையில் மலரேந்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார்.

மூன்றாவது கோபுரம் முத்தளம் பெற்றுள்ளது. அதன் கீழ்த்தளம் துணைத்தளம், தாமரை உபானம், சிலம்புவரிக் குமுதம் பெற்ற கபோதபந்தத் தாங்குதளத்துடன் எழுகிறது. சுவரைச் சதுரபாதம் கொண்ட எண்முக அரைத்தூண்களே சூழ்ந்துள்ளன. பாதஉச்சியில் நாகபந்தம் சூடிய இத்தூண்களின் தாமரை வடிப்புக் கூர்மையாக உள்ளது. பெருமொட்டுப் போதிகைகள் உத்திரம் தாங்க, வலபியில் பூதவரி செதுக்கப் பட்டுள்ளது. இப்பூதங்கள் ஆடற்கோலங்களிலும் வீர விளையாட்டுகளிலும் ஈடுபட்டுள்ளன. சுவரில் அழகிய குடப் பஞ்சரங்கள் இடம்பெற்றுள்ளன. வாயிலின் இருபுறத்தும் உள்ள கோட்டங்களில் வாயிற்காவலர்கள்.

மூன்றாம் கோபுரத்தை அடுத்தமைந்துள்ள சுற்றின் வடக்கில் ஆழ்வார்கள் மண்டபம் உள்ளது. தேில், மூன்று தேவியருடன் பரமபதநாதர், நாச்சியாருடன் இலட்சுமி நாராயணப் பெருமாள், ஆழ்வார்கள் பதின்மர், நாதமுனிகள் இவர்கள் எழுந்தருளி யுள்ளனர். சுற்றின் கிழக்கில் சிறிய கிரீடமகுடத்துடன் யோக நரசிம்மர் உள்ளார். கால்களை மடக்கிக் குறுக்கீடு செய்து யோகாசனத்தில் யோகபட்டத்துடன் காட்சிதரும் அவர் பின் கைகளில் சங்கும், சக்கரமும். முன் கைகள் முழங்கால்களை ஒட்டி இறங்கியுள்ளன. சுற்றின் மேற்கில் ஏறும் படிகள் இறுதி மண்டபத்தை அடைகின்றன.

பிரதிபந்தத் தாங்குதளம், வேதிகை, சதுரபாதமும் எண்முக உடலும் இந்திரகாந்த மாலைத் தொங்கலும் பெற்ற அரைத் தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், ஆழமற்ற கூடுகளும் விளிம்பும் பெற்ற கபோதம் என உயர்ந்துள்ள வெற்றுத் தளம் ஒன்றின்மீது எழும் இம்மண்டபத்தின் வடபுறம் திருமங்கையாழ்வார் திருமுன் வாயிலும் கிழக்கில் சிறிய அறை போலப் பெருமாள் திருமுன் ஒன்றும் அதையடுத்துக் கல்யாண அரங்கநாதர் விமானத்திற்கான வழியும் அதன் தெற்கில் ஏவரி வெஞ்சிலையான் திருமுன் வாயிலும் அமைந்துள்ளன.

**மங்கையாழ்வார் திருமுன்**

வடபுறமுள்ள மங்கையாழ்வார் திருமுன், மண்டபத்தில் இருந்து பிதுக்கமாக வெளித்தள்ளி வெற்றுத்தளம் ஒன்றின்மீது விமானம், முகமண்டபம் பெற்று அமைந்துள்ளது. இதன் விமானம் தாமரை உபானமும், பாதபந்தத் தாங்குதளமும் வேதிகைத்தொகுதியும் பெற்றுள்ளது. ஜகதியில் எழிலார்ந்த அன்னவரிக் காட்டப்பட்டுள்ளது. குமுதம் சிலம்புவரிப் பெற்றுள்ளது. சுவரில் சதுரபாதம் பெற்ற எண்முக அரைத் தூண்கள். பூமொட்டுப் போதிகைகள் உத்திரம் தாங்குகின்றன.

தாமரை வலபியை அடுத்துக் கீழிறங்கும் கபோதம் மாவிலைத்தோரண அலங்கரிப்பும் சந்திரமண்டலமும் பெற்றுள் ளது. கூடுகளில் பல்வேறு சிற்பங்கள். கர்ணபத்திகளின் வேதிகைத்தொகுதி மேல் எதிரெதிர் நோக்கியனவாய் தாவு யாளிகள் அமைய, பத்திகளை அடுத்து, அழகிய குடப்பஞ்ச ரங்கள். கூரையின் மேல் ஆரஉறுப்புகளும் பின்னால் சிறிய அளவிலான இரண்டாம் தளமும் உள்ளன. மேலே வேசர கிரீவ, சிகரம். கிரீவ கோட்டங்கள் சுதையுருவங்கள் பெற்றுள்ளன.

சாலைப்பத்திக் கோட்டங்கள் வடபுறம் தவிர வெறுமையாக உள்ளன. வடக்குக் கோட்டத்தில் இரணியனைக் கிழிக்கும் நரசிம்மர் சிறிய கிரீடமகுடத்துடன் எண்கையராய்ச் சுகாசனத் தில் உள்ளார். பின் கைகள் வலப்புறம் எறிநிலைச் சக்கரமும் இடப்புறம் சங்கும் கொள்ள, முன் கைகள் இரண்டும் கிழிக்கப் பட்ட இரணியனின் வயிற்றுக்குள் நுழைந்துள்ளன. இடைப் பட்ட கைகளுள் இரண்டாம் கைகள் குடலுடன் தலைக்கு மேல் உயர்ந்துள்ளன. மூன்றாம் இணைக்கைகளுள் வலக்கை இரணிய னின் ஒரு காலைப் பிடித்திருக்க, இடக்கை அவன் தலையை மகுடத்துடன் பிடித்துள்ளது. இரணியனின் வலக்கால் மடிந்து இறைவன் தொடைக்காய் திரும்பியுள்ளது. மிகப் போற்றற்குரிய இறைவடிவமாகத் திருநகரில் கொண்டாடப்படும் இந்நரசிம்ம ரின் கைகளில் தோள், கைவளைகள்; கால்களில் கழல்கள்.

விமானத்தை ஒப்ப அமைந்துள்ள முகமண்டப வாயிலின் இருபுறத்தும் காவலர்கள். கருவறையில் மங்கையாழ்வார், தலையில் சிறிய மகுடமும் மகரகுண்டலங்களும் முத்துமாலை

யும் கை, தோள் வளைகளும் சிம்மமுகக் கச்சு இருத்தும் தொடை யளவான ஆடையும் இடைக்கட்டும் கழல்களும் அணிந்து வணக்க முத்திரையில் சமபாதராய் நிற்கிறார். ஆழ்வார் நிற்கும் தளத்தில் இடப்புறம், 'சிந்தனைக்கினியான்' என்று பெயரிடப் பட்டுள்ள பெருமாள் இருபுறமும் தேவியருடன் சுகாசனத்தில் அமர்ந்துள்ளார்.

சிறிய அளவினராய்க் காட்டப்பட்டுள்ள இப்பெருமாளின் முன் கைகள் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் அமைய, பின் கைகளில் சங்கு, சக்கரம். உத்குடியில் உள்ள தேவியர் உள் கைகளில் மலரேந்தி, வெளிக்கைகளைத் தொடையில் இருத்தி யுள்ளனர். மங்கை ஆழ்வார் திருவாலியைப் பாடிய பாசுரங் களில் ஒன்று, 'என் சிந்தனைக்கினியாய்' என்று பெருமாளைப் பரவுகிறது (1188). பாடல் அடியைப் பின்பற்றி மங்கை ஆழ்வார் தளப் பெருமாள் பெயர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மங்கையாழ்வாரின் வலப்புறத்துள்ள அவரது தேவி குமுத வல்லி வலக்கையை நெகிழ்த்தி, இடக்கையில் நீலோத்பலம் ஏந்தி யுள்ளார். மகரகுண்டலங்கள், ஸ்வர்ண வைகாக்ஷம் அரும்புச் சரம், தோள், கைவளைகள், குறங்குசெறி, தாள்செறி, பட்டாடை அணிந்துள்ள அம்மையின் மார்பகங்களில் கச்சில்லை.

### சிறிய அறைப் பெருமாள் திருமுன்

மேற்குப் பார்வையாக உள்ள இவ்வறையில் பிற்சோழர் காலத்ததாகக் கொள்ளத்தக்க திருமால் சிற்பமொன்றும் திருமகள், ஆழ்வார் திருமேனிகளும் உள்ளன. கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், அரும்புச்சரம், முத்துமாலை, முப்புரிநூல், உதரபந்தம், சிம்மமுக அரைக்கச்ச இருத்தும் இடைக்கட்டுட னான பட்டாடை அணிந்து சமபாதத்தில் நிற்கும் பெருமாளின் பின் கைகளில் சங்கு, சக்கரம். முன் கைகளில் வலக்கை காக்கும் குறிப்பில் இருக்க, இடக்கை கடியவலம்பிதமாக உள்ளது.

### ஏவரி வெஞ்சிலையான் திருமுன்

மண்டபத்தின் கிழக்குப் பகுதியில், ஆலி மணவாளர் விமான வழிக்குத் தெற்கில், இருதள வேசர விமானமும் முகமண்டபமும் பெற்றமைந்துள்ள திருமுன்னில் ஏவரி வெஞ்சிலையான் எழுந்

தருளியுள்ளார். இப்பெருமானின் பெயரும் மங்கை ஆழ்வாரின் ஆலிப் பாசுரத்திலிருந்தே பெறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. சுகாசனராய்ப் பின் கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியுள்ள இவரது முன் கைகள் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் உள்ளன. இவரின் இருபுறத்தும் திருமகளும் நிலமகளும் உள் கைகளில் மலரேந்தி, வெளிக்கைகளை நெகிழ்த்தி உள்ளனர்.

**கல்யாண அரங்கநாதர் திருமுன்**

இறைவன் விமானமுள்ள பகுதிக்கு வழிவிடும் வாயிலின் இருபுறத்தும் பக்கத்திற்கு ஒருவராகக் காவலர்கள். தாமரைத் தளத்தின்மீது நிற்கும் இவர்தம் பின் கைகளில் சங்கு, சக்கரம். முன் கைகளுள் ஒன்று பாம்புப் படத்துடன் அமைந்த உருள்பெருந் தடியின்மீது கடகமாக அமைய, மற்றொன்று எச்சரிக்கை செய்கிறது. இவ்வாயிலை அடுத்து, உள்திருச்சுற்றின் இரண்டு தூண்கள் தாங்கும் மேற்குப்பகுதி அமைந்துள்ளது. அதன் வடக்கிலும் தெற்கிலும் நுழைவாயில்கள் உள்ளன. அவற்றின் வழி இறைவன் விமானத்தைச் சுற்றி வரலாம். நடையின் கிழக்கில் முகமண்டப வாயில் அமைந்துள்ளது.

கருவறையில் கல்யாண அரங்கநாதர் என்ற திருப்பெய ருடன் சுதைமேனியராய்ப் பெருமாள் தம் தேவியருடன் சுகாசனத் தில் உள்ளார். இறைவனின் வல முன் கை காக்கும் குறிப்பில் அமைய, இட முன் கை தொடைமீது உள்ளது. பின் கைகளில் சங்கு, சக்கரம். வலப்புறம் திருமகளும் இடப்புறம் நிலமகளும் இறைவனைப் போலவே சுகாசனத்தில் உள்ளனர். அவர்தம் உள் கைகள் மலர் ஏந்த, வெளிக்கைகள் தொடைமீதுள்ளன.

இருதளத் திராவிடமாக அமைந்துள்ள இறைவனின் விமானம் உபஉபானம், உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், தாமரைவரி, பிரதிவரி, கம்பு, கண்டம், கபோதம் பெற்ற கபோத பந்தத் தாங்குதளத்தின்மீது எழுகிறது. அதன் சுவர்களை சதுர பாதம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் அணைத்துள்ளன. பாதங்களின் முகப்பில் கொடிக்கருக்குகளும் உச்சியில் சிறிய நாகபந்தங்களும் உள்ளன. பூமொட்டுப் போதிகைகள் உத்திரம் தாங்க, வலபி வெறுமையாக உள்ளது.

தாங்குதளத்திலிருந்தே பத்திப் பிரிப்புப் பெற்றுள்ள சுவரின் மூன்று முதன்மைப் பத்திகளும் வெளியிழுக்கப்பட்டுள்ளமையால் ஏற்பட்டிருக்கும் இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடப் பஞ்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. சட்டத்தலை பெற்ற உருளை அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுள்ள சாலைப்பத்திக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. முதல் தளக் கூரைமீது ஆரஉறுப்புகள் அமர, இரண்டாம் தளம் சிறிய அளவினதாகக் காட்டப்பட்டுள்ளது. அதன் மீதுள்ள கிரீவகோட்டங்களில் வடக்கில் பரமபதநாதரும் கிழக்கில் வராகரும் தெற்கில் யோக நரசிம்மரும் மேற்கில் பெருமாளும் சுதையுருவங்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

முகமண்டபமும் விமான அமைப்பிலேயே இருப்பது குறிப்பிடத்தக்கது. விமானத்தையும் முகமண்டபத்தையும் சூழ அமைந்துள்ள சுற்றுமாளிகையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் தாங்குகின்றன இத்தூண்களுக்கும் கூரை உறுப்புகளுக்கும் இடையில் வெட்டுப் போதிகை.

**கல்வெட்டுகள்**

திருநகரிலிருந்து 1919ல் நான்கு கல்வெட்டுகள் (406 - 409) படியெடுக்கப்பட்டுள்ளன. உலகுய்ய வீற்றிருந்தருளிய நாயனார், வயலாலி மணவாளர் என்றெல்லாம் இக்கல்வெட்டுகளில் புகழப்படும் கல்யாண அரங்கநாதரின் திருக்கோயிலில் வேதம் ஓதிய பிராமணர்களின் பெயர்களும் அவர்களுக்குத் தரப்பட்ட நிலப்பங்குகளும் ஒரு கல்வெட்டில் இடம்பெற்றுள்ளன (407). விருப்பண்ண உடையாரின் (கி. பி. 1386) கல்வெட்டு, இராஜாதிராஜ வளநாட்டின் கீழ் இடம்பெற்றிருந்த திருநகர் விக்னேசுவர நல்லூர் என்றும் அறியப்பட்டதாகக் கூறுகிறது. காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் இறைவனுக்குச் சர்வமானியமாக அளிக்கப்பட்டிருந்த நிலத்துண்டுகளின் பட்டியலைத் தரும் இக்கல்வெட்டு வடக்குச் சுவரில் இடம் பெற்றுள்ளது (409).

மன்னர் பெயரும் ஆண்டுக் குறிப்பும் இழந்திருக்கும் ஒரு கல்வெட்டினால் (408) இக்கோயிலில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டமையையும் வழிபாட்டிற்குப் பசுக்கள், நிலம்,

பாத்திரங்கள் அளிக்கப்பட்டிருந்தமையையும் அறியமுடிகிறது. கிருஷ்ணதேவராயரின் (கி. பி. 1517) கல்வெட்டு, பிற கோயில் களில் காணப்படும் அவருடைய வெற்றிக் கல்வெட்டாகவே அமைந்துள்ளது. இதனால், கிருஷ்ணதேவராயரின் வெற்றி களையும் சோழ மண்டலத்துக் கோயில்களுக்கு அவர் அளித்த இறையிலி பற்றியும் அறியமுடிகிறது.

திவ்விய தேசங்களுள் மூன்றான கண்ணபுரம், ஆலி, நகர்க் கோயில்களை ஆய்வு செய்யத் துணைநின்ற தமிழ் நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் ம. சுப்பிரமணியம், அத்துறை வருவாய் அலுவலரும் வரலாற்று ஆய்வாளருமான நண்பர் பால. பத்மநாபன், பொறிஞர் சு. சீதா ராமன், இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட் டுப் பிரிவு அலுவலர் முனைவர் சூ. சுவாமிநாதன், இவர்தம் உழுவல் உதவிகளுக்கு இக்கட்டுரையாசிரியர்களின் உளமார்ந்த நன்றி உரியது.

**பார்வை நூல்கள்**

1. நாலாயிர திவ்விய பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றப் பதிப்பு, சென்னை, 1973.

2. Annual Report on Indian Epigraphy, *1918, 1922.*

---

**காதடைப்பு நீங்கத் தீம்புளி**

புல்லி எனும் வீரம் செறிந்த சிற்றரசரின் ஆட்சியில் இருந்த வேங்கடத்தைச் சூழ்ந்திருந்த சிறிய வழிகளில் இடைப் பட்டு அமைந்திருந்த நீரற்ற பாலைநிலத்தில் கடும் வெப்பத் தால் தாக்குண்டு வரும் வழிப்போக்கரை எதிர்கொள்ளும் உள்ளூர் ஆயர்கள், தாம் மேய்க்கும் இளைய எருதுகளின் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டிருந்த மூங்கில் குழாய்களில் நிறைத்து வைத்திருந்த இனிய புளிச்சோற்றை, தேக்கிலையில் பகிர்ந்து அளித்து, அவர்தம் வழிநடை வருத்தமும் காதடைப்பும் நீங்கச் செய்வராம். - அகம் 311.

## 3. தென்பரங்குன்றம் குடைவரை

மு. நளினி, இரா. கலைக்கோவன்

பரங்குன்றம் மலையின் தென்சரிவின் கீழ்ப்பகுதியில் குடையப்பட்டுள்ள தென்பரங்குன்றம் குடைவரை, இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் பராமரிப்பில் உள்ளது.[1] அடர்த்தியான மரங்கள் நிறைந்த தோப்புப் போன்ற பகுதியில் இருந்து மேலேறும் படிகள் குடைவரைக்கு அழைத்துச் செல்கின்றன. குடைவரையின் முன் பலகைக் கற்கள் பதித்த நடைபாதையும் அதன் முடிவில் இரண்டு படிகளும் உள்ளன.[2] செவ்வக மண்டபமாக அகழப்பட்டுள்ள குடைவரையின் மேற்புறத்தே, மலைச்சரிவில் முக்கோணத்தின் இரு பக்கங்கள் என அமையுமாறு போல நீர்வடி விளிம்பு வெட்டியுள்ளனர்.

ஜகதி, உருள் குமுதம், கம்புகளின் அணைப்பில் பாதங்களுடன் கண்டம், பட்டிகை பெற்ற 1.13 மீ. உயரமுள்ள பாதபந்தத் தாங்குதளத்தின் மீது குடைவரை அமைந்துள்ளது. தளத்தின் மேற்புறம், குடைவரை முகப்பிற்கு முன்னுள்ள தரை எனத் தென்வடலாக 78 செ. மீ. அளவும் கிழக்கு மேற்காக 6. 18 மீ. அளவும் கொண்டு பரந்துள்ளது.

### முகப்பு

இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் பெற்றுள்ள முகப்பு தென்வடலாக 61 செ. மீ. அகலமும் கிழக்கு மேற்காக 6 13 மீ. நீளமும் கொண்டமைந்துள்ளது. பெருஞ் செவ்வகம், சிறு கட்டு, சதுரம் என வடிவமைக்கப்பட்டுள்ள இத்தூண்களின்[3] செவ்வக, சதுரப் பகுதிகள் வடக்குத் தவிர்த்த ஏனைய பிற மூன்று முகங்களிலும் தாமரைப் பதக்கங்கள் பெற்றுள்ளன.[4] அவற்றுள் சில பதக்கங்கள் சதுரச் சட்டத்திற்குள் உள்ளன. மேற்சதுரங்களின் மேலுள்ள போதிகைகள் வளை முகத் தரங்கக் கைகளால் அகலமான உத்திரம் தாங்க, மேலே வாஜனம். முகப்புக் கூரை வெறுமையாக உள்ளது.

முகப்பு அரைத்தூண்களை அடுத்துப் பக்கச் சுவர்களை ஒட்டிய நிலையில் முகப்பின் உத்திரம் சதுரப்பட்டியென இறங்கியுள்ளது. தெற்கு நோக்கி நீளும் பக்கச்சுவர்கள் முகப்புக்கு

முன்னுள்ள தரையமைப்பினும் சற்று நீண்டு பாறைச்சரிவிற்கு ஏற்ப முடிகின்றன. முகப்புக்கு முன்னுள்ள தரையமைப்பின் கிழக்கு, மேற்குச் சுவர்களாக அமைந்துள்ள சமன்படுத்தப் பட்ட இப்பாறைச்சுவர்கள் மேற்கில் 97 செ. மீ. அகலமும் கிழக்கில் 95 செ. மீ. அகலமும் கொண்டுள்ளன.[5]

முகப்புக்கு முன்னுள்ள இப்பகுதியின் கூரையை முப்புறத் தும் (கிழக்கு, மேற்கு, தெற்கு) முகப்பின் உத்திரம் அணைத்துள் ளது. கிழக்கு, மேற்குக் கூரை உத்திரத்திற்குள் நுழைந்திருக்கு மாறு முகப்பின் வாஜனம் காட்டப்பட்டுள்ளது. கூரையின் தெற்கு உத்திரம் முகப்புக்கு முன்னுள்ள தரையின் இருபுறத்தும் நான்முகத் தூண் என இறக்கப்பட்டுள்ளது. இதையும் தாண்டிக் கிழக்கிலும் மேற்கிலும் பாறைச்சுவர் சரிந்து இறங்குகிறது. நான்கு தூண்களால் மூன்று அங்கணங்களாக்கப்பட்டுள்ள முகப்பின் நடுஅங்கணத்திற்கு முன்னுள்ள தளமுகப்பை ஒட்டிப் படிகள் இருந்தமைக்கான தடயங்கள் தெரிகின்றன.

**மண்டபம்**

முகப்பை அடுத்துள்ள செவ்வக மண்டபம் முகப்பொத்த மற்றொரு வரிசைத் தூண்களால் முகமண்டபம், அர்த்த மண்டபம் என இரண்டு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.[6] முகப்புக்கும் இரண்டாம் வரிசைத் தூண்களுக்கும் இடையி லுள்ள முகமண்டபம் தென்வடலாக 2. 01 மீ அகலமும் கிழக்கு மேற்காக 6. 40 மீ. நீளமும் கொண்டு அமைந்துள்ளது. அதன் கிழக்குச் சுவரில் முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் கல்வெட்டுக் காணப்படுகிறது. மேற்குச் சுவரில் தரையிலிருந்து 34 செ. மீ. உயரத்தில் கருவறை ஒன்று அகழப்பட்டுள்ளது. முகமண்டபத்தின் தரையும் கூரையும் நன்கு சமன் செய்யப் பட்டுள்ளன. கூரையை ஒட்டி நாற்புறத்தும் வாஜனம்.

**கருவறை**

முகமண்டபத்தின் மேற்குச் சுவரில் அகழப்பட்டுள்ள கருவறையின் வாயில் 1. 84 மீ. உயரமும் 1. 04 மீ. அகலமும் கொண்டுள்ளது. மேல், கீழ் நிலைகளும் பக்கநிலைகளும் வரையறுக்கப்பட்டுள்ள இவ்வாயிலின் வெளிப்புறத்தே, அதன்

மேற்புறத்தும் பக்கங்களிலும் அமையுமாறு மூன்று கற்பலகைச் சட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளிச் சட்டம் 14 செ. மீ. கனமும் நடுச் சட்டம் 15 செ. மீ. கனமும் உள் சட்டம் 3 செ. மீ. கனமும் பெற்றமைந்துள்ளன. அலங்கரிப்பு ஏதுமற்ற இச்சட்டங்கள் திருமெய்யம் மேல் குடைவரையையும் குன்றத்தூர் இரண்டாம் குடைவரையையும் நினைவூட்டுகின்றன.[7]

கருவறை வாயிலின் முன்னால் தரையிலிருந்து 34 செ. மீ. உயரம் பெற்று அமைந்துள்ள தளத்தின் முகப்பு சிதைந்துள்ளது. முகப்பின் முன்னால் அகலக் குறைவான ஆனால் நீளமான படியொன்றும் அதன் முன்னே சந்திரக்கல் அமைப்பும் காணப் படுகின்றன. கருவறை வாயிலின் மேலே மூன்றாம் சட்டத்தை அடுத்து வாஜனமும் அதை அடுத்து அதைப் போல் இரு மடங்கு உயரம் பெற்ற சதுரப்பட்டி ஒன்றும் காணப்படுகின்றன.

கிழக்கு மேற்காக 2. 76 மீ. அளவும் தென்வடலாக 2. 78 மீ. அளவும் 2. 39 மீ. உயரமும் பெற்ற கருவறையின் தென், வடசுவர்களும் கூரையும் வெறுமையாக உள்ளன. மேற்குச் சுவரில் உள்ள ஆழமற்ற கோட்டத்தில் தரையிலிருந்து 73 செ. மீ. உயரமுள்ள தளத்தில் 1. 34 மீ. உயரமும் 92 செ. மீ. அகலமும் உள்ள அம்மையப்பர் திருவுருவம் இடம்பெற்றுள்ளது. கருவறையின் கூரையை ஒட்டி, கிழக்குத் தவிர்த்த ஏனைய முத்திசைகளிலும் வாஜனம். கிழக்கில், வாயிலின் மேல்நிலைக்கு மேலே கனமான உத்திரம் காட்டப்பட்டுள்ளது. வடக்கு, தெற்கு வாஜனங்கள் இவ்வுத்திரத்தின் மேற்புறத்தே முடிகின்றன. உத்திரத்தின் கீழுள்ள மேல்நிலையின் கருவறை நோக்கிய பகுதி இருபுறத்தும் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளது. நடுப்பகுதி மட்டும் அப்படியே விடப்பட்டுள்ளது.

### இரண்டாம் வரிசைத் தூண்கள்

முகமண்டபத்தையும் அர்த்தமண்டபத்தையும் பிரிக்கும் இரண்டாம் வரிசைத் தூண்கள் முகமண்டபத் தரையிலிருந்து 4 செ. மீ. உயரமுள்ள தளம் ஒன்றின்மீது அமைந்துள்ளன. கிழக்கு மேற்காக 6. 17 மீ. நீளமும் தென்வடலாக 66 செ. மீ. அகலமும் கொண்டுள்ள இத்தூண் தளம் பல இடங்களில் சிதைக்கப்பட்டுள்ளது. முழுத்தூண்கள் முற்றிலுமாய் அகற்றப் பட்டுள்ள இத்தளத்தின் அரைத்தூண்கள் மட்டுமே சிதைந்த

நிலையில் தற்போது பார்வைக்குக் கிடைக்கின்றன. இவை தளத்திலிருந்து 2 செ. மீ. உள்தள்ளி எழுகின்றன. இவற்றின் அமைப்புக் கொண்டே, இரண்டாம் வரிசைத் தூண்கள் முகப்புத் தூண்கள் போலவே வடிவமைக்கப்பட்டவை என்பதை அறிய முடிகிறது. முழுத்தூண்கள் அகற்றப்பட்டிருந்தாலும் அவற்றின் மேல் இருந்த போதிகைகள் அழிவிற்குத் தப்பி உத்திரம் தொட்டவாறு உள்ளன. வளைந்த கைகளால் உயரக் குறைவான உத்திரம் தாங்கும் இப்போதிகைகளும் முகப்புப் போதிகைகள் அமைப்பிலேயே உள்ளன. உத்திரம் அரைத்தூண்களை அடுத்து சதுரப் பட்டியாகத் தூண்தளம் வரை இறக்கப்பட்டுள்ளது. உத்திரத்திற்கு மேல் அகலமான வாஜனம்.

**அர்த்தமண்டபம்**

கிழக்கு மேற்காக 6. 14 மீ. நீளமும் தென்வடலாக 1. 12 மீ. அகலமும் கொண்ட அர்த்தமண்டபம் முகமண்டப அகலத்தில் பாதி அளவே பெற்றுள்ளது. திருச்சிராப்பள்ளி இலலிதாங்குர பல்லவேசுவர கிருகத்திலும் முகமண்டபம், அர்த்தமண்டபம் இவை தென்பரங்குன்றம் போலவே அமைந்திருப்பது இங்குக் கருதத்தக்கது.[8] அர்த்தமண்டபத்தின் மேற்குச் சுவரும் கூரையும் வெறுமையாக உள்ளன. தரை நன்கு சமன்படுத்தப்பட்டுள்ளது. கிழக்குச் சுவரில் மேலிருந்து வெட்டப்பட்டுள்ள முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் கல்வெட்டு, சுவர் முழுவதும் விரிந்து தரையிலிருந்து 50 செ. மீ. உயரத்தில் நிற்கிறது. இதன் தொடர்ச்சி முகமண்டபக் கிழக்குச் சுவரில் இடம்பெற்றுள்ளது.

அர்த்தமண்டபத்தின் பின் சுவர் அதன் மேற்குப்பகுதியில் கீழே 1.97 மீ. அகலத்திற்கும் மேலே 1.46 மீ. அகலத்திற்கும் வெறுமை யாக உள்ளது. சுவரின் நடுப்பகுதியில் 2. 13 மீ. அகலமும் 2. 04 மீ. உயரமும் உள்ள கோட்டத்தில் நடுநாயகமாக ஆடவல்லான் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இக்கோட்டம் அர்த்தமண்டபத் தரையிலிருந்து 51 செ. மீ. உயரத்தில் உள்ளது. இக்கோட்டத்தின் மேற்பகுதியில் கிழக்கில் முருகனும் மேற்கில், கோட்டமும் சுவரும் இணைந்தபகுதியில் ஹேரம்ப கணபதியும் உள்ளனர்.[9] பின் சுவரின் கிழக்குப்பகுதியில் 1. 93 மீ. அகலத்தில் 1. 80 மீ. உயரத்தில் 25 செ. மீ. ஆழமுள்ள கோட்டம் அகழ்ந்து அதில் இரண்டு பெண்களுடனான ஆடவர் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது.[10]

**சிற்பங்கள்**

**1. அம்மையப்பர்**

கருவறையின் மேற்குச் சுவரில் கோட்டச் சிற்பமாகக் கருங்கல் தளமொன்றில் நிற்குமாறு இடம்பெற்றுள்ள அம்மையப்பர், வலக்காலை முழங்காலளவில் இலேசாக மடக்கி, பாதத்தைத் திரயச்ரத்தில், இடப்பாதத்திற்குச் சற்று முன்தள்ளி அமையுமாறு இருத்தியுள்ளார். இடப்பாதம் நேராக உள்ளது. நான்கு கைகளும் உடைக்கப்பட்டிருந்த போதும் இடப் பின் கையில் மலர் இருப்பதைக் காணமுடிகிறது.[11] தலையில் சடைமகுடம். மகுடம் மீறிய சடைக்குழல்கள் தோளின் இருபுறத்தும் படர்ந்துள்ளன.

நெற்றிக்கண்ணரான இவரது வலச்செவி வெறுஞ்செவியாக, இடச்செவியில் மகரகுண்டலம்.[12] சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், தாள்செறி பெற்றுள்ள அம்மையப்பரின் இறைவனுக்கான இடைப்பகுதியில் குறங்குசெறி தழுவிய சிற்றாடை. அம்மை பட்டாடை அணிந்துள்ளார். இடைக்கட்டின் முடிச்சுகள் இருபுறமும் அமைய, ஆடையின் முந்தானை வலப்புறம் காட்டப்பட்டுள்ளது.

அம்மையப்பரின் பின் நிற்கும் காளை, தலையை இறைவியின் இடையருகே திருப்பியுள்ளது. சிறு கொம்புகள் பெற்றுள்ள அதன் கழுத்தில் மணிமாலை. அம்மையப்பரின் தலைக்கு மேல் கோட்ட அகலத்திற்குச் சுருள்களாய்க் காட்டப்பட்டுள்ள அலங்கரிப்பு அங்குத் தொடங்கி மேற்புறமாய் வளைந்து வாஜனத்திற்கு முன்னுள்ள கூரையில் முடிகின்றது.

**2. ஆடவல்லான் தொகுதி**

பின்சுவர்க் கோட்டங்களுள் முதல் கோட்டத்தில் இடம் பெற்றுள்ள ஆடவல்லான் தொகுதியில் ஆனந்தத் தாண்டவத்தில் இறைவனும் அவ்ஆடலை நோக்குமாறு இடப்புறத்தே இறைவியும் மேலே வலப்புறம் ஹேரம்ப கணபதியும் இடப்புறம் முருகனும் அமைய, இசை தருபவர்களாய் வலப்புறத்தே காரைக்கால் அம்மையும்[13] முழவுக் கலைஞரும் உள்ளனர்.

மார்புக்குக் கீழும் முன் கைகளும் சிதைக்கப்பட்டுள்ள இறைவனைச் சுற்றியும் காட்டப்பட்டுள்ள மகரதிருவாசியின்

வெளிப்புறத்தே தீச்சுடர்கள். சடைமகுடமும் அதை மீறிய விரி சடைகளும் நெற்றிக்கண்ணும் கொண்டிலங்கும் இறைவனின் வலப் பின் கையில் உடுக்கை. இடப் பின் கையில் தீச்சுடர். சிதைந்திருக்கும் முன் கைகள் காக்கும் குறிப்பிலும் வேழக் கையாகவும் இருந்திருக்க வேண்டும். விரிசடையில் வலப்புறம் கங்கை; இடப்புறம் பாம்பு. மகுட முகப்பில் மண்டையோடு. வலச்செவியில் மகரகுண்டலம். இடச்செவி சிதைந்துள்ளது.

சடைப்பாரம், பனையோலைக் குண்டலங்கள், உதரபந்தம், கையணிகள், தண்டை பெற்றுள்ள முயலகனின் வல முழங்கை தளத்தில் தாங்கலாக, இடக்கையில் பாம்பு. இடையில் கோவண ஆடை. இரண்டு கால்களையும் குறுக்காக அமைத்து இறைவ னின் வலப்புறம் அமர்ந்துள்ள நந்தீசரின்[14] மடியில் இடக்கை எனும் இசைக்கருவி. அதன் கயிற்றுப்புரிகளில் அவரின் இட முன் கை நுழைந்திருக்க, வல முன் கை சிதைந்துள்ளது பின் கை களில் வலக்கை போற்ற, இடக்கை வியப்பு முத்திரையிலுள்ளது. கீர்த்திமுகம் பொருந்திய சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சவடி, கை வளைகள், சிற்றாடை அணிந்துள்ள அவரது மகுடத்தைச் சடைவளையங்களே நெற்றிப்பட்டம் போலச் சூழ்ந்துள்ளன.

நந்தீசருக்கு மேலே சிறு தளம் ஒன்றில் குத்துக்கால் அமர்வில் உள்ள காரைக்கால் அம்மையின் இரு கைகளும் சிதைந்துள்ளன. நீள்செவிகளும் திரங்கிய மார்பகங்களுமாய் உள்ள அம்மையின் தலைமுடி விரிந்து முதுகில் படர்ந்துள்ளது.

இறைவனின் இடப்புறம் தனித் தளமொன்றில் இடப் பாதத்தைத் திரயச்ரத்திலும் வலப்பாதத்தைச் சற்று முன்தள்ளி நேராக நிறுத்தியும் காட்சிதரும் இறைவியின் கைகள் சிதைந் துள்ள போதும் இருக்கும் அமைப்புக் கொண்டு வலக்கை மலரேந்தியும் இடக்கை நெகிழ்கையாகவும் இருந்ததாகக் கொள்ளலாம். சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை, குறங்குசெறி, தாள்செறி அணிந்துள்ள இறைவியின் திருமேனி பெருஞ் சேதத்திற்கு ஆளாகியுள்ளது.

மரக்கிளை ஒன்றில் நிற்கும் மயில் மீது உத்குடியாசனத்தில் கரண்டமகுடம் அணிந்த ஐந்து முகங்களுடன் முருகன்.

ஆறாவது முகம் பின்புறம் இருப்பதாகக் கொள்ளலாம். அவரது வலக்கால் குத்துக்காலாய் மயில் முதுகின் மேல் அமைய, இடக்கால் வயிற்றருகே தாழ்ந்துள்ளது. பன்னிரண்டு கைகளில், பத்தில் கருவிகள் இருந்தபோதும் அவற்றை அடையாளம் காணக்கூடவில்லை. வல முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை அருட்குறிப்பில் உள்ளது.

அமர்ந்த சிங்கத்தின் மேல் இலலிதாசனத்தில்[15] ஐந்து தலையினராய்க் காட்சிதரும் ஹேரம்பரின் பத்துக் கைகளுள் வல முன் கை தந்தம் ஏந்தியுள்ளது. இட முன் கையில் தலையோடு.[16] பிற வலக்கைகளில் இரண்டாம் கையில் உள்ள கருவியை அடையாளம் காணக்கூடவில்லை. மற்றவற்றில் கீழிருந்து மேலாக அக்கமாலை, உருள்தடி, அங்குசம். இடப் பின் கைகளில் இரண்டாம் கை சிங்கத்தின் தலைமீது உள்ளங்கை மேல் நோக்கிய நிலையில் இருத்தப்பட்டுள்ளது. மூன்றாம், நான்காம் கைகளில் மணியும் அங்குசமும் உள்ளன. ஐந்தாம் கைப்பொருளை அடையாளம் காணக்கூடவில்லை.[17]

கரண்டமகுடம், சரப்பளி, கையணிகள், தண்டை அணிந் துள்ள அவரது வலத்தந்தம் சிதைந்துள்ளது. துளைக்கைகளில் மோதகம். இடப்புறத் தலையின் துளைக்கை தவிர, ஏனையன இடம்புரியாக உள்ளன. ஹேரம்பரைச் சுற்றியும் சிறிய அளவிலான எட்டுப் பிள்ளையார்கள் செதுக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் ஒருவர் மேலும் ஒருவர் கீழும் இருக்க, மூவர் வலப்புறத்தும் மூவர் இடப்புறத்தும் காட்டப்பட்டுள்ளனர்.

### 3. இரண்டாம் கோட்டச் சிற்பங்கள்

இரண்டாம் கோட்டத்தில் இரண்டு கைகளுடன் ஆடவர் ஒருவரும் அவரது வல, இடப்புறங்களில் பக்கத்திற்கு ஒருவ ராகப் பெண்கள் இருவரும் காட்டப்பட்டுள்ளார். முகப்புகள் பெற்ற நெற்றிப்பட்டம் சூழ்ந்த கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், முப்புரிநூல், உதரபந்தம், இடையில் சிம்ம முகக் கச்சு நிறுத்தும் சிற்றாடை, இடைக்கட்டு, குறங்குசெறி, வீரக்கழல், தாள்செறி கள் அணிந்துள்ள ஆடவரின் வலப்பாதம் நேராக அமைய, இடப்பாதம் திரயச்ரத்தில் உள்ளது. வலக்கை சிதைந்துள்ளது.

கருவி ஒன்றைப் பிடித்த மெய்ப்பாட்டில் இடக்கை இருந் திருக்க வாய்ப்புண்டு.

ஆடவரை நோக்கியவாறு கச்சற்ற மார்பகங்களுடன் ஒருக்களித்திருக்கும் இட, வலத்தேவியர் நெற்றிப்பட்டம் சூழ்ந்த கரண்டமகுடம் பெற்றுள்ளனர். மகரகுண்டலங்கள், ஆரம், பட்டாடை, பக்க முடிச்சுகளுடனான இடைக்கட்டு, குறங்கு செறி, தாள்செறிகள் அணிந்துள்ள இத்தேவியருள் மேற்கர் கூடுதல் அணியாக ஸ்வர்ண வைகாக்ஷம் பெற்றுள்ளார். இவரது இரண்டு கைகளும் சிதைந்துள்ளன. சரப்பளி பெற்றுள்ள கிழக்கர் இடக்கையை நெகிழ்கையாக்கியுள்ளார்.

**4. பாறைச்சிற்பங்கள்**

குடைவரையின் வெளிப்புறத்தே பாறைச்சரிவில் மேற்கில் பிள்ளையார், முனிவர்கள் சிற்பங்களும் கிழக்கில் முனிவர், மூவர் முதலிகள், பைரவர் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. தாமரை இருக்கையில் இலலிதாசனத்தில் கரண்டமகுடத்துடன் உள்ள பிள்ளையாரின் முகம், துளைக்கை, முன் கைகள் இவை சிதைந்துள்ளன. சரப்பளியும் கையணிகளும் தண்டையும் பின் கைகளில் அங்குசமும் பாசமும் பெற்றுள்ள இவரின் இடப் புறத்தே, அடுத்தடுத்த நிலையில் இரண்டு முனிவர்கள்[18] கருங்கல் இருக்கையின் மேல் அர்த்தபத்மாசனத்தில் உள்ளனர். இருவ ருக்குமே தாடி, மீசையுடன் வட்டக் கட்டாகச் சடைப்பாரம். முகங்கள் சிதைந்துள்ள இவ்விருவர்தம் வலக்கைகளும் சின் முத்திரையில் அமைய,[19] இடக்கைகளில் சுவடி. பெருவயிற்றராய் உள்ள பெரிய முனிவர் உருத்திராக்க முப்புரிநூல் அணிந்துள்ளார்.

கிழக்கில், கருங்கல் இருக்கையில் சுகாசனத்தில் சிதைந்த ஆண் வடிவம் ஒன்று காணப்படுகிறது. அதன் வலக்கை சிதைந்துள்ளது. இடக்கை தொடை மீதமர, பனையோலைக் குண்டலங்கள், முப்புரிநூல், சரப்பளி அணிந்துள்ள அதன் தோளில் சடைப்புரிகள் படர்ந்துள்ளன. கீழிறக்கியுள்ள வலப் பாதத்தைத் தாங்கத் தனித் தளம் காட்டப்பட்டுள்ளது.[20]

சுந்தரர், சம்பந்தர், அப்பர் ஒருசேர நிற்கும் இரண்டாம் சிற்பத்தொகுதியும் சிதைவுக்காளாகியுள்ளது. வணக்க முத்திரை

யில் சமபாதத்தில் உள்ள சுந்தரர்[21] வலப்புறக் கொண்டையிட்டு உள்ளார். பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, குறங்கு செறி போல உருத்திராக்க அணி, அரும்புச்சரம், கையணிகள், தண்டை அணிந்துள்ள அவரது இடையை யாப்புடனான கச்சு இருத்தும் சிற்றாடையும் பக்க முடிச்சுகள் பெற்ற இடைக் கட்டும் குறங்குசெறியும் அணிசெய்கின்றன.

தாமரைத் தளத்தின்மீது இடப்பாதத்தைத் திரயச்ரத்தில் இருத்தி, வலக்காலை ஊர்த்வஜாநுவாக்கி நிர்வாணியாக நிற்கும் சம்பந்தரின்[22] வலக்கையும் கால்களும் சிதைந்துள்ளன. இடக்கை அர்த்தரேசிதத்தில் அமைய, சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், ஸ்வர்ண வைகாக்ஷம், உருத்திராக்க ஆரம், கண்டிகை, தண்டை அணிந்து புன்னகைத்த முகத்துடன் காட்சிதரும் இவர் இடுப்பில் அரைஞாண். மூவரில் இறுதியாக நிற்கும் அப்பரடிகள் வணக்க முத்திரையில் சமபாதராய் இடுப்பில் சிற்றாடையுடன், மழித்த தலையும் நீள்செவிகளும் மூன்று உருத்திராக்க ஆரங்களும் இடது தோளில் சாத்திய துரட்டியுமாய்க் காட்சி தருகிறார்.

பாறைச்சிற்ப வரிசையில் இறுதியாக நிற்பவர் பைரவர். சமபாதத்தில் நிர்வாணியாக நிற்கும் அவரது இரண்டு கை களும் சிதைக்கப்பட்டுள்ளன. முகப்பில் மண்டையோடு பெற்ற சடைமகுடம், நெற்றிக்கண், முப்புரிநூல் பெற்றுள்ள அவரது வலச்செவியில் மகரகுண்டலம். இடச்செவி சிதைந்துள்ளது. பின்னால் வாயைத் திறந்து உறுமிய நிலையில் நிற்கும் நாயின் முகம் மேற்குப் பார்வையாய் உள்ளது.

**கல்வெட்டு**

குடைவரையின் அர்த்தமண்டப, முகமண்டபக் கிழக்குச் சுவர்களில் வெட்டப்பட்டுள்ள முதலாம் மாறவர்மர் சுந்தர பாண்டியரின் தமிழ்க் கல்வெட்டு 129 வரிகள் பெற்று, முகப்பின் கிழக்கு அரைத்தூணில் முடிகிறது. அர்த்தமண்டபச் சுவரில் 52 வரிகளும் முகமண்டபச் சுவரில் 63 வரிகளும் தூணில் 14 வரிகளும் பெற்றுள்ள இக்கல்வெட்டின் தூண்பகுதி பெரிதும் சிதைந் துள்ளது. அர்த்தமண்டபக் கிழக்குச் சுவரில் காணப்படும் இக்கல்வெட்டின் முதல் பகுதி சோணாடு வழங்கி அருளிய சுந்தரபாண்டியரின் மெய்க்கீர்த்தியாக அமைந்துள்ளது.

திருப்பரங்குன்றத்தின் தென்பாகத்து உட்பக்கத்தில் இராவளர் பிரசன்னதேவர் என்பார் எழுந்தருளுவித்த[23] சுந்தரபாண்டிய ஈசுவரமுடையார் கோயிலுக்கு, மழவராயரின் பரிந்துரையை ஏற்று,[24] இறைவனின் திருப்படிமாற்று உள்ளிட்ட வேண்டும் நிவந்தங்களுக்கும் திருப்பணிக்குமாக, வீரநாராயண குளக்கீழ் அமைந்த புளிங்குன்றூர் ஆன சுந்தரபாண்டியபுரத்து உழவு நிலத்தில், பெரும் பூவும் குறுவையும் விளையும் நிலத்தில் ஆறு மாவும் ஒரு பூ விளையும் நிலத்தில் ஆறு மாவும் ஆக அரை வேலி இரண்டு மா நிலத்தைத் தேவதான இறையிலியாக அறிவித்து, தமது ஏழாம் ஆட்சியாண்டின் 325ம் நாள் மன்னர் சுந்தர பாண்டியர் திருவாய்மொழிந்தருளிய ஆணையாக விளங்கும் இக்கல்வெட்டு, மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது.

முதல் பகுதி மன்னரின் திருவாய்மொழிவையும் அதை உறுதிப்படுத்திய உயர் அலுவலர்களின் கையெழுத்துகளையும் பெற்றுள்ளது. இரண்டாம் பகுதி சுந்தரபாண்டிய ஈசுவரம் உடையார் கோயில் சிவஅந்தணர்களுக்கும் தானத்தாருக்கும் மன்னருடைய ஆணையைத் தெரிவிக்கும் ஓலையாக அதற்குரிய அலுவலர்தம் கையெழுத்துகளுடன் அமைந்துள்ளது. மூன்றாம் பகுதி புரவுவரித் திணைக்களத்தாரால் மன்னரின் உத்தரவு பதிவு செய்யப் பெற்று, வரியிலார் எனும் பெயரில் அமைந்த அலுவலர் களின் கையெழுத்துடன் நடைமுறைபடுத்தப்பட்டமையைத் தெரிவிக்கும் உள்வரி எனும் திணைக்கள அறிவிப்பு ஆவணமாக அமைந்துள்ளது.

இம்மூன்று பகுதிகளாலும் பாண்டியர் ஆட்சியில் ஓர் அரசாணை செயல் வடிவம் பெற்ற பாங்கைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிவதுடன், அந்தக் காலத்து விளங்கிய பல வருவாய்ப் பிரிவுகளின் பெயர்களையும் அரசு அலுவலர்களின் பெயர்களையும் வரியினங்களையும் தெரிந்துகொள்ள முடிகிறது. இவ்வாணையை வழங்கியபோது மதுரை அரண்மனையின் பள்ளியறைக் கூடத்தில் பள்ளிப்பீடம் மழவராயனில் சுந்தர பாண்டியர் எழுந்தருளியிருந்ததாகக் கல்வெட்டுக் கூறுகிறது.

**வருவாய்ப் பிரிவுகள்**

பாண்டிய மண்டலத்தைச் சேர்ந்த மதுரோதய வளநாடும் சோழ மண்டலத்தைச் சேர்ந்த இராஜேந்திர சோழ வளநாடும்

இக்கல்வெட்டில் இடம்பெற்றுள்ளன. வளநாட்டை அடுத்த இரண்டாம் நிலை வருவாய்ப் பிரிவுகளாக மிழலைக் கூற்றம், புறப்பறளை நாடு, திருமல்லி நாடு, அண்ட நாடு, கருங்குடிநாடு, கீழ்வேம்ப நாடு, கீழ்ச்செம்பில் நாடு இவை கிடைக்கின்றன. இந்நாடுகளின் கீழ் அடங்கியனவாகவும் பிற நாடுகளின் கீழ் ஒன்றியனவாகவும் விளங்கும் இருபத்தைந்து ஊர்களின் பெயர் களைப் பின்னொட்டுக் கொண்டு வகைப்படுத்தியபோது, 'ஊர்' என முடியும் பெயர்களாகப் புளிங்குன்றூர், வெட்சியூர், வெட்டனூர், விளத்தூர், ஈசனூர், கீழ்நெட்டூர், சிறுவம்பூர், கொடுமளூர், பெருமணலூர், தடங்கண்ணிச் சிற்றூர், தச்சனூர், புத்தூர் எனும் பன்னிரண்டு பெயர்கள் அமைந்தன.

'குடி' என முடியும் பெயர்களாகக் கரவைஇருக்கை உழக்குடி, மாலங்குடி, புல்லுக்குடி இவை மூன்றும் அமைய, ஆய்க்குடி, அழகியபாண்டிய நல்லூராகவும் அறியப்பட்டது. 'நல்லூர்' என முடியும் பெயராகக் கீர்த்திவிசயாலைய நல்லூர் விளங்க, வெட்சியூரும் விளத்தூரும் முறையே மும்முடிச் சோழ நல்லூர், ஜயங்கொண்ட சோழ நல்லூர் என்றும் அறியப்பட்டன. புளிங்குன்றூர் சுந்தரபாண்டியபுரம் என்ற பெயரையும் ஏற்று இருந்தது. பல்வேறு பின்னொட்டுக்களுடன் முடியும் ஒன்பது ஊர்களாக வெண்காடு, திருக்காரோணம், திருப்பூவணம், பொன்பற்றி, புல்லாணி, நென்மலி, மதுரை, திருப்பரங்குன்றம், திருக்காடு இவை உள்ளன.

### அரசு அலுவலர்கள்

அரச ஆணையாக விளங்கும் இக்கல்வெட்டில் அரசு உயர் அலுவலர், வருவாய்த்துறை அலுவலர் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. வாய்மொழியாக அரசர் இட்ட உத்தரவைக் கேட்டு ஓலையில் எழுதி உறுதிப்படுத்திய அலுவலர்களாக குலைசேகர மாதவராயன், ஸ்ரீவல்லவன் சுந்தரத்தோளுடையானான அதிகை மான், மொண்ணைப்பிரான் அழகப்பெருமாளான நீலகங்கரை யன், மண்டையாழ்வான் கதிராயிரம் உடையானான விசைய ராயன், பொன்னன் உபகாரியான சேதரப் பல்லவரையன், அரையன் உடையானான கேரளராஜன், சேந்தன் உய்யநின்றாடு வானான குருகுலத்தரையன், கிழவன் இராமனான இராஜராஜ

விழுப்பரையன், மந்திரி இராமனான பல்லவராஜன் இவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

இத்திருவாய்மொழிவைக் கோயில் நிருவாகத்துக்கான அரசாணையாக எழுதிக் கையெழுத்திட்டவர்களாக சுந்தரத் தோளன் முத்தனான தென்னவதரையன், திருமுடி சூட்டினான் உத்தம பாண்டிய விழுப்பரையன், மந்திரி இராமனான பல்லவ ராஜன் இவர்களைக் கல்வெட்டு அடையாளப்படுத்துகிறது.

மன்னரின் உத்தரவு புரவுவரித் திணைக்களமான நில வருவாய்த்துறையில் பதிவு செய்யப்பெற்று நடைமுறைக்குக் கொணரப்பட்டமையை உறுதிப்படுத்திய அலுவலர்களாகப் புரவுவரித் திணைக்கள நாயகம் தேவனான விசையகாமன், நுளம்பாதராயன், அருளாளன் ஸ்ரீராமனான சுந்தரபாண்டிய காடுவெட்டி, தொண்டைமான், கேரளராமன், காலிங்கராஜன், காங்கேயராயன், ஏறு திருவுடையான் நாராயணனான ஈழத் தரையன், விராடராஜன், வத்தராஜன், முனையதரையர், சுந்தர பாண்டிய நந்திபன்மன், ஆதிச்சதேவன் ஆளியங்கையனான பார்த்தியதரையன், கரியமால் அழகனான உத்தம விழுப்பரையன், சோமதேவன் அழகிய மணவாளனான வில்லவராயன், பரசு ராமன், தேவர்க்கு தேவன், அழகனான வாணவதரையன் ஆகியோர் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

மன்னரின் ஆணை ஓலையும் அவ்வாணையைப் பதிவு செய்து நடைமுறைப்படுத்தியமைக்கான வரியிலார் கையெழுத் திட்ட உள்வரி எனும் திணைக்கள அறிவிப்பு ஆவணமும் கோயில் நிருவாகத்திடம் ஒப்புவிக்கப்பெற்றன.

**வரிகள்**

கொடையளிக்கப்பட்ட நிலத்தின் மீது கொள்ளப்பட்ட வரிகளாக அந்தராயம், மாக்கலம், வெட்டி பாட்டம், பஞ்சுபீலி, சந்துவிக்கிரகப்பேறு, பாடிகாவல் ஆகியன குறிக்கப்படுகின்றன. நிலம் கோயிலுக்குத் தேவதான இறையிலியாக அளிக்கப்பட்ட தால், அவ்வரியினங்களைக் கோயில் செலுத்தவேண்டியதில்லை. அவற்றுள் மாக்கலம், ஒரு மா நிலத்திற்கு ஒரு கலம் நெல் வரியாகச் செலுத்தப்பட்டதைக் குறிக்கிறது. அந்தராயம் என்பது நிலவரி தவிர்த்த பிற சிறு வரிகளையும் பஞ்சுபீலி, பஞ்சின்மீது

செலுத்தப்பட்ட வரியையும் சுட்டுகின்றன. பாடிகாவல், காவல் செய்வோருக்கு அளிக்கப்பட்ட ஊதியத்திற்காகப் பெறப்பட்ட வரியினமாகும். காராண்மை, பயிரிடும் உரிமையையும் மீயாட்சி நில உரிமையையும் சுட்டி நின்றன.

## அளவைகள், வேளாண்மை

மா, வேலி எனும் நிலம் சார்ந்த அளவுகளும் அக்காலத்தே நிலமளக்கப் பயன்பட்ட மலைக்குடிக்கோல் எனும் நிலஅளவை யின் பெயரும் இக்கல்வெட்டில் இடம்பெற்றுள்ளன. விளைச் சலைக் குறிக்கப் பெரும் பூ, ஒரு பூ, குறுவை எனும் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும் பூ ஓராண்டின் முக்கிய அறுவடைப் போகத்தைக் குறித்தது. ஒரு பூ, ஒருபோக விளைச்சலையும் குறுவை, குறுகிய கால விளைச்சலையும் சுட்டி நின்றன. 'உழவான நிலம்' என்ற கல்வெட்டுச் சொல்லாட்சி ஒவ்வோர் ஊரிலும் தரிசு நிலங்களும் இருந்தமையைத் தெளிவு படுத்துகிறது. மாடக்குளம், நாராயணகுளம் என்பன குளம் சார்ந்த வேளாண்மையைச் சுட்டுவதுடன் அவ்வக் குளங்கள் சார்ந்து வளர்ச்சியுற்ற ஊர்களையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

## குடைவரையின் காலம்

தென்பரங்குன்றம் குடைவரையைப் பற்றி எழுதியிருக்கும் ஆய்வாளர்களுள் வெ. வேதாசலம், எட்டாம் நூற்றாண்டில் முற்பாண்டியர் காலத்தில், அசோகமரத்தின் கீழே அமர்ந்த தீர்த்தங்கரருக்காக எடுக்கப்பட்ட குடைவரைக் கோயிலாக இருந்த அதைக் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில், பரங்குன்றில் சமணம் செல்வாக்கு இழந்த நிலையில்,[25] பிரசன்ன தேவர் எனும் சைவத்துறவி சிவன் கோயிலாக மாற்றியதாகக் கூறுகிறார்.

'அசோகமரத்தின் கீழே, அமர்ந்தநிலையில் இருந்த தீர்த்தங் கரர் பாறைச்சிற்பத்தினை உடைத்துப் பெயர்த்து எடுத்துவிட்டு அவ்விடத்தில் காளையின் முன்பு நிற்கும் அர்த்தநாரீசுவரர் உருவம் பதின்மூன்றாம் நூற்றாண்டில் செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள அர்த்தநாரி சிற்பத்தின் தலைக்கு மேலே பாறையில் தீர்த்தங்கரருக்கு உரிய அசோக விருட்சத்தின் சுருள் சுருளான கிளைகள் எஞ்சிய நிலையில் காணப்படுவதே இதற்குச் சான்று' என்றும் அவர் எழுதியுள்ளார்.[26]

சமணக் கோயில் சைவக் கோயிலாக மாற்றப்பட்டது எனும் வெ. வேதாசலத்தின் கருத்துடன் ஒத்துப்போகும் மா. சந்திர மூர்த்தி, கருவறைத் தெய்வமாக இயக்கி (யக்ஷி) இருந்திருக்க வேண்டும் என்பதுடன், பழைய குடைவரையில் சமணச் சிற்பங்கள் இருந்திருக்க வேண்டும் என்றும் கருதுகிறார். அந்தச் சிற்பங்களை முற்றிலுமாகச் சிதைத்து அந்தப் பகுதியை ஆழப் படுத்திப் புதிய சைவச் சிற்பங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என்பதும் அவர் கருத்தாக உள்ளது.

வெளிச்சுவரில் உள்ள பைவரர் சிற்பத்தைப் பாகுபலியின் திருத்தப்பட்ட வடிவமாகக் கொள்ளும் மா. சந்திரமூர்த்தி, அதற்குச் சான்றாக பைரவருக்கு இரண்டு கைகள் மட்டுமே காட்டப்பட்டிருப்பதையும் அந்தக் கைகளும் 'வெறுமனே கீழே தொங்கும் கைகளாக' அமைந்துவிட்டமையையும் சுட்டுகிறார்.[27] தேவகுஞ்சரியும் பைரவர் சிற்பம் ஒரு சமணத் தீர்த்தங்கரரைப் போல் தோற்றமளிப்பதாகக் கருதுகிறார்.[28]

கட்டமைப்பில் தென்பரங்குன்றம் குடைவரை வடபுறம் உள்ள முதன்மைக் குடைவரையைப் போலவே அமைந்திருப்ப தால், அதன் தோற்றக் காலத்தைக் கி. பி. எட்டாம் நூற்றாண் டாகக் கொள்வதில் தடையில்லை. ஆனால், குடைவரையிலும் அதன் வெளிப்புறத்தேயும் காணப்படும் சிற்பங்கள் அனைத்தும் பிற்பாண்டியர் காலத்தனவாக அமைந்துள்ளன. கட்டமைப் பின் காலத்திற்கும் சிற்பங்களின் காலத்திற்கும் உள்ள இடை வெளியே இக்குடைவரை ஒரு சமயச் சார்பில் இருந்து மற்றொரு சமயச் சார்பிற்கு மாற்றப்பட்டிருக்கலாம் என்று கருதவைத்துள்ளது. இப்படிக் கருதுவார் முன்வைத்திருக்கும் தரவுகளை விரிவான அளவில் ஆராய்வது ஒன்றே இக்கருத்து அடிப்படையற்றது என்பதை வெளிப்படுத்தும் வழியாகும்.

தென்பரங்குன்றம் குடைவரை சமணச் சார்புடைய குடை வரையாக இருந்து சைவக் குடைவரையாக மாற்றப்பட்டது என்ற கருத்தை முன்வைக்கும் மா. சந்திரமூர்த்தி, தேவகுஞ்சரி, வெ. வேதாசலம் இவர்தம் கூற்றுகளை ஒன்றன் பின் ஒன்றாகக் காண்போம்

குடைவரைப் புறச்சுவரின் கிழக்குப் பகுதியில் பைரவர் இரண்டு கைகளுடன் நிற்பதைச் சுட்டி, அது பாகுபலியின்

திருத்தப்பட்ட வடிவம் என்கிறார் மா. சந்திரமூர்த்தி. பாகுபலி இரண்டு கைகளையும் நெகிழ்கைகளாகப் பெற்றமைவார். இங்கோ, பைரவரின் சிதைந்த வலக்கை முழங்கை அளவில் மடிந்திருப்பதைக் காணமுடிகிறது. பாகுபலி மழித்த தலையினர். பைரவர் நெற்றிப்பட்டம் சூழ்ந்த மகுடம் அணிந்துள்ளார். மா. சந்திரமூர்த்தி குறிப்பிடுவது போலப் பாகுபலியே பைரவராகத் திருத்தப்பட்டுள்ளார் என்றால், மழித்த தலையில் மகுடம் வந்தமைக்கும் பாகுபலியின் நெகிழ்ந்த வலக்கை, காக்கும் கையாக மேலெழுந்தமைக்கும் எவ்வகையில் விளக்கம் தரமுடியும்?

'சமணச் சிற்பத்தைச் சைவச் சிற்பமாக மாற்ற முனைந்த வர்கள் ஒன்றை மறந்துவிட்டனர். பைரவர் பொதுவாக 4 கரங்க ளுடன்தான் காணப்படுவார். ஆனால், இங்கு பைரவர் என அழைக்கப்படுபவருக்கோ இரண்டு கரங்கள்தான் உண்டு' என்று வருந்தும் மா. சந்திரமூர்த்தி, குடைவரையின் பின்சுவர்ச் சிற்பத் தொகுதிகளுள் இரண்டாவதிலுள்ள வேலவராகக் கருதப்படும் ஆண் வடிவத்திற்கு இரண்டு கைகள் மட்டுமே காட்டப் பட்டிருப்பதை ஏனோ கருத்தில் கொள்ளவில்லை. இது போல் இரண்டு கைகளுடன் பைரவர் திருமேனிகள் அமையலாம் எனத் திருமந்திரம், மகுடாகமம், காரணாகமம் இவை கூறுவது இங்குக் கவனிக்கத்தக்கது.[29]

மேலும், ஒரு மலைச்சரிவில் ஒரு சிற்பம் மட்டும் செய்யும் பழக்கம் உடையவர்களாகவும் சமணர்கள் அமையாமையை மதுரையில் உள்ள சமணச் சிற்பத்தொகுதிகள் மெய்ப்பிக்கின்றன. பரங்குன்றத்திலேயே வடபுற அடிவாரத்தில் உள்ள பழனி யாண்டவர் பகுதிப் பாறையிலுள்ள தீர்த்தங்கரர் தொகுதிகளும் மலைக்கு மேலே காசிவிசுவநாதர் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள தீர்த்தங்கரர் தொகுதிகளும் இதனை நிறுவவல்லன. அதனால், மா. சந்திரமூர்த்தியும் தேவகுஞ்சரியும் கருதுமாறு தனியராக நிற்கும் பைரவர் திருத்தப்பட்ட வடிவமன்று. அவர் பைரவ ராகவே பிறந்து முகமதிய ஆட்சியின்போது சிதைக்கப்பட்டவர் எனக் கொள்வதே சாலும்.

இனி, குடைவரையின் அர்த்தமண்டபச் சிற்பங்களை நோக்குவோம். 'ஏற்கனவே இங்குச் சமணச் சிற்பங்கள் இருந் திருக்கவேண்டும். அவற்றை முற்றிலுமாகச் சிதைத்துவிட்டு,

அந்தப் பகுதியை ஆழப்படுத்திவிட்டுப் பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் புதிய சைவச் சிற்பங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம்' எனும் மா. சந்திரமூர்த்தியின் கூற்று எத்தனை மேலோட்டமானது என்பதை அறிய, மதுரைப் பகுதியிலுள்ள சமணச் சிற்பங்கள் அனைத்தையும் ஆராய்வது பொருத்தமாகும்.

பரங்குன்றம் மலையிலுள்ள பழனியாண்டவர் கோயில், காசிவிசுவநாதர் கோயில் இவை இரண்டிற்கும் அருகிலுள்ள பாறைகளில் காணப்படும் சமணச் சிற்பங்கள் அனைத்தும் பாறையைச் செதுக்கிச் செய்யப்பட்டுள்ளன அதனால் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ள இடம் சுற்றுப்புறப் பாறைப்பரப்பைவிட நன்கு குழிந்து காணப்படுவது எண்ணத்தக்கது. மதுரையைச் சுற்றியமைந்துள்ள செட்டிப்புடவு, பேச்சிப்பள்ளம், யானை மலை ஆகிய இடங்களிலும் சமணச் சிற்பங்கள் சுற்றுப்புறப் பாறைப் பரப்பிலிருந்து உட்குழிந்த நிலையிலேயே வெட்டப் பட்டுள்ளன. அங்குக் காணப்படும் வட்டெழுத்துக் கல்வெட்டு களின் அடிப்படையில் அவற்றின் காலம் கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டெனத் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.[30]

ஏறத்தாழ எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் குடையப் பட்ட தென்பரங்குன்றம் குடைவரை மண்டபத்தில் சமணச் சிற்பங்கள் வெட்டப்பட்டிருந்தால் அவையும் இதுவரை பார்த்த சமணச் சிற்பங்கள் போலவே சுற்றிலும் உள்ள பாறைச் சுவரினும் குழிந்த நிலையிலேயே வெட்டப்பட்டிருக்க வேண்டும் அப்படிக் குழிந்த நிலையில் வெட்டப்பட்டிருந்த சிற்பங்களைச் மா சந்திரமூர்த்தி கூறுவது போல் முற்றிலும் அழித்துவிட்டுப் புதிய சிற்பங்களை உருவாக்க வேண்டுமானால் அப்பகுதி மேலும் ஆழமாகக் குடையப்பட்டே சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்க முடியும். இத்தகு ஆழப்படுத்தலை மா. சந்திரமூர்த்தியும் ஒப்புக் கொள்கிறார்.

தென்பரங்குன்றக் குடைவரை அர்த்தமண்டபப் பின்சுவரில் தற்போது காணப்படும் இரண்டு கோட்டங்களும் ஆழமான வையே. ஆனால், அந்த ஆழம் அரிட்டாபட்டிக் குடைவரைக் கோட்டங்களைக் காட்டிலும் குறைவானதே. பக்கச்சுவரில் இருந்து முதல் கோட்டத்தின் ஆழம் ஆடவல்லான் உள்ள நடுப் பகுதியில் 50 செ. மீ. அளவும் குடமுழவுக் கலைஞர் அமர்ந்துள்ள

மேற்குப் பகுதியில் அவர் தலையருகே 18 செ. மீ., இடுப்பருகே 12 செ. மீ., முழங்கால் அருகே 2 செ. மீ. அளவுகளும் கிழக்குப் பகுதியில் உமையன்னை நிற்கும் தளப்பகுதியில் 19 செ. மீ. அளவும் கொண்டு அமைந்துள்ளது. அம்மை நிற்கும் தளம் கோட்டக் கீழ் விளிம்பைத் தொட்டு அமைந்துள்ளமையும் கருதத்தக்கது.

இரண்டாம் கோட்டத்தில் வலத்தேவி உள்ள பகுதியில் 20 செ. மீ. அளவாகவும் இடத்தேவிப் பகுதியில் 18 செ. மீ. அளவாகவும் உள்ள ஆழம், நடுப்பகுதியில் 27 செ. மீ. அளவாக உள்ளது. இது பிற குடைவரைக் கோட்டங்களிலும் காணப்படும் மிக இயல்பான அளவேயாகும். ஏற்கனவே இங்குச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தால், அவை இந்த ஆழத்தில்தான் இருந்திருக்கமுடியும். அந்த முதல் நிலைச் சிற்பங்களை முற்றிலுமாய் அழித்துவிட்டுப் புதிய சிற்பங்களை உருவாக்க நினைத்திருந்தால், அப்பணி, கோட்டத்தை இப்போது இருப்பதைப் போல் இருமடங்கோ, மும்மடங்கோ ஆழப்படுத்தியிருக்கும். ஆனால், அத்தகு ஆழத்தில் பின்சுவர்க் கோட்டங்கள் இரண்டுமே இப்போது இல்லை என்பதொன்றே, மா. சந்திரமூர்த்தியின் ஊகத்தை அடிப்படையற்றதாக ஆக்குகின்றது.

மேலும் முதற் கோட்ட மேற்கு விளிம்பருகே குடமுழவுக் கலைஞரும் கிழக்கு விளிம்பருகே உமையன்னையின் திருவடிகள் தாங்கும் தளமும் அமைந்துள்ள பாங்கும் இரண்டாம் கோட்டச் சிற்பங்கள் மூன்றின் திருவடிகளுமே கோட்ட விளிம்பைத் தொட்டவாறு உள்ள அமைப்பும் இங்குக் கருதத் தக்கன. இவை, மா. சந்திரமூர்த்தியின் ஊகங்கள் வெறும் கற்பனைகளே என்பதை மிகத் தெளிவாக நிறுவுதல் காண்க.

இனி, கருவறை இதன் பின்சுவரிலுள்ள அம்மையப்பர் கோட்டத்தின் கீழ் இருக்கும் பெரிய தளம் சிதைக்கப்பட்டுள்ளது. இத்தளம் தென்வடலாக 1.30 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 64 செ. மீ. அகலமும் பெற்றமைந்திருந்தது என்பதை இன்றுள்ள எச்சங்கள் கொண்டு அறியமுடிகிறது. தளத்தின் உயரம் ஏறத்தாழ 53 செ. மீ. இப்போதிருக்கும் அம்மையப்பர் சிற்பத்திற்கு இவ்வளவு பெரிய தளஅமைப்புத் தேவையற்றதுதான் என்றாலும், கருவறைப் பின் சுவரை ஒட்டி அமையும் சிற்பங்களுக்கு மட்டுமல்லாமல் சுவர்ச்

சிற்பங்களுக்கும்கூடப் பெரிய அளவிலான தளஅமைப்புக் காட்டுவது பாண்டியர் பகுதியில் பின்பற்றப்பட்டுள்ளமையை வடபரங்குன்றக் குடைவரையில் உள்ள சிவபெருமான் கருவறை, பிள்ளையார், முருகன் சிற்பங்கள் கொண்டு தெளியலாம்.

கந்தன் குடைவரையிலும் இத்தகு அமைப்பு உள்ளது. யானைமலையிலும் யோக நரசிங்கருக்கு முன் சற்றுப் பெரிய அளவிலான கற்றளம் காட்டப்பட்டுள்ளமையும் இங்கு எண்ணத்தக்கது. எனவே தளத்தின் அளவு மட்டும் கொண்டு குடைவரைக் காலத்தில் அத்தளத்தின்மீது வேறு சிற்பம் இருந்து, பின்னாளில் அழிக்கப்பட்டோ அல்லது மாற்றப்பட்டோ அங்கு அம்மையப்பர் இடம்பெற்றார் என்று கொள்வது பொருந்துவது ஆகாது.

'அசோகமரத்தின் கீழே, அமர்ந்தநிலையில் இருந்த தீர்த்தங் கரர் பாறைச் சிற்பத்தினை உடைத்துப் பெயர்த்தெடுத்துவிட்டு அவ்விடத்தில் காளையின் முன்பு நிற்கும் அர்த்தநாரீசுவரர் உருவம் பதின்மூன்றாம் நூற்றாண்டில் செய்யப்பட்டுள்ளது' எனும் வெ. வேதாசலத்தின் கூற்று எவ்விதத்தானும் பொருந்தி வராமையைத் தெற்கு, வடக்குப் பக்கச் சுவர்களிலிருந்து இக்கோட்டம் பெற்றிருக்கும் 6 செ. மீ., 4 செ. மீ. அளவிலான ஆழமே மெய்ப்பித்துவிடுகிறது. நடுப்பகுதியில்கூட இக்கோட் டத்தின் ஆழம் 18 செ. மீ. அளவே உள்ளது. அம்மையப்பர் நிற்கும் மேற்றளமும் 90 செ. மீ. அகலம், 15 செ. மீ. உயரமே பெற்றுள் ளமை இங்குக் கருதத்தக்கது. வெ. வேதாசலம் கூறுமாறு போலத் தீர்த்தங்கரர் சிற்பமோ, மா. சந்திரமூர்த்தி எழுதுமாறு போல இயக்கி வடிவமோ இக்கோட்டத்தில் இருந்து, அது பின்னாளில் உடைத்துப் பெயர்க்கப்பட்டு அம்மையப்பர் உருவாக்கப்பட் டிருப்பின், பின் சுவரிலிருந்து நல்ல ஆழத்தில்தான் அம்மையப்பர் காட்சிதர முடியும். அப்படி இல்லாமையே, இவ்விரு ஆய்வாளர் தம் கூற்றுகளும் பொருந்தாமையை நன்கு உணர்த்துகிறது.

அம்மையப்பர் தலைக்கு மேல் காட்டப்பட்டிருக்கும் சுருள், சுருளான அலங்கரிப்பை 'அசோக விருட்சத்தின் சுருள், சுருளான கிளைகள்' என்று வெ. வேதாசலம் அடையாளப்படுத்துகிறார். முற்பாண்டியர், முற்சோழர் காலத் தீர்த்தங்கரர் வடிவங்களுக்கு

மேல் காட்டப்பட்டுள்ள சுருள்களுக்கும் இங்குள்ள சுருள் களுக்கும் மிகத் தெளிவான வேறுபாடுகள் உள்ளன. இதே பரங் குன்றத்தில், பழனியாண்டவர் கோயில் அருகிலுள்ள சமணச் சிற்பத்தில் காட்டப்பட்டிருக்கும் சுருள் கிளைகளை ஒருமுறை பார்த்தாலே போதும், அம்மையப்பர் தலைக்கு மேல் காட்டப்பட் டிருக்கும் சுருள்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வடிவமைக்கப் பட்டவை என்பதை விளங்கிக் கொள்ளமுடியும். இந்தச் சுருள் களைக் கொடிக்கருக்கு அமைப்பாகக் கொள்ளவும் இடமுள்ளது.

தென்பரங்குன்றக் குடைவரைக்கும் அதிலுள்ள சிற்பங் களுக்கும் இடையில் காணப்படும் கால வேறுபாடு உறுதி யானது. ஆனால், அது ஒன்றே இக்குடைவரை சமணத்துக்கு உரியதாக இருந்து சைவம் சார்ந்ததாக மாற்றப்பட்டது எனும் கருத்தை முன்வைக்கப் போதுமான சான்றாகாது. உறுதியான சான்றுகள் ஏதுமற்ற நிலையில் ஊகங்களின் அடிப்படையில் ஒரு குடைவரையின் வரலாற்றைத் தீர்மானிப்பது சரியன்று. எனவே, தகுதியான சான்றுகள் கிடைக்கும்வரை கி. பி. எட்டாம் நூற்றாண்டளவில் தொடங்கப்பட்ட இக்குடைவரைப் பணி தவிர்க்க முடியாத ஏதோ ஒரு காரணத்தினால் தடைப்பட்டுப் பின் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் சிற்பங்கள் பெற்று முழுமையுற்றதாகக் கொள்வதே பொருத்தமாக அமையும்.

முகமதிய ஆட்சியின்போது பேரழிவைச் சந்தித்துள்ள இக்கோயிலை, இங்குள்ள கல்வெட்டின் அடிப்படையில், 'சுந்தரபாண்டிய ஈசுவரம்' என்றழைப்பது கூடப் பொருந்துமா என்பதும் கேள்விக்குரியதே. மலையடிக்குறிச்சிக் குடைவரை முகமண்டப வடசுவரில் உள்ள வல்லபரின் கல்வெட்டு, பிணக் கறுக்கும் மகாதேவர் கோயிலின் ஸ்ரீமாகேசுவர கண்காணி செய்வார்களுக்கும் தேவகன்மிகளுக்கும் அரசர் இட்ட ஆணை யாக அமைந்துள்ளது. இக்கல்வெட்டுக் குறிப்பிடும் பிணக்கறுக் கும் மகாதேவர் கோயில் மலையடிக்குறிச்சியிலிருந்து 2 கி. மீ. தொலைவில் தாருகாபுரத்தின் ஒரு பகுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்கோயிலில் இருந்து, பல கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.[31]

அதனால், பரங்குன்றத்துத் தென்பாகத்துக்கு உட்பக்கத்தில் இராவளர் பிரசன்ன தேவர் எழுந்தருளுவித்த சுந்தரபாண்டிய

ஈசுவரம் இக்குடைவரையாக அமையாமல், இங்கு எங்கோ செங்கல் தளியாகவோ, கருங்கல் தளியாகவோ இருந்து அழிந்திருக்கலாம்; அல்லது பெயர் மாறி இப்போதும் இங்கிருக்கலாம். கோயில் இறைவனைச் சுந்தரபாண்டியரின் கல்வெட்டு 'இத்தேவருக்கு' என்றழைப்பதும், இதே பரங்குன்றின் கிழக்குப் பகுதியில் கி. பி. 1250க்கும் கி. பி. 1276க்கும் இடைப்பட்ட கால கட்டத்தில் விக்கிரம பாண்டிய ஈசுவரம் என்ற பெயரில் கீழை மடத் தலைவர் திருச்சிற்றம்பலம் உடையாரால் ஒரு கோயில் எழுப்பப்பட்டதாகப் பரங்குன்றம் கோயில் வளாகக் கல்வெட்டு ஒன்று[32] கூறுவதும் அக்கோயிலில் திருப்படிமாற்று உள்ளிட்ட நிவந்தங்களுக்குத் தேவதான இறையிலியாக நிலம் ஒதுக்கி விக்கிரம பாண்டியர் பிறப்பித்த ஆணை பரங்குன்றம் கோயிலில் இடம்பெற்றுள்ளமையும் இக்கருத்திற்கு வலிமை சேர்ப்பது காண்க. இவ்விக்கிரம பாண்டிய ஈசுவரமும் இன்று காணக் கிடைக்காமை குறிப்பிடத்தக்கது.

குறிப்புகள்:

1. இக்குடைவரையை முதலாய்வு செய்த நாள் 3. 9. 1994. மீளாய்வு செய்த நாள் 24. 4. 2007.
2. இக்குடைவரையைப் பற்றி எழுதியுள்ள சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி இவர்கள், 'இங்குச் சமணப் படுக்கைகளும் தமிழி எழுத்துக் கல்வெட்டுகளும் உள்ளன' என்ச் சுட்டி இருப்பது சரியன்று. மு. கு. நூல், ப. 123. தமிழிக் கல்வெட்டுகளும் படுக்கைகளும் பரங்குன்றின் மற்றொரு பகுதியில் உள்ளன.
3. 'Pillars prevailing square section' என்கிறார் கே. வி. சௌந்தர ராஜன். மு. கு. நூல், ப. 86.
4. 'தாமரைச் சக்கரம்' என்கிறார் செ. போசு. திருப்பரங்குன்றம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1981, ப. 85.
5. பரங்குன்றின் வடக்குக் குடைவரை முகப்பிற்கு முன்னும் இது போலவே செவ்வக நடைப்பகுதி அமையப் பெற்றிருப்பது இங்கு ஒப்பிட்டு ஆராயத்தக்கது.

6. வெ. வேதாசலம், 'முகமண்டபம்' என்று மட்டுமே குறித்துள் ளார். மண்டபம் இரு பிரிவுகளாக அமைந்துள்ளமையைக் குறிக்கவில்லை. மு. கு. நூல், ப. 15.
7. மு. நளினி, இரா. கலைக்கோவன், மெய்யத்து மகாதேவரும் மலைத்தேவரும், பதிப்பிக்கப்படாத கட்டுரை. கோ. வேணி தேவி, இரா. கலைக்கோவன், குன்னத்தூர்க் குடைவரைகள் வரலாறு 6, பக். 60 - 61.
8. மு. நளினி, இரா. கலைக்கோவன், மகேந்திரர் குடைவரைகள், அலமு பதிப்பகம், சென்னை, 2004, பக். 169-192.
9. கோட்டத்தை அணைத்துள்ள அரைத்தூண்களில் இச்சிற்பங் கள் இடம்பெற்றிருப்பதாகக் குறிப்பிடுகிறார் தேவகுஞ்சரி, Madurai Through the Ages, Society for Archaeological, Historical and Epigraphical Research, Chennai, 1979, p. 112.
10. இத்தொகுதியை சுப்ரமண்யரும் அவருடைய தேவியரும் என்று தேவகுஞ்சரியும் செ. போசும் குறிப்பிடுகின்றனர். மு. கு. நூல்கள், பக். 112, 87.
11. 'நான்கு கைகளில் கீழிரு கரங்களும் மேல் வலக்கரமும் உடைந்துவிட்டன' என்று ஓரிடத்திலும், 'உமை பாகத்தில் உள்ள கரங்கள் விடையின் தலைமீது உள்ளன' என்று மற்றோர் இடத்திலும் தமக்குத் தாமே முரணுகிறார் செ. போசு. மு. கு. நூல், ப. 86.
12. 'காதுகளில் அணிகலன்கள் காணப்படவில்லை' என்கிறார் செ. போசு. மு. கு. நூல், ப. 86.
13. 'காளி' என்கிறார் தேவகுஞ்சரி. மு. கு. நூல், ப. 111.
14. 'இரணியன் ஆகம் பிளந்த சிங்கத்துருவன் மிருதங்கம் வாசிக் கிறான்' என்று வாசிப்பவரையும் வாசிக்கப்படும் கருவியையும் பிழையாக அடையாளப்படுத்தியுள்ளார் தி. இராசமாணிக்கம். நெல்லைக் குடைவரைக் கோயில்கள், கழகம், சென்னை, 1980, ப. 75.
15. வலக்காலைத் தொங்கவிட்டிருப்பதாகக் கூறுகிறார் செ. போசு. மு. கு. நூல், ப. 86.
16. இக்கைகள் அபய, வரத முத்திரைகளில் உள்ளதாகப் பிழை படக் குறிப்பிட்டுள்ளார் செ. போசு. மு. கு. நூல், ப. 87.

17. ஹேரம்பரின் கைகளில் மாலை, சம்மட்டி, மோதகம், பழம் இருப்பதாகக் கூறுகிறார் செ. போசு. மு. கு. நூல், ப. 87.

18. இவர்களை வேதவியாசர், பராசரர் என்று தேவகுஞ்சரியும் பிரசன்ன தேவரும் அவர் மாணவரும் என்று செ. போசும் அடையாளப்படுத்தியுள்ளனர். மு. கு. நூல்கள், பக். 110, 85.

19. பிரசன்ன தேவரின் வலக்கை அருளல் நிலையிலும் அவர் மாணவரின் வலக்கை அபய முத்திரையிலும் இருப்பதாகக் கூறுகிறார் செ. போசு. மு. கு. நூல், ப. 88.

20. இச்சிற்பத்தை மாணிக்கவாசகர் என்று செ. போசும், 'Royal Person' என்று தேவகுஞ்சரியும் இனம் கண்டுள்ளனர். மு. கு. நூல்கள், பக். 85, 111.

21. இவரை, 'Royal Donor' ஆகக் காண்கிறார் தேவகுஞ்சரி. மு. கு. நூல், ப. 111.

22. இவர் சம்பந்தர், பாலசுப்ரமணியர், ஸ்கந்தர் இம்மூவரில் ஒருவராகலாம் என்பார் தேவகுஞ்சரி. மு. கு. நூல், ப. 111.

23. 'பிரசன்ன தேவர் என்பவர் வேண்டிக்கொள்ள சுந்தரபாண்டிய ஈசுவரம் உடையார் கோயில் என்ற இக்கோயில் தோற்றுவிக்கப்பட்டது' என்று பக்கம் 85லும், 'இங்கு சுந்தரபாண்டிய ஈசுவரம் உடையாருக்கு கோயில் எடுத்தவன் பாண்டிய மன்னன்' என்று பக்கம் 99லும் செ.போசு குறிப் பிட்டுள்ளார்.

'பிசரசன்ன தேவர் என்ற சைவத் துறவி இக்குடைவரையைச் சிவன் கோயிலாக மாற்றியுள்ளார். முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் பெயரால் "சுந்தரபாண்டிய ஈசுவரமுடையார் கோயில்" என்ற பெயரில் இதனை உருவாக்கியுள்ளார். இதனைத் தெரிவிக்கும் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு குடைவரையின் முகமண்டப கீழ்ப்புறச் சுவரில் பொறிக்கப் பட்டுள்ளது' என்று வெ. வேதாசலம் குறிப்பிட்டுள்ளார். எண் பெருங்குன்றம், சாஸ்தா பப்ளிகேசன்ஸ், மதுரை, 2000, ப.15.

இவ்விரண்டு கூற்றுகளுமே பிழையானவை. கல்வெட்டு மிகத் தெளிவாக, 'இராவளர் பிரசன்ன தேவர் திருப்பரங்குன்றத்துத் தென்பாகத்துக்குட்பக்கத்தில் எழுந்தருளுவித்த சுந்தர பாண்டிய ஈசுவரம் உடையார் கோயில்' என்று மட்டுமே கூறுவது காண்க. SII 4: 372.

24. 'பிரசன்ன தேவர் என்பவரின் வேண்டுகோளின்படி' என்கிறது தி. ஸ்ரீ. ஸ்ரீதர் (பதி.), மதுரை மாவட்டத் தொல்லியல் கையேடு, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை, 2005, ப. 101.

25. கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பரங்குன்றில் சமணம் சற்றேனும் செல்வாக்கு இழக்கவில்லை என்பதற்குப் பரங் குன்றம் கோயில் வளாகத்தில் கிடைக்கும் பிற்பாண்டியர் கல்வெட்டுகளே (ARE 1941 - 42: 253; 1918: 338) சான்றுகளாக அமைகின்றன. இக்காலகட்ட நிலக்கொடை ஆவணங்கள் எல்லைகளாகவோ, கொடையிலிருந்து தவிர்க்கப்பட்ட நிலப் பகுதிகளாகவோ பள்ளிச்சந்தங்களைக் குறிப்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

26. மு. கு. நூல், ப. 15.

27. செ. போசு, மு. கு. நூல், ப. 90.

28. மு. கு. நூல், ப. 111.

29. எஸ். நாராயணசாமி, பைரவர், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1996, பக். 85, 111, 125.

30. வெ. வேதாசலம், மு. கு. நூல், பக். 63, 66, 12.

31. ARE 1915 : 567 - 591.

32. ARE 1941 - 42 : 253.

---

## மழவர்

சங்க இலக்கியங்கள் மழவர்களைப் பற்றி பல அரிய தகவல் களைத் தருகின்றன. அகப்பாடல்கள் இரண்டில் (121, 127) கிடைக்கும் குறிப்புகள் அவர்களைக் கல்வியறிவு அற்றவர் களாகக் காட்டுகின்றன. சுரிந்து வளைந்த தலைமுடியில் வெண்கடம்பின் வெள்ளிய மலர்க்கொத்துகளைச் சூடி, இடப் புறத்தே வில்லைத் தழுவி இருப்பர். வண்டிகளில் இயங்கும் அவர்கள், வழிப்போக்கர்களை வருத்திப் பொருள் பறித்து வாழும் இயல்பினர். மொழி மாறும் நாட்டு எல்லைகளில்தான் பெரும்பாலும் அவர்கள் இயக்கம் இருந்ததாம்.

## 4. மாங்குளம் குடைவரை

மு. நளினி, இரா. கலைக்கோவன்

மதுரை மேலூர் தேசிய நெடுஞ்சாலையில் மதுரையில் இருந்து 17 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கத்தப்பட்டிப் பிரிவில் வடமேற்கு நோக்கிப் பயணித்தால் பூசாரிப்பட்டியை அடுத்து வடக்காகத் திரும்பும் மீனாட்சிபுரம் சாலையை அடையலாம். குறுகலான அச்சாலை மீனாட்சிபுரத்தை ஒட்டித் தெற்கு வடக்காக அமைந்துள்ள ஓவாமலைச் சரிவில் முடிகிறது. கழுகுமலை என்றும் அழைக்கப்படும் இம்மலையில்தான் இயற்கையாய் அமைந்த ஐந்து குகைத்தளங்கள் உள்ளன.[1] கிழக்குப் பார்வையாய் உள்ள இவ்வைந்து குகைத்தளங்களிலும் நீர்வடி விளிம்புகள் வெட்டப்பட்டுள்ளன. ஆனால், நான்கு குகைத்தளங்களில்தான் படுக்கைகள் உள்ளன.

### குகைத்தளங்கள்

முதல் குகைத்தளத்திற்குச் செல்லும் பாதையின் ஓரிடத்தில் சிதைந்த நிலையில் செங்கல் கட்டமைப்பு ஒன்று உள்ளது. அதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் செங்கற்கள் பழங்காலத்தன வாக உள்ளன. குகைத்தளங்கள் சார்ந்த பயன்பாட்டிற்காக அவை அமைக்கப்பட்டிருக்கலாம் என்று வெ. வேதாசலம் கருதுகிறார்.[2]

மலையின் உயரமான பகுதியில் பெரிய அளவில் அமைந் துள்ள முதல் குகைத்தளத்தில் பல படுக்கைகள் உள்ளன. அதன் நீர்வடி விளிம்பிற்குக் கீழே ஒரே வரியில் வெட்டப்பட்டுள்ள 'கணிய் நத்திய் கொடிய்அவன்' எனும் சிறிய பழந்தமிழ்க் கல்வெட்டுக் காணப்படுகிறது.[3] அதன் வடபுறம் சற்றுக் கீழ் இருக்குமாறு ஒரே வரியில் வெட்டப்பட்டுள்ள நீளமான கல்வெட்டு, 'கணிய் நந்தஅஸிரிய்இ குவ்அன்கே தம்மம் இத்தாஅ நெடுஞ்சழியன் பணஅன் கடல்அன் வழுத்திய் கொட்டுபித்தஅ பளிஇய்' என்று படிக்கப்பட்டுள்ளது.[4]

நெடுஞ்செழியனின் அலுவலர் கடலன் வழுதி, கணி நந்த ஸிரிகுவனுக்கு இவ்வுறைவிடத்தை உருவாக்கித் தந்தார் எனப் பொருள் தரும்[5] இக்கல்வெட்டை வெட்டியவராகக் கணிய் நத்தி யின் பெயரை முதலில் உள்ள சிறிய கல்வெட்டுச் சுட்டுகிறது.[6]

இவ்விரு கல்வெட்டுகளுமே கி. மு. இரண்டாம் நூற்றாண்டின வாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.[7]

முதற் குகைத்தளத்தின் வடபுறம் சற்றுக் கீழே அமைந் துள்ள இரண்டாம், மூன்றாம் குகைத்தளங்கள் அடுத்தடுத்து அமைந்துள்ளன. குறைவான படுக்கைகள் வெட்டப்பட்டுள்ள இரண்டாம் குகைத்தளத்தில் கல்வெட்டுகள் ஏதுமில்லை. அதிக அளவிலான படுக்கைள் பெற்றிருக்கும் மூன்றாம் குகைத்தளம் இரண்டு பழந்தமிழ்க் கல்வெட்டுகளை அடுத்தடுத்துப் பெற்றுள் ளது. அவற்றுள் முதற் கல்வெட்டு, 'சந்தரிதன் கொடுபிதோன்' என்றும் இரண்டாம் கல்வெட்டு 'வெள்அறை நிகமதோர் கொடி ஓர்' என்றும் படிக்கப்பட்டுள்ளன.[8] உறைவிடம் அமைத்துத் தந்தவர்களாகச் சந்தரிதனையும் வெள்ளறையைச் சேர்ந்த வணிகக் குழுவினரையும் சுட்டும் இக்கல்வெட்டுகளும் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு உரியனவாகக் கொள்ளப்பட்டுள்ளன.[9]

படுக்கைகள் அற்ற நான்காம் குகைத்தளத்தின் தரை நன்கு தேய்த்து வழவழப்பாக்கப்பட்டுள்ளது. இக்குகைத்தளத்தின் நீர்வடி விளிம்பின் கீழே ஒரே வரியில் வெட்டப்பட்டுள்ள பழந் தமிழ்க் கல்வெட்டு 'கணிஇ நதஸிரிய் குவ(ன்)[10] . . . வெள்அறைய் நிகமது காவிதிஇய் காழிதிக அந்தை அஸுதன் பிணஉ கொடுபி தோன்' எனப் படிக்கப்பட்டுள்ளது.[11] வெள்ளறை நிகமத்தைச் சேர்ந்த காவிதியான முத்துக் கண்காணிப்பாளர் அந்தை அசுதன், கணி நந்தஸிரிகுவனுக்கு உறைவிடம் அமைத்துத் தந்தார் என இதற்குப் பொருள் காணப்பட்டுள்ளது.[12]

முதற் குகைத்தளத்திற்குக் கீழே மலைச் சரிவில் இறங்கிச் சென்றால் சற்றுத் தொலைவில் உள்ள ஐந்தாம் குகைத்தளத்தைக் காணலாம். முப்பத்து மூன்று கற்படுக்கைகளைப் பெற்றுள்ள இந்தக் குகைத்தளமே இங்குள்ள குகைத்தளங்களில் அதிக அளவிலான படுக்கைகள் கொண்டது. இதன் நீர்வடி விளிம் பிற்குக் கீழே ஒரே வரியில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு 'கணிய் நந்தஸிரிய் குஅன் தமம் ஈதா நெடிஞ்சழியன் ஸாலகன் இளஞ்சடிகன் தந்தைய் சடிகன் சேஇய பளிய்' என்று படிக்கப் பட்டுள்ளது.[13] இதன் பொருள் நெடுஞ்செழியனின் சகலை யாகிய இளஞ்சடிகனின் தந்தை சடிகன் கணி நந்தஸிரிகுவனுக் குத் தருமமாக உறைவிடம் அமைத்துத் தந்தார் என்பதாகும்.[14]

இவ்வைந்து குகைத்தளங்களிலிருந்தும் கிடைக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். நீளப் பாய் ஒன்றை விரித்தது போல் நெடுகப் படுத்திருக்கும் மலைத்தொடரும் காடாய் வளர்ந் திருக்கும் மரக்கூட்டங்களும் அவற்றிற்கு இடையில் மறைந்தும் தெரிந்தும் செல்லும் ஒற்றையடிப் பாதைகளும் சிறு வழிகளும் ஆங்காங்கே பளபளக்கும் நீர் நிறைந்த குளங்களும் ஏரிகளும் பச்சைப் பசேல் எனக் கதிர் வளர்த்திருக்கும் வயல்களும் உள்ளம் மயக்கும் அழகைக் கொள்ளைக் கொள்ளையாய் அள்ளித் தருகின்றன. மக்கள் வரத்து இன்மையால் நன்னிலையில் உள்ள இக்குகைத்தளங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும் கல் உடைப்பவர்களிடம் இருந்தும் காப்பாற்றப்படல் வேண்டும்.

குடைவரை

மீனாட்சிபுரத்திற்கு வடமேற்கில் ஒரு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள பாறைமலையான் அம்மன்பட்டி மலை[15] என்றழைக்கப்படும் ஓவாமலைத் தொடர் சார்ந்த சரிவு ஒன்றின் இடைப்பகுதியில் முற்றுப் பெறாத குடைவரை ஒன்று மேற்குப் பார்வையாக அமைக்கப்பட்டுள்ளது. நிலத்திலிருந்து 5. 62 மீ. உயரத்தில் வெட்டப்பட்டுள்ள இக்குடைவரையின் முகப்பிற்கு முன்னுள்ள தரை தென்வடலாக 5. 69 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 75 செ. மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது.

இத்தரையை அடுத்து அமைந்துள்ள முகப்பு, பாறைச் சுவர்களை ஒட்டி இரண்டு நான்முக அரைத்தூண்களும் நடுவில் இரண்டு நான்முக அரைத்தூண்களும் பெற்றுள்ளது.[16] தென்வடலாக 5. 24 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 59 செ. மீ. அகலமும் கொண்டுள்ள இம்முகப்பின் தூண்களுக்கு இடையிலான பாறைப்பகுதிகள் பிளக்கப்படாமையின் அங்கணங்கள் உருப்பெறவில்லை.[17] அதன் காரணமாக இடைத்தூண்கள் இரண்டும் பேரளவினவாக அமைந்தும் அவற்றை முழுத் தூண்களாகக் கொள்ள முடியவில்லை.

முகப்புத் தூண்களின் மேல் அமர்ந்துள்ள போதிகைகள் கனமான தங்கள் விரிகோணக் கைகளால் சிறிய அளவிலான உத்திரம் தாங்குகின்றன. மேலே, கூரையைத் தழுவிய வாஜனம். முகப்பின் கூரை நன்கு சமன்படுத்தப்பட்ட நிலையில் முன்னிழுக்

கப்பட்டுள்ளபோதும் கபோதமாக வடிவம் பெறவில்லை. முகப்பின் பக்கச் சுவர்களில் தென்சுவர் மேலே குறுகியும் கீழ்ப்பட விரிந்தும் அமைய, வடசுவர் மேலே நன்கு விரிந்தும் கீழே சற்றுக் குறுகியும் உள்ளது. முகப்பு, பக்கச் சுவர்கள், தரை, கூரை, தூண்கள் என அனைத்தும் சரியாக அமைந்திருந்தும் அங்கணங்கள்கூடத் திறக்கப்படாத நிலையில் இக்குடைவரைப் பணி கைவிடப்பட்டதற்கான காரணத்தை அறியக்கூடவில்லை.

**குறிப்புகள்**

1. *முதல் ஆய்வு மேற்கொண்ட நாள் 8. 3. 1991. மீளாய்வு செய்த நாள் 6. 10. 2007.*
2. *ஓவாமலைப் பயணத்தின்போது தெரிவிக்கப்பட்ட கருத்து.*
3. I. Mahadevan, Early Tamil Epigraphy, Cre-A, Chennai, 2003, p. *321.*
4. Ibid., p.*315.*
5. Ibid.
6. *தி. ஸ்ரீ. ஸ்ரீதர் (பதி.), தமிழ் - பிராமி கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை, 2006, ப. 17.*
7. *சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி இவர்கள் கி. மு. நான்காம் நூற்றாண்டினவாகக் கொள்கின்றனர். மு. கு. நூல், ப. 153.*
8. I. Mahadevan, op. cit., pp. *322 - 23.*
9. *இவற்றையும் சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி ஆகியோர் கி. மு. நான்காம் நூற்றாண்டினவாகக் கொள்கின்றனர். மு. கு. நூல், ப. 153.*
10. *'குவ'வை அடுத்து 'அன்' இருப்பதாகக் கருதும் வேதாசலம் அவற்றை அடுத்து ஓர் எழுத்து மட்டுமே கண்டறிய முடியாத நிலையில் உள்ளதாகக் கூறுகிறார். நேர்முகம், 6. 10. 2007.*
11. I. Mahadevan, op. cit., p. *319.*
12. Ibid., p.*319. தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, 'கணி நந்த ஸிரிய்குவனுக்கு வெள்ளறை நிகமத்துக் காவிதியான கழிதிக அந்தையின் மகன் அஸுதன் என்பவன் உறைவிடம் அமைத்துக் கொடுத்தான்' என்று பொருள் கொண்டுள்ளது. தமிழ் - பிராமி கல்வெட்டுகள், ப. 19.*
13. I. Mahadevan, op. cit., p. *317.*

14. தமிழ் - பிராமி கல்வெட்டுகள், ப. 18.

15. உள்ளூர்க்காரர்கள் கூறும் பெயர். பொதுவாக மாங்குளம் குடைவரை என்றே அறியப்படுகிறது.

16. சு. இராசவேல், அ. கி. சேஷாத்திரி ஆகியோர், 'தூண்களின் கீழும் மேலும் சதுரமாகவும் நடுப்பகுதி எட்டுப் பட்டைக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளன' என்கின்றனர். மு. கு. நூல், ப. 153.

17. நடு அங்கணத்தில் முழு அளவிலான கல்வெட்டொன்று காணப்படுவதாகக் கே. வி. சௌந்தரராஜன் கூறியிருப்பது சரியன்று. மு. கு. நூல், ப. 98.

---

## வாடையும் வாகையும்

தலைவனைப் பிரிந்திருந்தாள் அந்தத் தலைவி. குளிர்க் காலம். வாடைக்காற்று வருத்தியது. அதனிடம் சினந்தவள், 'தலைவர் விரைந்து வந்திடுவார். அவர் வரின் வாடையே நீ தோற்றோடிப் போவாய்' என்று மொழிந்தாள். எது போல அந்த வாடை தோற்குமாம்? பரணர் அந்த இடத்தில்தான் வரலாறு விளம்புகிறார்.

'சிறப்பாகவும் விரைவாகவும் ஓடக்கூடிய குதிரைப் படை கொண்ட சேனையுடன் விரும்பும் புலத்தில் இறங்கி வெற்றிகளை ஈட்டக்கூடிய கரிகால் பெருவளத்தான் முன் நிற்க ஆற்றாதவராய், வாகைப் பறந்தலை எனும் போர்க்களத்தே தமது வெண்கொற்றக் குடைகளை இழந்து தோற்றோடிய பெருமையற்ற ஒன்பது மன்னர்களைப் போல வாடையே, என்னவர் வந்து என்னுடன் இணைந்தால் நீயும் தொலைந்தோடிப் போவாய்.' - அகம் 125.

# 5. பொதுப்பகுதி

## 1. பெருமைச்சுவடுகள்

### மா. இராசமாணிக்கனார்

*(சிந்துவெளி எழுத்துக்களின் ஆய்வில் பல்லாண்டுகள் மூழ்கித் திளைக்கவிருந்த எனக்கு 13ஆம் வயதிலேயே அதை அறிமுகம் செய்வித்த ஆசான் இராசமாணிக்கனார்.)*

வரலாற்று நாயகரான தமிழ் மூதறிஞர் இராசமாணிக்கனா ருடன் எனக்கேற்பட்ட தொடர்பையும் அக்காலத்தில் நடந்த சில சுவையான நிகழ்ச்சிகளையும் பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

1943ஆம் ஆண்டு எனக்கு வயது 13. திருச்சிராப்பள்ளி புனித வளனார் உயர்நிலைப்பள்ளியில் நாலாவது பாரம் (ஒன்பதாம் வகுப்பு) படித்துக் கொண்டிருந்தேன். பள்ளியாண்டின் இறுதி யில் மாணவர்களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைப் போட்டிகளும் பேச்சுப்போட்டிகளும் நடைபெறும். எதைப் பற்றிப் பேசலாம் என்று என் வரலாற்றுப் பாட ஆசிரியர் ரங்கசாமி அய்யங்காரிடம் யோசனை கேட்டேன்.

அவர், 'மா. இராசமாணிக்கனார் என்பவர் அண்மையில் எழுதி வெளியிட்டுள்ள, 'சிந்துவெளி நாகரிகம்' என்ற நூல் நமது நூலகத்தில் இருக்கிறது. அதில் நமது நாட்டின் பண்டைய வரலாற்றைப் பற்றி பல புதிய விஷயங்கள் அடங்கி யுள்ளன, அந்த நூலிலிருந்து சுருக்கமாக ஒரு பேச்சைத் தயார் செய்துகொள்' என்று எனக்கு அறிவுரை வழங்கினார்.

அந்த நூலிலிருந்து குறிப்புகள் எடுத்து ஒரு சிற்றுரையைத் தயார் செய்து மனப்பாடம் செய்து பேச்சுப் போட்டியில் ஒப்பித்துப் பரிசும் பெற்றேன். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக் குப் பிறகு சிந்துவெளி எழுத்துகளின் ஆய்வில் பல்லாண்டுகள் மூழ்கித் திளைக்கவிருந்த எனக்கு 13ஆம் வயதிலேயே அதை அறிமுகம் செய்வித்த ஆசான் இராசமாணிக்கனார்.

1947 ஜூலை மாதம் நான் சென்னை விவேகானந்தர் கல்லூரியில் பி. எஸ்சி. (வேதியியல்) மாணவனாகச் சேர்ந்தேன். அதற்கு அடுத்த மாதமே இராசமாணிக்கனார் அக்கல்லூரியின்

விரிவுரையாளராகப் பணியில் அமர்ந்தார். ஒரு நாள் அவரை வணங்கி என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு திருச்சிராப் பள்ளியில் அவருடைய நூலைப் படித்துப் பேச்சுப்போட்டியில் பரிசு பெற்ற நிகழ்ச்சியைத் தெரிவித்தேன். 'நீ சமஸ்கிருதத்தை மொழிப் பாடமாக எடுத்துப் படித்தும் தமிழில் இவ்வளவு ஆர்வம் காட்டுவது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது' என்று கூறி எனக்கு ஆசி வழங்கினார்.

பிறகு நான் சட்டக் கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்தேன். அவர் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றச் சென்றுவிட்டார்.

1962 முதல் ஐந்து ஆண்டுகள் நான் சென்னையில் கைத்தறித் துறை இயக்குநராகப் பணியாற்றினேன். வரலாற்றுப் பேராசிரி யர் நீலகண்ட சாஸ்திரியாரின் அறிவுரைப்படி தமிழ்நாட்டுக் குகைக் கல்வெட்டுகளை நேரில் சென்று பார்த்து ஆய்வு நடத்தி வந்தேன். நான் செய்த தவப்பயனாக 1965ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதி கரூரை அடுத்துள்ள புகளூரில் புகழிமலைக் குகைக் கல்வெட்டுகள் சங்க காலச் சேர இரும்பொறை மன்னர் களுடையவை என்றும் கி. பி. 2ம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கண்டுபிடிக்கும் பேறு எனக்குக் கிட்டியது. அடுத்த மாதமே அக்கல்வெட்டுகளைப் பற்றிச் சுருக்கமான ஒரு கட்டுரையை 'ஹிந்து' நாளேட்டில் வெளியிட்டேன்.

1965ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் தேதி மதுரைக்கு அருகில் மாங்குளத்திலுள்ள குகைக் கல்வெட்டுகள் சங்க காலப் பாண்டிய மன்னனாகிய நெடுஞ்செழியனுடையவை என்றும் அவை கி. மு. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கண்டு பிடித்தேன். எனக்குப் பல வரலாற்றாசிரியர்களும் தமிழறிஞர் களும் அறிமுகமானார்கள். அவர்களிடமிருந்து பாராட்டுகள் பெற்றேன்.

அக்காலகட்டத்தில் அ. சுப்பையாபிள்ளை முயற்சியால் சென்னையில் தமிழறிஞர்களின் கூட்டங்கள் மாதந்தோறும் அவரது இல்லத்திலோ, லயோலா கல்லூரியிலோ நடைபெறும் அப்பொழுது இராசமாணிக்கனார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையின் துணைப் பேராசிரியராகப் பணிப் புரிந்து வந்தார். அவரும் அக்கூட்டங்களில் கலந்துகொள்வார்.

என் புதிய கண்டுபிடிப்புகளைப் பற்றி அறிந்துகொண்ட இராசமாணிக்கனார், என்னை வெகுவாகப் பாராட்டி ஆசிகளை வழங்கினார்.

ஆயினும் மௌரிய பிராமி எழுத்துகளிலிருந்து தமிழ் பிராமி எழுத்துகள் உருவாயின என்ற என் கருத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அக்காலத்தில் இன்றுள்ளவை போன்று பல சான்றுகள் கிடைத்திருக்கவில்லை. ஜம்பையில் கிடைத்த அதியன் நெடுமான் அஞ்சியின் கல்வெட்டு, சங்க கால மன்னர்கள் தமிழ் பிராமி எழுத்துகள் பொறித்து வெளியிட்ட நாணயங்கள், தமிழ் பிராமியில் எழுதப்பட்ட நடுகற்கள், எல்லாவற்றிற்கும் மேலாக எங்கு அகழ்ந்தாலும் கிடைக்கும், 'தமிழ் பிராமி' பொறித்த மண்பாண்டச் சில்லுகள் ஆகிய புதிய தரவுகள் மூலம் தமிழ் பிராமியே சங்ககாலத் தமிழ் எழுத்துகள் என ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

இராசமாணிக்கனாரின் கருத்து அன்று அவருடைய காலத்தில் கிடைத்திருந்த தரவுகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. ஆயினும் கருத்து வேறுபாட்டினால் மன வேறுபாடு கொள்ளாத பெருந்தகை அவர். அவர் அப்பொழுது வழங்கிய அறிவுரையை இன்றுவரை பின்பற்றி ஆய்வுகள் நடத்தி வருகிறேன்.

1966 ஏப்ரல் மாதம் மலேசியத் தலைநகரான கோலாலம் பூரில் முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. தமிழகத்தின் தலை சிறந்த தமிழறிஞர்கள் அந்த மாநாட்டுக்கு அழைக்கப் பட்டனர். அவர்களில் இராசமாணிக்கனாரும் ஒருவர். எனக்கு அந்த மாநாட்டில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்பட்டது. இராச மாணிக்கனார் 'சங்க காலத் தமிழர் சமுதாய வாழ்க்கையில் சில பகுதிகள்' என்ற பொருள் பற்றிப் பேருரை நிகழ்த்தினார்.

மாநாட்டில் ஓர் அமர்வில், 'சங்க காலத் தமிழ் பிராமி கல்வெட்டுகள்' என்ற தலைப்பில் என் உரையில் புகளூர் சேரர் கல்வெட்டுகள், மாங்குளம் பாண்டியர் கல்வெட்டுகள் ஆகியவற்றின் விளம்பல் படிகளைத் திரையில் காட்டித் தமிழக வரலாற்றுக்கும் தமிழ் மொழி ஆய்வுக்கும் அவை எவ்வளவு முக்கியமானவை என்று எடுத்துரைத்தேன். அன்றைய அமர்வில்

இராசமாணிக்கனாரும் கலந்துகொண்டு என் உரையைக் கவனமாகக் கேட்டு எனக்கு ஆசிகளை வழங்கினார்.

1966ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8, 9 தேதிகளில் தமிழ் நாடு தொல்லியல்துறை இயக்குநர் இரா. நாகசாமி சென்னையில் ஒரு பெரும் கல்வெட்டுக் கருத்தரங்கை சிறப்பாக நடத்தினார். இராஜாஜி மண்டபத்தின் கீழ்ப்புறத் திண்ணையில் நடந்த இக்கருத்தரங்கில் நீலகண்ட சாஸ்திரியார், கே. கே. பிள்ளை, டி. வி. மகாலிங்கம் போன்ற மூத்த வரலாற்று அறிஞர்களும் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், அ. ச. ஞானசம்பந்தன், மா. இராச மாணிக்கனார் போன்ற மூத்த தமிழறிஞர்களும் இரா. நாகசாமி, கே. வி. ராமன், சம்பகலட்சுமி, சம்பத், எஸ் வி. சண்முகம் முதலிய ஆய்வாளர்களும் பல அரிய கட்டுரைகளை வாசித்தளித்தார்கள்.

இக்கருத்தரங்கில் இராசமாணிக்கனார், 'Our Inscriptions' என்ற தலைப்பில் ஓர் ஆய்வுத்தாளை ஆங்கிலத்தில் வாசித் தளித்தார். அக்கட்டுரையில் அவர் இலக்கியத்திற்கும் கல்வெட்டு களுக்கும் இடையே உள்ள தொடர்புகளைப் பல மேற்கோள் களுடன் விளக்கியுள்ளார்.

நான் கோலாலம்பூரில் ஆறு மாதங்களுக்கு முன்னர் அரங்கேற்றிய அதே கட்டுரையை, 'Corpus of Tamil Brahmi Inscriptions' என்ற தலைப்பில் மீண்டும் வாசித்தேன். 1968ல் இரா. நாகசாமியால் பதிப்பிக்கப்பட்ட 'Seminar on Inscriptions 1966' என்ற தொகுப்பு நூலில் அக்கட்டுரையும் சேர்க்கப்பட்டது. கட்டுரைக்கு அறிஞர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது.

எனக்கு வேலை மாற்றலாகி 1966ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதுதில்லி சென்றுவிட்டேன். அடுத்த சில மாதங்களில் (1967 மே மாதம்) இராசமாணிக்கனார் அமரத்துவம் எய்தினார் என்ற செய்தி கேட்டு மிகவும் துயருற்றேன்.

இராசமாணிக்கனார் தலைசிறந்த அறிஞர் மட்டுமல்ல; சிறந்த பண்பாளர்; நிதானப் போக்குப் படைத்தவர்; தணிந்த குரலில் மென்சொற்களில் அவருடைய பேச்சு இருக்கும். ஆழ்ந்த புலமை இருந்தது; ஆனால் அகந்தையில்லை. மாணவர் களிடம் அவர் காட்டிய பரிவையும் மாணவர்களும் மற்ற ஆசிரியர்களும் அவர்மீது வைத்திருந்த பெருமதிப்பையும் நான்

நேரில் அறிவேன். சமூக சீர்த்திருத்தங்களைப் பற்றிய அவரது கொள்கைகள் தீவிரமானவை; அவற்றைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தார். ஆனால், பிறர்மீது திணிக்க முயலவில்லை. அவரது தமிழறிவும் சீரிய வாழ்வும் இராசமாணிக்கனாருக்கு அழியாப் புகழைத் தேடித் தந்துள்ளன.

**- ஐராவதம் மகாதேவன்**

---

## யாருக்கு யார் பகை?

*மழை நோக்கா வாழ்க்கையர்தான்! என்றாலும் வளமானவர்கள். கைத்தூண்டில் கொணரும் குளமீன்கள் தந்த வளம். அந்த மீன் பிடிப் பெருங்குளத்தில் தாமரைகள் தழைத்திருந்தன. அவற்றின் நீர் மிதக்கும் பேரிலைகள் காற்றலைப்பில் யானைகள் செவியசைக்கு மாறு போல இருபுறத்தும் அசைந்தன. இத்தகு குளம் இலங்கும் ஊரனுடன் என்னை இணைத்தெழுந்த ஊர்ப்பேச்சு அளவிலாதது. ஆனால், என்னுடன் அவன் நட்போ, நீர்விளையாட்டில் துணை கொள்ளும் புணை போன்றது. தேவைக்குக் கொள்ளவும் வேண்டாமெனில் விலக்கவும்!*

*எங்கிருக்கிறான் அவன்? குணில் முழக்கும் முழவிற்கேற்ப ஒளி வளை மகளிர் பழைமையான யாழ் பாடும் அதோ, அந்த வீட்டில், இன்னொருத்தியின் சந்தனம் மணக்கும் தோள்களைத் தழுவிய படி கிடக்கிறான். அவன் இல்லத்தரசியோ, 'என்னுடன் இருக் கிறான்' என்று என்னைப் பகைக்கிறாள்.*

*வெற்றி தரும் வேலும் கணக்கற்ற அம்புகளும் மேகமொத்த கேடயங்களும் கொண்ட பழையனின் காவிரி பாயும் வளம் கொழிக்கும் போர் எனும் ஊர் போல அழகு நிறைந்த என் கை வளைகளை, அவன் நீங்கினான் என வருந்தி, அவனிடம் உரிமை பாராட்டி இன்னமும் நான் உடைக்கவில்லை அதனால் போலும், அவன் என்னுடன்தான் இருப்பதாய்க் கருதி கவலு கிறாள் அவன் மனைவி. ஆனால், நான் அவளுக்குப் பகையல்ல.*

*தம்முடன் சேர்ந்தாரை எல்லாம், அவர்தம் நெற்றி பசலை கொள்ளுமாறு வருத்தி நீங்கி, மீண்டும் அவளிடம் சேர்ந்துறையும் கணவனே அவளுக்குப் பகை - அகம் 186*

## 2. அங்கும் இங்கும்

**1. வானொலி உரை**

*20. 7. 2006ல் சிராப்பள்ளி வானொலி நிலையம் ஒலிபரப்பிய 'பாரதநாட்டின் பண்பாடும் நாகரிகமும் பாதுகாக்கப்படுகிறதா?' எனும் கலந்துரையாடலில் இரா. கலைக்கோவன், பேராசிரியர் சேஷாத்திரி பங்கேற்றனர். பாரதநாட்டின் பண்பாட்டுக் களங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.*

**2. வரலாற்றுப் பேரவை**

*21. 7. 2006 அன்று பிற்பகல் 1. 30 மணியளவில் சிராப்பள்ளி சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி வரலாற்றுப் பேரவையில், 'ஏன் வேண்டும் வரலாறு' என்ற தலைப்பில் இரா. கலைக்கோவன் ஆய்வுரை நிகழ்த்தினார். துறைத்தலைவர் பேராசிரியர் கோ. வேணிதேவி தலைமையேற்றார்.*

**3. பத்மபூஷண் கூ. ரா. சீனிவாசன் அறக்கட்டளைப் பொழிவு**

*டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையமும் சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறையும் இணைந்து 25. 8. 2006 அன்று நிகழ்த்திய பத்மபூஷண் கூ. ரா. சீனிவாசன் அறக்கட்டளைப் பொழிவில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கா. ராசன், 'வரலாற்றுக் கால உருவாக்கம் - சில சிந்தனைகள்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.*

**4. மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழா**

*சென்னை வானொலி நிலையமும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும் இணைந்து நிகழ்த்திய டாக்டர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் சென்னை பாம்குரோவ் உணவக இந்திர பிரஸ்தம் அரங்கில் 8. 9. 2006 அன்று நிகழ்ந்தது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய நிருவாகக் குழு உறுப்பினர் இரா. நல்ல கண்ணு தலைமையேற்க பேராசிரியர்கள் ஒளவை நடராசன், பொன். கோதண்டராமன், இ. சுந்தரமூர்த்தி, இரா. கலைக்கோவன், மா. ரா. அரசு இவர்கள் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுரைகள்*

வழங்கினர். சென்னை வானொலி நிலைய இயக்குநர் கி. சீனி வாசராகவன் வரவேற்புரை நிகழ்த்தப் பழ. அதியமான் தொகுப்புரை வழங்கினார்.

### 5. தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறை

'தென்னிந்திய வரலாறு - அண்மைக் காலக் கண்டுபிடிப்புகளும் அவற்றின் தாக்கமும்' என்ற தலைப்பில் 2006 செப்டம்பர்த் திங்கள் 22, 23 ஆகிய நாட்களில் நிகழ்ந்த கருத்தரங்கில், தமிழ்நாடு, கருநாடக ஆய்வறிஞர்கள் பங்கேற்றனர். பேராசிரியர் எ. சுப்பராயலு தலைமையில் அமைந்த முதல் நாள் அமர்வில் 'Valanchuli - Interesting Observations' என்ற தலைப்பில் இரா. கலைக்கோவன் கட்டுரையளிக்க, தமிழ்நாட்டுக் குடைவரைகள் ஓர் ஒப்பாய்வு என்ற தலைப்பில் மு. நளினி கட்டுரை வழங்கினார்.

### 6. மணிவளன் அடிகளார் அறக்கட்டளைப் பொழிவு

7. 12. 2006 காலை 11. 30 மணியளவில் சிராப்பள்ளித் தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் பார்பியர் மன்றில் நிகழ்ந்த அருள்திரு மணிவளன் அடிகளார் அறக்கட்டளைப் பொழிவில், 'காலந்தோறும் கல்வெட்டுத் தமிழ் நடை' என்ற தலைப்பில் இரா. கலைக்கோவன் உரை நிகழ்த்தினார். துணை முதல்வர் பேராசிரியர் கு. ஆரோக்கியதாசு தலைமையேற்றார்.

### 7. மா. இராசமாணிக்கனார் நூல் வெளியீடு

5. 1. 2007 அன்று மெரினா வளாகத்திலுள்ள பவழவிழாக் கலையரங்கில் சென்னைப் பல்கலைக்கழகம் நிகழ்த்திய பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு நிறைவுக் கருத்தரங்கில் இரா. கலைக்கோவன் எழுதி, இலக்கியச் சிற்பிகள் வரிசையில் சாகித்ய அகாதெமி வெளியிட்ட, 'மா. இராசமாணிக்கார்' என்னும் நூலை இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி மத்தியக் குழு உறுப்பினர் இரா. நல்லகண்ணு வெளியிட்டார். பல்கலையின் தமிழ்மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் வி. செயதேவன் தலைமையேற்ற இந்த நிகழ்ச்சியில் பேராசிரியர் ஔவை நடராசன் தொடக்கவுரை நிகழ்த்தினார். தொடர்ந்து நிகழ்ந்த கருத்தரங்கில் பேராசிரியர்கள் இரா. குமாரவேலன்,

மு. சுதந்திரமுத்து, இரா. கலைக்கோவன், மா. ரா. அரசு, வீ. அரசு, சி. மகேந்திரன், இரா. இளவரசு, மே. து. இராசுகுமார் ஆகியோர் இராசமாணிக்கனாரின் இலக்கிய, சமய, சமுதாய, வரலாற்றுப் பங்களிப்புகள் பற்றி ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார்கள்.

**8. முகமது சதக் கல்வியியல் கல்லூரிப் பயிலரங்கம்**

6. 1. 2007 அன்று படூர் முகமது சதக் கல்வியியல் கல்லூரியில் நிகழ்ந்த பயிலரங்கில் பங்கேற்ற இரா. கலைக் கோவன், 'கோயில்கள் வரலாற்றுக் களங்கள்' என்னும் தலைப்பில் காட்சியுரை நிகழ்த்தினார். கலந்துரையாடலில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். பேராசிரியர் முனைவர் அர. அகிலா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

**9. தொலைப்பேசிக் கலந்துரை**

18. 1. 2007 அன்று சிராப்பள்ளி வானொலி நிலையம் நிகழ்த்திய, 'வரலாற்று வெளிச்சத்திற்கு வருவோம்' என்ற தொலைப்பேசிக் கலந்துரையில் வரலாறு பற்றிய பொது மக்களின் கேள்விகளுக்கு வானொலி வழி இரா. கலைக்கோவன் மறுமொழியளித்து உரையாற்றினார்.

**10. வரலாற்றுப் பேரவை**

சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுப் பேரவையின் சார்பில் 22. 1. 2007 காலை நிகழ்ந்த இராசமாணிக்கார் நூற் றாண்டு விழாவில் பங்கேற்ற சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் மா. ரா. அரசு, 'இளைஞர்களின் இளவேனில்' என்ற தலைப்பில் இராசமாணிக்கனாரின் இளை ஞர் நலம் நோக்கிய படைப்புகளையும் பணிகளையும் விரித்துரைத்தார்.

**11. கோயமுத்தூர் வானொலிக் கலந்துரை**

4. 2. 2007 அன்று இரவு எட்டு மணிக்கு ஒலிபரப்பான தமிழறிஞர் மா. இராசமாணிக்கனார் பற்றிய கலந்துரையில் பேராசிரியர்கள் மா. ரா. அரசு, சிற்பி. பாலசுப்பிரமணியன், இரா. கலைக்கோவன் இவர்கள் பங்கேற்றனர். இராசமாணிக்க னாரின் பல்துறைப் பங்களிப்புகள் பற்றிய இக்கலந்துரை அரைமணி நேரம் ஒலிபரப்பானது.

**12. அமரர் மரு. அர. கணேசன் கலைவிருது**

இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளிக் கிளையில் 4. 2. 2007அன்று மாலை ஆறு மணியளவில் நிகழ்ந்த பொங்கல் விழாவில் இரா. கலைக்கோவனுக்கு அமரர் மரு. அர. கணேசன் கலைவிருதை வழங்கிச் சிறப்பித்தார் மன்றத் தலைவர் மரு. செ. ஞானதிலகன். இரா. கலைக்கோவனின் சமுதாய, கலைப் பணிகளை மரு. சு. பழனியாண்டி விளக்கியுரைத்துப் பாராட்டினார். பேராசிரியர் சோ. சத்தியசீலன் வாழ்த்திப் பேசினார். சிராப்பள்ளி முத்தமிழ்க் கலை மன்றத்தின் சார்பில் மரு. சி. கேசவ ராஜ், இரா கலைக்கோவனின் பங்களிப்பைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். கோயில்பட்டித் திருவள்ளுவர் மன்ற நிறுவனர் பேராசிரியர் முனைவர் அ. சங்கர வள்ளி நாயகத்திற்கு மருத்துவர் சு. பழனியாண்டி அறக்கட்டளையின் சார்பில் 2007ம் ஆண்டிற்கான சிறந்த தமிழறிஞர் விருது வழங்கப்பட்டது.

**13. கல்வெட்டறிஞர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழா**

பூண்டி அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி, 5. 2. 2007 அன்று கல்வெட்டறிஞர் மா. இராசமாணிக்கனாரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் விதமாக பல்கலைக்கழக அளவிலான கல்வெட்டுப் பயிற்சிப் பட்டறை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. விழாவில் இரா. கலைக் கோவன் சிறப்புரையாற்றி மாணவர்களுக்கு கல்வெட்டுப் பயிற்சியின் இன்றியமையாமையை அறிவுறுத்தினார். பேராசிரியர் முனைவர் மு. நளினி பழந்தமிழ்க் கல்வெட்டுகள் பற்றி உரை நிகழ்த்தினார். பேராசிரியர் முனைவர் சி. கே. சிவப்பிரகாசம் பயிற்சிப் பட்டறைத் தொடக்கவுரை நிகழ்த்தினார். நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பட்டறையில் பங்கேற்றனர்.

**14. தமிழறிஞர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழா**

12. 2. 2007 அன்று சிராப்பள்ளித் தூய வளனார் கல்லூரித் தமிழாய்வுத் துறையும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையமும் இணைந்து நிகழ்த்திய தமிழறிஞர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழாவில் அறிஞர் இரா. இளங்குமரன் மையக்கருத்துரை நிகழ்த்தினார். பேராசிரிய

முனைவர்கள் அந்தோனி குருசு, மா. ரா. அரசு, மே. து. இராசு குமார், ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்த, பேராசிரியர் கோ. சத்திய சீலன் நிறைவுரை வழங்கினார்.

**15. மன்னர் கல்லூரி வரலாற்று மன்றம்**

14. 2. 2007 அன்று மதியம் 2. 30 மணியளவில் புதுக் கோட்டை மாட்சிமை தாங்கிய மன்னர் கல்லூரியில் நிகழ்ந்த முதுகலை வரலாற்று மன்றச் சிறப்புக் கூட்டத்தில் பேராசிரியர் வெ. குப்புசாமி தலைமையில் பேராசிரியர் அ. வெ. பெருமாள் முன்னிலையில் இரா. கலைக்கோவன் 'வரலாற்று அறிஞர் இராசமாணிக்கனார்' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் சா. விசுவநாதன் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

**16. பன்னாட்டுக் கருத்தரங்கம்**

15, 16 2. 2007 இருநாட்களும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் தமிழகமும் சிந்துவெளிப் பண்பாடும் தொடர்பான பன்னாட்டுக் கருத்தரங்கம் நிகழ்ந்தது. பல அறிஞர்கள் பங்கேற் றுக் கருத்துரைகள் வழங்கினர்.

**17. சாகித்ய அகாதெமி**

சாகித்ய அகாதெமியும் சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி யின் வரலாற்றுத் துறையும் இணைந்து 9. 3. 2007 அன்று நிகழ்த்திய தமிழறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழா உரையரங்கிற்கு மதுரைக் காமராசர் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் இரா. மோகன் தலைமையேற்றார். சாகித்ய அகாதெமியின் பொறுப்பு அலுவலர் அ. சு. இளங்கோவன் வரவேற்புரை நிகழ்த்த, இரா. கலைக் கோவன் உரையாளர்களை அறிமுகம் செய்வித்தார். முதல்வர் சே. கீதா வாழ்த்துரை வழங்க, மா. இராசமாணிக்கனார் வாழ்க்கை வரலாற்று நூலை தவத்திரு பொன்னம்பல அடிகளார் வெளி யிட்டார். முதற்படியை கல்லூரித் தாளாளர் திரு. ரா. பஞ்சாப கேசன் பெற்றுக்கொண்டார். முதுமுனைவர் ம. சா. அறிவுடை நம்பி, முனைவர் மா. ரா. அரசு இருவரும் இராசமாணிக்கனாரின் ஆய்வுத் தகைமை குறித்து உரையாற்றினார். பேராசிரியர் லோ மணிமேகலை நிகழ்ச்சியை ஒருங்கிணைக்க, முனைவர்

*சீ. சீதா நன்றி கூறினார். தலைவர் முனைவர் கோ. வேணிதேவி விருந்தினர்களைச் சிறப்பித்தார்.*

---

## வருந்துகிறோம்

### வீ. வீராசாமி

*வரலாறு ஆய்விதழின் வாழ்நாள் உறுப்பினரும், ஓய்வு பெற்ற ஆசிரியருமான திரு. வீ. வீராசாமி 25. 8. 2006 அன்று அமரரானார். வரலாறு இதழைத் தொடங்கிய காலத்திலிருந்து உறுப்பினராக உள்ள இவர், டாக்டர் மா. இராசமாணிக்க னாரிடம் தமிழ் பயின்ற மாணவர்களுள் ஒருவர். அருப்புக் கோட்டையில் நெடுங்காலம் பணியாற்றிய பிறகு, ஓய்வுக் காலத்தில் சென்னை மாம்பலத்தில் உள்ள தம் இல்லத்தில் பயனுறுவிதமாக வாழ்ந்துகொண்டிருந்த வீ. வீராசாமிக்கு இரண்டு புதல்வர்களும் ஒரு புதல்வியும் உள்ளனர். மூத்தவர் பாரியும் மகள் மணிமேகலையும் அமெரிக்காவில் பணியாற்று கின்றனர். இளையவர் புகழேந்தி கல்பாக்கத்தில் மக்கள் மருத்துவராக விளங்குகிறார்.*

### வி. நடராஜன்

*பூம்புகார் விற்பனை நிறுவத்தின் உயர் அலுவலராய்ப் பணியாற்றிய திரு. வி. நடராசன் வரலாறு ஆய்விதழின் வாழ்நாள் உறுப்பினராவார். வரலாற்றில் உண்மையான ஈடுபாடும் தணியாத ஆர்வமும் கொண்டவராய்த் திகழ்ந்த இப்பெருந்தகை ஆய்வு மையத்திற்குப் பல்லாற்றானும் உதவ விழைந்தவர்களுள் ஒருவர். பூம்புகார் விற்பனை நிலையத்தில் இருந்த பல்வேறு செப்புத்திருமேனிகளைப் பற்றிக் கட்டுரைக்கத் துணைநின்றவர். அக்கட்டுரைகளைப் பல்வேறு தளங்களுக்கும் கொண்டு சென்றவர். தமிழ்நாட்டு வரலாற்றை அறிவியல் பின்புலத்துடன் அணுகவேண்டும் என்ற கொள்கையரான இவர் 13. 6. 2006 அன்று சிராப்பள்ளியில் அமரரானார்.*

## 3. அன்புள்ள உங்களுக்கு

1. 'வரலாற்றின் வரலாறு' படித்து மகிழ்ந்தேன். மூத்த தமிழறிஞர் மா. இராசமாணிக்கனாருக்கும் எனக்கும் இடையில் நிலவிய தொடர்புகள் நினைவிற்கு வந்தன. அவருடைய ஆசிகளைப் பெற்றிருக்கிறேன். மலேசிய உலகத் தமிழ் மாநாட்டில் அவருடன் இணைந்து பங்கேற்றிருக்கிறேன். ஆழப் பயின்றவர்; பண்பாளர். அவரை நினைவூட்டிய உங்கள் நூல் அருமையாக அமைந்திருக்கிறது. பாராட்டுக்கள்.

ஐ. மகாதேவன்,
சென்னை.

பல்லவர் கட்டடக்கலையும் சிற்பமும் வித்தியாசமான கட்டுரை. எளிமையாக அமைந்துள்ள நடையும் தேர்ந்தெடுத்த சொற்களால் ஆக்கப்பட்டிருக்கும் உரையும் உள்ளம் கவர்ந்து நிறைந்தன. எவ்வளவு தரவுகள்! சமீபத்தில் இப்படியொரு கட்டுரை, தெளிவான பார்வையுடன், தீர்க்கமான முடிவுகளுடன் படித்ததில்லை. 'எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்' பகுதியில் கூறியிருக்குமாறு, இக்கட்டுரையின் உட்பிரிவுகளை மேம்படுத்திக் கட்டுரைகள் படைக்க உங்களுக்கு நீண்ட ஆயுளைக் கடவுள் வழங்கட்டும். 'சொக்கம்பட்டிக் குடைவரை' பார்த்ததில்லை. திருமலைப்புரம், மலையடிக்குறிச்சிப் பகுதியில் தான் உள்ளதா?

சி. சுந்தரலிங்கம்
சென்னை

3. சங்க இலக்கியச் செய்திகள் சாரமானவை. 'நாளைக்கு உணவாகும் அல்லவா' படித்தபோது கண்களில் நீர் தளும்பியது. எவ்வளவு துன்பமான வாழ்க்கை. எப்படியெல்லாம் புலவர் பெருமக்கள் இத்தகு உண்மைகளைத் தங்கள் பாடல்களில் சேர்த்து வரலாறாக்கியுள்ளார்கள் என்பதைக் காணும்போது வியப்புதான் வருகிறது. 'அவள் கூந்தல்' தகவல் களஞ்சியம். 'கப்பலைத் தாக்கும் இறால், இறாவொத்த பிண்டன், பிண்டனை வென்ற நன்னன், நன்னன் மலை மயில், அந்த மயில் தோகை ஒத்த கூந்தல் இவை போதொவென்று தித்தனைப் பற்றியும் தகவல்' என்ற உங்கள் தொகுப்பும் முடிப்பும் பரணரை

உச்சிமேல் புலவராய்க் கொண்டாடச் செய்துள்ளது. நீங்கள் ஏன் சங்க இலக்கியம் காட்டும் சமூகம் பற்றி எழுதக்கூடாது? எனக்குத் தெரிந்தவரை சங்க இலக்கியச் சமூகம் பற்றிச் சார்புடைய நூல்களே வெளிவந்துள்ளன. உண்மைகளை உண்மைகளாக முன்னிலைப்படுத்தும் முயற்சிகள் தமிழ் இலக்கிய ஆய்வுகளில் குறைவே உங்கள் பார்வையில் சார்பில்லாமல் இருப்பது பெரிய பலம். அதனால்தான், தமிழுக்கு வரவாய் அமையுமாறு சங்க இலக்கியச் சமூகம் பற்றி எழுதிட வேண்டியுள்ளேன். தொடர்ந்து வரலாறு படித்து வரும் எனக்குக் கிடைத்துள்ள சங்கச் செய்திகள், வேறெந்த நூலிலும் பெறமுடிந்ததில்லை அரிக்கோற் பறையும் ஆடுமகளும் காலத்தொடர்போடு சிற்பங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ள தன்மையையும் நினைத்தே என் எண்ணத்தை முன்வைத்துள்ளேன்.

'பல்லவர் கட்டடக்கலையும் சிற்பமும்' ஒரு நூலாக வரவேண்டும். ரியா, லாங்ஹர்ஸ்ட் நூல்களை நம்பி எழுதப் படும் கட்டுரைகளே தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. உங்கள் கட்டுரை நல்ல விலகலாய், விவரமான தரவுகளுடன் புதிய உண்மைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் விரித்து எழுதப்பட்டால் நல்லது என்று நீங்களே சொல்லி யிருக்கிறீர்கள். பேராசிரியர்கள் அகிலா, நளினி துணையோடு இந்தப் பணியை நீங்கள் செய்துமுடிக்க வேண்டும். இது தொடர்பாக என்னைப் போன்றோர் எந்த விதமாகவும் ஒத்துழைக்கக் காத்திருக்கிறோம்.

முத்து. இராமதாசு,
மயிலாடுதுறை

4. 'வரலாற்றின் வரலாறு' அற்புதமாக எழுதப்பட்டுள்ளது. பல்வேறு தளங்களில் அமைந்த பேராசிரியர் இராசமாணிக்க னாரின் பங்களிப்புகள் விரிவான அளவில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. தமிழ்நடையும் செய்திகள் சொல்லப்பட்டிருக்கும் முறையும் பாராட்டத்தக்கன. வாழ்க்கை வரலாற்று நூல்களுள் இது ஒரு மகுடம்.

இரா. மோகன்,
மதுரை

5. அப்பாவைப் பற்றிய அருமையான நூல். ஒவ்வோர் இயலும் உணர்ந்து எழுதப்பட்டுள்ளது. அப்பாவின் பன்முக ஆற்றலை இதனினும் நன்றாய் யாராலும் வெளிப்படுத்த முடியாது. 'மாணவர் தோழர்', 'சிந்தனையாளர்' என்னும் இரண்டு தலைப்புகளும் அவர் உள்ளத்தையும் கொள்கைகளை யும் மிகச் சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளன. இந்த நூலை எழுதிய உனக்கு உளம் நிறைந்த பாராட்டுகள். அப்பாவைச் சரியான நேரத்தில் மிகச் சரியாக நினைவூட்டி வடிவம் தந்திருக் கிறாய். அதிகம் அறியப்படாத அவருடைய பண்புநலன்களும் பழகும் பாங்கியலும் வளர்வோருக்கு வழிகாட்டும்.

மா. ரா. தமிழரசி

சென்னை

6. மா. இராசமாணிக்கனாரைத் திருத்தவத்துறை வந்த போதெல்லாம் சந்தித்து உடன் இருந்திருக்கிறேன். அப்போது நான் மாணவன். அவருடைய தேவைகளை கவனித்துக் கொள்ளும் பொறுப்பும் பெற்றிருக்கிறேன். அன்பான பேராசிரி யர். 'வரலாற்றின் வரலாறு' அந்த இனியவரின் சரியான படப்பிடிப்பு வாய்ப்புக் கிடைக்கும் இடமெல்லாம் அந்தப் பெருந்தகையின் புகழ் பரப்பி மகிழ்கிறேன்.

தியாகராசன்

இலால்குடி

7. ஒரு தந்தைக்கு மகனாற்றும் உதவியாக அமைந்து விட்டது. முழுவதும் படித்து மகிழ்ந்தேன். தந்தையை மகன் நிலையிலிருந்து பார்க்காமல், ஆய்வாளராகவே நின்று பார்த்திருக்கிறீர்கள். அவருடைய சிந்தனை வளமும் இளைஞர் களைப் போற்றிய பாங்கும் பெரிதும் பாராட்டற்குரியன. அருமையான நூலைப் படைத்துத் தந்திருக்கும் உங்களுக்கும் உங்கள் ஆய்வு மையத்திற்கும் வாழ்த்துக்கள்.

சிவகுமார்

சென்னை.

## 4. பத்மபூஷண் கூ. ரா. சீனிவாசன் நினைவு அறக்கட்டளைப் பொழிவு – 6

## வரலாற்றுக்கால உருவாக்கம் – சில சிந்தனைகள்

கா. ராஜன்

*இந்தியாவின் பல்வேறு வகைப்பட்ட தட்பவெப்ப நிலை, இயற்கைச் சூழல், கனிம வளம் இவற்றின் காரணமாக இந்தியா வின் அனைத்துப் பகுதிகளும் ஒரே வகையான பண்பாட்டு வளர்ச்சியைக் கொண்டு விளங்கின என்று கூறஇயலாது. ஆகவே, இந்தியாவில் வரலாற்றின் தொடக்கம் பல நிலைகளில் கால முரண்பாட்டுடன் காணப்படுகிறது. இருப்பினும், அவற்றை ஒரு காலவரையறைக்குள் கொணரும் முயற்சிகள் நடந்த வண்ணம் இருக்கின்றன.*

*பொதுவாக ஒரு நாட்டின் வரலாறு வரிவடிவப் பயன் பாடு வந்தவுடன் தொடங்குவதாகக் கருதப்படுகிறது. ஆயினும், ஒரு சமூகத்தில் வரிவடிவப் பயன்பாடு நடைமுறைக்கு வந்து விட்டபோதும் அவ்வரிவடிவம் அனைவராலும் படித்துணரப் படுகின்றபோது மட்டுமே அது வரலாற்று வரன்முறையில் வருகிறது. எனவே, இந்திய வரலாறு பிராமி வரிவடிவத்துடன் தொடங்குகிறது எனலாம். பிராமி வரிவடிவங்களைப் போன்று பிராமிக்கு முந்தைய வரிவடிவமான குறியீடுகள் படித்துரணப் படாமையால் இந்திய வரலாற்றின் தொடக்கம், குறிப்பாகத் தமிழக வரலாற்றின் தொடக்கத்தைப் பல ஆண்டுகள் முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போயிற்று. குறியீடுகள் படித் துணரப்படும் பொழுது இந்திய வரலாறு பல நூற்றாண்டுகள் பின்னோக்கித் தள்ளப்படலாம்.*

*குறியீடுகள் படித்துணரப்படாமையால் தமிழக வரலாறு பாண்டியன் நெடுஞ்செழியனின் மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டுடன் தொடங்குவதாகக் கருதப்படுகிறது. கல்வெட்டு களாகப் பாறைகளில், பானை ஓடுகளில், காசுகளில், முத்திரை களில் கிடைக்கின்ற தமிழ்-பிராமி வரிவடிவங்கள் மண்ணடுக் காய்வு, வரிவடிவம் இவற்றின் அடிப்படையில் காலவரையறை செய்யப்பட்டுள்ளன. தமிழ்-பிராமி வரிவடிவத்தின் தோற்றமும்*

இதைத் தாங்கி நிற்கின்ற சான்றுகள் அளிக்கின்ற தரவுகளும் தமிழக வரலாற்றை மீள் உருவாக்கம் செய்ய முக்கியக் காரணிகளாக விளங்குகின்றன.

காலத்தால் முந்தியதாகக் கருதப்படும் மாங்குளம் கல்வெட்டிலேயே அரசு உருவாகிவிட்டதையும் வணிகம் பெருகிப் பெருவழிகள் தோன்றிவிட்டதையும் சமணம் தமிழகத்தில் கால் ஊன்றிவிட்டதையும் குலமரபுகள் அல்லது இனக்குழுக்கள் தோன்றி அவற்றில் சில முதன்மை பெற்றுவிட்டதையும் உயர்ந்த இலக்கிய வளத்தை அடைந்துவிட்டதையும் காண முடிகிறது. இத்தகைய உயர்நிலையை எந்தவொரு சமூகமும் ஒரே நாளில் அடைந்திருக்க முடியாது.

இக்காலக்கட்டத்திற்கு முன்பு வாழ்ந்த மக்களின் பன்முக வளர்ச்சியின் காரணமாகவே இத்தகையதொரு வளர்ச்சி நிலை சாத்தியம் என்பதால் தமிழகத்தின் வரலாறு அல்லது பண்பாடு தமிழ்-பிராமி வரிவடிவம் பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பாகவே முதிர்நிலையை அடைந்திருக்கவேண்டும் என்று கருதலாம். தமிழக வரலாற்றின் உருவாக்கத்திற்கு வித்திட்டவர்கள் இரும்புக் காலப் பண்பாட்டில் வாழ்ந்த மக்கள் என்றால் அது மிகையாகாது. இரும்புக் காலப் பண்பாடு பெருங்கற்படைக் காலப் பண்பாடு எனவும் அழைக்கப்படுகிறது. இரும்புக் காலப் பண்பாட்டை உணர்ந்து கொள்வது தமிழக வரலாற்றுக் காலத்தை புரிந்துகொள்ளப் பெரிதும் உதவும்.

இந்திய வரலாற்றாய்வில் குறிப்பாகத் தென்னிந்திய வரலாற்றாய்வில் பெருங்கற்காலப் பண்பாடு சிறப்பான இடத்தை வகிக்கிறது. பெருங்கற்காலப் பண்பாடு என்ற சொல் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நின்று நிலவிய ஒரு வகை ஈமச் சின்னத்தைக் குறிப்பதாலும் இவ்ஈமச்சின்னம் இரும்புக் காலத்திற்கு முன்பே தொடங்கி இரும்புக் காலத்தின் ஊடே வரலாற்றுக்காலம்வரை நின்று நிலவியதாலும் பல்வேறு வகைப் பட்ட நிலவியல் அமைப்பில் காணப்படும் ஈமச்சின்னங்கள் அனைத்தும் பெருங்கற்படை என்ற பண்பாட்டு எல்லைக்குள் உட்படுத்தப்படுவதாலும் இந்த ‘பெருங்கற்படைப் பண்பாடு’ என்ற சொல்லாட்சியைத் தவிர்த்தல் வேண்டும் என அண்மைக் காலமாகப் பல்வேறு அறிஞர்கள் கூறிவருகின்றனர்.

பல்வேறு பண்பாடுகளிலும் ஈமச்சின்னங்கள் காணப் படுவதால், ஈமச்சின்னங்கள் மட்டுமே தனித்த பண்பாடாக இருக்கமுடியாது என்ற அடிப்படையில் பெருங்கற்காலப் பண்பாடு என்ற சொல்லாட்சியைத் தவிர்க்கவேண்டும் என்பது அவர்தம் கருத்து. பெரிய கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஈமச்சின்னங்கள், அவற்றினுள் ஈமப்பொருட் களாக இடப்பட்ட கருப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், இரும்புப் பொருட்கள் இவை இப்பண்பாட்டின் சிறப்புக்கூறுகளாகக் கூறப்பட்ட போதிலும், மேற்குறிப்பிட்ட மூன்றனுள் ஒன்று காணப்பட்டாலும் அதற்குப் பெருங்கற்படைப் பண்பாடு என முத்திரை குத்தப்படுவதைக் காணலாம்.

ஈமச்சின்னத்தில் காணப்படும் பொருள்களுக்கும், அதே காலகட்டத்தைச் சார்ந்த வாழ்விடத்தில் காணப்படுகின்ற பொருட்களுக்கும் இடையே எண்ணற்ற வேறுபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, கொடுமணல் அகழாய்வைக் குறிப்பிடலாம். கொடுமணலில் நான்கு பருவகாலங்களில் 13 ஈமச்சின்னங்களும் வாழ்விடத்தில் 44 குழிகளும் அகழப்பட்டன. ஈமச்சின்னத் திலிருந்து தமிழ்-பிராமி பொறிப்புப் பெற்ற பானை ஓடுகளும், கார்னீலியன், அகேட் வகை மணிகளும், வெள்ளை வண்ணம் தீட்டப்பட்டுச் செம்பூச்சுப் பெற்ற கருப்பு-சிவப்பு பானை ஓடுகளும் கிடைத்தன. இவை வாழ்விடத்தில் கிடைத்த தொல் பொருட்களை ஒத்துக் காணப்படுகின்றன.

வாழ்விடப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்த பொருட்கள் சமூகத்தின் பன்முகத்தை எடுத்துக் காட்டு கின்றன. இரும்பு, எஃகு தொழில்நுட்பம், மணிகள் செய்தல், நூல் நெய்தல், உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தை பறைசாற்று முகமாக அமைந்த வெள்ளி முத்திரை நாணயங்கள், பிராகிருத சொற்கள் கொண்டு கீறப்பட்ட மட்பாண்டபங்கள் போன்றவை இங்கிருந்து வெளிப்போந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக சமூகத்தின் கல்வி அறிவை உணர்த்தும் விதமாக எண்ணற்ற தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புப் பெற்ற பானை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுடன், ஆப்கானிஸ்தானில் இருந்து தருவிக்கப்பட்ட லேபிஸ்லசுலி எனப்படும் வைடூரிய மணிகள், குஜராத்திலிருந்து தருவிக்கப்பட்ட கார்னீலியன் எனப்படும் சூதுபவழ மணிகள் போன்றவையும் இலங்கை

யிலிருந்து தருவிக்கப்பட்ட பிளாக்-கேட்-அய் எனப்படும் பூனைக்கண் மணிகளும், ரோம் நாட்டிலிருந்து வந்த ரௌலட் பானை ஓடுகள், காசுகள் போன்றவையும் கொடுமணல் சமூகம் பெற்றிருந்த எழுச்சியையும் வளர்ச்சியையும் இயம்புவனவாக உள்ளன. எனவே வாழ்விடம் என்பது சமூகத்தின் பன்முக வளர்ச்சியை எடுத்துரைப்பதாகவும் பெருங்கற்படைச் சின்னம் என்பது சமூகத்தில் நிலவிய சடங்குகளையும் நம்பிக்கைகளை யும் மட்டுமே எடுத்துரைப்பனவாகவும் உள்ளன. அதனால், ஈமச்சின்ன அகழாய்வு சமூகத்தின் முழுமையான வளர்ச்சியை எடுத்துரைக்கப் பயன்படாது என்பதை உணரலாம்.

தமிழக வரலாற்றை அல்லது பண்பாட்டை மீள் உருவாக் கம் செய்வதில் காணப்படும் முக்கிய இடர்ப்பாடு இது எனலாம். காரணம், இதுவரை தமிழகத்தில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகள் பெரும்பாலும் ஈமச்சின்னங்களையும், அவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகளையுமே அடிப்படையாகக் கொண்டவை. எனவே தமிழகத்தின் பண்பாட்டு வரலாறு முழுமையாக எழுதப்படவில்லை அல்லது வெளிக்கொணரப் படவில்லை என்று கூறுவதே பொருந்தும்.

தென்னிந்தியாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெருங்கற் படைச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில அகழாய்விற்கும் உட்படுத்தப்பட்டுள்ளன. சிந்துசமவெளி நாகரிகத்திற்கு அடுத்து அதிக தரவுகள் கொண்டவை இவை எனலாம். ஆனால், இத்தரவுகளில் தொண்ணூற்றைந்து விழுக் காடு ஈமச்சின்னங்களிலிருந்தும் ஐந்து விழுக்காடு மட்டுமே வாழ்விடத்திலிருந்தும் வந்துள்ளன. எனவே, இப்பாண்பாட் டைப் பற்றிய புரிந்துணர்தல் ஐந்து விழுக்காடாகவே உள்ளது எனலாம்.

இந்தப் பண்பாட்டில் வாழ்ந்த மக்களே இலக்கியங்கள் எழுச்சி பெறவும், வரிவடிவங்கள் ஒழுங்கு பெறவும் மொழிச் செறிவடையவும், அரசு உருவாகவும் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் சிறப்புறவும் எழுத்தறிவு பரவவும், தலைநகரங்கள், வணிகநகரங்கள், துறைமுகங்கள் உருவாகவும் காரணமாக இருந்தவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இரும்புக் காலப் பண்பாட்டிலிருந்து வரலாற்றுக்காலத்தில் அடியெடுத்து

வைக்கவும் காரணமாக இருந்தவர்கள் என்றால் மிகையாகது. இரும்புக் காலப் பண்பாட்டைத் தவிர்த்துவிட்டுத் தமிழக வரலாற்றின் தோற்றத்தை உணர்ந்து கொள்ளமுடியாது. எனவே பெருங்கற்காலப் பண்பாடு என்றழைக்கப்படும் இரும்புக் காலப் பண்பாட்டில் காணப்படும் சிக்கல்களைப் புரிந்துகொள்வது மிகவும் அவசியம்.

**கருத்தாய்வுகள்**

ஒரு பண்பாட்டை அறிந்துகொள்ள வேண்டுமானால், அப்பண்பாடு அளிக்கும் அனைத்துத் தரவுகளையும் ஒரே நிலையில் வைத்துப் பொதுப்படையாக உணர்ந்து கொள்ளா மல், அவை அளிக்கும் செய்திகளை அப்பண்பாட்டின் படி நிலைகளில் வைத்துப் பார்க்கவேண்டும். பெருங்கற்படைக் காலம் என்றழைக்கப்படும் இரும்புக் காலப் பண்பாட்டில் இந்நிலைப்பாடு கடைப்பிடிக்கப்படவில்லை. பெருங்கற்படைக் காலம் என்ற காலவரையறைக்கு ஈமச்சின்னம், இரும்பு, கருப்பு சிவப்பு மட்பாண்டத்தின் பயன்பாடு என்ற மூன்று முக்கியக் கூறுகள் பயன்படுத்தப்பட்டன. பெரும்பான்மையான அகழாய்வு அறிக்கைகளில் இவற்றுள் ஒன்று அல்லது இரண்டு கூறுகள் மட்டுமே கிடைத்திருந்தபோதும், அவ்அகழ்வின் பண்பாடு பெருங்கற்படைக் காலம் என்றே வரையறுக்கப்பட்டுள்ள போக்கினைக் காணலாம்.

இம்மூன்று கூறுகளும் ஒன்றாக இணைந்து ஒரே கால கட்டத்தில் இப்பண்பாட்டில் பயன்பாட்டிற்கு வந்தனவா அல்லது ஒவ்வொன்றும் தன்னிலையில் உருவாகி, வளர்ச்சி பெற்று பிற கூறுகளுடன் இணைந்தனவா என்று ஆராயப் படவில்லை. இத்தகையதொரு நிலை இப்பண்பாட்டைப் பற்றி அறிந்துகொள்ளப் பெரிதும் தடையாக உள்ளது. மேலும் இம்மூன்று கூறுகளில் எந்த ஒரு கூறு வலிமைபெற்று காட்சி யளிக்கிறதோ அதற்குத் தக்கவாறு அந்த அகழாய்வுப் பண்பாடு இரும்புக் காலப் பண்பாடு, கருப்பு-சிவப்பு மட்பாண்டப் பண்பாடு, பெருங்கற்படைப் பண்பாடு என்றழைக்கப்படுகிறது.

சில இடங்களில் கருப்பு-சிவப்பு மட்பாண்டம் கிடைப் பதை மட்டுமே வைத்துக்கொண்டு பெருங்கற்படைக் காலப்

பண்பாடு என்றழைக்கப்படுகிற போக்கைக்கூடக் காணலாம். இதற்கு எடுத்துக்காட்டாக மாங்குடி, வல்லம், பேரூர் போன்ற இடங்களில் மேற்கொண்ட அண்மைக் கால அகழாய்வுகளைக் குறிப்பிடலாம். மாங்குடியின் கருப்பு-சிவப்புப் பானை ஓடு கிடைப்பதும், மாங்காடு, ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் முதுமக்கள் தாழிகளுடன் கருப்பு-சிவப்புப் பானை ஓடுகள் கிடைப்பதும் இங்கு நிலவிய இப்பண்பாட்டிற்குப் பெருங்கற் படைப் பண்பாடு எனப் பெயரிடத் தூண்டியதாகக் கருதப் படுகிறது.

பொதுவாகத் தமிழகத்தின் தென்மாவட்டப் பகுதிகளிலும், கடற்கரையோர மாவட்டங்களிலும் குறிப்பாகப் பெண்ணை ஆற்றுக்குத் தெற்கே உள்ள கடற்கரையோர மாவட்டங்களி லும் காணப்படுகின்ற முதுமக்கள் தாழிகளில் பெரும்பாலும் பெரிய கற்கள் பயன்படுத்தப்படவில்லை. இருப்பினும் பல தொல்லியல் அறிக்கைகளில் முதுமக்கள் தாழிகள் பெருங்கற் படைக் காலத்தைச் சார்ந்தவை என்றே குறிக்கப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் வரலாற்றுக் காலம் படித்துணரப்பட்ட வரிவடிவத்திலிருந்து தொடங்குவதாகக் கருதப்படுகிறது. தமிழ கத்தில் அந்நிலையில் உள்ளது தமிழ்-பிராமி ஆகும். அகழாய் வில் எந்த மண்ணடுக்கு நிலையில் இவ்வரிவடிவம் கிடைக் கிறதோ அப்பண்பாட்டு நிலையில் இருந்து வரலாற்றுக் காலம் தொடங்குவதாகக் கொள்ளலாம். கொடுமணலில் தமிழ்-பிராமி வரிவடிவம் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள் 180 செ. மீ. ஆழம் முதல் அதாவது கீழ்நிலையில் (கன்னிமண் மேலிருந்து) இருந்து கிடைத்துள்ளன. எனவே வரலாற்றியல் முறைப்படி கொடுமணலில் கிடைத்த அனைத்துப் பண்பாட்டு அடுக்கு களும் வரலாற்றுக் காலத்தைச் சார்ந்தனவாகும்.

ஆனால், அங்கு அகழாய்வு செய்த எ. சுப்பராயலு, கா.ராஜன் இவர்கள் அங்கு அகழப்பட்ட பெருங்கற்படைச் சின்னங்களின் எண்ணிக்கை காரணமாகவும் அவற்றிலிருந்து கிடைத்த தொல்பொருட்களின் தன்மை காரணமாகவும் வாழ்விடத்தின் கீழ்நிலையில் இருந்த பண்பாட்டுக் கூறுகளைப் பெருங்கற்படைக் காலம் என்றே காலக்கணிப்புச் செய்தனர். இது தவறான கணிப்பாகும். கொடுமணலில் அகழப்பட்ட ஒரு

பெருங்கற்படைச் சின்னத்திலிருந்து 'விஸாகி' என்ற தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புப் பெற்ற மட்பாண்டம் கிடைத்துள்ளது. அவ்வகையில் இப்பெருங்கற்படைச் சின்னம் வரலாற்றுக் காலத்தைச் சார்ந்தது. ஆனால், கிடைத்த இடம் பெருங்கற்படை என்பதாலேயே இச்சின்னத்தின் பண்பாடு பெருங்கற்படைப் பண்பாட்டுக் காலத்தில் வைக்கப்பட்டது. இது தவறான அணுகுமுறையாகும். பெருங்கற்படைகள் வரலாற்றுக் காலத்திலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்ட ஈமச்சின்னங்களாக விளங்கியமையை அறிந்துகொண்டால், பண்பாட்டுப் பிரிப்புகள் எளிதாகும்

ஒரு தொல்லியல் ஊரில் பெருங்கற்படைச் சின்னம் காணப்பட்டால் அது பெருங்கற்படைக் காலத்தை அல்லது இரும்புக் காலத்தை மட்டும் சார்ந்தது என இறுதியாகக் கூறிட இயலாது என்பதற்குக் கொடுமணல் அகழாய்வு ஒரு சிறந்த சான்றாகும். ஈமச்சின்னம் என்பது ஒரு சமூகம் வெளிப்படுத்தும் நம்பிக்கை அல்லது சடங்கு ஆகும். இது அச்சமூகத்தின் பொருளாதார வளம், பெற்றுள்ள தொழில்நுட்பம், அரசியல் தகுதி, சடங்கின் தன்மை ஆகியவற்றிற்குத் தக்கவாறு அளவிலும் அதிலிருந்து படையல் பொருட்களாகக் கிடைக்கும் தொல் பொருட்களின் தன்மையிலும் மாறுபடும். இச்சடங்கு அல்லது நம்பிக்கை, பல்வேறு பண்பாட்டுக் காலங்களில் ஊடுருவி நிலைபெற்று விளங்கியுள்ளதால் பெருங்கற்படைச் சின்னங்களை அகழ்ந்து அவற்றின் மூலம் எட்டப்படும் முடிவுகள் எல்லா நேரங்களிலும் சரியானவையாக இருக்கும் என்று கூற இயலாது. பெருங்கற்படைச் சின்னங்களுடன் இணைந்துள்ள வாழ்விடத்தை அகழ்ந்து அதில் கிடைக்கும் தொல்பொருட்களின் தன்மையின் அடிப்படையில் காலக் கணிப்பு செய்தால் மட்டுமே அது சரியான முடிவாக இருக்கமுடியும்.

இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, கொடுமணலின் வாழ்விடப்பகுதியிலிருந்து கிடைத்த தொல்பொருட்கள் அனைத்தும் வரலாற்றுக் காலத்திற்கு உட்பட்டவையாகத் தெரிகின்றன. வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மக்களே ஈமச் சின்னங்களையும் உருவாக்கியிருப்பதால் பெருங்கற்படைச் சின்னங்களையும் வரலாற்றுக் காலத்திலேயே வைக்க வேண்டியுள்ளது.

தமிழகத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் வாழ்விடத்திற்கும் ஈமச்சின்னத்திற்கும் இடையேயான தொடர்பு குறித்துப் பல புதிய செய்திகளை அளித்துள்ளன. கொடுமணல் ஈமச்சின்னத் தொல்பொருட்கள் ஒரு குறிப்பிட்ட வகையைச் சார்ந்தவையாக, படையல் பொருட்களாக வைக்கப் படுவதற்கென்றே புதிதாக உருவாக்கப்பட்டவையாக உள்ளன. எடுத்துக்காட்டாக, ஆயிரக்கணக்கான கருப்பு-சிவப்பு மட்பாண்டங்களும், கருப்புப் பூச்சுப் பெற்ற மட்பாண்டங்களும் கிடைக்கும் பெருங்கற்படையில், வாழ்விடத்தில் கிடைக்கும் சிறப்பான, வெள்ளை வண்ணம் தீட்டப்பட்டுச் செம்பழுப்புப் பூச்சுப் பெற்ற புதிய மட்பாண்டங்கள் இல்லை. கிடைத்த ஒரு சிலவும் வாழ்விடத்திலிருந்து தருவிக்கப்பட்டு வைக்கப்பட்டவையாக உள்ளன ஆனால், இவ்ஈமச்சின்னங்களை உருவாக்கியவர்கள் வாழ்ந்த வாழ்விடங்களில் பல்வேறு வகையான மட்பாண்டங்கள் பரவிக் கிடைக்கின்றன.

மணிகள் செய்யும் தொழிலில் கொடுமணல் சிறப்புற்று விளங்கியமையை இங்குக் கிடைத்த ஆயிரக்கணக்கான மணிகள் பறைசாற்றுகின்றன. இதைப் பதிற்றுப்பத்தும் உறுதிசெய்கிறது. மஹாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களிலிருந்து தருவிக்கப்பட்ட அகேட், கார்னீலியன் போன்ற அரிய மணிக்கற்கள் மூலப் பொருட்களாகத் தருவிக்கப்பட்டுக் கொடுமணலில் மணிகளாக உருப்பெற்றன. அதே போன்று கொடுமணலைச் சுற்றியுள்ள பகுதிகளில் கிடைக்கும் பளிங்குக் கற்கள் மணிகளாக வடிக்கப் பட்டுள்ளன. பளிங்குக் கற்கள் ஏராளமாக இங்குக் கிடைப்பதால் இம்மணிகள் பெருமளவில் உருவாக்கப்பட்டிருக்கவேண்டும்.

ஆனால், அவற்றுள் ஒன்று கூட ஈமச்சின்னத்தில் இல்லை. அதற்கு மாறாக வெளிமாநிலங்களிலிருந்து தருவிக்கப்பட்ட சூதுபவழ மணிகளும், அகேட் மணிகளும் படையல் பொருட் களாக வைக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டிலிருந்து வந்தவற்றை அதிக மதிப்பு வாய்ந்தவையாகக் கருதியிருக்கலாம். எனவே ஈமச்சின்னங்களில் கிடைப்பவை தெரிவு செய்து வைக்கப் பட்டவை. தெரிவு செய்து வைக்கப்பட்ட படையல் பொருட் களை வைத்துக்கொண்டு ஒரு சமூகத்தின் பண்பாட்டை முழுமையாக மீள் உருவாக்கம் செய்ய இயலாது. அதனால் தான், ஈமச்சின்னத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட

கருதுகோள்கள் ஒரு சமூகத்தின் முழுப்பண்பாட்டையும் வெளிப்படுத்தவில்லை என எண்ண வேண்டியுள்ளது. மேலும், தென்னிந்திய தீபகற்பத்தில் விந்திய மலைக்குத் தெற்கே பல்வேறு இயற்கைச் சூழல்களில் உருவாக்கப்பட்ட கல்வட்டம், கற்பதுக்கை, பரல் உயர்பதுக்கை, நெடுநிலை நடுகல், ஈமப்பேழை, ஈமத்தாழி, கல்திட்டை போன்றவை பல்வேறு பண்பாட்டுக் காலங்களில் கி மு 1000 முதல் கி. மு 300 வரை நின்று நிலைத்துள்ளன.

பல நூற்றாண்டுகள் பல்வேறு பண்பாட்டுச் சூழலில் நின்று நிலைத்த இவ்ஈமச்சின்னங்களைச் சில அகழாய்வுகள் மூலம், அதுவும் வாழ்விடத்தைத் தவிர்த்த அகழாய்வுகள் மூலம் சரியான தளங்களில் இனங்காண முடியாது. வட்டார அளவிலான களஆய்வுகள், காலவரையறையிலான அகழாய்வுகள், வாழ்விடமும் ஈமச்சின்னமும் இணைந்த இடங்களை ஆய்வுக்கு உட்படுத்துதல் போன்றவற்றின் மூலமே இதற்குத் தீர்வுகாண இயலும். அத்தகைய ஆய்வுகள் இந்தியாவில் குறைந்த அளவில் தான் மேற்கொள்ளப்படுள்ளன. பொதுவாக ஈமச்சின்னங்கள் அளவில் பெரியனவாகவும், தரிசு நிலங்களில் உருவாக்கப் பட்டவையாகவும் உள்ளமையால்தான் அழிவுறாமல் உள்ளன ஆனால், தொல்வாழ்விடங்கள் தற்போதுள்ள வாழ்விடங்களிலேயே தொடர்ந்து நிலைபெற்றதாலும், வளமையான இடங்களில் அமைந்துள்ளதாலும் காலப்போக்கில் மறைந்து போயின. எனினும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகள் பெரும்பாலான ஈமச்சின்னங்கள் வாழ்விடப்பகுதிகளுடனே இணைந்து காணப்படுவதைச் சுட்டுகின்றன. வாழ்விடத்துடன் இணைந்த ஈமச்சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டால் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இப்பண்பாட்டின் வளர்ச்சியை வட்டார ரீதியாக உணர்ந்து கொள்வது இயலுவதாகும்.

தமிழகத்தைப் பொருத்தவரை தொடக்க வரலாற்றுக் காலத்தை அறிந்துகொள்ளப் பெரிதும் தடையாக இருப்பது பெருங்கற்படைச் சின்னங்கள் பற்றிய தவறான புரிந்துணர்வு ஆகும். கி. மு. 1000 முதல் கி. மு முதலாண்டுவரை தமிழகத்தில் நின்று நிலவிய இவ்ஈமச்சின்னங்கள் அனைத்தும் ஒரே

குடைக்கீழ் கொணரப்பட்டதால், காலப்போக்கில் இவை பெற்ற வளர்ச்சியை அறிந்துகொள்ள இயலவில்லை. ஓர் ஈமச் சின்னம், பெருங்கற்களுடன் இணைந்து காணப்பட்டாலும் காணப்படவிட்டாலும் பெருங்கற்படைச் சின்னம் என்றே அழைக்கப்படுகிறது. மேலும், கருப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், இரும்புப் பொருட்கள் ஆகியவை அவற்றுடன் இணைந்தோ, தனித்தோ காணப்படாலும் அவை அனைத்தும் பெருங்கற் படைக் காலப் பண்பாட்டுக் கூறுகள் என்றே அழைக்கப் படுகின்றன. ஈமச்சின்னம், கருப்பு-சிவப்பு மட்பாண்டம், இரும்பு ஆகிய இம்மூன்று கூறுகள் ஒன்றாக இணைந்து ஒரே நேரத்தில் தோன்றவில்லை என்றாலும், இம்மூன்றும் ஒன்றாக இணைந்து தமிழகத்தில் ஊடுருவியுள்ளன என்பதன் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இம்மூன்று கூறுகளும் தனித்தன்மை கொண்டவை என்ற அடிப்படையில் சில ஆய்வு களே முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளன. பெருங்கற்படைப் பண்பாட்டைச் சார்ந்த முதுமக்கள் தாழி போன்ற ஈமச் சின்னங்கள் இம்மண்ணில் தோன்றி வளர்ந்தவை என்ற நோக்கில் ஆய்வு செய்யப்படவில்லை.

ஈமச்சின்னங்கள் பல்வேறு காலகட்டங்களைக் கடந்து பல்வேறு பண்பாடுகளின் ஊடாகப் பரவி, வளர்ந்து வரலாற் றுக் காலம் வரை நின்று நிலைத்துள்ளன என்ற கண்ணோட் டத்தின் அடிப்படையில் ஆய்வுகள் பெரும்பாலும் மேற்கொள் ளப்படவில்லை மனித வளம், பொருளாதாரநிலை இவற்றின் காரணமாகப் பெரும்பாலான ஆய்வு நிறுவனங்கள் இவ்வாய் வைக் களஆய்வு என்ற அடிப்படையிலேயே நிறுத்திக்கொண் டன. மேற்பரப்பாய்வில் நிலத்திற்கு மேலாகக் கண்ணிற்குப் புலப்படும் தரவுகள் மட்டுமே ஆவணப்படுத்தப்படும். மேற்பரப் பாய்வில் கிடைக்கும் தரவிற்கும் அகழாய்வில் கிடைக்கும் தரவிற்கும் எண்ணற்ற வேறுபாடுகள் உள்ளன.

எடுத்துக்காட்டாக, கொடுமணலில் காணப்படும் நூற்றுக் கணக்கான பெருங்கற்படைகள் பரல்உயர் பதுக்கைகள் ஆகும். மேற்பரப்பில் அனைத்தும் பரல்உயர் கல்வட்டங்களாகவே காட்சியளிக்கும் ஆனால், அவற்றை அகழாய்வு செய்தபொழுது, உள்ளே பல்வேறு வடிவங்கள் கொண்ட கற்பதுக்கைகள்

காணப்பட்டன. அதே போல் ஒரு கற்பதுக்கையில் கிடைக்கும் படையல் பொருளுக்கும் மற்றொரு கற்பதுக்கையில் கிடைக் கும் படையல் பொருளுக்கும் வேறுபாடு காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஆயிரக்கணக்கான சூதுபவழ மணிகள் கிடைக்கும் கற்பதுக்கையில் எவ்விதச் செம்புப்பொருட்களும் கிடைக்கவில்லை. எனவே நிலமட்டத்தில் கண்பார்வைக்குப் பரல்உயர் கல்வட்டங்களாகக் காணப்பட்டவை அகழ்ந்தபோது தொல்பொருட்கள் மூலமும், கட்டமைப்பு மூலமும் வேறுபாட்டை உணர்த்தின. எனவே, களஆய்வு அல்லது மேற் பரப்பாய்வு மூலம் பெறப்பட்ட தரவுகள் வழி எட்டப்படும் முடிவுகள் சரியானவை என்று கூறஇயலாது.

ஈமச்சின்னங்களுக்கிடையே பல சமூகப் படிநிலைகள் காணப்படுகின்றன. பொதுவாகக் குன்றின்மீது கல்திட்டைகளை உருவாக்கியவர்கள் பெரும்பாலும் ஆடு, மாடு வளர்ப்பை முக்கியத் தொழிலாகவும் தொறுப்பூசலில் ஈடுபட்டு வாழ்ந்தவர் களாகவும் காட்சியளிக்கிறார்கள். ஆனால், பரல்உயர் பதுக்கை களை உருவாக்கியவர்கள் இரும்பு, எஃகுத் தொழில், மணிகள் செய்தல், உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம், ஆடைநெய்தல் எனத் தொழில் முன்னேற்றம் பெற்றவர்களாகக் காணப்படு கிறார்கள். இவ்விரு தொழில் பிரிவினரும் பெருங்கற்படைக் காலத்தைச் சார்ந்த ஈமச்சின்னங்களை உருவாக்கியபோதிலும் அரசியல், சமூகம், பொருளாதார நிலைகளில் மாறுபட்டுக் காணப்படுகிறார்கள்.

கல்திட்டைகளில் கிடைத்த தரவுகளின் அடிப்படையிலும் அல்லது பல்வகை ஈமச்சின்னங்களில் கிடைத்த தரவுகளின் அடிப்படையிலும் இப்பெருங்கற்படைப் பண்பாட்டைச் சார்ந்தவர்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தனர் என்று ஒரு சாரார் கூற, மற்றொரு சாரார் வாழ்விடத்தில் கிடைத்த தன்மை கொண்டு அவர்கள் மிக உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்ததாகக் கூறியுள்ளனர். எதிர் துருவங்களாக உள்ள இவ்விரு கருது கோள்களும் தரவுகளைப் புரிந்துகொள்வதில் ஏற்பட்ட இடர்ப்பாட்டினால் விளைந்தவை.

ஆடு, மாடு வளர்ப்பில் இருந்த ஒரு சமூகத்தினர் வேளாண் சமூகத்திற்கு மாறியிருக்கலாம். அதே போல் இனமரபு சமூகத்தில்

இருந்தவர்கள் வேந்தர் சமூகத்திற்கு மாறியிருக்கலாம். இவை அனைத்தும் அப்பகுதியில் இருந்த இயற்கை வளத்திற்கும் தட்ப வெட்பச் சூழலுக்கும் ஏற்ப மெதுவாகவோ, விரைவாகவோ காலப்போக்கில் மாறியிருக்கக்கூடும். எடுத்துக்காட்டாக, செங்கம் பகுதியில் வாழ்ந்த மக்கள் அங்குள்ள நிலவியலின் சூழலுக்கு ஏற்பக் கி. பி. 9-10 நூற்றாண்டுவரை ஆடு, மாடு வளர்ப்பினை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். கால்நடையே பெரும் செல்வமாகக் கருதப்பட்டதால் அவற்றைக் காக்கத் தொறுப்பூசலில் ஈடுபட்டும் வாழ்ந்தனர் என்பதை இப்பகுதி யில் கிடைத்த எண்ணற்ற வட்டெழுத்து நடுகற் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

இத்தகைய மெதுவான போக்கை வளமையான காவிரி நீர்ப்பாசனப் பகுதிகளில் காணஇயலாது. அவர்கள் வேகமாக வேளாண் சமூகத்திற்கு மாறியிருக்கலாம். எனவே, சமகாலக் குடிகளாகப் பல்வேறு இயற்கைச் சூழல்களில் வாழும் மக்கள் அனைவரும் சமூகம், அரசியல், பொருளாதாரம், தொழில் நுட்பம் இவற்றில் சமச்சீரான வளர்ச்சியைப் பெற்றிருந்தனர் என்று கூறஇயலாது. இந்த நிலையை முன்னிறுத்தியே ஆய்வு கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

சமகாலக் குடிகளாக முன்னேற்றத்தின் பல்வேறு படிநிலை களில் வாழ்ந்த அனைவரும் ஈமச்சின்னங்களை உருவாக்கி உள்ளனர், தமிழ்நாட்டின் சில பகுதிகள் அல்லது குடிகள் வரலாற் றுக் காலத்தில் அடியெடுத்து வைத்த பின்பும்கூட பெருங்கற் படைச் சின்னத்தைக் கைவிடாதிருந்த நிலையில், அவர்களைப் பெருங்கற்படைப் பண்பாட்டுக் கால மக்களாக அடையாளப் படுத்தி முடிவுகளை வெளியிடும் சூழல் ஏற்பட்டது.

எடுத்துக்காட்டாக, சேர மன்னர்களின் கொங்குப்பகுதி, அதியமானின் தகடூர்ப்பகுதி, நன்னனின் செங்கம்பகுதி, மலைய மானின் கோயிலூர்ப்பகுதி இவை அனைத்தும் பரல்உயர் பதுக்கை பெற்றுள்ளன. அசோகரின் இரண்டாம் பெரும் பாறைக் கல்வெட்டு, அதியர் மரபை அவர் நாட்டு எல்லைக்கு அப்பால் இருந்த அரச மரபாகத் தெரிவிக்கிறது. எனவே, அதியர் மரபு வரலாற்றுக் காலத்திற்கு உட்பட்டுவிட்டது என் பது தெளிவு. அதே சமயம் அதியமான் பரல்உயர் பதுக்கையில்

இடப்பட்டு, நெடுநிலை நடுகல் நடப்பட்டதாகப் புறநானூற்றுப் பாடல் 232 தெரிவிக்கிறது. இந்த ஈமச்சின்னத்தை மட்டும் அகழ்வோர், அதியமான் பெருங்கற்படைப் பண்பாட்டுக் காலத்தில் வாழ்ந்ததாகவே கொள்வர்.

எனவே, ஒரு சமூகம் இரும்புக் காலத்திலிருந்து வரலாற்றுக் காலத்திற்கு மாறிய சூழலைப் புரிந்துகொள்ள இலக்கியம், கல்வெட்டு, நாணயம், தொல்லியல் இவற்றில் காணப்படும் முதன்மைச் சான்றுகள் பற்றிய புரிந்துணர்வு இருந்தால் மட்டுமே தரவுகளுக்கு இடையே காணப்படும் வேற்றுமையை உணர்ந்து கொள்ள இயலும். ஓர் ஊர் பெருங்கற்காலச் சின்னங்களைக் கொண்டு விளங்குவதாகத் தொல்லியல் அறிக்கை குறிப்பிட்டால், அது இரும்புக் காலத்தைச் சார்ந்ததாகவோ வரலாற்றுக் காலத் தொடக்கம் சார்ந்ததாகவோ இருக்கலாம் எனக் கொள்வதே சாலும்.

இது போன்றதே முதுமக்கள் தாழிகள் பற்றிய புரிந்துணர்தலும். பொதுவாக, முதுமக்கள் தாழிகள் தனித்த நிலையில் ஆற்றுப்படுகைகளில் காணப்படுகின்றன. பிற ஈமச்சின்னங்களான பரல்உயர் பதுக்கை, கல்திட்டை, கல்வட்டம் போன்றவை உயர்வான நிலப்பகுதிகளிலும் கற்பாங்கான இடங்களிலும் உள்ளன. கடற்கரைகளிலும் ஆற்றுப்படுகைகளிலும் அதாவது மருத நிலப்பகுதிகளில் முதுமக்கள் தாழிகள் அதிகமாகக் கிடைக்கின்றன. இவை, பெருங்கற்படைச் சின்னங்களிலிருந்து வேறுபட்டவை. ஆயினும், முதுமக்கள் தாழிகளைப் பயன்படுத்திய மக்கள் வேறு இனத்தவர் என்று கூறிட இயலாது.

பெருங்கற்படைச் சின்னங்களை உருவாக்கியவர்களும் ஈமத்தாழிகளைப் பயன்படுத்தியவர்களும் பண்பாட்டால் ஒன்றுபட்டவர்களே. தமிழ் மொழியையும் அதற்கான வரிவடிவத்தையும் ஒன்றாகப் பயன்படுத்தியுள்ளதால் அனைத்து வகை ஈமச் சின்னங்களையும் தமிழகத்தில் பயன்படுத்தியவர்கள் தமிழ் மொழி பேசும் மக்களே என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. சங்க இலக்கியங்களும் தமிழகம் முழுவதையும் ஒரே பண்பாட்டு நிலப்பரப்பாகவே காட்டுகின்றன. இருப்பினும், இன்றைய நிலையில் பெருங்கற்படைச் சின்னங்களுடன் ஈமத்தாழிகளை ஒப்புநோக்கும்போது அவை காலத்தால் முந்தியனவாகக்

காணப்படுகின்றன. அண்மையில் கேரள மாநில கொல்லம் மாவட்டத்தில் மாங்காடு என்ற இடத்தில் அகழப்பட்ட ஈமத் தாழிகளும் ஆதிச்சநல்லூரில் அகழப்பட்ட ஈமத்தாழிகளும் கி. மு. 1000த்தை ஒட்டியவையாகவே காலக் கணிப்புச் செய்யப் பட்டுள்ளன.

ஆதிச்சநல்லூரில் நெற்கதிருடன் பெண் உருவமும் பொறித்த பானைஓடு ஒன்று ஈமத்தாழியிலிருந்து கிடைத்துள் ளது. இதுவும் முந்தைய, தற்போதைய அகழாய்வுகளில் கிடைத்த நெல் உமிகளும் அப்பண்பாட்டுக் கால மக்கள் நிலையான பாசனத்துடன் பொருந்திய விவசாயத்திற்கு மாறி விட்டார்கள் என்பதைப் புலப்படுத்துகின்றன. இது கி. மு 1000த்திலேயே இப்பகுதி மக்கள் நிலையான வாழ்க்கைக்கு வந்துவிட்டனர் என்பதை உணர்த்துகிறது. ஆதிச்சநல்லூரில் ஈமக்காட்டிற்கு மேற்புறம் ஒட்டியபகுதியில் வாழ்விடமாகக் கருதப்பட்ட இடத் தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் எண்ணற்ற குறியீடுகள் கிடைத்துள்ளன. இது கருத்துப் பரிமாற்றத்திற்கு ஒருவகையான வரிவடிவத்தைப் பயன்படுத்தும் நிலைக்கு மக்கள் வந்துவிட்டனர் என்பதைத் தெரிவிக்கின்றது. ஈமத்தாழிப் படையல் பொருட் கள் சமூகத்தின் படிநிலையில் அவர்கள் உயர்ந்த நிலையில் வாழ்ந்துள்ளமையைப் புலப்படுத்துகின்றன.

ஈமத்தாழிகளைப் பயன்படுத்தியவர்கள் இரும்பையும் கருப்பு-சிவப்புப் பானை ஓடுகளையும் பயன்படுத்தியபோதிலும், அவர்கள் பெருங்கற்படைச் சின்னப் பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்தவர்கள் எனக் கூறுவது சரியெனத் தோன்றவில்லை. அதனால்தான், இந்திய தொல்லியல் அளவீட்டுத்துறை அதற்கு இரும்புக் காலப் பாண்பாடு எனப் பெயரிட்டுள்ளது. எனவே, தமிழகத்தில் இரும்பும் கருப்பு-சிவப்புப் பானை ஓடுகளும் கொண்ட தொல்லியல் சார் இடங்களின் பண்பாட்டைப் பெருங்கற்படைப் பண்பாடு எனப் பெயரிட இயலாது என்பது தெளிவு. இவை பெருங்கற்படைக் காலத்திற்கு முற்றிலும் மாறுபட்ட பிறபண்பாடுகளிலும் பரவியுள்ளன.

மேற்கூறிய கருத்தாய்வுகள், ஈமச்சின்னங்களின் அடிப் படையில் ஒரு தொல்லியல் சார் இடத்தின் பண்பாட்டைப்

பெருங்கற்படைக் காலப் பண்பாடு என்று உறுதிபடக் கூறிட இயலாது என்பதைத் தெளிவாக்கியுள்ளன. பரல்உயர் பதுக்கை, கற்பதுக்கை, கல்வட்டம், ஈமப்பேழை, ஈமத்தாழி எனும் ஈமச்சின்னங்கள் பல காலநிலைகளில் தமிழகத்தில் தோன்றிப் பரவி பல்வேறு காலப் பண்பாடுகளுடன் இரண்டறக் கலந்துள் ளன. இவை கி. மு. 1000த்தில் தோன்றிக் கி. பி. 100 வரை தொடர்ந்து பல வளர்நிலைகளைப் பெற்று வந்துள்ளன. இவற்றின் தோற்றத்திற்கும் முடிவுக்கும் இடையே ஏறத்தாழ 1100 ஆண்டு இடைவெளி இருப்பதால், இவற்றை மேற்பரப்பாய்வுத் தரவுகளின் அடிப்படையில் காலப்பகுப்பு அல்லது பண்பாட்டு வரையறை செய்வது கடினமாக உள்ளது.

இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, இக்கட்டுரையின் ஆசிரியர் மேற்கொண்ட கொடுமணல், மயிலாடும்பாறை, தாண்டிக்குடி அகழாய்வுகளைக் குறிப்பிடலாம். இம்மூன்று இடங்களும் தமிழகத்தின் மூன்று பகுதிகளில் அமைந்துள்ளன. கொடுமணல் கொங்குநாட்டிலும் மயிலாடும்பாறை தகடூர் நாட்டிலும் தாண்டிக்குடி கொடைக்கானல் மலைப்பகுதியிலும் உள்ளன. இம்மூன்று ஊர்களிலும் காணப்படும் பெருங்கற்படை ஈமச்சின்னங்கள் மேற்பரப்பில் பரல்உயர் பதுக்கைகளாகவே காணப்படுகின்றன. ஆனால், மேற்பரப்பில் ஒன்று போல் காட்சி யளிக்கும் இவற்றை அகழாய்வு செய்தபோது வெவ்வேறு வகையான கற்பதுக்கைகளாக இவை காட்சியளித்தன.

எடுத்துக்காட்டாக மயிலாடும்பாறையில் காணப்படும் கற்பதுக்கை ஆங்கில எழுத்தான 'யு' எழுத்தைப் போன்ற இடு துளைகளைக் கொண்டும் முற்றம் இன்றியும் இருந்தது. இது கி. மு. 1000த்தைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. கொடுமணலில் உள்ள கற்பதுக்கைகள் இரண்டு அறைகளைக் கொண்டும் முற்றத்துடனும் ஒன்றுக்கு மேற்பட்ட இடுதுளைகளுடனும் காட்சியளித்தன. அவை கி. மு. 400ஐச் சார்ந்தவை எனக் கணிக்கப்பட்டுள்ளது. தாண்டிக்குடிக் கற்பதுக்கையின் உள்ளே நான்கு ஈமத்தாழிகள் வைக்கப்பட்டிருந்தன. இக்கற்பதுக்கை வட்ட வடிவ இடுதுளைகளைக் கொண்டுள்ளது. இவை கொடுமணல் கற்பதுக்கையை ஒட்டிய அல்லது காலத்தால் சிறிது பின்தங்கியவையாக உள்ளன.

இம்மூன்று ஊர்களில் காணப்படும் பெருங்கற்படைச் சின்னங்கள் மேற்பரப்பில் ஒன்று போல் காட்சியளித்தாலும் இச்சின்னங்களுக்குள்ளே பொதிந்துள்ள படையல் பொருட்கள், உள் கட்டமைப்பு இவை வேறுபட்டுள்ளன. இது ஈமத்தாழி களுக்கும் பொருந்தும். எனவே, மேற்பரப்பாய்வுத் தரவுகளின் அடிப்படையில் பண்பாட்டுக் காலம் பற்றி ஒரு முடிவுக்கு வருதல் இயலாது. ஈமச்சின்னத்தின் வகை, அவை இருக்கும் இடம், அவற்றுள் கிடைக்கும் பொருட்களின் தன்மை இவற்றின் அடிப்படையிலேயே ஒரு முடிவுக்கு வர இயலும். இம்முடிவு, தமிழகத்தில் வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, புதுக்கோட்டை, தேனி மாவட்டங்களில் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொண்ட களஆய்வில் இரண்டா யிரத்துக்கும் மேற்பட்ட தொல்லியல் சார் இடங்களைக் கண்டுணர்ந்த பின் மேற்கொள்ளப்பட்டதாகும்

தமிழகப் பண்பாடு தொடர்பான இக்கருத்தாய்வுகள் தமிழக வரலாற்றை ஒரு நிலைப்பாட்டில் வைப்பதில் உள்ள சிக்கல் களை வெளிப்படுத்துகின்றன இதுவரை மேற்கொண்ட அகழாய்வுகளில் கிடைத்த தரவுகளையும் களஆய்வுகளில் கிடைத்த தரவுகளையும் நன்கு உற்றுநோக்கி அவை வெளிப் படுத்தும் பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் அவற்றை இரும்புக் காலப் பண்பாட்டிலோ, பெருங்கற்படைக் காலப் பண்பாட்டிலோ, வரலாற்றுக் காலத்தொடக்கப் பண்பாட் டிலோ வைத்துக் காலநிரல் செய்யவேண்டியுள்ளது.

தமிழகத்தில் இருவகை வரிவடிவங்கள் கிடைக்கின்றன. அவை குறியீடுகளும் தமிழ்-பிராமி எழுத்துக்களும் ஆகும். குறியீடுகளும் ஒரு வகை வரிவடிவங்களே. படித்துணரப்படா மையால் அவை குறியீடுகள் எனப் பெயரிடப்பட்டுள்ளன. தமிழ்-பிராமி வரிவடிவத்திற்கு அவை முற்பட்டவை. படித் துணரப்பட்ட வரிவடிவத்தின் காலமே வரலாற்றுக் காலத்தின் தொடக்கமாகக் கொள்ளப்படுவதால் இன்றைய நிலையில் தமிழ்-பிராமியின் காலம் தமிழக வரலாற்றின் காலம் எனக் கொள்ளப்படுகிறது.

ஆயினும், அண்மையில் அநுராதபுரம், பேரூர், கொடுமணல், கரூர், தகடூர், மயிலாடும்பாறை, அழகன்குளம், மாங்குடி, வல்லம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு களில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் தமிழ்-பிராமி வரிவடிவங்களின் காலத்தை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. தமிழ்-பிராமியின் காலத்தைக் கி. மு 3ம் நூற் றாண்டுக்கு முன்னர் வைக்கலாம் என்பதற்கான சான்றுகள் பெருகி வருகின்றன. ஆதலால், தமிழகத்தின் தொடக்க வரலாற்றுக் காலத்தைக் கி மு. 3ம் நூற்றாண்டுக்கு முன்னால் எடுத்துச்செல்லவேண்டியுள்து. இது இந்தியாவின் பிற பகுதி களில் தமிழகம் குறித்து அளிக்கப்படும் தரவுகளுக்கு ஏற்புடைய தாக உள்ளது.

தமிழ்-பிராமியின் காலம் பின்னோக்கிச் செல்லும்போது அதற்கும் காலத்தால் முந்தைய குறியீடுகளின் காலம் மேலும் பின்னோக்கித் தள்ளப்படும். எதிர்காலத்தில் குறியீடுகள் படித் துணரப்படும்போது தமிழக வரலாற்றுக் காலம் மேலும் பல நூற்றாண்டுகள் பின்னோக்கித் தள்ளப்படும். தொடக்க வரலாற் றுக் காலம் பின்னோக்கித் தள்ளப்படுவதால் பெருங்கற்படைக் காலம் என்றழைக்கப்படும் இரும்புக் காலத்தையும் மறுபரிசீல னைக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. எனவே, தமிழக வரலாற் றின் தொடக்கத்தை உணர்ந்து கொள்ளவும் அதை ஒரு கால எல்லைக்குள் கொண்டுவரவும் தொடர்ந்து முனைப்புடன் அகழாய்வு, களஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

---

### சேரனும் செல்வமும்

*வெற்றியைக் கொட்டும் வீரமுரசினனான சேரலாதன், கடல்படு பகைவர்களை அடக்கி, அவர்தம் காவல் மரமாகிய கடம்பினை வெட்டியவர் தம் முன்னோரைப் போலவே இமயமலையில் வில் முத்திரையைப் பொறித்தவர் மாந்தை நகரில் இருந்த அவரது வளமனை முற்றத்தில்பகைவர்வந்துபணிந்துசெலுத்தியதிறைப்பொருளில்பெருமை சான்ற அணிகலன்கள், பொன்னால் செய்யப்பட்ட பாவைகள், வயிரக் குவியல்இவையும்அடங்கும்.'ஆம்பல்' எனும்எண்ணளவு இடம்நிறையக் குவிந்திருந்தது அந்த நிதியம் - அகம் 127.*

## 5. உண்டாலம்ம இவ்வுலகம்

மருத்துவர் சதாசிவம் விஜயசங்கர்

*அந்தக் காலைப்பொழுதில் நான் அனுபவித்த உணர்வுகளை என் வாழ்க்கையின் வேறெந்தக் காலைப்பொழுதிலும் அனுபவித்ததில்லை மெல்லக் கண்விழித்தபோது ஆட்டுத் தொட்டியில் கிடப்பதைப் போல உணர்ந்தேன். சென்னையில் ஆடுகளைக் கசாப்பிற்கு அறுத்தெடுக்கும் இடத்தை ஆட்டுத்தொட்டி என்பார்கள் பயிற்சி மருத்துவர் காலத்திலும் மருத்துவக் கல்வியில் ஐந்தாம் ஆண்டு தொடக்கத்தில் அமையும் நலக்காப்புப் பாடத்திற்காகவும் நாங்கள் அங்குச் செல்வதுண்டு. நான் ஒரே ஒரு முறை தான் அங்குச் சென்றிருக்கிறேன். என்னவோ தெரியவில்லை, அன்று கண் விழித்தபோது அறுக்கப்பட்ட ஆடாய் நான் ஆட்டுத் தொட்டியில் கிடப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.*

*சில நிமிடங்களில் இலேசான தெளிவு பிறந்தது. என் முன்னால் செவிலி ஒருவர் நின்றிருந்தார். மெல்லத் தலையைத் திருப்பி இருபுறமும் பார்த்தேன். என்னைப் போலப் பலர் பல்வேறு குழாய் இணைப்புகளுடன் படுக்கைகளில் கிடந்தனர் ஒவ்வொருவர் முன்னாலும் ஒரு செவிலி. நான் இருக்கும் இடம் முனைப்பான இதயக் கண்காணிப்புக் கூடம் என்பதையும் எனக்கு இதய இரத்தக் குழாய் அடைப்பிற்கான மாற்றுவழி அறுவை நிகழ்ந்திருக்கிறது என்பதையும் உணர மேலும் சில நிமிடங்கள் தேவைப்பட்டன. இடமும் நிலையும் தெரிந்த போதும் அரை மயக்க நிலையே நீடித்தது.*

*கண்கள் என் வாழ்வரசியைத் தேடின. கண்ணுக்கெட்டிய தொலைவுவரை தெரிந்த முகமாய் எதுவும் இல்லை. அந்தக் கூடத்தில் மாட்டியிருந்த கடிகாரம் மெல்ல ஒலித்தது. மணி 5. 30. விடியற்காலை போல் இருக்கிறது என்று நினைத்தபடியே, நாக்கு வறண்டிருந்ததால், செவிலியிடம் தண்ணீர் தருமாறு சைகை செய்தேன் அவர் நீரில் நனைத்த பஞ்சைக் கொணர்ந்து என் உதடுகளில் தடவினார். தண்ணீர் குடிக்கும் அளவு நான் விழிப்படையவில்லை என்பதை அச்செயல் உணர்த்தியது.*

*உதடுகள் நனைந்த மகிழ்வில் உணர்வுகள் விழிப்படைந்தன. என்னைச் சுற்றிலும் பார்த்தபோது, நானும் குழாய் இணைப்பு*

களில் இருந்தமையை உணரமுடிந்தது. சோதனைகள் முடித்துக் கண்களைக் கூடத்தின் வாயிலுக்குத் திருப்பியபோது அந்த முகம் தெரிந்தது. முகமெல்லாம் சிரிப்பாக அழகு பொலிந்த அந்த முகத்துடன் என் வாழ்வரசியின் முகமும் தெரிந்தது. எனக்குச் சற்றுக் குழப்பம் ஏற்பட்டது. கண்களை மூடிப் பார்த்தேன். உணர்வோடு இருக்கிறோமா? கனவுநிலையா?

'கலை, எப்படி இருக்கீங்க?' என்ற குரல் விழிப்படையச் செய்தது. என் வகுப்புத் தோழரும் எனக்கு இதய அறுவை செய்தவருமான இனிய நண்பர் சதாசிவம் விஜயசங்கரின் இனிய குரல் அது மகிழ்வோடு புன்னகைத்தேன் என் அருகே அவரும் மகிழ்வும் கவலையும் சரிவிகிதங்களில் கலந்த பார்வையுடன் என் வாழ்வரசியும் இருந்தனர். என் கையைப் பிடித்து நாடி பார்த்தபடியே, 'நல்லா இருக்கார்மா' என்று அவர் கூறியபோது என் மனைவியின் விழிகளில் கவலை குறைந்தது. நான் விஜய சங்கரையும் மனைவியையுமே பார்த்துக்கொண்டிருந்தேன். ஒருவர் என் உயிரைக் காத்தவர். மற்றொருவர் என் உயிரானவர். விவரிக்க முடியாத உணர்வலைகளின் மோதலால் என் கண் களின் கடைப்பகுதியில் நீர் வடிந்தது. அதை அவர்கள் பார்த் திருக்கமுடியாது.

அந்த நிமிடம் விஜயசங்கர் எனக்குத் தெய்வமாகத் தெரிந் தார். 1999 ஆகஸ்டு 8ந்தேதி நள்ளிரவில் இதயச் செயலிழப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது என் இதய இரத்தக் குழாய்களில் 98 விழுக்காடு அடைப்பு ஏற்பட் டிருந்ததை நான் அறியேன். ஒரு மாத ஓய்வுக்குப் பிறகு இதய மருத்துவர் சென்னியப்பன் நடைப்பயிற்சிச் சோதனை நிகழ்த்திய போது தான் பெருமளவு அடைப்பு இருப்பது தெரியவந்தது. நண்பர் விஜயசங்கர் சென்னை அப்பல்லோவில் இருந்ததால், அடைப்புநிலை தெரிய அங்குச் சென்றேன். அப்போதும் அறுவைக்குப் போவேன் என்று நினைக்கவில்லை விஜயசங்கர் மேற்பார்வையில் இதய மருத்துவர் இராமச்சந்திரன் அடைப் பின் அளவறியும் சோதனை செய்தார். அப்போதுதான் உண்மை நிலை அறிந்தோம். அடுத்த நாள் ஞாயிறு என்பதால், திங்கள் அன்று (20. 9. 1999) அறுவை செய்தே தீரவேண்டும் என விஜயசங்கர் அறிவுறுத்தி, செவ்வாய்க் காலை நான் அந்தப் படுக்கையில் கிடந்தேன்

என் வாழ்வரசியும் விஜயசங்கரும் ஐந்து நிமிடங்களில் சென்றுவிட்டனர். சில நிமிடங்கள் விழித்திருந்த நான் மீண்டும் உணர்விழந்தேன். கண்விழித்தபோது மதியம் ஆகியிருந்தது என் நண்பர் மருத்துவர் பெருமாளைப் பார்த்தேன். பேசக்கூட வில்லை. மீண்டும் உணர்விழப்பு. அடுத்தநாள் இரண்டாம் நிலைக் கண்காணிப்புப் பிரிவிற்கு மாற்றலானேன் அங்குச் சென்ற பிறகுதான் மயக்கநிலை முற்றிலுமாய் மாறியது. விஜய சங்கர் காலை, மாலை இருவேளைகளிலும் வந்தார். ஒவ்வொரு முறை வரும்போதும் அப்பல்லோவில் அல்லது சென்னை மருத்துவமனைகளில் பணியாற்றிக் கொண்டிருந்த எங்கள் வகுப்புத் தோழர்களுள் யாரையேனும் அழைத்து வருவார். மருத்துவர்கள் இராஜன் சந்தோஷம், சுகுமாரன், முருகப்பன் எனப் பல நண்பர்களை அங்குச் சந்திக்கமுடிந்தது. வந்தவர்கள் அனைவரும் விஜயசங்கரின் மருத்துவச் சேவை, நட்பிற்கு அவர் தரும் முக்கியத்துவம் பற்றியே பெரிதும் பேசினர்.

புகழ்பெற்ற இதய, மார்பக நல மருத்துவ மேதை சதாசிவத் தின் திருமகன் விஜயசங்கர். இலயோலா கல்லூரியில் புகுமுக வகுப்பில் என் வகுப்புத் தோழராக அமைந்தவர். அவர் இருக்கு மிடம் எப்போதுமே கலகலப்பாக இருக்கும். அவருடைய சிரிப்பு அலாதியானது. அமர்க்களமான அந்தக் குழந்தைச் சிரிப்பு அவருடைய முத்திரை எனலாம் இலயோலாவில் படித்தபோது நானும் அவரும் ஒரே பிரிவில் இருந்தாலும் நெருக்கமான நண்பர்களாக முடியாதபடி மொழித்தடை இருந்தது. அவ்வப் போது புன்னகைப்பது, ஹலோ சொல்லிக்கொள்வது இப்படித் தான் எங்கள் தொடர்பு இருந்தது. புகுமுக வகுப்புக் கல்வி முடிவுற்ற நிலையில் நிகழ்ந்த விடைபெறு விழாவில் தமிழில் நானும் ஆங்கிலத்தில் மற்றொரு நண்பரும் பேசினோம். பிரிவைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிராமல், நடந்தது, நடக்கவேண்டியது குறித்து பேசிய என் உரையை விஜயசங்கர் பெரிதும் இரசித்திருக்கிறார் என்பதைப் பின்னாளில் என் மகளிடம், ‘பி. யு. சி விடைபெறும் விழாப் பேச்சைக் கேட்ட நாளிலிருந்து நான் உன் அப்பாவின் இரசிகன்’ என்று அவர் தன்னை அறிமுகம் செய்துகொண்ட போதுதான் அறிந்தேன்.

மருத்துவக் கல்லூரியில் நான் முதல் பிரிவிலும் அவர் இரண்டாம் பிரிவிலும் இருந்தோம் வழக்கம் போல் அவரு

டைய கலகலப்பும் குறும்புகளும் மாணவ, மாணவியரிடையே அவருக்குத் தனி இடத்தைப் பெற்றுத்தந்தன. முதலாண்டு படித்துக்கொண்டிருந்தபோது ஜனவரி 25ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்தது. அன்று வகுப்புகளுக்குச் செல்லக் கூடாது என்று தமிழ்ச் சார்புடைய மாணவர்கள் முடிவெடுத் தோம். எங்கள் முடிவை மீறிச் சில மாணவ, மாணவியர் வகுப்புக்குச் செல்லப்போவது அறிந்ததும் நான் வகுப்பறைக் குச் செல்லும் மாடிப்படியை அடைந்து வழிமறித்துப் படியில் படுத்துக்கொண்டேன். ‘நீங்கள் வகுப்பிற்குப் போகவேண்டுமா னால் என்னை மிதித்துக்கொண்டு செல்லுங்கள்’ என்று கூறினேன். அப்போது அங்கிருந்த விஜயசங்கர், ‘கலை, எழுந் திருங்கள் நாங்கள் போகவில்லை’ என்று கூறி அனைவரும் திரும்புமாறு உதவினார்.

அதற்குப் பிறகும் பல்வேறு காரணங்களால் நாங்கள் நெருக்கமாகவில்லை. மருத்துவக் கல்வி முடித்துக் கண் மருத்து வம் பயின்றபோது சென்னைப் பொது மருத்துவமனையில் ஒரு முறை அவரைச் சந்தித்தேன். அப்போது அவர் அறுவை மருத்துவ மேற்படிப்பில் இருந்தார். அன்போடு சில பேசிப் பிரிந்தோம். அவருடைய தந்தையாரும் எங்கள் ஆசிரியருமான மருத்துவமேதை சதாசிவம் மறைந்த பிறகு விஜயசங்கர் முற்றி லுமாய் மாறிப்போனார். முழுக்க முழுக்க மருத்துவச் சேவை என மருத்துவமனையோடு ஒன்றிவிட்டார் அவரைப் பற்றி அவருடன் பணியாற்றிய மருத்துவர் சென்னியப்பன் பல தகவல் களைப் பகிர்ந்துகொண்டபோது நான் உள்ளம் உருகினேன்.

மக்களுக்காக எந்த எதிர்பார்ப்பும் இன்றி மருத்துவப் பணி யாற்றிய விஜயசங்கருக்கு அரசு மருத்துவமனை நடைமுறைகள் துணைநிற்கவில்லை. அரசு மருத்துவமனைகளில் நிலவும் பல் வேறு நிலை ஒத்துழையாமை பற்றி ஒரு தனி நூலே எழுதலாம் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் அனைத்து நிலை அலுவலர்களிலும் பெரும்பாலோர் ஒத்துழைப்பு நல்குவதைத் தேவையற்ற செயலாகவே கருதுவது வழக்கம். அந்தப் போக்கி னால் நோயாளிகள்தான் பெருந்துன்பம் அடைவர். மிக நலம் குறைந்த நிலையில் வரும் நோயாளிகளைத் தள்ளுப் படுக்கை களில் வைத்து அழைத்துச் செல்லக்கூடப் பணியாளர்கள்

ஒத்துழைக்கமாட்டார்கள். பெரும்பாலான நேரங்களில் நோயாளி களின் உறவினர்களே அந்தப் படுக்கைகளைத் தள்ளிச்செல்ல நேரும் நானே இந்தத் துன்பத்தைப் பலமுறை பார்த்திருக்கிறேன். விஜயசங்கர் இது போன்ற சமயங்களில் நோயாளியைத் தாமே தூக்கிச்சென்று உரிய இடத்தில் உரிய மருத்துவம் அல்லது சோதனைகள் நிகழக் காரணராக இருந்திருக்கிறார். சென்னைப் பொதுமருத்துவ மனையில் இல்லாத சில மருத்துவ வசதிகளை, அங்கு வரும் நோயாளிகள் பெறுவதுதான் அவர்கள் நலத்திற்கு உகந்தது என்று அவர் கருதினால், அவர்களைத் தம் காரிலேயே அழைத்துச் சென்று அவ்வசதிகள் கிடைக்கும் இராயப் பேட்டை அல்லது ஸ்டான்லி மருத்துவமனையில் நண்பர்கள் உதவியுடன் நோயாளிகள் அவற்றைப் பெறுமாறு பலமுறை செய்திருக்கிறார். தாம் அறுவை செய்யும் நோயாளி சரியான கண்காணிப்பின்றி நலம் குன்றிவிடக்கூடாது என்பதற்காகப் பல நேரங்களில் நோயாளி நினைவு திரும்பும்வரைகூட மருத்துவ மனையில் தங்கிச் செல்வது அவர் வழக்கம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், விஜயசங்கருக்கு மருத்துவமனை தான் முதல் வீடு எனலாம்.

என் இளவல் பேராசிரியர் அரசுவிற்கு எனக்கு முன்பாக இதயத்தசைச் செயலிழப்பு ஏற்பட்டது. அவர் நலமான பிறகு அறுவை செய்வதா வேண்டாமா என்றறிய விஜயசங்கரிடம் கலந்தாலோசிக்க விழைந்தார் அதனால் அவரை அழைத்துக் கொண்டு விஜயசங்கரைச் சந்திக்க அவர் இல்லம் சென்றிருந் தோம். அவருடைய அன்னையாரைச் சந்திக்கும் வாய்ப்பும் அன்றமைந்தது. விஜயசங்கர், அம்மாவிடம் நிரம்ப அன்புடைய வர் அப்பல்லோவில் பணிமுடித்து அம்மா வீட்டிற்குச் சென்று அவருடன் சில நிமிடங்கள் அளவளாவிய பிறகே தம் இல்லம் செல்வதை நாளும் கடமையாகக் கொண்டிருந்தார். அவரு டைய அந்தப் பண்பு என்னை வியக்கவைத்தது. நம் அம்மாவை நாம் இப்படி அடிக்கடி பார்த்து மகிழ்வித்ததில்லையே என்று என் மனம் வாடியது.

விஜயசங்கரின் அம்மா மிகவும் அன்பானவர். என் அறுவைக் குப் பிறகு அவரைப் பலமுறை சந்தித்திருக்கிறேன். மகன் பெரிய மருத்துவமேதை என்பதிலும், மக்களுக்குச் சிறந்த பணி

செய்கிறார் என்பதிலும் அவர்களுக்குப் பெருமையுண்டு என்றாலும், சேவை என்ற பெயரில் விஜயசங்கர் தம்மை அதிக மாகத் துன்புறுத்திக் கொள்கிறாரோ என்று அவர் உள்ளம் சங்கடப்படுவதுண்டு. மகனின் நலம் குறித்த அந்தத் தாயின் கவலை நியாயமாகவே எனக்குப் பட்டது. ஆனாலும், அதைப் பற்றியெல்லாம் விஜயசங்கரிடம் பேசமுடியாது என்று எனக்குத் தெரியும். 'நம் கவலையும் துடிப்பும் அம்மாவுக்குப் புரியுமா? ஒவ்வொரு நோயாளியும் நலமாக வீடு திரும்பும்வரை எவ்வளவு பொறுப்புடன் கண்காணிக்கவேண்டியுள்ளது' என்றெல்லாம் அவர் நிச்சயமாக பதிலிறுப்பார் என்று அறிவேன். ஆனாலும், 'அம்மா உங்களைப் பற்றி நிறைய யோசிக்கிறார்கள் உங்கள் நலமும் ஓய்வும் முக்கியம்தானே. பார்த்துக்கொள்ளுங்கள்' என்று பட்டும் படாமலும் சொல்லுமாறு ஆயிற்று.

விஜயசங்கர் போன்றவர்களை மருத்துவச் சமுதாயத்தில் அதிக அளவில் பார்க்கமுடியாது. முப்பது நாற்பது ஆண்டு களுக்கு முன்னால் அவரைப் போன்றவர்கள் 30 விழுக்காடு அளவில் இருந்தனர் மருத்துவக் கல்வி வணிகமான பிறகு மருத்துவர்கள் மனநிலை பெரிதும் மாறிவிட்டது. இன்றைக்கு விஜயசங்கருக்கு இணையான மனப்போக்கு உள்ள மருத்துவர் கள் அதிகம் இருக்கமாட்டார்கள். நான் அப்பல்லோவில் இருந்த ஐந்து நாட்களும் அவருடைய அன்பான கவனிப்பே என்னை விரைந்து நலமடையவைத்தது உற்சாகமூட்டும் மொழிகள் தவிர வேறொன்றும் அறியாத அவருடைய கைகள் என்னைப் பற்றிய போதெல்லாம் நான் புத்துயிர் பெற்றாற் போல் உணர்ந்தேன். சிரிப்பும் மலர்வுமாய்க் கல்லூரி நாட்கள் பற்றிப் பேசுவார். ஐந்து நிமிடம், பத்து நிமிடந்தான் என்றாலும் அந்தப் பேச்சு, கல்லூரி நாட்களில் எந்த அளவிற்கு என் செயற் பாடுகளை இந்த மனிதர் கவனித்து வந்திருக்கிறார் என்று வியக்க வைத்துள்ளது. ஒரு மருத்துவன் உற்று நோக்கும் ஆற்றல் உள்ளவனாக இருக்கவேண்டும் என்பது மருத்துவர்களுக்குப் பால பாடம். விஜயசங்கருக்கு அந்த ஆற்றல் இயல்பாகவே இருந்ததை அவருடைய உரையாடல்களும் செய்முறையும் நிறுவின.

அப்பல்லோவில் இரண்டாம் கண்காணிப்புப் பிரிவில் இருந்தபோது திடீரென எனக்கு வயிற்றுப்போக்கு உண்டா

னது. மருந்து தந்தும் நிற்கவில்லை. ஏழெட்டுத் தடவை போக்கானதால் மிகவும் உலர்ந்துபோனேன். விஜயசங்கரைப் பார்க்கவிரும்பினேன். அறுவையில் இருந்த அவருக்குத் தெரிவிக் கப்பட்டது. 'இறந்துவிடுவேனோ' என்ற அச்சம் பற்றியது. அறுவை முடித்து விஜயசங்கர் வந்தபோது அவர் கைகளைப் பற்றிக்கொண்டேன். என் பற்றிலேயே என் கவலை புரிந்தவராய் அன்போடு தேற்றினார். சில மருந்துகளை மாற்றச் செய்தார். உறக்கத்திற்கு ஊசிபோடச் சொன்னார். எவ்வளவோ பணிகள் காத்திருந்தபோதும் நான் அமைதியடையும்வரை உடனிருந்தார் அன்றைய தினம் எனக்கு மனத்தளவிலும் உடலளவிலும் மறுவாழ்வு அளித்தது அவருடைய திருமுகந்தான்.

ஒரு மருத்துவன் ஒரு நோயாளிக்கு எந்த அளவிற்கு உறுதுணையாக முடியும் என்பதை என் மாமனார் தி வ அரங்க நாதனிடமும் சிராப்பள்ளியின் மூத்த மருத்துவமேதை கோ. விசுவ நாதத்திடமும் பயின்றிருக்கிறேன் என்றாலும், விஜயசங்கர், அவர்களிடமிருந்தும் சற்றுத் தனித்துத் தெரிந்தார். வகுப்புத் தோழன் என்பதால் என்னிடம் அப்படி அதிக அன்பு பாராட்டு கிறாரோ என்று நினைத்துவிட முடியாதபடி ஒவ்வொரு நோயா ளிக்கும் அதே கவனிப்பை அவர் வழங்கியதை நேரில் பார்க்க முடிந்தது. என் நண்பர் மருத்துவர், லெப்பை முகமது அவரிடம் ஒரு மருத்துவத் தேவைக்காகச் சென்று வந்தபோது, 'அற்புதமான மனிதர்' என்று விஜயசங்கரைப் பெரிதும் போற்றினார்.

பொதுவாகப் பெரிய நிலையில் இருக்கும் மருத்துவர்கள் நோயாளிகளைப் பார்க்கச் செல்லும்போது தனியாகப் போக மாட்டார்கள். உதவி மருத்துவர்கள், இளநிலை மருத்துவர்கள், செவிலியர்கள் எனப் பெரும்படை உடன்போகும். அப்பல்லோ வில் பலர் இத்தகு துணைவர்களுடன் செல்வதைப் பார்த்திருக் கிறேன். இந்தப் படையெடுப்பு, நோயாளிக்குப் பலர் தம்மை கவனிக்கிறார்கள் என்று தெம்பூட்டவும் மூத்த மருத்துவரின் அணுகுமுறை இளைய நிலையினருக்குப் புரிபடவும் வாய்ப்பாக இருந்ததால், பலரும் இதைப் பின்பற்றினர். விஜயசங்கர் என்ன காரணத்தாலோ இத்தகு கூட்டங்களைத் தவிர்த்தார். அவர் கூட்டத்துடன் சென்று நான் பார்த்ததேயில்லை. காலையில் ஆறுமணிக்கு அப்பல்லோவில் நுழையும் அந்த மனிதரை

இரவு பத்து மணிக்கு அவர் அம்மா வீட்டில் பார்க்கலாம். இடைப்பட்ட நேரமெல்லாம் அவருடைய வாழிடம் மருத்துவ மனைதான். மின்தூக்கியைப் பயன்படுத்தமாட்டார். படிக் கட்டுகளில் நடந்தே வருவார். கேட்டால், 'எனக்கு இதுதான் கலை உடற்பயிற்சி, வேறு பயிற்சிக்கு நேரமில்லையேப்பா' என்று சிரித்துக் கொண்டே சொல்வார். எந்த நேரமும் அறுவை யரங்கு, நோயாளிகளின் அறைகள், கண்காணிப்புக் கூடங்கள், நோயாளிகளைச் சந்திக்கும் அவருடைய அறை இவற்றுள் ஏதாவது ஒன்றை நோக்கியே நடந்துகொண்டிருக்கும் அந்த மனிதருக்கு வேறு ஆர்வங்கள் உண்டா?

உண்டு. ஆண்டுதோறும் அமெரிக்கா செல்கிறார். அங்குள்ள புகழ்பெற்ற இதய மருத்துவமனைகளில் உள்ள பெரும் பேராசிரியர்களுடன் இதய நல மருத்துவத்தின் முன்னேற்றங் களை, அந்த நிமிடக் கண்டுபிடிப்புகளைப் பற்றிக் கலந்துரை யாடித் தம்மைப் புதுப்பித்துக் கொள்கிறார். அந்தப் புதுப்பித் தலை, மேலும் நுட்பமான மருத்துவமுறைகளைக் கையாண்டு நோயாளிகளை நலப்படுத்தவே அவர் மேற்கொள்கிறார். இது எப்படி வேறு ஆர்வமாகும்? இதுவும் அவர் துறை சார்ந்தது தானே என்று கேட்கலாம். உண்மைதான்! அவருடைய முதலார்வமும் இதயம்தான். பிற ஆர்வமும் இதயம்தான்.

அவருடன் பணியாற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், உதவியாளர்கள் இவர்கள் அனைவருமே அவரை நேசிக்கிறார்கள். பணியில் கண்டிப்பானவர்தான். ஆனால், அதற்காகச் சூழ இருப்பவர்களைத் துன்புறுத்தாதவர். அரிதாகச் சினப்பதும் உண்டு. ஆனால், அந்தச் சினத்தில் சீற்றம் இருக்காது. கவலையே பெரிதாக நிற்கும். எனக்குத் தரவேண்டிய மாத்திரைகளை ஒரு செவிலி தரவில்லை. நான் கேட்டபோது மருத்துவர் குறிப்பிட்ட நேரத்தில்தான் கொள்ளவேண்டும் என வலியுறுத்தினார். அந்த மாத்திரைகளை உணவுடன் எடுத்துக்கொண்டால் எனக்குத் துன்பமிராது எனக் கருதியே அவற்றைக் கேட்டிருந்தேன். அவரோ காலக்கணக்கு மட்டுமே பார்த்தார். விஜயசங்கர் வந்தபோது சொன்னேன். அந்தச் செவிலியை வரவழைத்து 'உன் வயது அவர் அநுபவம் அம்மா. அவர் ஒரு மருத்துவர் என்பதை நீ மறந்துவிட்டாயா? அவருக்குத் தெரியாதா ஒரு

மாத்திரையை எப்படி, எப்போது கொள்ளவேண்டும் என்று. உனக்குத் தரத் தயக்கமாக இருந்தால் எனக்குத் தொலைப்பேசிக் கேட்டிருக்கலாமே. இப்படி மறுத்து அவரை வருத்தி விட்டாயே' என்று சினந்தார். அந்தச் செவிலி அடுத்த முறை யிலிருந்து என் விருப்பப்படியே மாத்திரை தந்தார்.

அவர் அறையில் இருந்தபடி அவர் நோயாளிகளுடன் பேசுவதைப் பழகுவதைக் கண்டிருக்கிறேன். நல்ல நண்பர் போலவே பேசுவார். கடனுக்காகச் சிரிப்பதும் போலியாக அன்பு காட்டுவதும் அவருக்குப் பழக்கமில்லை. நிறைய மருத்துவர்கள் நோயாளிகளிடம் தாங்கள் நட்புறவுடன் இருப்பதாகக் காட்டிக் கொள்ள இந்த உத்திகளை மேற்கொள்வதுண்டு. விஜயசங்கர் உண்மையானவர். அதனால், எதிலுமே ஓர் எல்லை கொள்வார். 'இவரை நம்பி நம்மை ஒப்படைக்கலாம்' என்று மட்டுமல்ல, 'இவர்தான் நமக்குக் காப்பு' என்றும் முடிவுகொள்ள வைக்கும் புன்னகை மாறாத அந்தக் களையான முகமே பலருக்கு முதல் மருந்து; ஏன் தொடர் மருந்தும் கூட. அவருடைய சிரிப்பு முன்பே சொன்னது போல் அலாதியானது. இதழ்கள் மட்டுமே விரியாமல் கண்களும் விரிந்து கன்னக்கதுப்புகளும் மலர்ந்து பூக்கும் முகம் கொள்ளாச் சிரிப்பு அது. நான் அப்பல்லோவில் இருந்த ஐந்து நாட்களும் அந்தச் சிரிப்பை அநுபவித்துக் களித்தேன்.

நானும் மருத்துவன்தான். நோயாளிகளின் நலம் நாடிப் பொருளை அதிகம் கருதாதவன்தான். ஆனாலும் எனக்கென்று விருப்பங்களும், உலகங்களும் உண்டு. என் வாழ்க்கையென்றும் ஒன்று தனியாக உண்டு. எவ்வளவுதான் உள்ளம் விரிந்திருந் தாலும், எனக்கு மருத்துவம் தொழில்தான். ஆனால் விஜய சங்கருக்கு மருத்துவமே வாழ்க்கை. இதயத்தைத் தவிர வேறான் றும் அவருக்குத் தெரியாது. அவருடைய பொழுதுபோக்கு, பிற ஆர்வங்கள், இலக்குகள் ஏன் வாழ்க்கையும் கூட இதயம்தான்! அவரொத்த அற்புத மனிதர்களே, 'மருத்துவம் ஒப்புயர்வற்ற தொரு மகத்தான மக்கள் பணி' என்பதைத் தங்கள் அயராத உழைப்பாலும் தளராத நோக்குகளாலும் காலங்காலமாக மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இரா. கலைக்கோவன்



கோகர்ணம் எழுவர் அன்னையர் தொகுதி



வீரபத்திரர், நான்முகி, மகேசுவரி



இந்திராணி, வராகி, சாமுண்டி



கோட்டப்பிள்ளையார்



பிள்ளையார்



கோகர்ணம் குடைவரை



திருநகர் மங்கையாழ்வார் திருமுன்



தென்பரங்குன்றம் குடைவரை



தென்பரங்குன்றம் அர்த்தமண்டபப் பின்சுவர்



மாங்குளம் குடைவரை

# திரும்பிப்பார்க்கிறோம்

(முதல் தொகுதி)

இரா. கலைக்கோவன்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
சி 87, பத்தாவது குறுக்குச் சாலை, தில்லைநகர் மேற்கு,
திருச்சிராப்பள்ளி – 620 018.

நாளைய வாழ்க்கைக்கு

நேற்றைய அநுபவங்களைப்

பதிவு செய்ய விழைந்த

ஓர் ஆய்வுக்குழுவின்

பயணச் சுவடுகள்

# திரும்பிப்பார்க்கிறோம்

இந்த ஆண்டு (2007) டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் வெள்ளிவிழா ஆண்டு. இதுகாறும் வரலாற்றாய்வில் பெற்ற அநுபவங்களை எல்லாம் இந்த வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டுப் பதிவுசெய்யக் கருதுகிறோம். முன்பே விழைந்ததுதான் என்றாலும், வாய்ப்பு இப்போதுதான் அரும்பியிருக்கிறது. இவற்றை என் அநுபவங்கள் என்று சொல்வதினும் ஒரு குழுவின் பயணச் சுவடுகளாய்க் கொள்வதே பொருந்தும். தொடக்கத்தில்தான் தனிப் பயணம். அதுவும் கூட ஒரு சில ஆண்டுகளே

கண் மருத்துவனாய்ச் சிராப்பள்ளியில் காலூன்றியது 1975ல். 1980வரை கண் மருத்துவமே முழுநேரப் பணியாக இருந்தது. இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளிக் கிளை யின் செயலாளர், பொருளாளர், கலைப்பிரிவுச் செயலாளர் எனத் தொடர் பொறுப்புகள். திருச்சிராப்பள்ளிக் கண் மருத்துவர் கள் மன்றத்திலும் செயலாளர், பொருளாளர் எனப் பொறுப்பு கள். தமிழ்நாடு கண் மருத்துவர்கள் மன்றக் காலாண்டு இதழின் ஆசிரியராகவும் இருந்தமையால் வேறெந்தச் சிந்தனைக்கும் இடமில்லாதபடி பணி நெருக்கடி இருந்தது. 1978ல் உலகக் கண் மருத்துவர்கள் மாநாட்டிற்காக ஜப்பான் பயணம். 1978-79ல் சிராப்பள்ளி மருத்துவ மன்றக் கட்டடம் இடிக்கப்பெற்றுப் புதுக் கட்டுமானம் உருப்பெற்றது. அப்போது நான் செயலாளர் பொறுப்பில் இருந்தமையால், என் பணிப் பொறுப்புக் கூடியது.

ஐந்தாண்டுகள் முழுமையும் கண் மருத்துவனாய் இருந்த என்னை அசைத்துப் பார்த்த ஆண்டு 1981. அந்த ஆண்டில்தான், ஜூலையா, ஆகஸ்டா என்பது நினைவில் இல்லை, உறையூர்ப் பஞ்சவர்ணசாமி கோயில் சிவாச்சாரியார் கண்ணில், விழியாடி வெளுப்பிற்காக அறுவை செய்தேன் இழந்திருந்த பார்வையைப் பெற்ற அவர் தம் கோயிலுக்கு வருமாறு வேண்டினார்; சென்றேன். சிறப்பு வழிபாடு முடிந்ததும் கோயிலைச் சுற்றிப் பார்த்தேன். அம்மன் கோயிலைச் சுற்றிவந்தபோது அதன் கருவறைச் சுவர் கிழக்குத் தூணொன்றில் அதிசயமானதொரு சிற்பம் பார்த்தேன். வேட்டியை மடித்துக்கட்டிய நிலையில் இளைஞர் ஒருவர் காலணியுடன் (Shoe) மிதிவண்டி ஓட்டுவது

போன்ற சிற்பம்; அதிர்ந்து போனேன். சிவாச்சாரியாரை அழைத்து அந்தச் சிற்பம் குறித்து வினவினேன். அவர் உரியவாறு மறுமொழி கூறியிருந்தால், நான் ஒரு கண் மருத்துவனாகவே வாழ்க்கையைத் தொடர்ந்திருப்பேன்.

காலம் அந்தச் சிற்பத்தின் வடிவில் என்னைக் கைப்பிடித் தது. சிவாச்சாரியார் அந்தச் சிற்பத்தை அப்போதுதான் முதன் முறையாகப் பார்ப்பதாகக் கூறினார். நிருவாக அதிகாரியிடம் விவரம் கேட்கலாம் என்றார்; சென்றோம். நிருவாக அதிகாரி உடன் வந்து சிற்பத்தைப் பார்த்து வியந்தார். தாம் அண்மையில் தான் வேறோர் ஊரிலிருந்து மாற்றலாகி அக்கோயில் பொறுப் பிற்கு வந்ததாகவும் அதனால், இதுபற்றித் தமக்கொன்றும் தெரிய வில்லை என்றும் கூறியவர், கோயில் தலவரலாற்றுப் புத்தகத்தை என் கையில் தந்தார். தலவரலாறு எழுதிய அ. வெ. ரா. கிருஷ்ண சாமியைப் பார்த்து விளக்கம் பெற்றுக் கொள்ளுமாறு வழி காட்டினார்.

அன்று மதியமே பெரியவர் கிருஷ்ணசாமியைக் கண்டேன். தல வரலாறு எழுதியிருந்த அவருக்கும் அச்சிற்பம் பற்றித் தெரிந் திருக்கவில்லை. இல்லம் திரும்பியதும் தலவரலாறு நூலைப் படித்தபோது மூன்று முக்கியமான தரவுகளைப் பெறமுடிந்தது.

1. கோயில் சம்பந்தரால் பாடப்பட்டது.
2. இங்கிருந்து ஒன்பது கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்டுள்ளன.
3. 4. 5. 1922ல் தேவகோட்டை சித. முரு. முருகப்பச் செட்டி யார் இக்கோயிலைத் திருப்பணி செய்துள்ளார்.

சம்பந்தர் திருமுறை என் மாமனாரும் கண்மருத்துவ மேதையுமான தி. வ. அரங்கநாதனின் நூலகத்தில் இருந்தது. எடுத்துப் படித்தபோது, இக்கோயிலைச் சம்பந்தர், 'செம்பியன் ஆக்கிய' என்றும் 'வேந்தன் மூக்கீச்சரம்' என்றும் குறிப்பிட் டிருப்பதையும் அத்தொடர்களின் பின்னணியில் இக்கோயிலைக் கோச்செங்கட்சோழன் செய்த மாடக்கோயிலாகத் தருமபுர ஆதீன உரையாளர் சுட்டியிருந்தமையையும் அறியமுடிந்தது.

'கோச்செங்கட்சோழன்', 'மாடக்கோயில்' என்ற இரண்டு சொற்களுமே எனக்குப் புதியன என்பதால் தெரிந்துகொள்ள

விழைந்து நூல்களைத் தேடினேன். என் இளவலும் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியரும் இதழியல் அறிஞருமான மா. ரா. அரசு, நான் கேட்ட நூல்களைப் பெற்றுத்தந்தார். தூய வளனார் கல்லூரி நூலகர் அருளும் துணைநின்றார். மூன்று திங்கள்கள், நேரம் கிடைத்த போதெல்லாம் படித்தேன். அதன் விளைவாகக் கோச்செங்கட்சோழனிடம் நெருங்கமுடிந்தது.

பல அறிஞர்கள் இம்மன்னரைப் பற்றி எழுதியிருந்த போதும் அவற்றில் ஒத்திசைவு இல்லை. என் தந்தையார் மா. இராச மாணிக்கனாரின் பெரியபுராண ஆராய்ச்சி ஓரளவிற்குத் தெளிவு தந்ததுடன், ஆய்வுநெறிகள் பற்றிய அறிமுகத்தையும் அளித்தது. கோச்செங்கட்சோழன் - கழுமலப் போர் - கணைக்கால் இரும் பொறை எனத் தொடர்ந்த படிப்பும் சிந்தனையும் கணைக்கால் இரும்பொறை ஒரு கற்பனை உருவாக்கம் என்பதை விளங்க வைத்தன. களவழிநாற்பது மேலும் பல உண்மைகளை உணர்த்தி யது. என்றாலும், 'மாடக்கோயில்' புதிராகவே இருந்தது.

அறிஞர் இரா. நாகசாமியின், 'தமிழகக் கோயிற் கலைகள்' நூலைப் படித்த பிறகும் மாடக்கோயிலைப் பற்றித் தெளிவான வழிகாட்டல்கள் கிடைக்கவில்லை. அதனால், மாடக்கோயில் களாக அறியப்பட்ட கோயில்கள் அனைத்தையும் நேரில் சென்று பார்ப்பதென முடிவெடுத்தேன். என் திடீர் ஆய்வுகளால் சற்றே குழம்பிய என் வாழ்வரசி மருத்துவர் அவ்வை என்னைத் தனியே அனுப்ப விழையாமல் தாமும் உடன்வந்தார் 'பயணம்' என்பதால், மகளும் மகனும் இணைந்துகொண்டனர். எங்கள் உறவினர் தி நா. ஆறுமுகம் உதவியாளராகப் பயணித்தார். பதிகங் களில், 'மாடக்கோயில்' என்று சுட்டப்பட்டிருந்த கோயில்களை நோக்கியே எங்கள் பயணங்கள் அமைந்தன.

அம்பர், ஆக்கூர், நன்னிலம், தலைச்சங்காடு, குடவாயில், நாலூர், திருநல்லூர், வைகல், ஆவூர், ஆறைவடதளி எனப் பல கோயில்களைப் பார்த்தோம். வழக்கமான கோயிலுக்கும் மாடக் கோயிலுக்கும் உள்ள வேறுபாடு ஒன்றே ஒன்றுதான் என்பது ஒப்பாய்வில் விளங்கியது. வெற்றுத்தளம் ஒன்றின்மீது அமைக் கப்படும் கோயிலே மாடக்கோயில். 'தளம்' என்ற சொல்லின் உண்மையான பொருளை அப்போது நான் அறிந்திருக்க

வில்லை என்றாலும், சரியான பொருளில் சரியான சொல்லைப் பயன்படுத்தியமை வியப்பளிக்கிறது.

தொடக்கக் காலத்தில் எனக்கு வழிகாட்டி நூல்களாக அமைந்தவை எஸ். ஆர். பாலசுப்ரமணியத்தின் Early, Middle, Later Chola Temples தொகுதிகளும் Early Chola Art, Four Chola Temples நூல்களுமே. 'முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்', 'சோழர் கலைப்பாணி', எனும் அவருடைய தமிழ் நூல்களும் கோயில் களைப் பற்றிய அறிமுகத்தைத் தந்தன தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் வெளியீடுகளான, 'கல்வெட்டியல்', 'கல்வெட்டு ஓர் அறிமுகம்', 'தமிழகக் கோயிற் கலைகள்' ஆகிய நூல்கள் கல்வெட்டு, கோயில் பற்றிய சிந்தனைகளை உருவாக்கின

எஸ். ஆர். பாலசுப்ரமணியத்தின் நூல்கள் மிகச் சிறந்த அறிமுக நூல்கள் என்றாலும், கோயிற் கட்டடக்கலை, கல்வெட்டியல், சிற்பக்கலை இன்ன பிற கோயில் சார்ந்த கலைகள் பற்றிய அறிவு பெற விரும்புவோருக்கு அவை பயன்படா. கோயில்களின் இருப்பிடம், அவை பற்றிய ஒரு முன்னோட்டம், சில கல்வெட்டுப் பாடங்கள், சிற்பங்களின் பெயர்கள் இவை மட்டுமே அவர் நூல்கள் வழிப் பெறக்கூடியன. சிற்பவியல் அறிய, T.A. கோபிநாதராவின் 'Elements of Hindu Iconography' தொகுதிகள் உதவின. இந்நூல்களின் வழிப் பெற்ற தெளிவும் தந்தையார் பெற்று வைத்திருந்த கல்வெட்டுத் தொகுதிகளின் உதவியும் கோயில்கள் பற்றிக் கட்டுரை எழுதும் துணிவைத் தந்தன

முதல் கட்டுரை, நான் பார்த்த முதல் கோயிலைப் பற்றிய தாகவே அமைந்தது. 'திருமூக்கீச்சரம்' என்ற தலைப்பில் அமைந்த அந்தக் கட்டுரையைச் 'செந்தமிழ்ச் செல்வி' திங்கள் இதழிற்கு அனுப்பினேன். அவ்விதழின் ஆசிரியர் இரா. முத்துக்குமார சாமி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் உரிமையாளர். தந்தையாரின் நூல்களை வெளியிட்ட அந்நிறுவனத்தின் இதழில் என் முதல் கட்டுரை வெளியானமை எனக்குப் பேருவகை அளித் தது. கட்டுரையை அனுப்பியபோது அது வெளியாகும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. செந்தமிழ்ச் செல்வி ஏப்ரல் 82ம் இதழ் என் இல்லம் வந்தபோது நான் அடைந்த மகிழ்விற்கு அளவே இல்லை. என் கட்டுரையைச் சொல் மாற்றாமல் வெளியிட்

டிருந்தார்கள். கட்டுரையை இரண்டு பிரிவுகளாக்கி முதல் பிரிவை ஏப்ரல் இதழிலும் இரண்டாம் பிரிவை மே இதழிலும் வெளியிட்டமையுடன், கட்டுரையைப் பாராட்டி எழுதித் தொடர்ந்து எழுத ஊக்கமளித்திருந்தார் முத்துக்குமாரசாமி.

என் கட்டுரை செந்தமிழ்ச் செல்வியால் மறுக்கப்பட்டிருந் தால் தொடர்ந்து எழுதியிருப்பேனா என்பது தெரியவில்லை. என்றாலும், உறுதியாக முயற்சிகளில் தளர்ந்திருப்பேன். அப்படி நிகழாமல் என் ஆர்வத்தை அன்புடன் ஊக்கி என்னை வளரச் செய்த முத்துக்குமாரசாமி என்றென்றும் என் நன்றிக் குரியவர். தொடக்கக் காலத்தில் என் ஆய்வுகளுக்கு அணைவாக இருந்த மற்றொருவர் என் இளவல் அரசு

சிராப்பள்ளி நூலகங்களில் கிடைக்காத எந்த நூலையும் எப்படியாவது எங்கிருந்தாவது பெற்றுத் தந்து என் ஆய்விற்குத் துணைநின்றவர் அரசு. இலக்கியங்களில் எனக்குப் புலமை இல்லா திருந்த நிலையில் தம்மிடமிருந்த இலக்கியங்கள் அனைத்தையும் தந்து என்னை ஆழங்கால் கொள்ளச் செய்தவர். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் ஆண்டுதோறும் நடத்தும் கல்வெட்டுத் தொடர்பான சான்றிதழ் வகுப்பில் பயின்றிருந்த மையும் வரலாற்றில் இயல்பாகவே இருந்த நாட்டமும் அரசுவை என் புதிய பார்வைக்குப் பெருந்துணையாக்கின.

என் தொடக்கக் கால ஆய்வுப் பயணங்கள் சிலவற்றிலும் ஆர்வம் காரணமாகவே அவர் பங்கேற்றிருக்கிறார். அவருடன் சென்ற பயணங்கள் மறக்கமுடியாதவை. இயல்பாகவே நகைச் சுவை பொங்கப் பேசவல்ல அவர், கடுமையான விஷயங்களைக் கூட வாழைப்பழத்தில் ஊசி இறக்குமாறு போல நேருக்குநேர் மிக எளிதாகக் கூறிவிடுபவர். என்னுடன் பயணப்பட்ட பலரும் அவரிடம் சிக்கித் திக்குமுக்காடியுள்ளனர். யாரையும் புண்படுத் தாமல் ஆனால், அதே சமயம் எவரையும் விட்டுவிடாமல் கருத்துப் போர் செய்யும் ஆற்றல் அவருக்கிருந்தது.

அரசு தந்த நூல்களுள் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியின், 'சோழர்கள்' நூலும் பேராசிரியர் கே. கே. பிள்ளையின் 'தமிழக வரலாறும் பண்பாடும்' நூலும் எனக்குப் பெரிதும் உதவின. அவ்விரண்டு நூல்களின் வழித் தமிழ்நாட்டின் வரலாற்றை

ஓரளவிற்கு விளங்கிக்கொள்ள முடிந்தது. சாஸ்திரியின் சோழர்கள் படித்த பிறகு அவருடைய அனைத்து நூல்களையும் படிக்க வேண்டுமெனக் கருதினேன். அரசு வழி, 'Foreign Notices', 'History of South India' இரண்டும் கிடைத்தன. சி. மீனாட்சியின் பல்லவர் நிர்வாகம் பற்றிய நூலும், கோபாலனின் பல்லவர் வரலாறும் தந்தையாரின் பல்லவர், சோழர் வரலாறு நூல்களும் பெற்றுப் படித்தேன்.

சதாசிவ பண்டாரத்தாரின் 'பிற்காலச் சோழர் வரலாறு' நூலை நான் பெற்ற விதம் குறிப்பிடத்தக்கது. சிராப்பள்ளியின் சிறந்த மருத்துவர்களுள் தலையாயவரான மருத்துவர் கோ. விசுவநாதம் எனக்கு மனைவி வழி உறவினர். அவருடைய புதல்வர் கள் இருவரும் மருத்துவர்கள். நான் கண் மருத்துவனாகச் சிராப்பள்ளி வந்தபோது, முதுபெரும் மருத்துவர் கோ. விசுவநாதத்திடம் ஒரு மாதம் பயிற்சி பெறப் பணித்தார் என் மாமனார். அரசு மருத்துவமனை போல் கூட்டம் வழியும் விசுவநாதம் மருத்துவமனையில் பயிற்சி பெற்றபோது, அவரது புதல்வர்கள் ஜெயபால், கனகராஜ் இருவரிடமும் நட்பேற்பட்டது. ஜெயபால் சிறந்த அறுவை மருத்துவர். மிக அன்பானவர். கனகராஜ் குழந்தை நலம், காது, மூக்குத் தொண்டை இரண்டிலும் பட்டங்கள் பெற்ற அருமையான மருத்துவர். அவர்தம் நட்பு எனக்கு மருத்துவத் துறையில் முன்னேறப் பெரிதும் உதவியது.

அந்த மருத்துவமனையில் பணியாற்றிய இரா. மகாலிங்கம் தமிழ்ப் பற்றாளர். நல்ல சிந்தனையாளர். தமிழுக்கென்று தகுதியுடைய சிறந்த அமைப்பு ஏதும் சிராப்பள்ளியில் இல்லாமையை நன்கு உணர்ந்திருந்த அவர், 'முத்தமிழ்க் கலைமன்றம்' என்ற பெயரில் அமைப்பொன்று நிறுவ ஆர்வம் கொண்டார். அது குறித்து எங்களிடம் பேசினார். நான் அப்போது தந்தையார் பெயரில் 'டாக்டர் மா. இராசமாணிக்கனார் இலக்கிய மன்றம்' என்றோர் அமைப்பை நிறுவி மாணவ, மாணவியருக்குச் சொல்லாற்றல் திறன் வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். அதற்கு நடுவர்களுள் ஒருவராக ஜெயபால் வந்திருக்கிறார். பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள நேரமின்றி இருந்த அவரை நான்தான் வற்புறுத்தி அழைத்துவந்தேன். என் இலக்கிய மன்ற நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனுபவம், மகாலிங்கத்தின் ஆர்வம்

இவ்விரண்டும் ஜெயபாலை முத்தமிழ்க் கலைமன்றம் உருவாக்க உதவின.

மருத்துவர் ஜெயபால் தலைவராகவும் மருத்துவர் கேசவ ராஜ் (பல் மருத்துவர் - ஜெயபாலின் சிறிய தந்தை சிற்றம் பலத்தின் மகன்) செயலாளராகவும் நான் இணைச் செயலாள ராகவும் மருத்துவர் கருணாநிதி (பல் மருத்துவர் - கேசவராஜின் இளவல்) பொருளாளராகவும் அமைய, முத்தமிழ்க் கலை மன்றம் பிறந்தது. பேராசிரியர் சோ. சத்தியசீலன் நெறியாளராக இருந்து உதவினார். திங்கள் தோறும் சிராப்பள்ளியில் சிறந்த தமிழ்க் கூட்டங்கள் அமைத்த இம்மன்றத்தின் வழிப் பிறந்த இரண்டாம் அமைப்பு, 'இராமாயண வகுப்பு'.

வாரந்தோறும் ஒரு நாள் இரவு இராமாயணம் முறைப் படிப் படிக்க முடிவானது. நானும் கேசவராஜும் கருணாநிதியும் இவ்வமைப்பில் இணைந்தோம். மகாலிங்கமும் இருந்தார். ஜெயபால் பணிச்சுமையால் வரக்கூடவில்லை. பேராசிரியர் சத்தியசீலன் வகுப்பெடுத்தார். இவ்வகுப்பில் பயில்வதற்காக, 'இராமாயணம்' வாங்க முனைந்தபோது சத்தியசீலன், 'வை. மு. கோ.' உரை நன்றாக இருக்கும், அது அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு, அதைப் பெற்றுப் பயில்வோம் என்று வழிகாட்டினார். அவர் கருத்துப்படியே செயற்பட்டோம். எங்கள் அனைவருக்கும் நூல்களைப் பெற, சத்தியசீலன் அண்ணா மலைப் பல்கலைக்கு எழுதினார். நூற்படிகள் வந்தன. அவற்று டன், சதாசிவ பண்டாரத்தாரின் பிற்காலச் சோழர் வரலாறும் எப்படியோ தவறுதலாக இடம்பெற்று வந்திருந்தது. அதை அனுப்பிவிடலாமென்று சத்தியசீலன் கூறியபோது, அந்நூலை எடுத்துப் புரட்டிப் பார்த்த நான், அது எனக்குப் பயன்படும் என்பதை உணர்ந்தமையால் தேடிவந்து சரண்புகுந்த அந்த நூலை எடுத்துக்கொண்டேன். இன்றளவும் அந்த நூல் என் எழுத்துக்கு வலிமை சேர்த்து வருவதை நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

திருமூக்கிச்சரத்தை அடுத்து, 1982 செப்டம்பர் மாதச் செந்தமிழ்ச் செல்வி இதழில், 'திருஅம்பர்ப் பெருந்திருக் கோயில்' பற்றிய கட்டுரையை வெளியிட்டேன். அத்திருக் கோயில் கோச்செங்கட்சோழரின் மாடக்கோயில்களுள் ஒன்று.

“அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்

குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே”

என்னும் சம்பந்தர் பதிகவரிகள் இக்கோயிலை அடையாளம் காட்டின. நான் முதன்முதலாகப் பார்த்த மாடக்கோயில் எது என்பது எனக்கு நினைவில் இல்லை. ஆனால், அம்பர் மாடக் கோயில் வழி நான் பெற்ற அநுபவங்கள் மறக்கமுடியாதவை.

திருக்கோயில் ஆய்வுகளைத் தொடங்கிய நிலையிலேயே, கோயில்களில் ஆய்வு செய்யவும் படமெடுக்கவும் அநுமதி பெற வேண்டுமெனத் தெரிந்திருந்தமையால், இந்து அறநிலையத் துறை ஆணையருக்கு எழுதி அநுமதிக் கடிதம் பெற்றிருந்தேன். அம்பர் திருக்கோயிலுக்குச் சென்றபோது, அலுவலகத்தில் இருந்த கோயில் கணக்கர் கணேசமூர்த்தி நான் பெற்றிருந்த அநுமதிக் கடிதத்தைப் பார்த்தார். அவருக்கு ஏனோ அந்தக் கடிதத்தில் நம்பிக்கை பிறக்கவில்லை. ஏற, இறங்க என்னை ஒருமுறை பார்த்துவிட்டு, ‘இந்த அநுமதிக் கடிதத்தில் இருப்பது எங்கள் ஆணையர் கையெழுத்துதான் என்பதை எப்படி நம்புவது?’ என்று கேட்டார். அந்த அநுமதி மடலை நான் பெற்ற விதம் விளக்கி, என் ஆய்வுநோக்கமும் கூறி, அதற்கு முன் நான் சென்ற கோயில்களில் சந்தித்த துறை சார்ந்த அலுவலர்கள் பெயர்கள் அனைத்தும் கூறி, ஏறத்தாழப் பத்துநிமிடம் உரையாடிய பிறகும், அவர் நம்பிக்கைக் கொள்ளவில்லை.

இறுதியாக, ‘இந்து அறநிலையத்துறை மடல்கள் உங்கள் அலுவலகத்திற்கு வருகின்றனவா?’ என்று கேட்டேன்.

‘ஆம்’ என்றார்.

‘அந்த மடல்கள் அஞ்சலில்தானே வருகின்றன’.

‘ஆம்’

‘அந்த மடல்களில் உள்ள உங்கள் ஆணையரின் கையெழுத்தை மட்டும் எப்படி நீங்கள் அவருடைய கையெழுத்து தான் என்று ஏற்றுக்கொள்கிறீர்கள்?’

‘அக்கடிதங்கள் அலுவலகத்திலிருந்து நேராக எங்களுக்கு வருகின்றன. அஞ்சல் உறையில் எங்கள் அலுவலக முத்திரை

உள்ளது' என்றார். அவருடைய அந்த மறுமொழி வேடிக்கை யாக இருந்தது. எனினும், நான் அதைப் பொருட்படுத்தவில்லை.

நல்லவேளையாக எனக்கு வந்த அநுமதி கடிதத்தின் அஞ்சல் உறை என் கோப்பில் இருந்தது. நான் அந்த உறையைக் காண்பித்தேன். உறையைக் கையில் வாங்கி அதிலிருந்த அலுவலக முத்திரையைப் பார்த்தவர், மீண்டும் ஒருமுறை என் அநுமதி மடலை முழுவதுமாய்ப் படித்துப் பார்த்தார். அவரிடமிருந்த ஆணையர் அலுவலக மடலின் கையெழுத்தோடு என் மடலில் இருந்த கையெழுத்தை ஒப்பிட்டுப் பார்த்தார். பத்து நிமிடங் களாவது இந்த ஒப்பீட்டு வேலை நிகழ்ந்திருக்கும். பிறகு மெல்ல நிமிர்ந்து என்னைப் பார்த்தார். 'எவ்வளவு நேரம் ஆய்வு செய்வீர்கள்' என்றார். 'தெரியாது. கோயிலுக்குள் சென்று பார்த்தால்தான் சொல்லமுடியும்' என்றேன். 'வாருங்கள் போவோம்' என்று அழைத்துச் சென்றார். கோயிலுக்குள் நுழைந் ததும் என் துணைவி கோயிலின் வரைபடத்தை வரையத் தொடங் கினார். நானும் ஆறுமுகமும் கோயிலின் அமைப்புப் பற்றிப் பேசிக்கொண்டே கோயிலைச் சுற்றி வந்தோம். கணேசமூர்த்தி எங்களுடன் வந்தார். ஆனால், எதுவும் பேசவில்லை.

மாடக்கோயில் அமைப்பு, கோயிலில் நிகழ்ந்துள்ள திருப்பணி காரணமான மாற்றங்கள், அங்கிருந்த சிற்பங்கள் பற்றிய விளக்கம், கல்வெட்டுச் செய்திகள் என நாங்கள் பேசிய வற்றை எல்லாம் கேட்டபடியே வந்த கணேசமூர்த்தி பரவச மானார். அவ்வப்போது அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு வந்த நான் அதை உணர்ந்ததும், அவரையும் உரையாடலில் சேர்த்துக்கொண்டேன். சோமாசிமாற நாயனாருடன் தொடர் புடையது அக்கோயில் என்று கூறிய அவர், அந்நாயன்மாரின் வரலாறு உரைத்தார். சிற்பங்களைப் படமெடுக்க முனைந்த போது துணைநின்றார்.

ஏறத்தாழ மூன்று மணிநேரம் உடனிருந்து உதவியதோடு, தேநீரும் பெற்றுத் தந்தவர், 'உங்களைப் போய்ச் சந்தேகப் பட்டேனே சார்! இந்தக் கோயிலில் பத்து வருடங்களாக இருக் கிறேன். ஆனால், இன்று நீங்கள் பேசிய செய்திகள் ஒன்றுமே அறியாதவனாய் இருந்திருக்கிறேன். அடிக்கடி வாருங்கள். பக்கத்

தில் அம்பர் மாகாளம் இருக்கிறது. வேண்டுமானால் சொல்லுங்கள், நானே வந்து காட்டுகிறேன்' என்றார்.

அம்பர் மாகாளம் பார்க்க அவர் துணை பேருதவியாக இருந்தது. அக்கோயிலில் இருந்த அற்புதமான நந்திதேவர் செப்புத்திருமேனியை ஆராயவும் படமெடுக்கவும் உதவியவர், சோமாசிமாற நாயனார் யாகம் செய்ததாகக் கருதப்படும் இடத்தையும் காட்டினார். புறப்பட முனைந்தபோது எங்களுடன் ஒரு படம் எடுத்துக்கொள்ள விழைந்தார். படமெடுத்துக் கொண்டதுடன், சிராப்பள்ளி வந்ததும் படத்தின் ஒரு படியையும் அவருக்கு அனுப்பினேன். திருக்கோயில் ஆய்வுகளில் நான் சந்திக்காத தொல்லைகள் இல்லை. அந்தத் தொல்லைகளுக்காகக் கோயிலாரைச் சினப்பதில் பொருளில்லை. அவர்கள் நிலை அப்படி. கோயில் கொள்ளைகள் அவர்களை அப்படி எல்லாம் நடந்துகொள்ள வைக்கின்றன. நாம் யார், எப்படிப்பட்டவர்கள், நம் நோக்கம் என்ன என்பதை அவர்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள நேர்ந்தால், தொல்லைகள் மறைந்து அன்பணைப்பு நேர்வதை என் பயணம் முழுவதும் அநுபவித்திருக்கிறேன். ஆய்வாளனுக்குப் பொறுமை வேண்டும்! மலையளவு பொறுமை வேண்டும்!

பின்னாளில் ஒருமுறை அரியலூரர் மாவட்டம் உடையார் பாளையத்துக்கு அருகிலுள்ள கங்கஜடாதரர் கோயிலுக்குச் சென்றிருந்தோம். கோயில் பூட்டியிருந்தது. மணி காலை ஒன்பதரை இருக்கலாம். பக்கத்தில் விசாரித்தபோது கோயில் காவலர் வீட்டைக் காட்டினார்கள். அவரிடம் சென்று கோயிலைத் திறந்துவிடக் கேட்டோம். அவர் மறுத்தார். ஒரு நாளைக்கு ஒருமுறை திறக்கப்பட்டு உடன் மூடப்படும் மக்கள் வரத்தற்ற கோயில் அது. சிவாச்சாரியார் பூசைக்கு வரும்போதுதான் திறப்பேன் என்றார். நல்ல குடிமயக்கத்தில் இருந்த அவர் இடுப்பில் ஒரு கத்தி வேறு! அவரிடம் பேசுவதே கடினமாக இருந்தது. என் அநுமதிக் கடிதத்தை வாங்கிப் பார்த்துவிட்டு, 'ஆணையர் சொல்வதற்கெல்லாம் நான் செய்ய முடியாது. என் மேலதிகாரி அரியலூர்க் கோயிலில் இருக்கிறார். அவரிடம் போய் அநுமதி வாங்கி வாருங்கள் திறக்கிறேன்' என்றார். ஏறத்தாழ அரைமணி நேரம் அவரிடம் நான் பேசிக்கொண்டிருந்த

தைப் பார்த்த அக்கம் பக்கத்து மக்களும் அவர் மனைவியும் அவரிடம் வந்து கோயிலைத் திறந்துவிடுமாறு கூறினர். அவர் களைச் சினந்துகொண்ட அவர், கூறத்தகாத சொற்களால் அவர்களை வைதார்.

ஊர்மக்களும் அவர் மனைவியும் என்னைச் சமாதானப் படுத்தி, 'அந்த ஆள் எப்போதுமே அப்படித்தான், நீங்கள் இன்னொரு நாள் வாருங்கள். நாங்கள் நிருவாக அதிகாரி வரும்போது சொல்லி அநுமதி வாங்கி வைக்கிறோம்' என்றார்கள். என்னுடன் வந்திருந்த ஆய்வாளர்கள் நளினியும் அகிலாவும் போகலாம் என்றனர். செம்பியன்மாதேவியின் கோயில் அது. அவ்வளவு தொலைவு வந்துவிட்டுப் பார்க்காமல் போக மனமில்லை. மீண்டும் ஒரு முறை முயற்சித்துப் பார்க்கலாம் என்ற எண்ணத்தில், அந்தக் 'குடிகாரக் காவலர்' அருகில் சென்று, அவர் கைகளைப் பற்றினேன். நெடுந்தொலைவு பயணம் செய்து வந்திருப்பதாய்க் கூறியதுடன், எங்கள் நோக்கம் பற்றி எல்லாம் அவர் கண்களைப் பார்த்தபடியே பேசினேன். நான் ஒரு மருத்துவன் என்பதைப் பலமுறை உணர்த்தினேன். பேசும் போதே அவர் தோளைத் தொடுவது, கைகளைத் தொடுவது எனத் 'தொடுமொழி'யும் நிகழ்த்தினேன். என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. மனைவியின் பக்கம் திரும்பியவர், 'சாவி கொண்டுவா' என்றார். கதவுகள் திறந்தன. கங்கஜடாதரர் தரிசனமானார்.

நாங்கள் கோயிலைப் பார்த்துக்கொண்டிருந்தபோதே அவருக்குத், 'தெளிந்து'விட்டது. தன் செயலுக்கு வருந்தியவர், எங்களுக்குத் தேநீர் வாங்கித் தந்தார். அரைநாள் நாங்கள் பணி முடிக்குமளவும் உடனிருந்தார். கேட்டனவெல்லாம் செய்தார். புறப்படும்போது அடிக்கடி வந்துபோகுமாறு வேண்டினார். கோயில் குற்றங்கள் மலிந்துவிட்டதால் தாம் எச்சரிக்கையோடு இருப்பதாகவும் அதனால்தான் அப்படி நடந்து கொண்டதாகவும் கூறியவர், நான் தொட்ட பிறகுதான் அவருக்கு என்னைப் பற்றி நம்பிக்கை வந்ததாகவும் அந்தத் தொடுஉணர்வு என்னை அவரைச் சேர்ந்தவராய்(!) அடையாளப்படுத்தியதாகவும் கூறி விடைதந்தார்.

காரில் புறப்பட்டதும், 'நல்ல காலம் தப்பித்தோம். நீங்கள் அருகில் சென்றதுமே எங்களுக்கு எங்கே அவர் இடுப்புக்

கத்தியை எடுத்துக் கொள்வாரோ என்று பேரச்சமாக இருந்தது' என்றார் நளினி. அண்மையில் வெளிவந்த, 'வசூல்ராஜா எம். பி. பி. எஸ்' படத்தில், 'கட்டிப்பிடி வைத்தியம்' என்று ஒரு மருத்துவ முறையை விளக்கியிருப்பார்கள். அதன் அடிப்படை தொடு உணர்வுதான். எங்கள் பேராசிரியர் மருத்துவர் தெய்வநாயகம், 'நோயாளியைத் தொடாமல் பேசாதே. தொடுவது அவருக்கு உன்னைப் புரியச்செய்யும். உன்மீது நம்பிக்கை ஏற்படுத்தும்' என்று அடிக்கடி சொல்வார். அந்த மருத்துவப் பொன்மொழி பல நேரங்களில் நன்மைகளையும் சில நேரங்களில் சிக்கல்களையும் உண்டாக்கியதை அநுபவத்தில் பார்த்திருக்கிறேன். அதன் விளைவாகத், 'தொடு அது நல்லதுதான். ஆனால், யாரைத் தொடுவது, எப்போது தொடுவது, எப்படித் தொடுவது என்பதில் எச்சரிக்கையாக இரு' என்று ஒரு புது மருத்துவ மொழியும் உற்பத்தியாகி உலவத் தொடங்கியது.

கோச்செங்கணான் ஆய்வு நிறைவிற்கு வந்திருந்தமையால், 'கோச்செங்கணான் யார்?' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தொடங்கினேன். இந்த ஆய்வின்போது எனக்குப் பல ஏமாற்றங் களும் சில தெளிவுகளும் ஏற்பட்டமையைக் குறிப்பிடவேண்டும். தந்தையாரையும், அவருடன் உரையாட வந்த தமிழறிஞர்களை யும் கண்டிருந்தமை, பள்ளியிலும் கல்லூரியிலும் எனக்கு வாய்த்த தமிழாசிரியர்கள் பாடம் நடத்திய முறை இவற்றின் வழித் தமிழாசிரியர்கள் என்றால் தமிழை முற்றிலுமாய் அறிந்தவர்கள் என்று எனக்குள் ஓர் எண்ணம் துளிர்விட்டிருந் தது. ஆனால், கோச்செங்கணான் ஆய்வு அந்தத் துளிரைக் கருக்கியது. ஆய்வின்போது ஐயங்களைத் தெளிவு செய்து கொள்வதற்காக நான் அணுகிய பல தமிழறிஞர்கள் குறுகிய எல்லைக் கல்வி கொண்டவர்களாகவே இருந்தனர். இலக்கியப் பின்புலம்கூட அவர்களுக்கு இருக்கவேண்டிய அளவில் இல்லாமல் இருந்தமை அதிர்ச்சியளித்தது. காலம் காலமாகச் சொல்லப்பட்டு வந்த கூற்றுகளை அப்படியே பின்பற்றுவதில் ஆர்வமாக இருந்த அவர்கள், ஆய்வு உணர்வற்றவர்களாகவே இருந்தனர். அந்தக் கூட்டத்தில் எனக்குச் சற்று நம்பிக்கை அளித்தவர்கள் பேராசிரியர்கள் இராம. சண்முகமும் பி. விருத்தா சலமும்தான்.

பேராசிரியர் இராம. சண்முகம் என் பெரியப்பா மகன். மொழியியலில் வல்லவர். அறிஞர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் மருமகன். அமெரிக்காவில் கார்னெல் பல்கலையில் பணியாற்றிப் பிறகு மதுரை காமராசர் பல்கலையில் பேராசிரியர் பொறுப்பிலிருந்தார். அஞ்சல் வழிக் கல்வி வகுப்புகள் நிகழ்த்துவதற்காக அவர் பன்முறை சிராப்பள்ளி வந்தமையால் நானும் அவரும் கலந்துரையாட நிறைய வாய்ப்புக் கிடைத்தது. அக்கலந்துரைகள் எனக்குப் பெரிதும் பயனளித்தன. என் கேள்விகளுக்கு எல்லாம் அவரால் விடையளிக்கக்கூடவில்லை. என்றாலும், எங்கெங்கு தேடினால் விடை கிடைக்க வாய்ப்புண்டு என்று வழிகாட்டினார்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் பரவலாகவும் ஆழமாகவும் பயின்றிருந்த அவருடன் மணிக்கணக்காக உரையாடி இலக்கியக் கொள்கைகள், ஒப்பிலக்கியம், இலக்கிய நோக்குகள் இவை பற்றியெல்லாம் அறிந்தேன். என் முயற்சியினைப் பெரிதும் உற்சாகப்படுத்திய அவர், 'கணைக்கால் இரும்பொறை' கற்பனை வடிவம் என அறியநேர்ந்தபோது வியந்தார். கோச்செங்கணானோடு போரிட்ட சேரவேந்தன் களவழிப் போரில் மாண்டதைக் களவழி நாற்பது கொண்டு விளக்கியபோது அதிர்ந்தார். கணைக்கால் இரும்பொறையோடு தொடர்புபடுத்தப்படும் எந்தப் பாடலிலும் அம்மன்னரின் பெயரின்மை குறித்தும் விவாதித்தோம். என் கட்டுரையை முழுவதுமாய்ப் படித்துப் பலமுறை விவாதித்து, மாற்றம் ஏதுமின்றி அப்படியே வெளியிடுமாறு கூறினார்.

பேராசிரியர் பி. விருத்தாசலம் கரந்தைப் புலவர் கல்லூரியில் முதல்வராக இருந்தவர். தமிழ் உணர்வுடைய தகைமையர். என் இளவல் அரசு வழி எனக்கு அறிமுகமானவர். சங்க இலக்கியத்தில் நல்ல தேர்ச்சியுடையவர். செந்தமிழ்ச் செல்வி 1982 நவம்பர் இதழிலிருந்து வெளியாகத் தொடங்கிய 'கோச்செங்கணான் யார்?' கட்டுரையைப் படித்துவிட்டு என்னிடம் கருத்துப் பரிமாற்றம் செய்ய இல்லம் வந்தவர், நான் காட்டிய சான்றுகளையெல்லாம் பார்த்து அமைதியானார். இவ்வளவு தரவுகள் இத்தனை காலம் மறைபொருளாகவே இருந்து

விட்டனவே என்று வருந்தினார். என் ஆய்வை வாழ்த்தியதோடு, இலக்கிய ஆய்வு அநுபவங்களையும் பகிர்ந்துகொண்டார்.

'கோச்செங்கணான் யார்?' செந்தமிழ்ச் செல்வியில் திங்கள் தோறும் தொடர் கட்டுரையாக வந்துகொண்டிருந்த காலத்தில் தான் தமிழுலகமும் வரலாற்றுலகமும் என்னைத் திரும்பிப் பார்த்தன. அப்போதும்கூட, ஒரு கண் மருத்துவன் இலக்கியத்தி லும் வரலாற்றிலும் என்ன ஆய்வு செய்துவிடமுடியும் என்று எண்ணியவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். நான் அந்த எள்ளல்களை விரும்பி எதிர்கொண்டேன். அவர்கள் சொல்வ தில் உண்மையில்லை என்பதை உணர்த்த, நிறைய படித்தேன். இரண்டு துறைகளிலும் என்னை ஆழப்படுத்திக்கொள்ள விழைந்தேன். இலக்கியம் மட்டும் பயின்றால் போதாதென்று இலக்கணம் படிக்கக் கருதினேன். அப்போதுதான் புலவர் சு. அரங்கசாமி அறிமுகமானார்.

புலவரை எனக்கு அறிமுகப்படுத்தியவர் சிராப்பள்ளி மருத்துவர் மு. சிவக்கண்ணு. இந்திய மருத்துவ மன்றச் சிராப் பள்ளிக் கிளையில் என்னை உறுப்பினராக்கி, அக்குடும்பத்தில் என்னை ஒன்றச் செய்தவரும் அவரே. நானறிந்தவரை அவர் தான் தமிழில், 'இலக்கிய இளவல்' (B. Lit.) பட்டம் பெற்ற தமிழ்நாட்டின் முதல் மருத்துவர். அவர் வழிகாட்டலில் திருவானைக்காவிலிருந்த தமிழ்க்குடிலில் சேர்ந்தேன். என்னை அழைத்துச்சென்று புலவருக்கு அறிமுகப்படுத்தி இலக்கணம் பயிற்றுவிக்கக் கேட்டுக்கொண்டார். புலவர் என்னையும் இலக்கிய இளவலாக்க விரும்பினார். இசைந்தேன். சென்னைப் பல்கலைக்கழக அஞ்சல் வழிக் கல்வியில் சேர்ந்தேன்.

புலவர் அரங்கசாமி நான் அறியநேர்ந்த தமிழாசிரியர் களில் முற்றிலும் மாறுபட்டவர். அவருடைய அறிமுகமும் நட்பும் தமிழில் முதுகலை பயிலுமளவு என்னை உயர்த்தின. அவரிடம் படித்த காலம் என்னால் மறக்கமுடியாத காலம். எனக்கு வாய்ப்பான நேரங்களில் வகுப்பெடுத்தார். அப்போது அவர் சிராப்பள்ளி இ. ரெ. மேனிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருந்தார். மிகுந்த உரிமையளித்துப் பாடம் சொல்லியதால், அவரிடம் நிறைய விவாதிப்பேன். ஒருமுறை 'உங்களைப் போல் ஒரு மாணவர் முன்பே கிடைத்திருந்தால் நான் நிறைய படித்

திருப்பேன்' என்று அவர் கூறியது நினைவில் உள்ளது. என் கேள்விகளுக்கு அவர் அஞ்சியதே இல்லை. என்னைப் பார்த்த துமே, 'இன்று என்ன ஐயம்' என்றுதான் தொடங்குவார்.

அந்தக் காலத் தமிழ் மாணவர் என்பதால் ஆங்கில அறிவும் நன்கிருந்தது. சில நேரங்களில் ஆங்கில இலக்கணத்தோடு தமிழ் இலக்கண நெறிகளை ஒப்பிட்டுப் பேசுவார். அவ்வப்போது வீட்டிலேயே சிற்றுண்டி, பால் தந்து கொள்ளச் செய்வார். அவ்ரிடம் தனி மாணவனாகவும் பாடம் கேட்டிருக்கிறேன். அவர் வகுப்புகளில் மாணவரோடு மாணவனாய் இருந்தும் பாடம் கேட்டிருக்கிறேன். வகுப்புத் தேர்வு அறிவித்தபோது என்னை மட்டும் அணுகி, நீங்கள் எழுத வேண்டுமென்பதில்லை என்றார். நான் பிடிவாதமாக எழுதி முதல் மதிப்பெண் பெற்ற போது மகிழ்ந்தார். உடன் பயின்ற தமிழாசிரியர்கள் இதனால் அவர் கேலிக்கு ஆளாகியது வருத்தம் தந்தது.

முதலாண்டில், 'வைராக்கிய சதகம்' என்றோர் இலக்கியம் பாடமாக இருந்தது. அந்தப் பாடத்திலிருந்து ஆண்டுதோறும் ஒரு கேள்வி மட்டுமே கேட்கப்பட்டு வந்தது. முதலாண்டு முடியும் தருவாயிலிருந்தபோதும், புலவர் அந்த இலக்கியத்தை அணுகவில்லை. நான் அந்த இலக்கியம் பற்றிக் கேட்டபோது, அந்தப் புத்தகம் அவரிடம் இல்லையென்பதாலும் அது தேடியும் கிடைக்கவில்லை என்பதாலும் அதை எடுப்பதைப் பல ஆண்டு களாகத் தவிர்த்து வந்திருப்பதாகக் கூறினார். கேள்வித்தாளில் பத்துக்கேள்விகள் தந்து ஐந்திற்குத்தான் விடை எழுதச் சொல் வார்கள் என்றும் அதில் இந்தக் கேள்வியை தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் வழிகாட்டினார். அவருடைய அந்த மறுமொழி எனக்கு வேதனையளித்தது. எப்படியாவது, 'வைராக்கிய சதகம்' பெற விழைந்தேன். என் இளவல் பேரா சிரியர் அரசுவிற்கு எழுதி அந்நூலைத் தேடச் செய்தேன்.

இதற்கிடையில், வைராக்கிய சதகத்தில் வல்ல ஒரு பெரியார் திருவானைக்காவிலேயே இருப்பதாகவும் அவரிடம் ஓர் உரை நிகழ்த்தச் சொல்லலாம் என்றும் புலவர் கூறினார். அவர் விருப்பப்படியே நானும் அவரும் போய் அப்பெரியாரைப் பார்த்தோம். அவர் வைராக்கிய சதகம் தமக்குத் தெரியுமென்று கூறி, உரை நிகழ்த்த ஒப்புக்கொண்டார். புத்தகம் கிடைக்காமை

யால் அந்த உரையைப் பதிவு செய்ய விழைந்து நான் ஒலிப் பதிவுக் கருவியுடன் தயாராக இருந்தேன். உரை ஒன்றரை மணிநேரம் நிகழ்ந்தது. 'வைராக்கிய சதகம்' என்ற பெயர் பல முறை உச்சரிக்கப்பட்டதே தவிர அவர் என்ன பேசினார் என்பதே எங்களில் யாருக்கும் புரியவில்லை. புலவரிடம் கேட்டபோது அவருக்கும் அந்தக் குழப்பம் இருந்ததை அறியமுடிந்தது.

சென்னை மறைமலையடிகள் நூலகத்தில் வைராக்கிய சதகம் கண்டறியப்பட்டு, அரசு எனக்கு அந்நூலை ஒளியச்சுச் செய்து அனுப்பினார். அதில் நூற்பதிப்புப் பேரூர் சாந்தலிங்க மடம் என்பதறிந்து, கோயமுத்தூரில் இருந்த நண்பர் மருத்துவர் பொ. பெருமாளிடம் மடத்திற்குச் சென்று அந்நூலின் படி பெற்றுத்தரக் கேட்டுக்கொண்டேன். அவரும் பெற்றனுப்பினார். அரசு அனுப்பியிருந்த படியை நான் படித்ததும் புலவரிடம் தந்தேன். தாம் அந்த நூலை அதுநாள்வரையில் பார்த்ததில்லை என்று கூறிப் படிக்க வைத்துக்கொண்டார். அந்த நூலைப் படித்த பிறகுதான், 'வைராக்கிய சதகம்' பற்றித் திருவானைக்கா பெரியவர் நிகழ்த்திய உரைக்கும் அந்த நூலுக்கும் யாதொரு தொடர்புமில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளமுடிந்தது. புலவரும் அதை உணர்ந்து வருந்தினார்.

'வைராக்கிய சதகத்தைப் பார்த்ததில்லை. அதனால் அது தொடர்பான கேள்வியை ஒதுக்கிவிடுக' என்று அறிவுறுத்திய புலவரின் நேர்மையையும், 'தெரியும்' என்று கூறிப் பொய் உரைத்த பெரியவரின் கயமையையும் நினைத்துப் பார்த்தேன். அந்தப் பெரியவர் பல நூல்களை எழுதியவர். சிராப்பள்ளியில் சிறந்த கவிஞராகவும் சமய அறிஞராகவும் போற்றப்பட்டவர். அவர் பெயரைக் குறிப்பிடுவது பெருந்தன்மையன்று என்பதால் தவிர்க்கிறேன். ஆனால், என் வரலாற்று வாழ்க்கையில் இது போல் போலிகளை நூற்றுக்கணக்கில் சந்தித்து வருந்தியிருக்கிறேன்.

புலவர் அரங்கசாமியின் தொடர்பால் தொல்காப்பியம், நன்னூல், காரிகை, மாறன் அலங்காரம், பாட்டியல் நூல்கள் எனப் பலவும் பயிலும் வாய்ப்புப் பெற்றேன். அவற்றுள் என்னை பிரமிக்கவைத்தது தொல்காப்பியம். புலவர் அதைப் பாடமாக மட்டுமே நடத்தினார். ஆனால், பொருளதிகார நூற்பாக்கள் ஒவ்வொன்றும் என்னை எங்கெங்கோ கொண்டு சென்றன.

அவற்றில் வாழ்க்கையின் சால்புகளை எளிதாக என்னால் பார்க்க முடிந்தது. என் வாழ்வரசியிடம் அந்த நூற்பாக்களைப் பற்றிக் கலந்துரையாடிய போதுகளில் அவர் வியப்படைவதைக் கண்டிருக்கிறேன். தொல்காப்பியம், 'தமிழர் வரலாறும் பண் பாடும்' பேசும் அருமையான நூல் என்பதைத் தமிழ்ப் புலவர் களில் பலரும் இன்றளவும் அறிந்திருக்கவில்லை என்ற உண்மையையும் என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

புலவருடைய துணைவியார் அன்பானவர்; அமைதியான வர். புலவருக்கு நான்கு பெண்கள். ஒரு பையன். அந்த நான்கு பெண்களுள் ஒருவர்தான் நம் மையத்தின் பெருமைக்குரிய ஆய்வாளராகப் பின்னாளில் உருவான அர. அகிலா. நான் படிக்கச் சென்ற காலத்தில் அகிலா பள்ளிக்கூட மாணவி. சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியில் முதுகலை சேர்ந்தபோது ஆய்வேட்டிற் காக மையத்திற்கு வந்தவர் வரலாற்றார்வம் காரணமாகவே முனைவர் ஆய்வுசெய்து இன்று தமிழ்நாட்டின் சிறந்த ஆய்வாளர்களுள் ஒருவராய் மிளிர்கிறார்.

அகிலாவின் தந்தையார் புலவர் அரங்கசாமி ஓர் அதிசய மான மனிதர். ஏறத்தாழ ஆறாண்டுகள் மிக நெருக்கமாக அவருடனும் அவர் குடும்பத்தாருடனும் பழகியுள்ளேன். இளங் காலை நேரம் தவிர மற்றெப்போதும் மாணவர்கள் சூழக் காட்சியளிப்பவர் புலவர். சனி, ஞாயிறு நாட்களில் உணவருந்தும் நேரம் தவிர, பிற போதுகளில் இலக்கிய இளவல், புலவர், முதுகலை மாணவர் வகுப்புகளில்தான் அவரைக் காணமுடியும். சாதி, மத, இன வேறுபாடற்ற உயர்ந்த கொள்கையராய் அவர் திகழ்ந்தார். மாணவர்களில் யார் வேண்டுமானாலும் தேவை களுக்கு அவர் வீட்டுச் சமையலறைவரை செல்லும் நிலை இருந்தது. பெரும்பாலான தமிழாசிரியர்கள் உணவு கொணர்ந்து அவர் இல்லத்திலேயே சாப்பிட்டு ஓய்வெடுத்துப் படித்துச் செல்வதைக் கண்டிருக்கிறேன். பிஞ்சுக் குழந்தைகளுடன் வரும் தமிழாசிரியைகள், அவர் வீட்டு முற்றத்திலேயே தொட்டில் கட்டிக் குழந்தைகளை அதில் இட்டுப் படித்துச் சென்ற வகைமையையும் புலவர் வீட்டில் மட்டுமே கண்டிருக்கிறேன். அவர் இல்லம் உண்மையாகவே 'தமிழ்க்குடிலாக' இருந்தது.

அவர் பிள்ளைகள் அனைவரும் மாணவர்கட்கு உதவுவதில் பெரும் பங்காற்றினர். தவறுகள் வந்துவிடுமோ என்ற அச்சத்தால், அவரிடம் பயின்ற பெரும்பான்மையான தமிழாசிரியர்களுக்குத் தேர்வு விண்ணப்பம் நிறைவு செய்வதில்கூட தயக்கமிருந்ததைக் கண்டிருக்கிறேன். அவர்களுக்கெல்லாம் புலவரின் பிள்ளைகளே அனைத்து உதவிகளையும் செய்து தந்தனர். சுருக்கமாகச் சொல்வதானால், தமிழ்க்குடிலில் படிக்க வந்தவர்கள் அனைவருக்கும் புலவரில்லம் புகலிடமாக விளங்கியது.

‘இலக்கிய இளவல்’ நான்காண்டுகள் பயின்று பெறும் பட்டம். அதில் இலக்கியத் தாள்கள் ஆறும் இலக்கணத் தாள்கள் ஆறும் மொழித் தொடர்புடைய பிற தாள்கள் ஆறும் எனப் பதினெட்டுப் பாடங்கள் பயிலவேண்டும். 1980ல், ‘இலக்கிய இளவல்’ படிப்பில் சேர்ந்தேன். அக்டோபர் 1981ல் முதலாண்டுத் தேர்வை எதிர்கொண்டேன். இலக்கியம் இரண்டு தாள்களும் இலக்கணம் ஒரு தாளும் தமிழ்நாட்டு வரலாறு ஒரு தாளும் இருந்தன. இலக்கியமும் வரலாறும் எளிமையாக இருந்தன. இலக்கணம்தான், தொடர்பற்றுப் போனமையால் சற்று ஆழ்ந்து படிக்கவேண்டியதாயிற்று. புலவர் பெரிதும் உதவியாக இருந்து ஊக்கினார். நிறைய ஐயங்கள் எழுந்தன. எல்லாவற்றிற்கும் அவரிடமிருந்து விடைபெறக்கூடவில்லை. பேராசிரியர் இராம. சண்முகம் அது போன்ற நிலைகளில் விரிவாகப் பேசி வழிப்படுத்தினார்.

இலக்கணம் பயிலும் முறைகள், நினைவுகொள்ளும் விதம், தொடர்புபடுத்திப் பொருள் காணும் வழி என அனைத்தும் அவரிடம் விவாதித்துக் கற்றவையே. அந்தக் கலந்துரைகள்தான் இலக்கணம் முதல் தாளில் 82 மதிப்பெண் பெற்றுத்தந்தன. தமிழக வரலாறு தாளில் 75. இலக்கியம் இரண்டாம் தாளிலும் 75. முதல் தாளில்தான் மதிப்பெண் குறைந்துபோயிற்று. நன்றாக எழுதியிருந்தும் 58தான் கிடைத்தது.

1975ல் கண்மருத்துவப் படிப்பு முடித்திருந்ததால், 1980ல் படிப்பதோ, தேர்வெழுதுவதோ துன்பம் தருவதாக இல்லை. ஆனால், தேர்வுக்கூடத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் மறக்க முடியாதவை. மருத்துவத் தேர்வுகள் எழுதியபோது உடன் எழுதியவர்கள் அனைவரும் மருத்துவ மாணவர்கள். கண்

மருத்துவத் தேர்வின்போது உடன் எழுதியவர்கள் அனைவரும் மருத்துவர்கள். இப்போதோ, நான் ஒருவன் மட்டுமே மருத்துவன். மற்றவர்கள் அனைவரும் ஆசிரியர்கள். பல்வேறு பள்ளிகளில் பணியாற்றிய அப்பெருமக்களுள் இளையவர்களும் இருந்தனர்; வயதானவர்களும் இருந்தனர்.

முதலாண்டுத் தேர்வுகள் சிராப்பள்ளித் தேசியக் கல்லூரியில் நிகழ்ந்தன. என் அறைத் தேர்வுக் கண்காணிப்பாளர் அக்கல் லூரிப் பேராசிரியர். அவர் என்னை அடையாளம் கண்டுகொண் டார். அருகே வந்து வியப்புடன் பார்த்தவாறே, ‘டாக்டர், நீங்கள் எங்கே இங்கே?’ என்று கேட்டார். இலக்கிய இளவல் படிப்ப தாகவும் முதலாண்டுத் தேர்விற்கு வந்திருப்பதாகவும் கூறியதும் அதிர்ந்தார். அதற்குள் தேர்வு தொடங்குவதற்கான மணி அடித்துவிட்டது. அவர் கேள்வித்தாள்களைத் தந்தார். நான் எழுதத் தொடங்கினேன். தேர்வெழுதி முடிப்பதற்குள் அனேக மாக அந்தச் சுற்றிலிருந்த அந்தனை அறைக் கண்காணிப்பாளர் களும் ஓர் அதிசயப் பொருளைப் பார்ப்பது போல் வந்து பார்த்துப் போயினர். அன்றைக்கு நான் ஒரு காட்சிப் பொருளானேன்.

என் இருக்கைக்குப் பின்னிருக்கையில் இருந்து தேர்வு எழுதிய வயது முதிர்ந்த ஆசிரியர், அடிக்கடி ஐயங்கள் கேட்டபடி இருந்தார். எனக்குச் சொல்வதா, கூடாதா என்ற குழப்பம். மருத்துவத் தேர்வுகளில் இதற்கெல்லாம் வாய்ப்பே கிடையாது. ஒவ்வொரு வரிசைக்கும் ஒரு கண்காணிப்பாளர் இருப்பார். யாரும் இந்தப் பக்கம், அந்தப் பக்கம் திரும்பமுடியாது. பேசுவது என்பது கொலைக்குற்றம் போல் கருதப்பட்டது. ஆனால், இங்கோ பலரும் மிக எளிதாகப் பேசிக்கொண்டனர். சில ஆசிரியர்கள் மடியில் புத்தகமோ, குறிப்பேடுகளோ இருந்த மையைப் பார்க்கமுடிந்தது. என் இடப்புறம் இருந்து எழுதியவர் குறிப்பேடு வைத்திருந்தும் அதில் விடையைக் கண்டறிய முடியாது திணறிக்கொண்டிருந்தார். சுருக்கமாகச் சொல்வதா னால் அது தேர்வுக்கூடமாகவே இல்லை.

என் பின்னிருந்தவர் பல முறை கேட்டுத் தளர்ந்துபோனார். தேர்வு முடித்து வெளியில் வந்ததும், ‘உதவியிருக்கலாமே’ என்று கேட்டபடி அருகில் வந்தார். என் நிலைமையை விளக்கியதும் புரிந்துகொண்டு, பொறுத்தாற்றிக் கொள்ளுமாறு வேண்டினார்.

இரண்டாம் நாள் அவர் ஏதும் கேட்கவில்லை. மூன்றாம் நாள் இலக்கணத் தேர்வுக்கு அவரும் மடியில் புத்தகம் வைத்திருந்தார். அன்று வந்த கண்காணிப்பாளர் சற்றுக் கடுமையானவர். அவர் தொடக்கத்திலேயே, 'நீங்கள் எல்லாம் ஆசிரியர்கள். அதனால் கையில், பையில், மடியில் ஏதேனும் இருந்தால் கொடுத்து விடுங்கள். பிடித்துவிட்டால் மூன்றாண்டுகள் தேர்வு எழுத முடியாது' என்று எச்சரிக்கை செய்தார். பலர் புத்தகங்களை அறைக்கு வெளியில் வைத்து வந்தனர். என் பின்னால் இருந்த வயதானவர் துணிந்தவர் போலும்! புத்தகத்தைத் தம்மிடமே வைத்துக்கொண்டார்.

நான் எழுதிக்கொண்டிருந்தபோது அடிக்கடி அவருடைய குரல் ஒலித்தது. புத்தகம் வைத்திருந்தும் பயன்படுத்தத் தெரிய வில்லை போலும்! அன்று அவர் என்ன எழுதினாரோ! அந்தக் கடவுளுக்கும் அவருக்கும்தான் வெளிச்சம். முதலாண்டுத் தேர்வு கள், 'அனைத்து விதங்களிலும் ஆசிரியர்களும் மாணவர்களே' என்ற பேருண்மையை எனக்குப் புலப்படுத்தின.

மாடக்கோயில்கள் ஆய்வில் கிடைத்த அநுபவங்கள் அனைத்துமே மறக்கமுடியாதவைதான். எனினும், ஆக்கூரும் தலைச்சங்காடும் சிறப்பாகக் குறிக்கத்தக்க நினைவுகளை விளை வித்த இடங்களாகும். மயிலாடுதுறை தரங்கம்பாடி வழியில் 16 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது ஆக்கூர். அவ்வூரில் உள்ள திருக்கோயிலை, 'அழகிய தான்தோன்றி மாடம்' என்று கல்வெட்டுகள் குறிப்பதால் அங்குச் சென்றோம். வைத்தியநாத சிவாச்சாரியார் பரிவுடன் வரவேற்றார். கோயிலைச் சுற்றிக் காண்பித்தார். அக்கோயில் பற்றிய கட்டுரை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடான, 'தமிழ்ப் பொழில்' இதழில் (1983 ஜனவரி/பிப்ருவரி), 'ஆயிரத்தில் ஒருவருக்காய் அமைந்த தான்தோன்றிமாடம்' என்ற தலைப்பில் வெளியானது.

வைத்தியநாதன் ஆர்வமான இளைஞர். கோயில் ஆய்வு முடிந்ததும் அவருடன் படமெடுத்துக்கொண்டோம். அவர் தம்மைத் தம் குடும்பத்துடன் ஒரு படம் எடுத்துத் தருமாறு வேண்டினார். படமெடுத்து முடிந்ததும், தலைச்சங்காடு பற்றிக் கூறி தாம் உடன்வந்து கோயிலைக் காட்டுவதாக வைத்திய நாதன் சொல்ல உடன் புறப்பட்டோம்.

ஆக்கூரிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ள தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர் கோயிலை அடைந்தபோது கோயில் பூட்டியிருந்தது. கோயில் சிவாச்சாரியார் கந்தசாமியின் வீட்டை அடைந்த வைத்தியநாதன் அவரை அழைத்துவந்தார். தம்மை அறிமுகப்படுத்திக்கொண்ட இளைஞர் கந்தசாமி, கோயிலைத் திறந்து எங்களை உள்ளே அனுமதித்தார்.

அவர் கூறிய தலபுராணக் கதைகளையெல்லாம் பொறுமையாகச் செவிமடுத்த பிறகு, கோயிலின் உண்மையான வரலாற்றையும் கட்டமைப்புத் தொடர்பான தகவல்களையும் கோச்செங்கணான் பற்றிய குறிப்புகளையும் கூறினேன். அதுவரை நான் பார்த்திருந்த மாடக்கோயில்கள் பற்றியும் எடுத்துரைத்தேன். செம்பியன்மாதேவி என்ற பெயரே அவருக்குப் புதிதாக இருந்தது. குறைவான ஏட்டுக் கல்வியே பெற்றிருந்த அவருக்கு நான் தந்த செய்திகள் கோயிலைப் பற்றிய ஒரு பெருமித உணர்வை அளித்தன. மிகவும் மகிழ்ந்த நிலையில், தம் கோயிலுக்கு அருகிலேயே மற்றொரு கோயில் இருப்பதாகக் கூறி, அதையும் பார்த்து வரலாறு கூறவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

நாங்கள் திருச்சுற்று முடித்து வந்தபோது, என் வாழ்வரசியார் கோயிலின் தரைப்படம் வரைந்துகொண்டிருந்தார். பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். ஆறுமுகம் விமான ஆய்வுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். விமானம் பற்றிய தெளிவான கட்டடக்கலைக் கண்ணோட்டம் எனக்கு அப்போது கிடையாது என்றாலும், எது விமானம், எது கோபுரம் என்ற அடிப்படை உண்மைகளைப் பல நூல்களைக் கற்றதன் வாயிலாகப் பெற்றிருந்தேன். கந்தசாமி கொணர்ந்த ஏணியின் உதவியுடன் ஆறுமுகம் முகமண்டபக் கூரைமீது ஏறியிருந்தார். நானும் கந்தசாமியும் அவரைப் பின்பற்றி மேலே வந்தோம். விமானத்தில் இருந்த சுதை உருவங்களை அருகிருந்து பார்க்க இது உதவியது.

தொடக்கக் காலத்தில் சிற்பம், சுதையுருவம் பிரித்தறியத் தெரியாமல் இருந்தது. சுதை வடிவங்களையும், 'சிற்பங்கள்' என்ற சொல்லாட்சி கொண்டே பிழையாகக் குறித்திருப்பதை என்னைத் தொடர்ந்து படிப்பவர்கள் அறிவர். இந்த என் குழப்பங்களுக்குக் காரணம், கோயிற் கட்டடக்கலை பற்றிய தெளிவான வழிகாட்டு நூல்கள் ஏதும் தமிழிலோ, ஆங்கிலத்திலோ இல்லாமைதான்.

ஆங்கிலத்தில் அறிஞர் கூ ரா. சீனிவாசன் எழுதியுள்ள, 'தென்னிந் தியக் கோயில்கள்' எனக்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகே கிடைத்தது. அந்த நூலும் முழுமையான அளவில் கோயிற் கட்டடக்கலைச் செய்திகளைப் பெற்றிருப்பதாகக் கூறமுடியாது.

படித்த தரவுகளின் அடிப்படையில் கோயில் கட்டுமானங் களை அணுகியபோது பல சிக்கல்கள் நேர்ந்தன. எஸ். ஆர். பால சுப்பிரமணியத்தின் நூல்களையே பெரிதும் சார்ந்திருந்தமை யால், அவருடைய தாக்கம் கட்டுரைகளில் ஊடாடியது. அவர் செய்திருந்த பிழைகளை நானும் செய்யுமாறானது. களஆய்விற் குப் புறப்பட்ட ஒரு சில திங்கள்களிலேயே பிழைகளை உணரத் தொடங்கிவிட்டேன். ஆனால், அவற்றைச் சரிசெய்துகொள்ளச் சரியான ஆசிரியர்களோ, வழிகாட்டிகளோ, நூல்களோ கிடைக்கவில்லை.

அந்தச் சூழலில் கோயில்களே உதவின. ஒவ்வொரு கோயிலும் ஒரு புத்தகம். நான் சந்தித்த முதல் கோயிலில் இருந்து, இந்த நொடிவரை, நான் பார்த்துக் களித்த எந்தக் கோயிலும் பேசத் தவறியதே இல்லை. உறையூர்ப் பஞ்சவர்ணசாமிக் கோயிலில் ஏற்பட்ட அநுபவங்களைக் கோயிலுக்கும் எனக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடலாக உணரவில்லை என்பது உண்மைதான். ஆனால், மாடக்கோயில் பயணங்கள் மெல்ல, மெல்ல அந்த உணர்வை மலரவைத்தன. மிக விரைவிலேயே கோயில்கள் என்னை உறவாக்கிக் கொண்டமையைப் புரிந்து கொள்ள முடிந்தது. நேசிப்பவர்களை நோக்கி எதன் கைகளும் நீளமுடியும் என்பதற்கு நானே சான்றானேன்.

கோயில் கட்டடக்கலை, சிற்பங்கள் பற்றிக் கந்தசாமி ஏதும் அறியாதவர். என்றாலும், தெரிந்துகொள்வதில் அவருக்கு ஆர்வம் இருந்தது. சுதை உருவங்களைப் பார்த்து நான் குறிப்பெடுத்தபோது அமைதி காத்தவர், நான் பணி முடித்ததும், சிற்பவியல் பற்றிப் பல கேள்விகள் கேட்டார். சிவபெருமானின் திருவுருவங்கள், தலபுராணங்கள், ஊர்களில் வழங்கும் கதை களுக்கும் இறைத்திருமேனிகளுக்கும் உள்ள தொடர்புகள் எனப் பலவும் கேட்டவர், தமக்கு வழிபாட்டு மந்திரங்கள் தவிர வேறெதுவும் தெரியாது என்பதைத் தயக்கத்துடன் ஒப்புக் கொண்டார். தம் தந்தையார் சொல்லிக்கொடுத்த மந்திரங்களும்

செய்திகளுமே போதுமென்று தாம் இத்தனை நாள் இருந்த தாகவும், இனி நிறைய தெரிந்துகொள்ள விழைவு பிறந்துள்ள தாகவும் அவர் கூறியபோது என் கண்கள் நனைந்தன. இது போன்ற உணர்வுபூர்வமான அநுபவங்களைப் பல கோயில் களில் நான் சந்தித்திருக்கிறேன்.

இந்நிகழ்வு நடந்து, ஏறத்தாழ இரண்டாண்டுகளுக்குப் பிறகு, நண்பர் மருத்துவர் பொ. பெருமாளின் இளவல் நடராசனும் அவர் துணைவியார் தங்கமும் இல்லம் வந்திருந்தனர். கோயில்கள் பார்க்க விரும்பிய அவர்களுடன் என் குடும்பத் தாருடன் பயணமானேன். அனைவரும் தலைச்சங்காடு சென்றிருந்தோம். அப்போது கந்தசாமியை இரண்டாம் முறையாகச் சந்திக்கநேர்ந்தது. அந்த இரண்டாண்டுக் காலத்தில் அவரிடம் ஏற்பட்டிருந்த வளர்ச்சியை, மாற்றத்தை மிகவும் மகிழ்வு பொங்க அனுபவித்தேன். நடராசனுக்கு அவரே கோயிலைச் சுற்றிக் காண்பித்து விளக்கினார். என் அறிமுகம் அவருக்குப் பலவகையிலும் தூண்டுதலாக இருந்தமை பற்றிப் பேசினார். அன்றைய காலைப்பொழுது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு பொழுதாக அமையுமென்று புறப்பட்டபோது நான் நினைக்கவில்லை.

தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர் கோயிலில் இருந்து பத்துக் கல்வெட்டுகள் 1925ல் படியெடுக்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றுள் ஒரு கல்வெட்டுக்கூட இன்று அங்கு முழு நிலையில் இல்லை. திருப்பணியாளர்களின் கோரப்பசிக்கு இரையாகிவிட்ட அக்கல்வெட்டுகளின் துணுக்குகளைத் கந்த சாமிக்குக் காட்டியபடி, அவை கூறும் தகவல்களை அவருடன் பகிர்ந்துகொண்டேன்.

மாடக்கோயில் ஆய்வு தொடங்கியபோது எனக்குக் கல்வெட்டுப் படிக்கத் தெரியாது. அரிதின் முயன்று எழுத்துக் கூட்டிப் படிப்பேன். ஆனால், மாடக்கோயில் ஆய்வு நிறைவுற்ற போது, கல்வெட்டுகளைத் தொடராகப் படிக்குமளவு பயிற்சி ஏற்பட்டது. விடாமுயற்சியும் உழைப்பும் ஊக்கமும் இருந்தால் யாரும் கல்வெட்டுப் படிக்கலாம் என்பதற்கு என்னைவிடச் சிறந்த சான்று இருக்கமுடியாது. எந்தக் கல்வெட்டியல் நூலையும் கையில் எடுத்துக்கொண்டு போய்க் கல்வெட்டுப் படிக்கவில்லை.

எந்தக் கல்வெட்டாய்வாளரும் கல்வெட்டுப் படிக்கச் சொல்லித் தரவில்லை. உழைப்பும் ஊக்கமும் மட்டுமே துணைநின்றன. பரவலான படிப்புப் பின்புலமாய் இருந்து உதவியது.

கல்வெட்டுப் படிக்கப் பலரும் விழைகின்றனர். ஆனால், அது ஓர் அரிய செயல் என்ற எண்ணம் எப்படியோ எல்லார் உள்ளத்திலும் வேர்விட்டு வளர்ந்திருப்பதால், 'நம்மால் முடியுமா?' என்ற தயக்கத்துடன்தான் கல்வெட்டுகளை அணுகு கின்றனர். பார்வை நன்றாக உள்ள எவரும் மொழிப்பயிற்சி பெற்றிருந்தால் கல்வெட்டுகளைப் படிப்பது எளிமையானதே. ஒரு நாள், இரண்டு நாள் படிப்பில் கல்வெட்டு கண்ணுக்குள் வந்துவிடாது. தொடர்ந்து பயிலவேண்டும். கல்வெட்டுகளைத் தொடராகப் படிக்க ஏறத்தாழ ஓராண்டுப் பயிற்சி எனக்குத் தேவையாக இருந்தது. கண்கள் கல்லெழுத்துக்களுடன் பழகிக் கலக்கவேண்டும். அது சொல்லும் செய்திகளுடன் உள்ளம் உறவாடவேண்டும். கல்வெட்டுப் பாடங்கள் வெளியாகியுள்ள தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதிகளை ஆழப் பயின்றால் இவை இரண்டுமே எளிதில் வயப்படும்.

கல்வெட்டுப் படிப்பது எவ்வளவு எளிமையானதோ, அவ்வளவு கடினமானது அதிலுள்ள வரலாற்றைப் புரிந்து கொள்வது. படிப்பதற்கான பயிற்சியினும் இதற்கான பயிற்சி பல படிநிலைகள் கொண்டது என் தொடக்கக் காலக் கட்டுரை களைப் பார்த்தாலே, எத்தனை சிறுபிள்ளைத்தனமாக வரலாறு தொகுக்கத் தொடங்கியிருந்தேன் என்பது புலப்படும். கல்வெட்டுச் சொற்களின் ஆழமான பொருள் உணர்த்தலைப் பல்லாண்டுப் பயிற்சியும் பரவலான படிப்புமே தந்தன. அவற்றின் வழி என் பின்னாளைய கட்டுரைகள் வளப்பட்டன.

சங்காரண்யேசுவரர் கல்வெட்டுகளில் திளைத்து மகிழ்ந்த கந்தசாமி அருகிலிருந்த பெருமாள் கோயிலுக்கு எங்களை அழைத்துச்சென்றார். மங்கையாழ்வார் பாடல் பெற்ற அந்தத் திருத்தலம், 'நாண்மதியப் பெருமாள் கோயிலாய்' வரவேற்றது. அறங்காவலர் சுந்தரராமாநுஜர் அன்புடன் வரவேற்றார். பிரதிபந்தத் தாங்குதளம் பெற்ற அக்கோயில் விமானம் எளிய நிலையினது. ஆதித்தகரிகாலர், முதலாம் இராஜராஜர், முதலாம் இராஜேந்திரர் கல்வெட்டுகள் கோயிலில் சிதறிக்கிடந்தன.

அங்கிருந்து ஆறு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டதாகக் கல்வெட்டறிக்கைக் கூறுகிறது.

அக்கல்வெட்டுகள் அங்கிருந்து சுவடழிந்த திருச்சித்திரக் கூடத்து ஆழ்வார் கோயில், திருமதுரை ஆதிவராகர் கோயில், திருவாய்ப்பாடி ஆழ்வார் கோயில் இவற்றை அடையாளப்படுத் துவதுடன், கங்கைகொண்ட சோழபுரம், திருக்கோட்டியூர், மலைநாட்டுக் கொல்லம் இவற்றைச் சேர்ந்த வணிகர்கள் கோயிலுக்கு உவந்தளித்த கொடைகளையும் எடுத்துரைக்கின்றன. இக்கல்வெட்டுத் தரவுகள் சுந்தரராமாநுஜருக்குப் பேரதிசய மாக இருந்தன. தம் ஆட்சியின் கீழ் உள்ள கோயில் இத்தனை பெருமையுடையதா என்று வியந்து களித்தவர், அக்கல்வெட்டுத் தரவுகளைக் கட்டுரையாக்கி அளிக்குமாறு அன்புடன் வேண்டி னார். அவர் மகிழ்வை வெளிப்படுத்தும் விதமாக என் பிள்ளை களுக்கு அவர் தோப்பு மாம்பழங்களைத் தந்ததுடன் எங்களுக்குச் சுவையான இளநீர் தந்து போற்றினார்.

சுந்தரராமாநுஜர் வயது முதிர்ந்தவர். நல்ல வைணவர். அவரிடம் பழக்கமேற்பட்டபிறகு, இரண்டு முறை என் இல்லம் வந்து தங்கியுள்ளார். இரண்டு முறையும் என் வீட்டு வெளிக் கூடத்தில் தங்கி, அவரே சமைத்து உண்டார். அவர் அன்பும் மனித நேயமும் அளப்பரியன என்பதால், அவரது பழக்க வழக்கங்களில் நான் தலையிடவில்லை. என்னைத் தம் மகனி னும் அன்பு பாராட்டி நேசித்தார். அவர் துணைவியார் இறந்த பிறகு தளர்ச்சியுற்ற நிலையில் ஒருமுறை வந்திருந்தார் அதற்குப் பிறகு அவருக்கும் எனக்கும் தொடர்பு விட்டுப்போயிற்று. அவர் வேண்டுகோளை ஏற்று, கந்தசாமியையும் மகிழ்விக்கும்விதமாகச் செந்தமிழ்ச் செல்வியில் நான் எழுதிய கட்டுரைதான், 'சைவமும் வைணவமும் தழைத்தோங்கும் தலைச்சங்காடு'. 1983 செப்டம்பர், அக்டோபர் இதழ்களில் இக்கட்டுரை வெளியானது. இதழ்ப் படிகளை இருவருக்குமே அனுப்பியிருந்தேன்.

உழைப்பை மட்டுமே நம்பி, ஆர்வமே அடிப்படையாக, எந்தவித எதிர்பார்ப்புகளும் இல்லாமல் கோயில்களின் வாயில் களை நெருங்கிய எனக்கு இறைவன் மிகப் பெரிய நட்பு வட்டத்தை உருவாக்கித் தந்தான். தொடக்கத்தில் எனக்கு ஆழமான இறைநம்பிக்கை இருந்ததில்லை. கடவுள் உண்டு

என்ற கொள்கையன்தான் என்றாலும், கடவுளால்தான் எல்லாம் என்ற எண்ணம் ஒருநாளும் இருந்ததில்லை. கோயில்கள் என்னை மாற்றின. ஒவ்வொரு கோயிலிலும் எனக்கேற்பட்ட அநுபவங் கள் வரலாற்றை மட்டுமா நான் கற்குமாறு செய்தன! என் பண்புகளை மாற்றி அமைத்தன. என்னை மென்மைப்படுத்தின. விலைமதிக்க முடியாத உறவுகளை எனக்குப் பெற்றுத்தந்தன. தனி மனிதனாகப் பயணம் மேற்கொண்டவன் நாளடைவில் நிறுவனமானேன்

மாடக்கோயில் ஆய்வுகளை நன்கு திட்டமிட்டுச் செய்யத் தொடங்கியதாலும், அவற்றிற்கு அனைத்துத் தளங்களிலும் என் வாழ்வரசியின் முழு ஒத்துழைப்புக் கிடைத்தமையாலும் என் பணி சுமையாகாமல் சுகமாகவே இருந்தது. எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் முதலில் கோயில் செயல்அலுவலரைப் பார்ப்பதைக் கடமையாகக் கொண்டிருந்தேன். அவர்களிடம் அனுமதி பெற்று வருவதற்குள் என் வாழ்வரசி கோயில் திருச்சுற்றில் வாய்ப்பான இடத்தில் சிற்றுண்டி (வீட்டிலேயே செய்து எடுத்துவந்தது) அருந்த ஏற்பாடு செய்துவிடுவார் சிற்றுண்டி முடித்ததும் கோயிலின் வரைபடத்தில் அவர் ஆழ்ந்துவிடுவார். வளாகம் முழுவதையும் வரைந்து முடிக்க மதியம் ஆகிவிடும். ஆறுமுகம் என்னுடன் இருப்பார் என் தேவைகளைப் (ஏணி, கயிறு, விளக்கு, அளவை நாடா, ஒலிப்பதிவு, ஒளிப்படமெடுத்தல், இளநீர்) பொறுப்பாகக் கவனித்துக்கொள்வதும் என் பிள்ளைகளை மேற்பார்வையிடுவதும் அவர் பணிகள்.

ஆறுமுகம் உறவு வகையில் என் துணைவியின் சிறிய தந்தை. என்னினும் பத்தாண்டுகள் மூத்தவராயிருந்தாலும் உள்ளத்தால் என்னினும் பத்தாண்டுகள் இளையவராயிருந்த அவர், என் தொடக்கக் கால ஆய்வுகளின் வேரென்றால் அது மிகையாகாது. அவரிடம், 'இல்லை', 'முடியாது', 'கிடைக்காது' என்ற சொற்களே கிடையாது. எது சொன்னாலும், இந்நாளைய நண்பர் இனியவர் சு. சீதாராமன் போல, 'செய்துவிடலாம்' என்றுதான் சொல்வார்; செய்தும் விடுவார்.

ஒருமுறை, திருவையாறு கோயிலுக்குச் சென்றிருந்த போது ஒரு மண்டபத்தின் மீதேறிப் படமெடுக்க வேண்டி யிருந்தது 'ஏணி பெற்றுத் தாருங்கள்' என்று கூறிவிட்டு, நான்

பிற பணிகளில் மூழ்கிவிட்டேன். சற்று நேரம் கழித்து மண்டபத்திற்கு வந்தபோது ஏணியில்லை. எனக்குச் சினம் ஏற்பட்டது. தொலைவில் என் துணைவிக்கு உதவிக்கொண்டிருந்த ஆறுமுகம் என்னைக் கண்டதும் ஓடிவந்தார். 'ஏணி எங்கே?' 'நான்கு வீதியிலும் சுற்றிவிட்டேன். குருக்கள், செயல்அலுவலர் இவர்களிடமும் கேட்டுவிட்டேன் நல்ல ஏணி கிடைக்க வில்லை'. 'அப்படியானால், எப்படி இந்த மண்டபத்தின் மீது ஏறுவது.' 'என் மீது ஏறிப் படமெடுங்கள் உங்களுக்குத் தயக்கமில்லை என்றால் நான் ஏணியாகத் தயார்.'

எனக்குத் திக்கென்றது. அவர் மீது கால்வைத்து ஏற என் உள்ளம் இடம்கொடுக்கவில்லை. ஆனால், தேவையின் அவசியம் கருதிய அவர் என்னை விடுவதாக இல்லை. பலமுறை மறுத்தும், அவருடைய அன்பான வற்புறுத்தல் என் தேவைக்கு விடை கண்டது. அவர் குனிந்துகொள்ள, அவர் முழங்காலில் கால் வைத்துப் பின் தோளில் மறு காலை ஊன்றி மண்டபக் கபோதக் கூட்டைப் பிடித்து ஒரு வழியாக மேலே ஏறிவிட்டேன். ஆய்வு முடித்துப் படமெடுத்த பின்பு இறங்கவும் அவரே துணையானார். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஏணி கிடைக்காத பல கோயில்களில் அவரே ஏணியாக இருந்து என்னை ஏற்றிவிட்டிருக்கிறார்.

இது போல் எனக்கு ஏணியாகி அன்புகாட்டிய இரண்டு உள்ளங்களை இங்கு நான் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. என் தமக்கையார் சிவஅரசியின் மூத்த மகன் இராஜமுருகன் காஞ்சிபுரத்தில் பொறியியல் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த காலம். 1990 என்று நினைக்கிறேன். நானும் நளினியும் அவர் துணையுடன் காஞ்சிபுரம் மாவட்டக் கோயில்களில் ஆய்வு செய்துகொண்டிருந்தோம். திருத்தணி வீரட்டானேசுவரம் கோயிலுக்குச் சென்றபோது விமானத்தின் கிரீவ சிகரத்தில் இருந்த சிற்பத்தைப் படமெடுக்க விழைந்தேன். ஏணியேதும் கிடைக்கவில்லை. இராஜமுருகன், 'மாமா, என்னைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள்' என்று நன்கு பழகிய யானையைப் போல் குனிந்து, வளைந்து மிக எளிதாக என்னை மேலேற்றி விட்டதை என்றுமே மறக்கமுடியாது.

கருநாடக மாநிலத்தில் பட்டடக்கல் கோயில்களை ஆய்வு செய்தபோது ஒரு விமானத்தின் மேல் ஏறவேண்டியிருந்தது. உடனிருந்த தொல்லியல்துறைக் காவலர் தன்னையே ஏணி

யாக்கிக் கொண்டார். அவருடைய உதவியைப் போற்றிப் பணம் கொடுக்க முற்பட்டபோது, 'ஆய்விற்காகச் செய்த உதவி. பணம் பெறுவது தகாது' எனக்கூறி அந்த ஏழை மறுத்தார். பணம்கொடுக்க முற்பட்ட நான் கூனிக் குறுகிப்போனேன்.

இப்படிப் பணம் கொடுக்க முற்பட்டு நான் வெட்கப்பட்டுத் தலை தாழ்ந்த இடங்கள் பல. அவற்றைப் பிறகு பேசுவோம். 'மனிதம்' வாழ்கிறது எங்கோ, எப்படியோ, எல்லாத் தாக்குதல் களுக்கும் தப்பி இந்த மனிதம், இன்றளவும் இது போன்ற இனியவர்களின் வடிவில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. எதுவுமே செய்யாமல், எப்படிப் பணம் பறிக்கலாம் என்பதைச் சிலர் கலையாகவே பயின்று வாழும் கோயில் வளாகங்களில், செய்ய முடியாதவற்றை எல்லாம் மிக எளிதாகச் செய்துவிட்டு, எதுவுமே செய்யாதது போல் புன்னகையுடன் ஒதுங்கிக் கொள்ளும் இவர்கள்தான் என் போன்ற ஆய்வாளர்களுக்கு வாழ்க்கையைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள்.

ஆறுமுகம் பள்ளிக் கல்வியினர்தான். என்றாலும், அநுபவக் கல்வியில் பெரியவர். எந்தச் சிக்கலான சூழ்நிலையையும் மிக எளிதாக, இயல்பாக நேர்கொள்வார். ஏறத்தாழப் பத்தாண்டுகள் என்னோடு அவர் துணைவந்தார். அந்தப் பத்தாண்டு ஆய்வு வாழ்க்கையில் அவர் வழி நான் பெற்றவையும் கற்றவையும் ஏராளம். ஆய்வுசெய்கையில் கேள்வி கேட்க வருபவர்களை, தகவல் அறிய விழைபவர்களை, இடையூறாக இருப்பவர்களை அவர் கையாளும் விதத்தை நாளும் இரசிக்கலாம். கோயில் ஆய்வு செய்யும்போது இது போன்ற இடையீட்டாளர்களால் நம் நேரமும் உழைப்பும் பெரிதும் வீணாகும். தொடக்கக் காலங்களில் தொடர்பற்றுப் பேச்சு வளர்க்கும் இத்தகு இடையீட்டாளர்களிடம் நான் இழந்த விலைமதிப்பற்ற காலம் ஈடுசெய்ய முடியாதது. இதைக் காலப்போக்கில் உணர்ந்த ஆறுமுகம் அதற்குப் பிறகு யாரும் என்னை நெருங்கித் தொல்லை தராதபடி பார்த்துக்கொண்டார்.

ஒரு கண்கட்டு வித்தைக்காரர் தம் முன் கூடியிருக்கும் கூட்டத்தை வயப்படுத்துவது போல வருவாரையெல்லாம் தம்மைச் சுற்றி அமரவைத்து, அவரவர் தொழில், ஊர் விவகாரம், கோயில் நடப்புகள் என அனைத்துத் தகவல்களையும் பெற்றுக்

கொள்வார். கோயில் பற்றிய கேள்விகளுக்குத் தமக்குத் தெரிந்த வாறு, அறிந்த செய்திகளைப் பகிர்ந்துகொள்வார். என் துணைவி படம் வரைவதால், கூட்டம் அவரைப் பின்தொடர முயற்சிக்கும். அவர் எதற்காகப் படம் போடுகிறார், எதை வரைகிறார் என்றெல்லாம் அவர்களுக்கு இவரே விளக்கிக் கூட்டத்தைத் தடுத்தாட்கொள்வார். அவரிடம் ஒலிப்பதிவு கருவி, ஒளிப்படக் கருவி ஆகியன இருந்தமையால், கூட்டத்தைப் பேசவிட்டுப் பதிவுசெய்வது போலவும் சிறுவர்களைப் படமெடுப்பது போலவும் நாடகம் ஆடுவார். அவரிடம் பதிவுசெய்தவர்களும் படமெடுத்துக்கொண்டவர்களும் தமிழ்நாடெங்கிலும் உள்ள னர். ஆனால், அவர்களில் ஒருவர்கூட அந்தப் பதிவையோ, படத்தையோ கேட்டதுமில்லை, பார்த்துமில்லை.

'இது ஏமாற்று இல்லையா?' என்று தோன்றலாம். கோயில் களில் ஆய்வுசெய்யச் சென்றால்தான் இடையூறுகளின் முழு வீச்சை உணரமுடியும். கோயில்களில் ஆய்வுசெய்வது மிகத் துன்பமான அநுபவம். மருத்துவமனைக்கு விடுமுறைவிட்டு, பெரும் பொருள் செலவில் பயணம் மேற்கொண்டு ஆய்வுசெய்ய வரும்போது ஒவ்வொரு மணித்துளியும் வைரம்! சிந்தனைத் தொடரை, எண்ண ஒழுங்கை, பார்வையின் கூர்மையை இத்தகு இடையூறுகள் சிதைத்துவிடும். போகின்ற போக்கில் ஆய்வு செய்வாருக்கு இதைப் பற்றிய கவலைகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், ஆய்வைத் தவமாக நினைத்துச் செய்வாருக்கு ஒரு சிறு தொல்லைகூடப் பேரிடர்தான்.

தகுதிசான்ற அய்யங்கள், நியாயமான கேள்விகள் இவற்றை எதிர்கொள்வதில் எனக்கு எப்போதுமே தயக்கம் இருந்ததில்லை. 'தலவரலாறு' என்ற பெயரில் குப்பைகளையெல்லாம் நம் முன் கொட்டும்போது, அது தொடர்பாகப் பேச்சு வளர்க்கும்போது பொறுமை காப்பது மிகத் துன்பம். சில இடங்களில் பாதுகாப்புக் கூடக் கேள்விக்குறியாவதுண்டு. பெரும்பாலான கோயில்கள் ஆளரவமற்று இருந்ததால், மகளிர் ஆய்வர்களுக்குப் பல தொல்லைகள் நேர வாய்ப்பிருந்தது. என்னுடன் வந்த ஆய்வா ளர்கள் இவை பற்றியெல்லாம் அறிவுறுத்தப்பட்டிருந்தமை யால், சிக்கல்களைச் சந்தித்தாலும் துணிவுடன் எதிர்கொள்ள முடிந்தது. குடிகாரர்கள், கிண்டல் பேச்சுகள், 'கொடும்'

பார்வையினர் என இவர்கள் பலரகம். ஆறுமுகம் உடன்வந்த வரையில், அவர்கள் தொல்லைக்கெல்லாம் இடமில்லாதவாறு பார்த்துக்கொண்டார்.

ஆய்வு நாட்களில், மதிய உணவின் போதுதான் நானும் துணைவியும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்வோம். அது வரை அவரவர் வேலையில் முனைப்பாக இருப்போம். அய்யப் பாடுகள், திருத்தங்கள், முடிவுகள் என எல்லாமே மதிய உண விற்குப் பிறகுதான். அது போலவே, கோயிலை விட்டுப் புறப்படு வதற்கு முன்பும் வளாகத்தில் அமர்ந்து அன்றைய பணிகளை விவாதித்துக் கொள்வோம். ஒவ்வொரு கோயிலிலும் ஏராளமான அய்யங்கள் இருக்கும். ஆனால், அந்த அய்யங்களைத் தீர்ப்பார் தான் இருக்கமாட்டார்கள். பல சிற்பங்களை, அவை யாரை உணர்த்துகின்றன, எக்காலத்தன, எத்தகு அமைப்பில் உள்ளன என்பவையேதும் அறியாத நிலையிலேயே என் தொடக்கக் கட்டுரைகளில் வண்ணித்திருக்கிறேன்.

சிற்பங்களின் ஆடை, அணிகலன்களைக் கூர்ந்து நோக்கும் பார்வையை எனக்கு உண்டாக்கியவர் என் வாழ்வரசியே. அந்தப் பார்வையும் அதன் வழி மேற்கொண்ட பதிவுகளும் எனக்குப் பல அரிய தரவுகளைத் தந்தன. ஏறத்தாழ ஓராண்டிற்குள் பழஞ் சிற்பங்கள், நாயக்கர் காலச் சிற்பங்கள் இவற்றைப் பிரித்தறியக் கற்றுக்கொண்டேன். என்றாலும், சிற்பவியலில் தெளிவு தேவைப் பட்டது. கணபதி சிற்பியின் 'சிற்பச் செந்நூல்' பெறுவது அத்தனை எளிதாக இல்லை. சிராப்பள்ளியின் எந்தக் கல்லூரி நூலகத்திலும் அந்நூல் இல்லை. வழக்கம் போல் அரசுவின் உதவியை நாடினேன். அவரும் அரும்பாடுபட்டு முயன்று அந்த நூலைக் கண்டறிந்து எனக்கு வாங்கி அனுப்பினார். இது போன்ற தேவைகளை அரசு நிறைவேற்றாது போயிருந்தால் இந்தத் துறையில் நான் வளர்ந்திருக்கவே முடியாது. என் ஆய்வு வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த கற்பகத்தரு அவர். கேட்டதைக் கொடுத்தவர். கேட்டபோதெல்லாம் கொடுத்தவர்.

சிற்பச் செந்நூல் 1978ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. முப்பத்தாறு இயல்களில் அமைந்த அந்த நூல் படிம வகைகளைப் பற்றியும், அவற்றின் தலைக்கோலங்கள், அணிகலன்கள், ஆடை

கள், கருக்கணிகள், கை அமைதிகள், இருக்கை அமைதிகள், நிற்கும் கோலங்கள் இவை பற்றியும் மிக விரிவான தரவுகளைக் கொண்டுள்ளது. 321 பக்க அளவில் அமைந்திருக்கும் அந்த நூலைக் குறைந்தது பத்து முறையாவது படித்திருப்பேன். முதல் வாசிப்பில் பல இடங்கள் விளங்கவில்லை. மறு வாசிப்புகள் பயன் தந்தன. முக்கியமான இயல்களை ஒளியச்சுச் செய்து கள ஆய்வுகளின்போது கொண்டு சென்று, கோயில் சிற்பங்களை அவ்வியல்களின் துணையோடு ஆராய்ந்தபோதுதான் முழு விளக்கமும் கிடைத்தது. சிற்பவியலில் ஈடுபட விழைவாருக்கும் கோயிற் சிற்பங்களைப் பற்றிய விரிவான அறிமுகம் பெற விழைவாருக்கும் சிற்பச் செந்நூல் மிக அடிப்படையான ஒரு நூல்.

T. A. கோபிநாதராவின், 'Elements of Hindu Iconography' என்ற நூலைத் தூய வளனார் கல்லூரி நூலகத்தில் பார்த்தேன். அந்நூலும் சிறந்த வழிகாட்டியாகும். எனினும், அவ்விரண்டு நூல்களையுமே அடிப்படை நூல்களாக மட்டுமே கொள்ள முடியும். அவற்றையும் மீறிய பல நுணுக்கங்களைக் கோயிற் சிற்பங்கள் கொண்டுள்ளன. சிற்பங்களின் கை அமைதிகளில் எனக்கேற்பட்ட பல அய்யங்களை இந்த இரண்டு நூல்களாலுமே தீர்க்கக்கூடவில்லை. கை அமைதிகள், உடல்நிலைகள், பாதநிலைகள், ஆடல்தோற்றங்கள் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தை நாட்டிய சாத்திரமே தந்தது. ஆனால், அதற்குப் பல மாதங்கள் காத்திருக்கச் செய்தது காலம்.

மாடக்கோயில் ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த காலத்துத் தாம் உறுப்பினராக இருந்த திருவரங்கம் அரிமா சங்கத்தில் என்னை உறுப்பினராக்கினார் மருத்துவர் சி. கேசவராஜ். எந்த அமைப்பில் இருந்தாலும் அந்த அமைப்பின் கொள்கைகளுக்காக உழைப்பது என் இயல்பு. அரிமா சங்கத்தின் கொள்கைகளை கேசவராஜ் விளக்கியபோது எனக்குப் பிடித்திருந்தது. அதனால்தான் சேர்ந்தேன். அந்த அமைப்பில் இருந்த முதல் ஆண்டில் நான் புதியவன் என்பதால் எந்தப் பொறுப்பும் தராமல் இருந்தார்கள். வாரந்தோறும் நடக்கும் கூட்டங்களுக்கு மட்டும் சென்றுவந்தேன். அந்தக் கூட்டங்களுள் பெரும்பான்மையானவை சுவையற்றவையாய் இருந்தன. இருந்தாலும் தொடர்ந்து சென்றேன்.

இரண்டாம் ஆண்டில், என்னைக் காது, மூக்கு, தொண்டை நலம் காக்கும் திட்டமொன்றின் அமைப்பாளராகப் போட்டார்கள். எனக்கு அது ஏற்புடையதாக இல்லை. நான் கண் மருத்துவன் என்பதை உணர்த்தி, அந்தத் திட்டத்திலிருந்து விலகிக்கொண்டேன். பொதுநலத் திட்டத்தில் உறுப்பினராக்கினார்கள். ஏற்றுக் கொண்டேன். அத்திட்டத்தின் சார்பில் நடந்த ஒரு கூட்டத்தில் நானும் பேசவேண்டியிருந்தது. அந்தக் கூட்ட நிகழ்வை ஒலிப் பதிவுசெய்யச் சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து மீ. அரங்கசாமி வந்திருந்தார். வானொலியில் அறிவியல், மருத்துவம் சார்ந்த நிகழ்ச்சிக்கு அவர் பொறுப்பாளராக இருந்தார். என் உரையைப் பதிவு செய்த அவர், நிகழ்ச்சி முடிந்ததும் என்னை அணுகி, என் உரையைப் பாராட்டி மகிழ்ந்தார்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு அவரிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. திருச்சிராப்பள்ளி வானொலியில் கண் மருத்துவம் பற்றி இரண்டு பொழிவுகள் நிகழ்த்தக் கேட்டிருந்தார். ஒப்புக்கொண்டு உரை தயாரித்துச் சென்றிருந்தேன். குரல் சோதனை முடிந்ததும் பதிவு நிகழ்ந்தது. எந்தத் தடங்கலும் இல்லாமல் உரைகள் பதிவானதில் அவருக்கு மெத்த மகிழ்ச்சி. என் குரல் வளத்திலும் செய்திச் செறிவிலும் அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அவருடைய அரவணைப்பின் காரணமாகத் தொடர்ந்து இருபதாண்டுகள் வானொலியில் பேச வாய்த்தது. ஒவ்வோர் ஆண்டும் பல பொழிவுகள் அமைந்தன. இப்பொழிவுகள், சிராப்பள்ளி வானொலி கேட்கப்பட்ட மாவட்டங்களில் எல்லாம் என்னைக் கொண்டு சேர்த்தன. அதனால் எனக்குப் பெரும் பயன் விளைந்தது.

சிக்கல் சிங்காரவேலர் கோயிலை ஆய்வுசெய்யச் சென்ற போது கோயில் அலுவலகத்தில் இருந்தவர்கள் செயல்அலுவலரின் அநுமதியைப் பெறவேண்டும் என்றனர். செயல்அலுவலர் வீட்டில் இருப்பதாகவும் பத்து மணிக்குத்தான் அலுவலகம் வருவாரென்றும் அதுவரை காத்திருக்குமாறும் கூறினர். அப்போது காலை மணி எட்டு. இரண்டு மணி நேரம் வீணாவதை விரும்பாத நான், அவர்கள் அநுமதியுடன் செயல் அலுவலர் இல்லம் சென்றேன். அவர் என் பெயரைக் கேட்டதுமே எழுந்து வரவேற்றார். 'உங்கள் குரலைப் பலமுறை வானொலி

யில் கேட்டிருக்கிறேன். தெளிவாகவும் வழிகாட்டலாகவும் பேசு கிறீர்கள் உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி. என்ன வேண்டும் சொல்லுங்கள்' என்றார். அந்த அன்பான வரவேற்பு என்னை மகிழ்வித்தது. சிக்கல் கோயிலை நன்கு ஆய்வுசெய்ய அவர் துணை யிருந்தார். சிராப்பள்ளித் திரும்பியதும் நண்பர் மீ. அரங்க சாமிக்குத் தொலைப்பேசி செய்து செய்தியைக் கூறி அவருக்கு நன்றி கூறினேன். அவரால்தான் அன்று என் பணி எளிதானது என்று கூறியபோது, அவரும் மகிழ்ந்தார்.

கண்டியூர் வீரட்டானேசுவரர் கோயில் ஆய்வுக்கு மதிய வேளையொன்றில் நான், வாணி, நளினி சென்றிருந்தோம். மெய்க்காவல் கதவை உட்புறம் பூட்டிக்கொண்டு படுத்திருந்தார். கதவுகளின் இடைவெளி வழியே அவரைக் காணமுடிந்தது. எங்களைப் போல் இரண்டு குடும்பத்தார் கோயிலைக் காண அங்குக் காத்திருந்தனர். நான், அவரை எழுப்புமாறு போல, இரண்டு மூன்று முறை குரல் கொடுத்தேன். மெய்க்காவல் எழுந்து வந்தார். அப்போது அருகிலிருந்த குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன், 'நீங்கள் டாக்டர் கலைக்கோவனா?' என்றான். எனக்கு வியப்பு மேலிட்டது. 'ஆமாம்' என்றேன். 'என்னை எப்படிக் கண்டு பிடித்தாய்?' என்று கேட்டபோது, 'உங்கள் குரலைத்தான் வானொலியில் நிறைய கேட்டிருக்கிறோமே, உங்கள் பேச்சு எனக்குப் பிடிக்கும்' என்றான். எனக்கு ஒரு நிமிடம் எதுவும் புரிய வில்லை. வானொலியின் மகிமையை, முழுவீச்சை அன்றுதான் முழுவதுமாய் உணர்ந்தேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 1991 பிப்ருவரி 2 - 4ல் கல்வெட் டுத் துறையின் சார்பில் பிராமி கருத்தரங்கம் ஒன்று நிகழ்ந்தது. அக்கருத்தரங்கில் நானும் கட்டுரை வாசித்தேன். இலங்கையில் உள்ள பிராமி கல்வெட்டுகளின் மொழி குறித்து மாலத்தீவுகளில் பணியாற்றிக்கொண்டிருந்த அறிஞர் பொன்னம்பலம் இரகுபதி கட்டுரை வாசித்தார். அந்தக் கட்டுரை எனக்குப் பிடித்திருந்தது. அவரை நான் அறியேன். என்றாலும், அக்கட்டுரையில் ஒரு படி பெற விரும்பினேன். அவரை அணுகி என் ஆர்வத்தைத் தெரிவித் தேன். என்னை அன்புடன் எதிர்கொண்டவர், 'உங்களுக்குத் தான் என்னைத் தெரியாது. ஆனால், சிராப்பள்ளி வானொலி வழி உங்களை நான் நன்கறிவேன். அருமையான பொழிவுகள்.

நிறைய கேட்டிருக்கிறேன்' என்று கூறி, என் பொழிவுகள் பலவற்றை நினைவுகூர்ந்து பேசினார். ஆய்வுக்கட்டுரை முழுவதை யும், ஏறத்தாழ 80 பக்கங்கள், எனக்கு ஒளியச்சுச் செய்தளித்தார். அன்றும் வானொலியின் வீச்சு என்னை வியப்படைய வைத்தது.

சிராப்பள்ளி வானொலியில் விஜய திருவேங்கடம் தமிழ்ப் பொழிவுகளுக்கான நிகழ்ச்சிப் பொறுப்பாளராக இருந்தார். என் அறிவியல் பொழிவுகளைக் கேட்க நேர்ந்த அவர், என்னைப் பொதுத் தலைப்பொன்றின் கீழ்ப் பேசுமாறு அழைத்திருந்தார். 'திரைப்படங்களும் தேசிய உணர்வும்' தொடர்பான தலைப்பு அது. தயக்கத்துடன் அவர் அறையை அடைந்தேன். துணி வூட்டிய அவர், தாம் எதிர்பார்ப்பது பற்றிக் கூறினார். ஆங்கிலப் பேராசிரியர் ஆல்பர்ட், தமிழ்ப் பேராசிரியர் பொன்மதி, நான் உரையாடினோம். அரைமணி நேரக் கலந்துரையாடல். இயல் பாகவும் நன்றாகவும் கருத்துவளத்துடனும் அமைந்த அந்நிகழ்ச்சி குறித்து விஜய திருவேங்கடம் மிகவும் மகிழ்ந்தார். அதுதான் என் முதல் பொது உரை. அதன் வழிச் சிராப்பள்ளி வானொலி யின் செல்லப்பிள்ளையானேன். தே. சந்திரன், அ. அருளப்பன், சி. சுந்தரமூர்த்தி, சீனிவாசராகவன், இளசை சுந்தரம் என அருமை யான நிகழ்ச்சிப் பொறுப்பாளர்கள் எனக்கு அமைந்தார்கள். அவர்களுடன் எனக்கு நேர்ந்த அநுபவங்கள் ஒவ்வொன்றும் சுவையானவை.

தே. சந்திரன் இனிமையான மனிதர். தமிழார்வலர். நல்ல நிகழ்ச்சிகளை வானொலியில் வடிவமைத்துத் தரவேண்டும் என்பதைக் குறிக்கோளாய்க் கொண்டிருந்தார். அவருடைய 'இலக்கிய ஏடு' நிகழ்ச்சி வானொலியில் புகழ் பெற்ற நிகழ்ச்சி யாய்த் திங்கட்கிழமை இரவுகளில் ஒலிபரப்பாகிக் கொண் டிருந்த காலம் அது. விஜய திருவேங்கடத்தின் வாயிலாய் அமைந்த கலந்துரையாடல், என்னைச் சந்திரனுக்கு அறிமுகப் படுத்தியது. இலக்கிய ஏட்டில் ஒரு நிகழ்ச்சி நான் செய்ய வேண்டுமென விழைந்தார். 'இறைக்கோயில்களும் இலக்கியங் களும்' என்ற தலைப்பில் பத்து நிமிட உரைக்கு வாய்ப்பளித்தார். நானும் அவரும் கலந்து பேசியே உரையை வடிவமைத்தோம். அவருடைய ஊடக அனுபவம் என்னை வளப்படுத்தியது. அந்தப் பொழிவு அருமையாக அமைந்ததால், சந்திரன் என்னைத் தொடர்ந்து பயன்படுத்திக்கொள்வதில் ஆர்வம் காட்டினார்.

மாடக்கோயில்களில் ஆய்வுசெய்து கொண்டிருப்பது பற்றிக் கூறியதால், அது பற்றி ஓர் உரை நிகழ்த்தக் கேட்டார். 'மலைக்கவைக்கும் மாடக்கோயில்கள்' என்ற தலைப்பில் உரை அமைந்தது. இவ்உரை வாய்ப்புகளால் சந்திரனுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பமைந்தது. சந்திரனின் துணைவியார் பெயர் நிலா. அவர்களுக்கு இரண்டு மகன்கள். ஒரு மகள்.

திட்டமிடும்போதுகூட யோசனைகள் கேட்கும் அளவிற்குப் பண்பாளர் சந்திரன். அவருடன் இணைந்து நான் நிகழ்த்திய அனைத்து நிகழ்ச்சிகளுமே சிறப்பானவை என்றாலும், என்றும் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் சிலவுண்டு. அவற்றுள்ளும் குறிப்பிடத்தக்கது, 'சுவடழிந்த கோயில்கள்' என்ற தலைப்பில் அமைந்த உரை. கல்வெட்டுகளில் மட்டுமே வாழும் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களைக் கண்டறிந்து அவற்றின் பிறப்பை, சிறப்பை, மறைவைத் தொகுத்துக் கூறிய அந்த உரை 8. 1. 1984ல் அரைமணி நேர ஒலிபரப்பாக அமைந்தது. நூற்றுக்கணக்கான வானொலி உரைகளை நான் நிகழ்த்தியிருந்தபோதும் என் உள்ளத்தில் நிறைந்திருக்கும் உரைகள் சிலவுண்டு. அவற்றுள் 'சுவடழிந்த கோயில்கள்' உரையும் ஒன்று. மக்களின் அலட்சியம் காரணமாக எத்தனை உன்னதமான கோயில்களை இந்த மண் இழந்திருக்கிறது என்பதை நினைக்கும்போதெல்லாம் உள்ளம் வலிக்கிறது.

தமிழ்நாட்டு மக்களில் பலர் இல்லாததைப் பற்றி ஏராளமாகப் பேசுவார்கள். இருப்பதைக் காப்பாற்றக் கருத்துக் கொள்ள மாட்டார்கள். கற்பனைகளிலும் கதைகளிலும் ஆர்வம் காட்டும் அந்த உணர்ச்சிப் பிழம்புகளுக்கு உண்மைகள் கசக்கும். அந்த உண்மைகளைச் சொல்பவர்களை அறவே பிடிக்காது. அறியப் படாத பள்ளிப்படைகளுக்குப் பல்லக்குத் தூக்கும் அவர்களுக்கு, இருக்கும் பள்ளிப்படைக் கோயில்களைக் காப்பாற்றும் எண்ணமோ, முயற்சியோ கிஞ்சித்தும் இல்லை. பஞ்சவன் மாதேவியின் கண்ணெதிர்ப் பள்ளிப்படை நலிந்துகொண்டிருப் பதைக் கண்டும் அதைக் காப்பாற்றச் சுண்டுவிரலைக்கூட உயர்த்தாத அந்த உள்ளங்கள், உடையாளூரில் அறியப்படாத ஒரு பள்ளிப்படையை அறியப்பட்டது போல் வெளிச்சமிட எவ்வளவு துடித்துப் பணியாற்றுகின்றனர் என்பதை நினைக்கும்

போது வருந்தாமல் இருக்கமுடியவில்லை. வரலாற்றுக் கண்ணோட்டமே இல்லாத இந்த உணர்வுபூர்வமான வெளிப்பாடுகள்தான் தமிழ்ப் பண்பாட்டின் நலப்படுத்தமுடியாத நோய். எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் 'மெய்ப்பொருள்' காணவிழையாத அவர்களால்தான் தமிழ்நாட்டு வரலாறு தலைதூக்காமல் வீழ்ந்து கிடக்கிறது.

ஒரு கண்மருத்துவனாகச் சிராப்பள்ளியில் குடியமர்ந்ததும் நான் பேச அழைக்கப்பட்ட முதல் கல்லூரி புனித சிலுவைக் கல்லூரி. அங்கு நடந்த திருச்சிராப்பள்ளி மாவட்ட மகளிர் கல்லூரிகளுக்கான சொல்லாற்றல் போட்டிக்கு நடுவர்களுள் ஒருவராகச் சென்றிருந்தேன். அங்குதான் பொறிஞர் சின்னதுரையைச் சந்தித்தேன். அன்பான, நேர்மையான மனிதர். வளனார் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவரும் எங்கள் குடும்ப நண்பருமான அமரர் பேராசிரியர் இரம்போலா மஸ்கரேனஸ் தலைமை நடுவராக அமைந்தார். அந்நிகழ்ச்சியில் தீர்ப்பைக் கூறி உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சரியாகச் செய்தமையை மாணவியரின் கையொலி உணர்த்தியது.

ஓர் ஆய்வாளனாக அடையாளப்பட்ட பிறகு என்னை அழைத்துச் சிறப்பித்த முதல் கல்லூரி தேசியக்கல்லூரி. வரலாற்றுத்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் அய்யம் பெருமாள் அழைப்பையேற்றுச் சென்றிருந்தேன். அவரது பரவலான படிப்பாற்றல் தெரிந்து மகிழ்ந்தேன். 'படிப்பது பேராசிரியர் மரபன்று' என்ற கொள்கை வீரர்களுக்கிடையில் அய்யம்பெருமாள் தனித் தீவாக இருந்தார். பின்னாளில் அதே கல்லூரிக்குப் பலமுறை நான் அழைக்கப்பட்டமைக்கும் அவரே காரணர். அவருடைய முயற்சியால் தேசியக்கல்லூரி வரலாற்றுத் துறை நூலகம் பல அரிய நூல்களைப் பெற்றிருந்தமையை இங்குக் குறிப்பிடவேண்டும்.

வளனார் கல்லூரி வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள் சுந்தரராஜன், அருமைராஜன் இருவரும் நண்பர்களானமையின், அத்துறை நிகழ்த்திய கூட்டங்களுக்குச் செல்வதுண்டு. அப்படி ஒருமுறை சென்றபோதுதான் பேராசிரியர் க. ப. அறவாணன் நண்பரானார். அன்றைய கூட்டத்தின் சிறப்புப் பொழிவாளர் க. ப. அறவாணன்தான். இயேசுசபையினரின் காகிதக் குறிப்பு

களை அடிப்படையாகக் கொண்டு நாயக்கர் - மைசூர்க்காரர்கள் இடையில் நிகழ்ந்த மூக்கறுப்புப் போர் பற்றிக் க. ப. அறவாணன் பேசினார். பொழிவு முடிந்ததும் அருமைராஜன் ஒரு கேள்வி எழுப்பினார். அருமைராஜனும் இயேசுசபைக் குறிப்புகளைக் கொண்டு ஆய்வு செய்தவர் என்பதால் இருவர் விவாதங்களும் சுவையாக அமைந்தன. மூக்கை அறுத்த பிறகு உயிரோடு வாழ 'முடியாது' என்று ஒருவரும் 'முடியும்' என்று மற்றொருவரும் வாதிட்டனர் அந்த நேரம் நான் இடையிட்டேன் ஒரு மருத்துவன் என்ற முறையில் மூக்கின் அமைப்பு விளக்கி, அதன் முன்பகுதியை மட்டுமே அறுக்கமுடியும் என்பதைச் சுட்டி, முன்பகுதி மட்டும் அறுக்கப்படுவதால் உயிரிழப்பு நேராது என்பதையும் புரியவைத்து அமர்ந்தேன். அந்த விளக்கம் ஏற்கப் பட்டதால் விவாதம் முடிவுக்கு வந்தது. அறவாணன் நண்பரா னார். அன்று இரவு என் வீட்டில்தான் அவர் உணவருந்தினார்

பேராசிரியர் அறவாணன் ஊக்குவிப்பதில் இணையற்றவர் அவருடைய அன்பான அரவணைப்பில் எழுச்சி பெற்ற பல இளைஞர்களைப் பின்னாளில் சந்தித்திருக்கிறேன். நான் இதுநாள்வரை சந்தித்தவர்களுள் இளைஞர்களைத் தட்டிக் கொடுத்து வளர்ப்பதில் அவருக்கு இணையான ஒரு பேராசிரிய ராக மா. ரா. அரசுவை மட்டுமே குறிப்பிடமுடியும். பேராசிரியர் க. ப. அறவாணனுடன் அளவளாவியபோது ஆய்வுகள் பற்றிக் கேட்டறிந்தார். என் பரவலான படிப்பு அவரை வியக்க வைத்தது. அவர் நூல்கள் இரண்டைப் பரிசளித்தார். அவருடைய அன்பான அணுகுமுறை எனக்குப் பிடித்தது. அப்போது அவர் புதுச்சேரிப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தார். நான் இலக்கிய இளவல் படிப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தவர், கல்வி தொடர்பாக எது வேண்டுமாயினும் கேட்குமாறு கூறினார்.

என்னுடைய தொடக்கக் கால வானொலி உரைகள் சிராப் பள்ளி மாவட்டத்தில் பரவலான ஓர் அறிமுகத்தை எனக்கு வழங்கியிருந்தன. அதன் விளைவாகச் சிராப்பள்ளிக்குப் பத்துக் கிலோமீட்டர் தொலைவிலிருந்த எட்டரையைச் சேர்ந்த செல்வ ராஜ், பாலசுந்தரம் எனும் இரு இளைஞர்கள் 1981ல் என்னைச் சந்தித்தார்கள். மருத்துவக் கல்லூரியில் பயிலும் போது 'தமிழ்க்

குடும்பம்' என அடையாளப்பட்டிருந்த குழுவில் ஒருவரான மருத்துவர் துரையரசனின் அன்புத் தம்பியர் அவர்கள். செல்வ ராஜ் சிராப்பள்ளி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். பாலசுந்தரம் வேளாண்மையில் இருந்தார்.

அவர்கள் ஊருக்குப் பக்கத்தில் இருந்த, 'குழுமணி' எனும் சிற்றூரின் வாய்க்கால் கரையில் ஒரு புத்தர் சிலை புதையுண் டிருப்பதாகவும் அதைப் பற்றி ஆராய்ந்து கூறவேண்டும் என்றும் அவர்கள் என்னை அன்புடன் அழைத்தனர். நானும் அன்றே அவர்களுடன் சென்று அந்தப் புத்தர் சிற்பத்தைப் பார்வையிட் டேன். மிகப் பெரிய சிற்பம். ஆனால், இடுப்பளவில் உடைபட் டிருந்தது. படமெடுத்த பிறகு உடைந்த பகுதியை அங்குத் தேடுமாறு அவர்களை வேண்டிக்கொண்டு, ஊர் திரும்பினேன்.

ஓர் அழகான பழைமையான புத்தர் சிற்பம் அது என்பதை மட்டுமே அப்போது என்னால் உணரமுடிந்தது. பழைமையான சிற்பங்களைப் பாதுகாப்பது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் பொறுப்பென்று அறிந்திருந்தமையால், சிராப்பள்ளி யில் பொன்னகர் பகுதியில் இருந்த தொல்லியல்துறை அலுவலகம் சென்றேன். அலுவலகத்தில் இருந்த நடராஜன், கிருஷ்ணன் இருவரும் வரவேற்று அமரச்செய்தனர். ஓர் அரசு அலுவலகத்தில் கிடைத்த அந்த வரவேற்பு இன்ப அதிர்ச்சி தந்தது. தேவை கருதி வருவாரைக் கிஞ்சித்தும் மதிப்பளிக்காது நடத்து வதையே கடமையாகக் கொண்டிருந்த பல அரசு அலுவலக நடைமுறைகளுக்கு முற்றிலும் மாறாக இங்குப் பரிவும் கவனிப்பும் இருந்தமையால், அரசு அலுவலகந்தானா என்று ஒருமுறைக்கு இருமுறை கேட்டறிந்தேன்.

புத்தர் சிற்பம் பற்றிய தகவல் தெரிவித்தபோது, பதிவு அலுவலர்தான் இது குறித்து முடிவெடுக்க வேண்டுமென்றும் அவர் வெளியில் சென்றிருப்பதாகவும் இரண்டு நாட்களில் வந்து விடுவாரென்றும் புத்தர் சிற்பம் கண்டுபிடிப்புப் பற்றிய எழுத்து மூலமான தகவலை அவரிடம் தரலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டேன். எனக்கு அப்போது தெரியாது, அந்தப் பதிவுஅலுவலர் இனிய நண்பராகப் போகிறார் என்று.

இரண்டு நாட்களுக்குப் பிறகு பதிவுஅலுவலர் அ. அப்துல் மஜீதைச் சந்திக்கும் வாய்ப்பமைந்தது. அவர் ஏற்கனவே என்னைப் பற்றி அறிந்திருந்தார். என் பெரிய அண்ணன் இதழியல் அறிஞர் அமரர் மா. ரா. இளங்கோவனின் கெழுதகை நண்பராகவும் என் இளவல் மா. ரா. அரசுவை நன்கு அறிந்தவராகவும் அவர் அமைந்துவிட்டதால் நான் மிகவும் மகிழ்ந்தேன். புத்தர் சிற்பம் பற்றிய தகவலைக் கூறினேன். என் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். இது குறித்துத் தாம் எதுவும் செய்யமுடியாது என்றும் கடிதத்தைத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி விடுவதாகவும் தெரிவித்தார். என்னோடு வந்து சிற்பத்தைப் பார்க்க ஒப்புதல் தந்தார். அதுவே எனக்கு மகிழ்வு தந்தது.

நானும் அவருமாய் ஒருநாள் சென்று அச்சிற்பத்தைக் கண்டோம். வாய்க்கால் கரையில் புதைந்திருந்த சிற்பத்தைப் பார்த்ததும் அவர் நம்பிக்கை இழந்தார். 'இதை எப்படிச் சிராப் பள்ளிக்குக் கொணரமுடியும், கடினம்தான்' என்று கூறினார். அவரது கூற்றால் நான் தளர்வடைந்தேன். 'இங்கிருந்தால் சிற்பம் வீணாகிவிடும். எப்படியாவது சிராப்பள்ளிக்குக் கொண்டு சென்று அங்குள்ள அருங்காட்சியகத்தில் ஒப்படைத்துவிட லாம்' என்று வேண்டினேன். அவர் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார். அந்தப் பார்வையில், 'என் கருத்தும் அதுதான். ஆனால், அதைச் செய்யும் ஆற்றல் எனக்கு இல்லை' என்ற செய்தி வெளிப்பட்டது.

தலைமை அலுவலகத்திலிருந்து செய்தி வரும் என்று நானும் அவரும் சில மாதங்கள் காத்திருந்தோம். என்ன காரணத் தாலோ பதிலே வரவில்லை. இதற்கிடையில் என் இனிய நண்ப ரும் சிராப்பள்ளி மாலைமுரசு ஆசிரியருமான இரா. ஜேசுவடி யான் என் மருத்துவமனைக்கு வந்திருந்தார். அப்போது புத்தர் சிற்பத்தின் ஒளிப்படம் என் மேசை மீது இருந்தது. டாக்டர் மா. இராசமாணிக்கனார் இலக்கிய மன்றப் போட்டிகள் வழி எனக்கு நண்பராகியிருந்த இரா. ஜேசுவடியான் இனியவர்; நேர்மையானவர்; தமிழ் ஆர்வலர்.

என் மேசை மீது இருந்த புத்தர் படத்தைப் பார்த்தவர், 'இது எங்கே இருக்கிறது' என்று கேட்டார். நான் நடந்தது அனைத்தும் கூறினேன். உடனே அவர், 'இதைப் பற்றிக் கவலுறா

தீர்கள். இந்தப் படம் என்னிடம் இருக்கட்டும். நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று கூறியதுடன் படத்தையும் கொண்டு சென்றார். அடுத்த நாள் மாலை நான் மருத்துவமனை வந்த போது வரவேற்பறையில் தினமலரைச் சேர்ந்த கோவிந்தசாமி, தினத்தந்தி சீனிவாசராகவன் அமர்ந்திருந்ததைப் பார்த்தேன் எனக்கு ஒரே வியப்பு. விசாரித்தபோது புத்தர் செய்தி அன்று மாலைமுரசில் படத்துடன் வெளியாகியிருப்பதாகவும் அது பற்றி மேலும் தகவல் அறியவே வந்ததாகவும் அவர்கள் கூறினர். உடன் மருத்துவமனை உதவியாளரை அழைத்து அன்றைய மாலை முரசு இதழை (9. 6. 1982) வாங்கிவரச் சொன்னேன். அவர் ஏற்கனவே வாங்கி வைத்திருப்பதாகக் கூறித் தந்தார். செய்தித் தாளின் இரண்டாம் பக்கத்தில் புத்தர் இருந்தார். செய்தியை அப்படியே இங்குத் தந்துள்ளேன்.

*'திருச்சி அருகே பழங்கால புத்தர்சிலை கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. இதுபற்றிய விவரம் வருமாறு:*

*திருச்சியை அடுத்துள்ளது எட்டரை கிராமம். இங்கு வாய்க்கால் அருகே மண்ணில் பழங்கால புத்தர் சிலை ஒன்று புதைந்து கிடந்தது. மண் சரிய, சரிய இந்த சிலை வெளியே தெரிய தொடங்கியது. இந்த சிலையை பதிவாளர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் செல்வராஜும் அவரது தம்பி பாலசுந்தரமும் கண்டுபிடித்தார்கள்.*

*இந்தத் தகவல் கோவில் கலைவரலாறு பற்றி ஆராய்ச்சி நடத்தி வரும் டாக்டர் இரா. கலைக்கோவனிடம் தெரிவிக்கப் பட்டது.*

## *குடுமி*

*சிலைக் கிடந்த வாய்க்காலை 'குடுமி' என்று அழைப்பது பழக்கமாகும். புத்தர்சிலை அங்கு இருந்ததால் 'புத்த குடுமி' என்று அழைக்கத் தொடங்கிவிட்டார்கள். நாளடைவில் இந்த பெயர் மாறி 'பூதக்குடுமி' என்றாகிவிட்டது. புத்தர் சிலையின் கலையமைப்பை பார்க்கும் போது கி. பி. 10-வது நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சிலையின் உயரம் 5 அடி. சிலைக்கு தலைக்கு மேலே போதிமரம் செதுக்கப்பட்டுள்ளது. சிலையின் வலதுகை உடைந்துவிட்டது.*

*மேலும் அந்த இடத்தைத் தோண்டிப்பார்த்தால் முழு சிலையை காணமுடியும். இந்த சிலை கண்டுபிடிக்கப்பட்டு இருப்பது குறித்து திருச்சிராப்பள்ளி தொல்பொருள் பதிவு துறையினருக்கும் சென்னை தொல்பொருள் ஆய்வுத்துறையின் இயக்குநர் டாக்டர் நாகசாமிக்கும் தெரிவிக்கப்பட்டு இருப்ப தாக டாக்டர் கலைக்கோவன் தெரிவித்துள்ளார்.'*

செய்தித்தாளில் வெளியாகும் செய்தி வானொலியைப் போலவே வலிமையானது என்பதை அன்றுதான் உணர்ந்தேன். பல நண்பர்கள் தொலைப்பேசியில் பாராட்டினார்கள். அது வரை அறிந்திராத பலர் அன்று எனக்கு அறிமுகமாயினர். தினத்தந்தி, தினமலர் இதழ்கள் அடுத்தடுத்த நாட்களில் அந்தச் செய்தியைத் தங்களுக்கே உரிய முறையில் வெளிப்படுத்தியிருந் தன. மஜீது அலுவலகத்திற்குத் தொலைப்பேசி கிடையாது என்பதால் செய்தியிதழின் படிகளோடு அங்குச் சென்றேன். அவர் கேள்விப்பட்டிருந்தாரே தவிர செய்தியிதழைப் பார்க்க வில்லை. பார்த்ததும் மகிழ்ந்தார். 'எடுத்துவிடலாமா?' என்று கேட்டேன். 'மேலிடத்து உத்தரவில்லாமல் முடியாது' என்றார். 'உத்தரவு எப்போது வரும்? ஏற்கனவே பல மாதங்களாகி விட்டனவே' என்றேன். 'வராது' என்பது அவருக்குத் தெரிந் திருந்தது. இருந்தாலும் என் ஆர்வத்தைக் குறைக்க விரும்பாமல் 'வந்துவிடும்' என்று நம்பிக்கை ஏற்படுத்தினார்.

சில மாதங்களுக்குப் பிறகு அவர்கள் தலைமையிடத்தில் இருந்து கடிதம் வந்தது. அதில், கண்டுபிடிப்புக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்திருந்தார்கள். அவ்வளவுதான். 'மகிழ்ச்சியை வெளிப் படுத்தவே இவ்வளவு காலம் பிடித்துள்ளதே' என்று வியந்து போனேன். புத்தர் வாய்க்கால் கரையைவிட்டு வெளிப்பட வேண்டுமானால் நாம்தான் முனையவேண்டும் என்று என் உள்ளுணர்வு சொல்லியது.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் அப்போது மதுரையில் பதிப்பிக்கப்பட்டது. அதன் சிராப்பள்ளிச் செய்தித் தொகுப்பாள ராக அ. கோபாலன் இருந்தார். தமிழ் நாளிதழ்களில் செய்தியைப் படித்ததும் அவர் மருத்துவமனைக்கு வந்தார். படமும் தகவலும் பெற்றவர், இனி இது போல் தகவல்கள் இருந்தால் உடன் அவரைத் தொடர்பு கொள்ளுமாறு கூறிச்சென்றார் தினமணி,

இந்தியன் எக்ஸ்பிரஸ் இரண்டு இதழ்களிலும் புத்தர் தோன்றி னார். பல இடங்களில் இருந்து எனக்குக் கடிதங்கள் வந்தன. இச்செய்திகளால் ஒரு வாரத்திற்குள் தமிழ்நாடு முழுவதும் இருந்த வரலாற்று ஆர்வலர்களுக்கு நான் அறிமுகமானேன். செய்தியிதழ்கள் எந்த அளவிற்குப் பயனுள்ளவை என்பதை உணர்ந்தேன். வாய்ப்பேற்படும்போது அவற்றின் துணையுடன் பல நல்ல செயல்களை நிறைவேற்றவேண்டும் எனக் கருதினேன். புத்தர் கண்டுபிடிப்பை வெளிப்படுத்த முடிந்ததே தவிர, புத்தரை வெளிக்கொணரக் கூடவில்லை

அதே சிந்தனையில் இருந்தபோதுதான் எஸ். ஆர். பால சுப்பிரமணியத்தின் நூலில் உறையூர்த் தான்தோன்றீசுவரம் பற்றிப் பார்த்தேன். அக்கோயிலைப் பார்க்கும் ஆர்வம் ஏற்பட்டது. விசாரித்தபோது, யாருக்குமே உறையூரில் அப்படி ஒரு கோயில் இருப்பது தெரியவில்லை. என் மருத்துவமனை உதவியாளர் களுள் ஒருவர் அரிதின் முயன்று அந்தக் கோயிலைக் கண்டறிந் தார். அப்பாதுரை என்பாரின் கவனிப்பில் இருந்த அந்த கோயிலைத் திறக்கச் செய்து பார்வையிட்ட போதுதான் அதன் பழைமையை உணரமுடிந்தது.

கருவறை இலிங்கம் என்னை இளக்கியது. கம்பீரமான வாயிற்காவலர்கள் சோழப் பிறப்பினராய்க் காட்சிதந்தனர். அழகே உருவான அம்மையப்பர் மேற்குக் கோட்டத்தில் இருந்தார். கல்வெட்டுகள் சிதறித் துணுக்குகளாகி இருந்தன. எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தின் குறிப்பில் கல்வெட்டுகள் பற்றி அதிகம் செய்திகள் இல்லை. அதனால் கல்வெட்டுகளை முயன்று படித்தேன். துண்டுகளாய் இருந்த பரகேசரி, முதல் இராஜராஜர், முதல் இராஜேந்திரர், மூன்றாம் குலோத்துங்கர் கல்வெட்டுகளுக்கிடையில் கருவறை நிலைக்கால்களில் இரு புறத்தும் தமிழ்க் கல்வெட்டுகள் ஏறத்தாழ முழுமையான நிலையில் இருப்பதைக் கண்டேன். அது பாண்டிய வேந்தர் வரகுண மகாராஜனின் கல்வெட்டென்பதைப் படித்தறிய முடிந்தது. எனக்கு வியப்புத் தோன்றியது. இக்கோயிலை எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் முதலாம் ஆதித்தர் காலக் கோயி லாகச் சுட்டியிருந்தார் பாண்டிய வேந்தர் வரகுண மகாராஜன் ஆதித்தருக்குச் சற்றே முற்பட்டவர் என்பதால், கோயிலின்

பழைமை கூடியிருந்ததை உணர்ந்தேன். புதிய கல்வெட்டு ஒன்றை அறிந்த மகிழ்வு துள்ளிப் பெருக்கெடுத்தது.

அன்று மாலையே தொல்லியல்துறை சென்று மஜீதைச் சந்தித்துச் செய்தி கூறினேன். அவர், அது புதிய கல்வெட்டுதான் என்று உறுதி செய்ததுடன் தாமும் தம் அலுவலகத்தாரும் வந்து அதைப் படித்து உதவுவதாகவும் உறுதியளித்தார். சொன்னவாறே அவரும் நடராசன், கிருஷ்ணன், இராதாகிருஷ்ணன் இவர்களும் கல்வெட்டுகள் படிக்க உதவினர். கிருஷ்ணனும் நடராசனும் கல்வெட்டை மசிப்படி எடுத்தனர். அன்றுதான் கல்வெட்டை மசிப்படி எடுக்கும் முறையை அறிந்தேன். மிகக் கடினமாக பணி. தாளைக் கல்வெட்டில் படியச் செய்யவும் அதன்மீது மசி ஏற்றவும் பயன்படும் 'கை' கடுமையான வலியால் துன்புறும்.

கிருஷ்ணனும் நடராசனும் எளிதாகப் படியெடுத்தனர். படியெடுத்த பிறகு மஜீதும் இராதாகிருஷ்ணனும் படித்தனர். அவர்கள் படிக்கும்போது நானும் அருகிருந்து கற்றேன். பல இடங்களில் அவர்கள் வாசிப்பின் மீது அவர்களுக்கே நம்பிக்கை யில்லாமல் இருந்ததையும் அறியமுடிந்தது. என்றாலும் தகவல் பெறும் அளவு வாசிப்பு அமைந்ததில் அனைவருக்கும் நிறை வேற்பட்டது. அதே கல்வெட்டைப் பின்னாளில் நளினி படித்த போதுதான் முதல் வாசிப்பில் இருந்த பல பிழைகளை நான் அறியமுடிந்தது. அவை ஒரே கல்வெட்டின் இரண்டு பகுதிகள் என்பதையும் நளினியே புலப்படுத்தினார். அக்கல்வெட்டு, பின்னாளில் வரலாறு இதழில் புதிய கல்வெட்டுகள் பகுதியில் முழுமையான அளவில் வெளியிடப்பட்டது.

கல்வெட்டுப் படத்துடன் செய்தி எழுதி அடுத்த நாளே கோபாலனிடம் தந்தேன். அவர் மகிழ்வுடன் பெற்றுக்கொண் டார். 18. 11. 1982ம் நாள் இந்தியன் எக்ஸ்பிரஸில் கல்வெட்டுச் செய்தி வெளியானது. 'திருத்தான்தோணியில் ஒரு திருப்பம்' என்ற தலைப்பில் இச்செய்தி 20. 11. 1982ம் நாள் மாலைமுரசில் வெளியானது. கல்வெட்டைக் கண்டுபிடித்தவனாக என் பெயரை யும் படித்துத் தகவல் அறிவித்தவராக மஜீதின் பெயரையும் குறிப்பிட்டிருந்தேன். நாளிதழ்களில் தம் பெயர் வெளியாகி யிருந்தது மஜீதிற்கு மகிழ்வளித்தது என்றாலும், அதனால் அவருக்கு ஏற்பட்ட துறைசார்ந்த தொல்லைகள் வருத்தம் தந்தன.

இனி எக்காலத்தும் தம் பெயரை வெளியிடல் வேண்டாம் என்று அன்புடன் வேண்டிக்கொண்டார். தொல்லியல்துறைச் சூழல்கள் அறிய இந்நிகழ்வு உதவியது. எக்காரணம் கொண்டும் இனியவர் மஜீது துன்பப்படக்கூடாது என உறுதிபூண்டேன்.

உறையூர்த் தான்தோன்றீசுவரம் கல்வெட்டுக் கண்டுபிடிப் பினால் எனக்குப் புலவர் வை. இராமமூர்த்தியின் அறிமுகம் கிடைத்தது. பிஷப் ஈபர் மேனிலைப்பள்ளியில் தமிழாசிரிய ராகப் பணியாற்றிய அவர் சிராப்பள்ளியின் மூத்த வரலாற்றாய் வாளர்களுள் ஒருவர். என்னைச் சந்தித்தவர், சிராப்பள்ளியில் உள்ள அனைத்துக் கல்வெட்டுகளையும் தாம் படித்திருப்ப தாகவும் எப்படியோ இது மட்டும் விட்டுப்போயிற்று என்றும் கூறிக் கண்டுபிடிப்பிற்காகப் பாராட்டினார். பின்னாட்களில் சிராப்பள்ளியில் நாங்கள் கண்டறிய நேர்ந்த பல புதிய கல்வெட்டுகள், அவருடைய கூற்று எத்தனை பிழையானது என்பதை உணர்த்தின.

வரலாற்றாய்வாளர்களாக உள்ள பலர் இப்படித்தான், வீண் பெருமையும் தேவையற்ற மிடுக்கும் கொண்டுள்ளனர். ஓரளவு கல்வெட்டுப் படிக்கத் தெரிந்திருந்தாலே தங்களை மேதைகளாகக் கருதிக்கொண்டு 'நிமிர்ந்திருக்கும்' இவர்களைக் காண நேரும்போதெல்லாம் எனக்குப் பரிதாப உணர்வே மிகும். அவர்கள் உழைப்பைக் கருதித் தொடர்ந்து அவர்களிடம் நட்பு பாராட்டியே வந்திருக்கிறேன். பின்னாளில் வரலாற்றாய்வு மையத்தின் சார்பில், பள்ளி ஆசிரியராக இருந்தும் கல்வெட்டுத் துறையில் காட்டிவந்த ஆர்வம் கருதியே இராமமூர்த்தியைப் பாராட்டியிருக்கிறோம்.

தொடக்கத்தில் என்னை ஒரு போட்டியாளராகக் கருதிய அவருக்குச் சில ஆண்டுகளில் என் உள்மனம் விளங்கியது. ஆனால், அதற்குள் அவர் இரத்த அழுத்த நோயால் பெரும் துன்பத்திற்கு ஆளாகியிருந்தார். 'கொங்கு நாட்டு வரலாறு' எனும் ஆங்கில நூல் அவருடைய உழைப்பால் வெளிவந்தது என்பதையும் பின்னாளில்தான் என்னால் அறியமுடிந்தது. பல அறிஞர்கட்குத் தம் உழைப்பை வழங்கிய அவர், அதற்குரிய ஊதியம் கூடத் தராமல் ஒதுக்கப்பட்டமையையும் அறிய நேர்ந்து வருந்தினேன். தொடக்கத்தில் நிமிர்ந்தவராக இருந்த அவர்

என்னைப் புரிந்துகொண்ட பிறகு நெருக்கமானார். ஆனால், அதற்குச் சில ஆண்டுகள் தேவைப்பட்டதால், நாங்கள் இணைந்து பணிசெய்யும் சூழல் அமையவில்லை. வை. இராம மூர்த்தியின் மிகப் பெரிய கொடை, அறிஞர் கூ. ரா. சீனிவாசனை எனக்கு அறிமுகம் செய்வித்ததுதான்.

வானொலியில் என்னுடைய உரைகளைக் கேட்டிருந்த அறிஞர் கூ. ரா. சீனிவாசன், உறையூர்க் கல்வெட்டுச் செய்தியை நாளிதழ்களில் கண்டதும் என்னைக் காண விரும்பினார். இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற நிலையில் சிராப்பள்ளியில் குடியிருந்த அவரை, வானொலிக்கு அவர் எழுதியிருந்த கடிதமொன்றினால் அறிந்திருந்தேன்.

சிராப்பள்ளி வானொலி நண்பர் அ. அருளப்பன் என் கூட்டுறவுடன், 'பாரறியாப் பழங்கோயில்கள்' என்ற அருமையான தலைப்பில் வாரந்தோறும் ஒரு பழங்கோயிலைப் பற்றிய தரமான உரைச்சித்திரத்தை வழங்கி வந்தார். அந்த உரைச்சித்திரங் கள் வரலாறு, கோயிற்கலைகள், கல்வெட்டுகள் அடிப்படையில் திருக்கோயில்களின் பெருமையை உணர்த்துவனவாய் அமைந் தன. அவற்றில் தொடர்ந்து என் பெயர் இடம்பெற்றமையும் சில கல்வெட்டுச் சொற்கள் குறித்து நான் அளித்த விளக்கங்களும் அறிஞர் கூ. ரா. சீனிவாசனுக்கு மகிழ்வளிக்கவில்லை. அதனால், வானொலி நிலைய இயக்குநருக்கு ஒரு மடல் எழுதியிருந்தார்.

அம்மடலில், 'அபூர்வி' என்ற கல்வெட்டுச் சொல்லிற்கு நான் அளித்திருந்த விளக்கத்தை மறுத்திருந்ததுடன், இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறையில் உயர்ந்த பொறுப்பில் பல காலம் இருந்து ஓய்வு பெற்ற நிலையில் சிராப்பள்ளியில் தற்போது இருப்பதாகவும் வானொலி இது போன்ற தேவைகளுக் குத் தம்மைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தார். அவருடைய மடல் என்னிடம் அளிக்கப் பட்டது. மடலை நான் பெற்றபோது, அறிஞர் கூ. ரா. சீனிவாசன் யார் என்பதுகூடத் தெரியாத நிலையில் இருந்தேன். மடலைப் படித்ததும் நண்பர் மஜீதுடன் தொடர்புகொண்டேன். அவர் தான் அறிஞர் கூ. ரா. சீனிவாசனைப் பற்றிக் கூறி அவர் பணி களையும் அறிமுகப்படுத்தினார்.

வானொலி இயக்குநருக்கு அறிஞர் கூ. ரா. வின் மேதைமை விளக்கி, 'அபூர்வி' என்ற சொல்லுக்கு நான் அளித்திருந்த விளக்கத்தின் மூலமும் சுட்டி மறுமொழி தந்தேன். என்ன காரணத்தாலோ அறிஞர் கூ. ரா. வின் மடலுக்குப் பிறகும் வானொலி அவரைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இந்தச் சூழலில்தான் இராமமூர்த்தி, அறிஞர் கூ. ரா. என்னைப் பார்க்க விழைவதாக அழைத்திருந்தார். அவ்வழைப்பை ஏற்று அப்பெருந் தகையைக் காணச் சென்றேன். ஆனால், அவர் ஏதோ பணி காரணமாகச் சென்னை சென்றுவிட்டதால் காணமுடியாமல் திரும்பினேன்.

திருவரங்கத்தில், அரங்கர் கோயிலுக்குச் சொந்தமான மற்றொரு கோயில் இருப்பது அறிந்து அதைக் காண நானும் நண்பர் மஜீதும் வானொலி நண்பர் தே. சந்திரனும் 1983 மார்ச்சுத் திங்களில் சென்றிருந்தோம். கோயிலைப் பார்வையிட்டவாறே விவாதித்துக் கொண்டிருந்தபோது கோயில் சுவரில் சுண்ணாம் புப் பூச்சின் கீழ் எழுத்துக்கள் தெரிவது போல் உணர்ந்து மஜீதிடம் காட்டினேன். அவர் என்னைப் பாராட்டியபடியே சுவரருகே சென்று பூச்சை இலேசாக அகற்றினார். கிரந்த எழுத்துக்கள் தெரிந்தன. உடனே அனைவருமாகச் சேர்ந்து ஆளுக்குச் சிறிது நேரம் பூச்சைத் தேய்த்து அகற்றினோம். அருமையான வடமொழிக் கல்வெட்டு வெளிப்பட்டது.

எங்களில் யாருக்குமே வடமொழி தெரியாது. ஆகையால், அதைப் படித்துப் புரிந்துகொள்ளக் கூடவில்லை. தொல்லியல் ஆய்வுத்துறையில் உள்ள தம் நண்பர் ஹரிஹரன் வடமொழி வளம் உள்ளவர் என்று கூறிய மஜீது, அவர் துணையுடன் படித்தறியலாம் என்றவாறே அந்தக் கல்வெட்டை நாங்கள் கொண்டு சென்றிருந்த குறிப்பேட்டில் எழுதிக்கொண்டார்.

வடமொழி தெரியாமையினால்தான் அந்தக் கல்வெட்டைப் படிக்கக்கூடவில்லை என்ற வருத்தம் என்னை வாட்டியது. எப்படியாவது வடமொழி பயிலவேண்டும் என்று விழைந்தேன். கிரந்த எழுத்துக்களை விளங்கிக்கொள்ள முயற்சித்தேன். அப்போது பல் மருத்துவர் சி. கேசவராஜின் மாமனார் இராம கிருஷ்ணனின் நினைவு வந்தது. அவர் சிறந்த வடமொழி வல்லுநர். என்னிடம் விழியாடி வெளுப்பிற்கு அறுவை செய்து

கண்ணாடி அணிந்துகொண்டவர். மருத்துவமனையில் தங்கியிருந்தபோது வடமொழி இலக்கியங்கள் பற்றி நிறையப் பேசுவார். நான் படித்துக்கொண்டிருந்த தமிழ் இலக்கியங்கள் பற்றியும் கேட்டறிவார். என் கோயில் ஆய்வுப்பணி அவருக்குப் பிடித்திருந்தமையால் எங்களுக்குள் நெருக்கம் ஏற்பட்டது. அவர் நினைவு வந்ததும் மஜீது எழுதித் தந்திருந்த கல்வெட்டுப் படியுடன் அவர் இல்லம் விரைந்தேன்.

கல்வெட்டுப் பாடத்தைப் படித்துப் பார்த்தவர், அது செய்யுள் நடையில் இருப்பதாகவும் பல சொற்கள் தமக்கு விளங்கவில்லை என்றும் கூறியதுடன், அரசன் ஒருவன் குருவுக்கு அளித்த காணிக்கையாக அந்தக் கோயில் அமைந்திருக்கலாம் என்பது போலக் கருத்துக்கொள்ள இடமிருப்பதாக உணர்த்தினார். வடமொழி பயிலும் ஆர்வம் குறித்துச் சொன்னேன். கற்றுத்தர ஒப்பியவர், சில நூல்களைத் தந்தார். படித்துப் பார்த்துவிட்டு வரச்சொன்னார். கிரந்த எழுத்துக்களையும் சொற்களையும் உள்ளடக்கிய அந்த நூல்களில் ஆங்கில மொழியாக்கம் இருந்தமையால் படிப்பது எளிதாக இருந்தது. இருப்பினும், எனக்குக் கிரந்த உச்சரிப்பு சரியாக வரவில்லை. அவரிடம் படித்த ஓராண்டும் இந்தச் சிக்கல் இருந்தது.

நான் வடமொழி வகுப்புச் சேர்ந்திருப்பது அறிந்ததும் சந்திரனும் இணைந்தார். தொடர்ந்து வரமுடியவில்லை என்றாலும் பல வகுப்புகளுக்கு இருவருமாகவே சென்றிருக்கிறோம். உச்சரிப்பில் என்னைக் காட்டிலும் அவர் சிறந்து விளங்கினார். எனக்கும் கற்றுத்தர முயன்றார். எனினும், அவர் போல் தெளிவான உச்சரிப்பு எனக்கு வாய்க்கவில்லை. இப்போதும் கூடக் கிரந்த எழுத்துக்களைப் படித்துவிடலாம். ஆனால், உச்சரிக்கத் தயக்கமுண்டு. எவ்வளவுதான் வடமொழி தெரிந்திருந்தாலும் பழங்கல்வெட்டுகளை விளங்கிக்கொள்வது அவ்வளவு எளிதல்ல என்பதைக் காலப்போக்கில் உணர்ந்தேன். இப்புரியாமையே பல வடமொழிக் கல்வெட்டுகளை மொழியாக்கம் செய்வதில் அறிஞர்களுக்குள் கருத்து மாறுபாடுகளை உண்டாக்கியிருப்பதையும் பின்னாளில் அறியமுடிந்தது.

1983 மேத் திங்களில் எட்டரை செல்வராஜ் அவர் ஊருக்கு அருகிலிருந்த புலிவலம் சுப்பிரமணியசாமி கோயிலில் சில

கல்வெட்டுகள் இருப்பதாகக் கூறி அழைத்தார். கோயில் திருமுன் சுவர்களில் துணுக்குகளாகச் சிதறடிக்கப்பட்டிருந்த கல்வெட்டொன்றைப் படித்தோம். அக்கோயிலுக்குத் தரப்பட்டிருந்த கொடையைச் சுட்டிய கல்வெட்டு, சான்றாளர்களுள் மூவர் தம் ஊர்ப்பெயராய் முள்ளிக்குறும்பூரைச் சுட்டியது. இவ்வூர் எங்குள்ளது என்று செல்வராஜுக்குத் தெரியவில்லை. ஊரைக் கண்டறிய விழைந்ததனால் மருத்துவமனை உதவியாளர்களிடம் முள்ளிக்குறும்பூரிலிருந்து நோயாளிகள் யாரும் வந்தால் தெரியப்படுத்துமாறு கூறியிருந்தேன்.

முள்ளிக்குறும்பூரைக் குறிப்பிடும் கல்வெட்டுக் கண்டறியப்பட்ட மூன்று திங்கள்களுக்குப் பிறகு அவ்வூர்க்காரர் ஒருவர் பரிசோதனைக்கு வந்தார். அவரை விசாரித்ததில் வயலூருக்கு இரண்டு கிலோமீட்டர் தொலைவில், உள்ளடங்கிய ஊராய் முள்ளிக்குறும்பூர் இருப்பது தெரியவந்தது. ஊரில் பாழடைந்த கோயில் இருப்பதைத் தெரிவித்தவர் தாம் உடன் வந்து காட்டுவதாகக் கூறினார். அன்று மதியமே முள்ளிக்கரும்பூராக மாறியிருந்த முள்ளிக்குறும்பூர் சென்றேன்.

ஊருக்கு ஒதுக்குப் புறத்தில் பழங்கோயில் ஒன்று சிதைந்த நிலையில் கைவிடப்பட்டிருப்பதைக் காணமுடிந்தது. கோயில் மண்டப வெளிச்சுவரில் கல்வெட்டொன்றும் இருந்தது. மேலோட்டமாகப் படித்த நிலையில் அதை முதல் குலோத்துங்கருடையதாகக் கருதிச் செய்தி இதழ்களுக்குத் தகவல் தந்தேன். நாளிதழ்களைப் பார்த்த இராமமூர்த்தி, முள்ளிக்கரும்பூர் சென்று அக்கல்வெட்டைப் படித்துவந்தார். அவர்தான் அக்கல்வெட்டுக் குலோத்துங்கருடையது அன்று, விக்கிரமசோழருடையது என்பதைத் தெரிவித்தார். நான் அன்று மாலையே மீண்டும் முள்ளிக்கரும்பூர் சென்று அக்கல்வெட்டை மறு படிப்புச் செய்தேன். என் தவறு விளங்கியது. இராமமூர்த்திக்கு நன்றி கூறியதுடன் இனி அவசரப்பட்டு முடிவிற்கு வரக்கூடாது என்று உறுதிபூண்டேன்.

முள்ளிக்கரும்பூர் பற்றிய செய்திகள் 27. 8. 1983 மாலைமுரசு இதழிலும் 30. 8. 1983 தினமணி இதழிலும் வெளியாகின. 1. 9. 1983 இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் அ. கோபாலன் சுருக்கமாக ஆனால் படத்துடன் செய்தி வெளியிட்டிருந்தார். பழுதுபட்டி

ருந்த அந்தக் கோயிலை எப்படியாகிலும் சரிசெய்யவேண்டும் என்று கருதினேன். டாக்டர் மா. இராசமாணிக்கனார் இலக்கிய மன்றத்தின் நிகழ்வுகள் வழி எனக்கு அறிமுகமாகியிருந்த கி. ஆ. பெ. விசுவநாதம் மேனிலைப்பள்ளித் தமிழாசிரியர் இரா. இராசேந்திரன் அப்போது நாட்டு நலப்பணித் திட்ட அலுவலராகவும் இருந்தமையால் அவருடன் கலந்தாலோசித் தேன். தொல்லியல்துறையின் துணையோடு அதைச் செய்ய முடியும் என்ற முடிவுக்கு வந்தேன்.

இந்த நேரத்தில்தான், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை யின் இரண்டு நாள் கருத்தரங்கொன்றைச் சிராப்பள்ளியில் நடத்தும் பொறுப்பு மஜீதின் தோள்களில் இறங்கியது. ஆரவாரமோ, தன்முனைப்போ சற்றுமற்றவர் என்பதால் மஜீதிற்குச் செல்வாக்கான நண்பர்கள் சிராப்பள்ளியில் குறைவாகவே இருந்தனர். கருத்தரங்கம் நடத்தவேண்டும் என்ற ஆணை வந்ததுமே என்னிடம் செய்தியைப் பகிர்ந்துகொண்டார். அவருக்குத் துணைநிற்க விழைந்தேன். கருத்தரங்கு நடத்த இடம் தேவைப்பட்டது. மருத்துவர் மு. சிவக்கண்ணுவிற்குச் சொந்தமான குறிஞ்சி திருமண அரங்கைக் கேட்கக் கருதி அவரை அணுகினேன். அப்பெருந்தகை உளமுவந்து இரண்டு நாட்களும் மண்டபத்தைக் கட்டணமின்றிப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தார்.

துறையினர் தங்கவும் கருத்தரங்கு நிகழவும் இடம் கிடைத்த தில் மஜீதிற்கு மட்டற்ற மகிழ்ச்சி. கருத்தரங்கின் போது தேனீர் வழங்கும் பொறுப்பை எங்கள் மன்றம் ஏற்றுக்கொண்டது. உணவு அவர்களே பார்த்துக்கொண்டார்கள். கருத்தரங்கத்தில் என்னையும் ஒரு கட்டுரை வாசிக்குமாறு மஜீது உற்சாகப் படுத்தினார். 'மலைக்கவைக்கும் மாடக்கோயில்கள்' என்ற தலைப்பில் கட்டுரை படிக்கத் தயாரானேன். கருத்தரங்க முதல் நாள் காலை மண்டபத்திற்குச் சென்றபோது தொல்லியல்துறை பெருமக்களைச் சந்திக்க முடிந்தது. மஜீது அனைவரையும் அறிமுகப்படுத்தியதோடு, மேலே அழைத்துச் சென்று மாடியில் தங்கியிருந்த அவர்கள் துறை இயக்குநர் இரா. நாகசாமிக்கு என்னை அறிமுகப்படுத்தினார்.

இரா. நாகசாமியைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருந் தேன். அவருடைய நூல்களுள் சிலவற்றையும் படித்திருந்தேன். என் திருமண வரவேற்பிற்கு, என் அண்ணன் மா. ரா. இளங்கோவ னின் நண்பர் என்ற முறையில் நாகசாமி வந்திருந்தமையை அவருக்கு நினைவூட்டி, வரலாற்றில் எனக்கிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்தினேன். என் ஆர்வத்தைப் பெரிதும் போற்றிய நாகசாமி கருத்தரங்கிற்கு நான் செய்திருந்த ஏற்பாடுகளைப் பாராட்டினார். நான் கட்டுரை வாசிக்க இருப்பது அறிந்ததும் மகிழ்ந்து வாழ்த்தினார்.

உணவு இடைவேளைக்கு முன் என் கட்டுரையைப் படித்தேன். கட்டுரையை முழுவதுமாகக் கேட்ட இரா நாகசாமி என் கட்டுரையை மதிப்பீடு செய்து பத்து நிமிடங்களுக்கு மேல் பேசினார். கட்டுரையின் அறிவியல் பின்புலத்தையும் ஆய்வு அணுகுமுறையையும் பற்றி விரிவாகப் பேசினார். கருத் தரங்க அளவில் வாசிக்கப்பட்ட முதல் கட்டுரை என்பதால், எனக்குப் பெருமகிழ்வு ஏற்பட்டது. கட்டுரையின் ஒவ்வொரு தொடரையும் அவர் கூர்ந்து கவனித்திருக்கிறார் என்பது அவர் உரை வழி வெளிப்பட்டது. மேதைகளின் சொத்தாக இருந்த தொல்லியல்துறையை மக்களிடத்துக் கொண்டு சென்ற முதல் அறிஞர் என்ற வகையில் அவரிடத்து எனக்கு எப்போதுமே மதிப்புண்டு. துறைக்கு முற்றிலும் புதியவனான என்னை அவர் ஊக்கப்படுத்திய விதம் என் வளர்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

அன்று இரவு மஜீதின் நண்பர்களுக்கும் இரா. நாகசாமிக் கும் என் வீட்டில் விருந்தளித்தேன். கு. தாமோதரன், மா. சந்திர மூர்த்தி, ச. ஹரிஹரன் ஆகியோர் நண்பர்களாயினர். தொல்லியல் துறையில் பல்லாண்டு அநுபவம் பெற்ற அவர்களிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ளமுடியும் என்று நம்பினேன். இரண்டு நாட்களும் கருத்தரங்க வளாகத்திலேயே இருந்து படிக்கப்பட்ட அனைத்துக் கட்டுரைகளையும் கவனமாகக் கேட்டதில் பல செய்திகளை அறியமுடிந்ததுடன், பல்வேறு விதமான அணுகு முறைகளையும் தெரிந்துகொள்ள வாய்ப்பேற்பட்டது. ஹரிஹர னின் துணையுடன் காட்டழகியசிங்கர் கோயில் வடமொழிக் கல்வெட்டின் பொருள் அறியமுடிந்தது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் முதலாம் இராஜேந்திரர் விழா ஒன்றினைத் தமிழ்நாடு அரசு எடுத்தது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுமாறு இரா. நாகசாமி என்னை அழைத்தார். அந்த விழாவில்தான் என். சேதுராமனையும் புலவர் செ. இராசுவையும் சந்தித்தேன். புலவர் இராசு மிகுந்த அன்போடு பழகினார். விழாவிற்குச் சென்றபோது கங்கைகொண்ட சோழீசுவரம் கோயிலை விரிவாகப் பார்க்கும் வாய்ப்பமைந்தது. கோயிலின் கட்டமைப்பு என்னை மயக்கியது. என்னுடன் வந்திருந்த தே. சந்திரன், இரா. இராசேந்திரன் இவர்களுடன் இலக்கியம், கோயிற்கலைகள் பேசியபடியே அக்கோயிலை வலம் வந்தமை நேற்று நடந்தது போல் நினைவில் உள்ளது.

பாளையங்கோட்டையில் பெண் மருத்துவர் ஒருவர் தம் மருத்துவமனையில் மக்களுக்காக மருத்துவச் சொற்பொழிவு கள் நிகழ்த்திக்கொண்டிருப்பதை ஆனந்தவிகடன் இதழில் செய்திக்கட்டுரையாக வெளியிட்டிருந்தார்கள். எனக்கு அந்தப் பணி மிகவும் பிடித்திருந்தது. சிராப்பள்ளியிலும் அது போல் செய்ய விழைந்தேன். டாக்டர் மா. இராசமாணிக்கனார் இலக்கிய மன்றச் சொல்லாற்றல் போட்டிகளில் பங்கேற்று என் அன்புக்கு இலக்காகியிருந்த ச. தட்சிணசுப்பிரமணியன் அப்போது உய்யக் கொண்டான் லியோ மன்றப் பொறுப்பில் இருந்தார். அந்த அமைப்பின் சார்பில் என் பணியில் பங்குகொள்ள அவர் விழைந் தார். நிகழ்ச்சியை நடத்த அரங்கம் தேவைப்பட்டது. தமிழ்ச் சங்கம் மக்களுக்கு வாய்ப்பான இடம் என்று கருதியமையால் அதன் அமைச்சர் சா. பெரியசாமியுடன் உரையாடினேன். நல்ல பணி என்று உடன் ஒப்புதல் தந்து ஒத்துழைத்தார்.

1983 அக்டோபர் 23ம் நாள் மருத்துவச் சொற்பொழிவு தொடங்கியது. மருத்துவர் அர. கணேசன் நிகழ்ச்சியை அறிமுகப் படுத்திப் பேசினார். திரளாக வந்திருந்த மக்கள் எங்களுக்கு நம்பிக்கை ஊட்டினர். அதனால், தொடர்ந்து ஒவ்வொரு திங்களும் துறை சார்ந்த மருத்துவ வல்லுநர்களைக் கொண்டு மக்களுக்காக முற்றிலும் தமிழில் மருத்துவச் சொற்பொழிவு அமையும் என்று அறிவித்தோம். தினமணி கோபாலன் எங்களுக்குப் பெரிதும் துணையாயிருந்தார். மீ. அரங்கசாமி அனைத்து உரைகளையும் பதிவுசெய்து வானொலி வழி

அனைத்து மாவட்ட மக்களும் பயன்பெறுமாறு வழங்குவதாக உறுதியளித்தார்.

நவம்பர் 27ம் நாள், 'இனிப்பும் கசப்பும்' என்ற தலைப்பில் நீரிழிவு நோய் தொடர்பாக இரு உரைகள் அமைத்திருந்தோம். மருத்துவர்கள் சு. தியாகராசன், வி. கனகராஜ் உரையாற்றினர். மக்கள் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தெளிவுகொள்ள வாய்ப்பளித்தோம். கேள்வி நேரமே ஒரு மணியளவில் தொடர்ந்தது. 1983 டிசம்பர் 18ம் நாள், 'அழகைத்தேடி' என்ற தலைப்பில் சேலம் தோல் நோய் மருத்துவர் கோ. நா. மோகன வேலு உரையாற்றினார். அந்த நிகழ்ச்சிக்குத் தலைமையேற்க சிராப்பள்ளியில் அப்போது மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த மாண்பமை பி. நடேசனின் துணைவியார் சாந்தி நடேசனை அழைத்திருந்தோம். அந்த அழைப்பு எட்டரை புத்தர் சிராப்பள்ளி வருவதற்கு வழியமைக்கும் என்று நான் அப்போது நினைக்கவேயில்லை.

நாளிதழ்கள் வழி புத்தர் சிற்பம் கண்டுபிடிப்புப் பற்றி படித்திருந்த சாந்தி நடேசன் அதன் வரலாறு கேட்டார். நான் அனைத்தும் கூறிச் சிற்பத்தைச் சிராப்பள்ளி அருங்காட்சியகத் திற்குக் கொணர முடியாமல் இருக்கும் நிலைமையை விளக்கி னேன். மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கூறி ஆவண செய்வதாக அவர் அன்போடு கூறினார். அடுத்த நாள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. உடன் சென்று அனைத்தும் விளக்கினேன். அப்பெருந்தகை உரிய அலுவலர்களை என்னுடன் தொடர்புகொள்ளுமாறு உத்தர விட்டார் ஒருமணி நேரத்தில் அந்தநல்லூர் கோட்ட அலுவலர் ஜெயபாலன் என் மருத்துவமனைக்கு வந்தார். அவரிடம் தகவல் சொன்னதும் தாம் நேரில் சென்று அனைத்தும் பார்த்துவிட்டு மாலையில் சந்திப்பதாகக் கூறினார்

அன்று மாலையே புத்தரை மீட்கும் திட்டம் உருவாயிற்று. ஜெயபாலன் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார். மஜீதிற்குத் தகவல் தந்தேன். புத்தரை மீட்கும் பணியில் எட்டரை செல்வராஜ், பாலசுந்தரம் கி ஆ. பெ. விசுவநாதம் மேனிலைப் பள்ளி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், இரா. இராசேந் திரன் என அனைவரும் ஈடுபட்டோம். மாணவர்களால்

மட்டுமே இப்பணி நிறைவடையாது என்பதை ஊகித்திருந்த ஜெயபாலன் புத்தரைக் கரையிலிருந்து மேட்டிற்குக் கொணர்ந்து வண்டியில் ஏற்ற யானை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

அந்த நாளும் அன்று ஏற்பட்ட அனுபவங்களும் வாழ்க்கையில் என்றென்றும் மறக்க முடியாதவை. அரசு அலுவலர்கள் மனம் கொண்டால் என்னவெல்லாம் செய்யமுடியும் என்பதை நான் அறிந்த நாளது. மாவட்ட ஆட்சியர் இதில் ஈடுபாடு கொண்டுள்ளார் என்பதொன்றே புத்தர் அசையக் காரணமாயிற்று. ஜெயபாலன் செயல் வல்லாராக அமைந்தமையால் புத்தர் கரை ஏறினார். அன்று மாலை அந்தச் சிற்பத்தைக் களத்திலேயே சந்திக்க மாவட்ட ஆட்சியரும் அவரது துணைவியாரும் வந்தனர். புத்தர் டிராக்டரில் ஏற்றப்பட்டமையைக் கண்ட என் கண்கள் பனித்தன. சாந்தி நடேசனை நன்றியோடு நோக்கினேன். அந்த அம்மையின் வரலாற்றார்வமும் ஆட்சியரின் அணுகுமுறையுமே புத்தர் சிராப்பள்ளி வரக் காரணமாயின. மாவட்ட ஆட்சியரிடமும் அவர் துணைவியாரிடமும் நானும் மற்றவர்களும் மிகுந்த நன்றி பாராட்டினோம். புத்தரை அருங்காட்சியகத்தில் சேர்க்கச் சொல்லி உத்தரவிட்ட ஆட்சியர் விடைபெற்றார்.

புத்தரை அருங்காட்சியத்தில் சேர்த்தவர்கள் டிராக்டரில் இருந்து இறக்கும்போது முகமும் உடலும் தரையைப் பார்க்குமாறு போலக் கவிழ்த்துப் போட்டுவிட்டார்கள். எட்டரை புத்தர் சிராப்பள்ளி வந்து சேர்ந்த செய்தி அடுத்த நாள் பெரிய அளவில் அனைத்து நாளிதழ்களிலும் வெளியாகியிருந்தமையால் ஆர்வமுள்ளவர்கள் பார்க்க வந்தார்கள். கவிழ்ந்து கிடந்த புத்தர் அவர்களுக்கு ஏமாற்றம் அளித்தார். எனக்குச் செய்தி வந்தது. ஆனால், நான் அருங்காட்சியகம் செல்வதற்குள், இச்செய்தியைக் கேள்விப்பட்ட வேளாண் பொறியியல் துறையைச் சேர்ந்த உயர்அலுவலர் ஒருவர் பளுதூக்கிப் பொறியுடன் வந்து புத்தரை நிமிர்த்தி வைத்து மக்கள் கண்டு மகிழ வகை செய்திருந்தார். தம் பெயரைக்கூடக் கூறாமல் அரும்பணி செய்து சென்ற அவரைப் போன்ற பெருமக்களால்தான் இந்த நாடும் வாழ்கிறது. வரலாறும் வளம் பெறுகிறது.

அதவத்தூர்ச் சாலையில் உள்ள சிற்றூர்களுள் ஒன்று வயலூர். அங்குள்ள பழைமையான சிவன் கோயில் சோழர் கல்வெட்டுகளில் திருக்கற்றளிப் பரமேசுவரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. அமரர் கிருபானந்தவாரியாரால் அங்குள்ள பரிவாரக் கோயில்களில் ஒன்றான முருகன் கோயில் ஆட்கொள் ளப்பெற்றுப் புகழடைந்தது. அதனால், வயலூர் குமார வயலூ ராக மாற்றம் பெற்றது. கற்றளிப் பரமேசுவரர் தமக்குப் பின்னால் இருந்த மகனின் புகழ் வெளிச்சத்தில் மங்கிப்போனார்.

1983ல் வயலூர்க் கற்றளிப் பரமேசுவரர் கோயில் நிருவாக அலுவலர் ஏகாம்பரநாதன், கோயிலில் குடமுழுக்கு நிகழ்த்த விருப்பதாகக் கூறி, அதுபோழ்து வெளியிட வாய்ப்பாகக் கோயி லின் வரலாற்றை எழுதித்தருமாறு வேண்டியதுடன், எனக்கு உதவும் என்று கூறி அவரிடமிருந்த கோயில் தலவரலாற்றுப் புத்தகத்தையும் தந்தார். கோயிலைச் சுற்றிப் பார்த்தபோது, பரமேசு வரர் விமானத்திலும் முகமண்டபத்திலும் சோழர் கல்வெட்டு கள் துணுக்குகளாய்ச் சிதறியிருந்தன. அவற்றுள் சிலவற்றையே அப்போது படிக்க முடிந்தது. மைய அரசின் கல்வெட்டு அறிக்கை உதவியுடன் பிற கல்வெட்டுத் தரவுகளைப் பெற்றேன்.

கல்வெட்டறிக்கையில் வெளியிடப்படும் சுருக்கத்திற்கும் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளியாகும் பாடத்திற்கும் உள்ள மகத்தான வேறுபாடுகளை அப்போது நான் அறிந்திருக்கவில்லை. அதனால், கிடைத்த கல்வெட்டுத் தரவுகளே போதுமானவை எனக் கருதினேன். அந்தக் கோயிலில் இருந்த சிவபெருமானின் செப்புத்திருமேனிகளுள் ஒன்று, ‘சுந்தர தாண்டவம் ’ என்ற பெயருடன் விளங்கியது. ஆடல் படிமமான அதை நிருவாக அலுவலர் எனக்குக் காட்டி, அத்தாண்டவம் குறித்து விரிவாக எழுதித்தர வேண்டினார்.

‘சுந்தர தாண்டவம்’ முற்றிலும் புதிய பெயராக இருந்தது. தாண்டவம் பற்றி அறிய தண்டபாணிதேசிகரின், ‘ஆடவல்லான்’, மயிலை. சீனி. வேங்கடசாமியின், ‘இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்’, ‘தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்’ ஆகிய நூல்களைப் படித்தேன். தெளிவு கிடைக்க வில்லை. வயலூர்ப் படிமத்திற்கும் அந்நூல்கள் விவரித்த தாண்டவ விளக்கங்களுக்

கும் பொருந்திவரவில்லை. 'சிற்பரத்னா' படிக்குமாறு மஜீது வழிகாட்டினார். அத்துடன் அலுவலக நூலகத்தில் இருந்த இலலித்கலா தொகுதிகளுள் ஒன்றையும் தந்தார். அதில் நாக சாமி கொடுமுடியில் உள்ள ஆடவல்லான் படிமத்தைப் பற்றி எழுதியிருந்தார். சிற்பரத்னா விளக்கும் ஒன்பது வகைத் தாண்டவங்களுள் ஒன்பதாவது வகை ஓரளவிற்கு வயலூர்ப் படிமத்தின் கால் நிலைகளுடன் பொருந்தியது.

சி. சிவராமமூர்த்தியின், 'Nataraja In Art Thought and Literature' என்ற நூலையும் மஜீதிடம் பெற்றுப் படித்தேன். அருமையான நூல் என்றாலும் பல குழப்பங்களைச் சந்திக்க நேர்ந்தது. எந்த நூலும் சுந்தர தாண்டவம் என்ற பெயரில் தாண்டவ வகை ஒன்றைக் குறிப்பிடாமை எனக்கு வியப்பளித்தது. திருமந்திரத்தில் சிவபெருமானின் ஆடலைப் பற்றி நிறைய சொல்லப்பட்டிருப்ப தாக எங்கோ படித்திருந்த நினைவு கொண்டு அந்நூலைப் பெற்றுப் படித்தேன். திருக்கூத்து தரிசனம் உட்பட முழு நூலையும் படித்த பிறகும் தெளிவு கிடைக்கவில்லை.

இந்த நிலையில்தான், பரதரின் நாட்டிய சாத்திரம் படித்துப் பார்க்கும் எண்ணம் வந்தது. சிராப்பள்ளியில் உள்ள எந்த நூலகத்திலும் அந்த நூல் கிடைக்கவில்லை. அரசுவிற்குத் தொலைப் பேசினேன். வேங்கடசாமியின் நூல்களையே அவர் தான் அரும்பாடுபட்டுப் பெற்றுத் தந்திருந்தார். குறிப்பாக, 'இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்' பேரலைச்சலுக்குப் பிறகே கிடைத்தது அரசுவின் முயற்சி இல்லை என்றால் இத்தகு அரிய நூல்களை எந்தக் காலத்தும் பெற்றிருக்கமுடியாது. எப்படியோ முயன்று சென்னையிலுள்ள அனைத்து நூலகங் களையும் சல்லடையிட்டுச் சலித்து நாட்டிய சாத்திரத்தைப் பெற்றனுப்பினார்

மனோமோகன்கோஷின் விளக்கவுரையுடன் கிடைத்த அந்த நாட்டிய சாத்திரம்தான் ஆடற்கலை ஆய்வில் என்னைப் பயணப்படவைத்தது. அருமையான நூல். ஒரு வாரத்தில் முழு நூலையும் படித்து முடித்தேன். பத்து விழுக்காடுகூடப் புரிய வில்லை என்றாலும், மீளவும் படிக்கப் படிக்க மலைப்பேற் பட்டதைக் குறிப்பிடவேண்டும். கரணங்கள் பகுதியை விளங்கிக் கொள்ள நூலுடன் குடந்தை சார்ங்கபாணி கோயில் சென்றேன்.

வரையறைகளைப் படிப்பதும் சிற்பங்களைப் பார்ப்பதுமாகவே ஒரு நாள் சென்றது. ஒரு வாரத்திற்குப் பிறகு தஞ்சாவூர் இராஜ ராஜீசுவரம் சென்று அங்குள்ள கரணச் சிற்பங்களை நூலுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தேன். மெல்ல மெல்லக் கரணக் கதவுகள் திறந்தன. மண் சார் கால் நிலைகள், விண் சார் கால் நிலைகள், அழகுக் கைகள், குறிப்புக் கைகள் எல்லாம் பிடிபட்டன. தில்லைக்குப் போய்வந்தால் மேலும் தெளிவு கிடைக்கும் என்று வாழ்வரசியுடன் இரண்டு நாள் பயணம் மேற்கொண்டேன். அவர் படிக்கப் படிக்க நான் சிற்பங்களை ஆராய்ந்தேன்.

மூன்று கோயில்களின் சிற்பங்களுக்கிடையிலும் பற்பல வேறுபாடுகள் இருந்தாலும், அடிப்படையில் ஒற்றுமைக் கூறுகள் இருந்தன. பின்னர் விரிவாக ஆராயவேண்டும் என்ற ஆவலுடன் வயலூர்ப் படிமத்தை அடையாளப்படுத்த முயன்ற தில் பயன் கிடைத்தது. பரதர் விளக்கும் 108 கரணங்களுள் ஒன்றான சதுரகரணமாக அது அமைந்தது. அதுவும் இலலிதமும் ஒன்று போல் கால் நிலை பெற்றவை. எனினும் இரண்டையும் வேறுபடுத்த, 'தட்சிணகுட்டிதம்' உதவியது.

ஐந்து மாத காலக் கடும் உழைப்பிற்குப் பிறகு என் கட்டுரையுடன் வயலூர் சென்றேன். ஏகாம்பரநாதனிடம், 'சுந்தர தாண்டவம்' என்ற பெயரில் ஒரு தாண்டவமே இல்லை யென்று கூறிக் கட்டுரையை அளித்தேன். 'அப்படியானால் தல வரலாறு கூறுவது பொய்யா' என்று கேட்டார். தலவரலாற்றில் இருந்த எண்ணற்ற பிழைகளையும் பொய்களையும் சான்று களுடன் விளக்கியபோது வருந்தினார்.

வயலூர்த் தலவரலாறு மட்டுமன்று, எந்தக் கோயில் தலவரலாறும் உண்மை பேசுவதில்லை. தலவரலாறுகளை எழுதுபவர்கள் ஆய்வாளர்கள் அல்லர். அதனால், அவர்கள் தங்கட்குக் கிடைக்கும் வழங்கு கதைகளுக்கே முக்கியத்துவம் தந்து அவற்றையே வரலாறு போலக் காட்டிவிடுகின்றனர். கல்வெட்டுகளைப் பற்றிய கண்ணோட்டம் உடைய சிலர், அரசு வெளியிட்டுள்ள கல்வெட்டுச் சுருக்கங்களைப் படித்து அவற்றை அப்படியே மொழிபெயர்த்துத் தங்கள் தலவரலாற்று நூலில் ஓர் இணைப்பாக வெளியிடுகின்றனர். இன்னும் சிலர் கல்வெட்டுக் குறிப்புகளோடு கற்பனையாற்றலைத் திறனுக்கேற்ப

கலந்து வரலாற்று மயக்கங்களை உருவாக்கத் தயங்குவதில்லை. வயலூர்த் தலவரலாறு மூன்றாம் வகையைச் சேர்ந்தது.

கல்வெட்டுப் பாடங்களை விளங்கவைத்து, நாட்டிய சாத்திரத்தைப் புரியவைத்து, வயலூர்ப் படிமம் சதுரகரணத்தில் உள்ளமையை விளக்கியபோது, ஏகாம்பரநாதன் ஏற்றுக் கொண்டார். அதுநாள்வரை சுந்தரதாண்டவர் என்ற போர்வை போர்த்தியிருந்த சிவபெருமான் அன்று முதல் அதைக் களைந்து சதுரகரணரானார்.

'வயலூரில் ஒரு வடிவழகன்' என்ற தலைப்பில் இத்திரு மேனி பற்றிய கட்டுரை, 'இளமையின் குரல்' ஜூன் 1983ம் இதழில் வெளியானது. 'கோச்செங்கணான் யார்' என்ற கட்டுரைக்குப் பிறகு அரும்பாடுபட்டு உழைத்து உருவாக்கிய அந்தக் கட்டுரை ஆடற்கலையில் ஆர்வத்தை வளர்த்தது. நிறைய ஆடற்கலை நூல்களைப் படித்தேன். பரதார்ணவம், நாட்டிய தர்ப்பணம், அத்யரங்காச்சார்யாவின் உரை பெற்ற நாட்டிய சாத்திரம் என்பன அவற்றுள் சில. தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் கோயிலின் கரணச் சிற்பங்கள் என் புரிதலுக்குப் பெரிதும் உதவின. கரணங்களைப் பற்றிய ஆழமான ஆய்வுக்குள் நுழைந்தேன்.

புகழ் பெற்ற ஆடற்கலைஞர் முனைவர் பத்மா சுப்ரமணியத்தின், 'Bharatha's Art Then and Now' என்ற நூல் கிடைத்தது. அதை முழுவதும் படித்தபோது, அந்நூலில் கூறப்பட்டிருந்த பல கருத்துக்களோடு முரண்பட நேர்ந்தது. கரணங்களில் முனைவர் ஆய்வுசெய்த கலைஞர் அவர் என்பதால், என் கருத்து முரண்களை எழுதும் முன் மேலும் தெளிவு பெற விரும்பி, நாட்டிய சாத்திரத்தை முழுவதுமாய் மறுமுறை படித்து, மனோமோகன் கோஷ், அத்யரங்காச்சார்யா இவர்தம் கருத்துக் கூறல்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்தேன் தில்லை, தஞ்சாவூர், குடந்தைச் சிற்பத் தொகுதிகளை மீளவும் பார்த்து வந்தேன். என் கருத்துக்கள் சரியானவை என்ற தெளிவும் உறுதியும் ஏற்பட்டன. 'கரணக் குழப்பங்கள்' என்ற தலைப்பில் கட்டுரையை உருவாக்கினேன். பல அரங்குகளில், கூ. ரா. சீனிவாசன் உள்ளிட்ட அறிஞர்தம் முன்னிலையில் இக்கட்டுரையைப் படித்துக் கேட்கப்பட்ட

வினாக்களுக்கு விடையிறுத்துப் பின் அதன் இறுதி வடிவத்தைச் செந்தமிழ்ச் செல்விக்கு அனுப்பினேன்.

கட்டுரை 1987 செப்டம்பர் முதல் 1988 மார்ச்சுவரை செந்தமிழ்ச் செல்வியில் வெளியானது. தமிழ்நாடு முழுவதும் இருந்து தமிழறிஞர்கள், புலவர்கள், வரலாற்றாய்வாளர்கள் எனப் பலர் இக்கட்டுரைத் தொடரைப் படித்து மடல் எழுதினர். இராம. சண்முகம் நான்கு பக்க அளவில் அருமையான மடல் ஒன்றை எழுதியிருந்தார். அதில் என் உழைப்பையும் நான் தந்திருந்த வரலாற்று, இலக்கியச் சான்றுகளின் தகைமையையும் பெரிதும் பாராட்டியிருந்தார். எனக்கு மனநிறைவு தந்த தொடக்கக் காலக் கட்டுரைகளுள் அதுவும் ஒன்று.

பாழ்பட்டிருந்த முள்ளிக்கரும்பூர்க் கோயிலை வழிபாட்டிற்குக் கொண்டுவந்தால்தான் சீரமைப்பு இயலுவதாகும் என்று தோன்றியதால், நண்பர்கள் மஜீதையும் இரா. இராஜேந்திரனையும் வரவழைத்து உரையாடினேன். இருவருமே என் கருத்தை ஏற்றதுடன், தேவையான ஒத்துழைப்புத் தரவும் தயாராக இருந்தனர். முள்ளிக்கரும்பூர் ஊர்த்தலைவர், இளைஞர் மன்றத்தார் இவர்களிடமும் கலந்து பேசினேன். ஏறத்தாழ 200 ஆண்டுகளாக வழிபாடு நின்று போயிருந்த அந்தக் கோயிலில் மீண்டும் வழிபாடு என்றதுமே ஊர் முழுவதும் கூடிக் கைகொடுத்தது. மஜீதின் வேண்டுகோளை ஏற்றுத் துறையின் இயக்குநர் பொறுப்பில் அப்போதிருந்த நடன காசிநாதன் நேரில் வந்து பணியைத் தொடங்கிவைத்தார்.

இரா. இராஜேந்திரனின் தலைமையில் வந்த நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களுக்கும் மற்றவருக்கும் எட்டரை செல்வராஜ் பாலசுந்தரம் இருவரும் மதிய உணவளித்துப் போற்றியதுடன் உடனிருந்தும் உதவினர். கோயில் முழுவதும் சுத்தம் செய்யப்பட்டு, இடிந்து விழுந்திருந்த பகுதிகள் அகற்றப் பட்டன. கோயிலுக்குள் மண்மேட்டில் புதைந்திருந்த தென் திசைக் கடவுள், தேவி, சிவலிங்கம், கல் சாளரம் இவற்றை மாணவர்கள் அகழ்ந்தெடுத்தனர். இடிந்திருந்த விமானத்தை மூடிக் கூரை வேயப்பட்டது. அன்று மாலை நடந்த நிறைவு விழாவில் மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக மேளாளர் இரா. காளத்தீசுவரன் வழித் தகவல் அறிந்து திருவாவடுதுறை திருமடத்துத் தலைவர் அருள்திரு சிவப்பிரகாச தேசிகர் கோயிலைப் பார்க்க வருகை தந்தார். அவருடைய வருகையால் ஊர்மக்கள் பரவசமுற்றனர். அகழ்ந்தெடுக்கப்பட்ட சிவலிங்கத்திற்கு ஒளிவழிபாடு நிகழ்த்திய அவர், முயற்சி எடுத்த அனைவரையும் வாழ்த்திச் சென்றார். கோயிலில் முறையான வழிபாட்டைத் துவக்க, மாவட்ட ஆட்சித்தலைவரையும் அவர் துணைவியார் சாந்தி நடேசனையும் அழைத்தோம். வயலூர் சிவாச்சாரியார் ஜம்பு குருக்கள் தலைமையில் 1984 பிப்ருவரித் திங்கள் 19ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை தேவாரப் பதிகங்கள் முழங்க வழிபாடு தொடங்கியது.

சாந்தி நடேசன் குத்துவிளக்கேற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் வழிபாட்டில் கலந்துகொண்டு பெருமைப்படுத்தினார். இந்த நிகழ்ச்சி மனநிறைவை அளித்ததுடன் ஊரோடு சேர்ந்து விழா எடுப்பதிலுள்ள துன்பங்களையும் புலப்படுத்தியது. மாவட்ட ஆட்சித்தலைவர் வருகை தந்ததால் அரசுத் துறைகளின் அணைப்புக் கிடைத்தது. ஊருக்கும் பல நன்மைகள் விளைந்தன. பல பயனாளிகள் உதவித்தொகை பெற்றனர். கோயில்வரை வந்து செல்லச் சாலை அமைத்துத் தரவும் ஏற்பாடானது. விளக்கு வசதிகள் கிடைத்தன. ஒரே நாளில் முள்ளிக்கரும்பீசர் சிராப்பள்ளி மக்களுக்கு அறிமுகமானதுடன் தமிழ்நாட்டு மக்களையும் ஈர்க்கலானார்.

நானும் இராஜேந்திரனும் ஊர்த் தலைவரிடம் கோயிலை நன்கு பராமரிக்குமாறு வேண்டியதுடன், திருப்பணிக்கு அறநிலையத்துறையை அணுகுமாறும் கூறிவந்தோம். கோயிலை ஒட்டிய நிலப்பகுதியை நெல்லடிக்கும் களமாக அவர் பயன்படுத்தியமையால் திருப்பணிக்குத் தயங்கினார். ஊர்மக்களுள் களத்தைப் பயன்படுத்தியவர்கள், அவருடன் இணைந்தனர். திருப்பணி நடந்தால் களம் கைவிட்டுப் போய்விடுமோ என்ற அச்சம் அவர்களைத் தயங்க வைத்தது. நல்லவேளையாக இளைஞர் மன்றத்தார் உதவிக்கு வந்தனர். அவர்களைக் கொண்டே அறநிலையத்துறைக்கு விண்ணப்பிக்கச் செய்தோம்.

ஆனாலும், என்ன காரணத்தாலோ திருப்பணி நடைபெறவே இல்லை. என்றாலும், வழிபாடு மட்டும் தொடர்ந்தது.

திருவரங்கம் காட்டழகியசிங்கர் கோயில் பற்றிய என் கட்டுரை செந்தமிழ்ச் செல்வி 1983 நவம்பர் இதழிலும், தான் தோன்றீசுவரர், புலிவலம் சுப்ரமணியசுவாமி கோயில், முள்ளிக் கரும்பூர், காட்டழகியசிங்கர் கோயில் இவற்றில் நான் கண்டறிந்த கல்வெட்டுகள், 'புதிய கல்வெட்டுகள்' என்ற தலைப்பில் செந்தமிழ்ச் செல்வி 1983 டிசம்பர் இதழிலும் வெளியாயின. மாடக்கோயில்கள் பற்றிய ஆய்வு தொடர்ந்தது. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் கோயிலுக்குச் செல்வதைக் கடமை யாகக் கொண்டேன். ஒரு மாதத்திற்கு இருமுறையாவது கள ஆய்வு செய்தோம். தொடக்கத்தில் புரியாமல் இருந்த பல விஷயங்கள் பார்க்கப் பார்க்க வயமாயின. ஒரு கோயிலை அடிப்படைத் தெளிவுகளுடன் முழுமையாகச் செம்மையாகப் பார்த்தால் அது தரும் அநுபவம் ஆயிரம் நூல்களைப் படிப்ப தினும் பெரிதென்பதை என் களஆய்வுகள் எனக்கு உணர்த்தின.

ஆய்வு செய்யவேண்டும், அறிந்துகொள்ளவேண்டும் என்று தான் கோயில்களுக்குச் செல்லத் தொடங்கினேன். என்னுடைய ஆய்வு வாழ்க்கையின் முதல் ஐந்தாண்டுகள் அறிந்து கொள்வ திலேயே முடிந்தன. என்றாலும் 1984ல் இருந்தே கோயில்கள் என்னுடன் உறவாடத் தொடங்கியதை உணர்ந்தேன். எனக்கும் கோயில்களுக்கும் இடையே நட்பு மலர்வதை வியப்போடு பார்த்துவந்தேன். எத்தனையோ ஆய்வாளர்களைச் சந்தித்த கோயில்கள்கூட, எனக்காக ஏதேனும் ஒரு இரகசியத்தைக் காப்பாற்றி வந்ததை ஒவ்வொரு கோயிலிலும் கண்டறிய நேர்ந்த போது என் பேற்றை எண்ணி வியந்து பூரித்தேன்.

தேடுவதில் நான் மகிழ்கிறேன். தருவதில் அவை நிறைகின் றன. நான் தட்டித் திறக்காத கதவுகளே என் ஆய்வு வாழ்க்கையில் இல்லை. விடை கிடைக்காத புதிர்களை விட்டுவிடுவேன். காலம், எங்காது ஒரு மூலையில் அந்தப் புதிர்களுக்கான விடைகளோடு காத்திருக்கும். உண்மையான உழைப்பைக் காலம் மதிக்கும் என்ற நம்பிக்கையில் எனக்கு இன்றளவும் தளர்வில்லை. முன்பு கோயில் களைத் தேடி நான் சென்றேன். வலஞ்சுழியோடு களப் பயணங் களை முடித்துவிடலாமென்று கருதியபோது சீதாராமன், பத்ம

நாபன் இணைவில் உடையாளூர் உதயமானது. அங்குதான் எத்தனை புதிய தரவுகள்! அத்தோடு நிறுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தபோது முதுகலை மாணவி ஒருவருக்காகப் போசளீசுவரம் மறு ஆய்வு. புதிய கல்வெட்டு ஒன்று கிடைத்தது.

இப்போதுகூட, தென்தமிழ்நாட்டுக் குடைவரை ஆய்வு களை முடித்துவிடவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் திருப் பரங்குன்றத்திற்குப் பயணப்பட்டேன். ச. கமலக்கண்ணன், ம. ராமச்சந்திரன், மா. இலாவண்யா மூவரும் கொண்ட முதற் பயணம் பரங்குன்றம் குடைவரையின் நுட்பங்களை விளக்கியது. நானும் நளினியும் மேற்கொண்ட இரண்டாம் பயணம், முருகப் பெருமானின் அந்தத் திருக்கோயில் எத்தகு சிற்பப் புதையல்களை உள்ளடக்கியுள்ளது என்பதை உணரச்செய்தது. பரங்குன்றத்தை ஆய்வுசெய்து எழுதியுள்ள எந்த வரலாற்றறிஞருக்கும் கிடைக் காத புதையல்கள் எங்கள் பயணத்தில் கிடைத்தன. பரங்குன்றத்தில் முற்பாண்டியர் கால எழுவர் அன்னையர் சிற்பத்தொகுதியை நானும் நளினியும் கண்டறிந்தோம். இதுநாள்வரை வரலாற் றுலகின் கண்களுக்கு வெளிப்படாதிருந்த அந்த அற்புதத்தொகுதி இறையருளால் இப்போது வெளிப்பட்டுள்ளது. வீரபத்திரராய்ச் சிவபெருமானும் விநாயகரும் எதிரெதிர்ச் சிற்பங்களாய் அமைய, இடையில் எழுவர் அன்னையர். பாண்டியர் தலைநகர் அருகிலேயே இந்தப் பெண்தெய்வ வழிபாட்டுப் புதையல் கிடைத்ததை என்னென்று சொல்வது!

குடைவரையில் சிவபெருமான் கருவறையின் அருகே கங்காதரர் சிற்பம் உள்ளது. அதைப் பற்றி இக்குடைவரையை ஆராய்ந்த பலரும் எழுதியுள்ளனர். ஆனால், அதன் கீழுள்ள பகீரதனின் தவக்கோலம், நாய்ச்சிற்பம் இவற்றை இவ்வாய்வாளர் கள் கவனிக்கவில்லை. முதன்முறையாக இவற்றைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளோம். பல்லவர் பகுதியில் கங்காதரரோடு சேர்ந்து கிடைக்கும் இந்த நாய்ச்சிற்பம் பாண்டியர் பகுதியிலும் இருப்பது, கங்காதரர் அமைப்புக்கும் நாய்க்கும் உள்ள தொடர்பை உறுதிப்படுத்துகிறது. அறிஞர்கள் மைக்கேல் லாக்வுட், வெங்கட் ராமன், கூ. ரா. சீனிவாசன் இவர்கள் இந்தத் தொடர்பு பற்றி ஆராய்ந்துள்ளார்கள். இருப்பினும் தெளிவான கருத்துக்கள் வரவில்லை.

1984ல் செந்தமிழ்ச் செல்வியில் எழுதிய, 'முழையூர்க் கோயில் மாடக்கோயிலா?', 'கோனேரிராஜபுரத்துக் குழப்பங்கள்' கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. அக்கட்டுரைகளால் அறிஞர்கள் சிலருடன் முரண்பட நேர்ந்தது. பெரியபுராணத்திற்கு உரை எழுதிய அறிஞர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் முழையூரில் உள்ள கோயிலைத் தம் நூலில் மாடக்கோயிலாகக் காட்டியிருந்தார். முழையூர்ப் பரசுநாதர் கோயில் மாடக்கோயில் அன்று. களஆய்வில் நான் கண்டறிந்த இவ்வுண்மையைக் கட்டுரையில் எழுதியிருந்தேன். கட்டுரையைப் படித்தத் தஞ்சாவூர் வாழ் சைவப் பெரியார் ஒருவர், சி. கே. சுப்பிரமணிய முதலியாரின் கூற்றில் குறை காண்பதா என்று என்னைக் கடிந்து கொண்டார். நேரிடை உரையாடலில் பலபட விளக்கியும், அவர் புரிந்துகொள்ள மறுத்ததுடன் என்னிடமிருந்து விலகிநின்றார்.

கோனேரிராஜபுரத்துக் குழப்பங்களில் இரா. நாகசாமி, எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், என். சேதுராமன், வெ. வேதாசலம், பரணீதரன் இவர்தம் கருத்துக்களைச் சான்றுகளோடு மறுத்து எழுதியிருந்தேன். கட்டுரை செந்தமிழ்ச் செல்வியில் நான்கு மாதங்கள் தொடராக வெளிவந்தது. கோனேரிராஜபுரம் கோயிலில் உள்ள கண்டராதித்தர் சிற்பத்தை, 'செம்பியன் மாதேவி' என்று அறிஞர் சிலர் அடையாளப்படுத்தி இருந்தமை ஆழ்ந்த வருத்தம் தந்தது. கண்ணெதிர்ச் சான்றைக்கூடச் சரியாகப் பார்க்காமல் பிழையாக இனங்கண்டிருந்த ஆய்வுப் போக்குகள் எனக்கு வியப்பும் துன்பமும் தந்தன. 'இரண்டாம் நிலைச் சான்றுகளை' ஆராயாமல் கொள்ளக்கூடாது என்று உறுதிபூண்டேன்.

தங்கள் நூல்களின் வழி எனக்குள் உயர்நிலை பெற்றிருந்த எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், இரா. நாகசாமி இருவரையுமே கட்டுரைகள் எழுதத் தொடங்கிய இரண்டாண்டுகளுக்குள் மறுக்க நேர்ந்தமை நெடுங்காலம் என்னை வருத்தியது. ஆனால், உண்மைகளை முன்வைக்கும்போது, யாரை மறுக்கிறோம் என்பதைவிட எதற்காக மறுக்கிறோம் என்பதில் தான் அக்கறை கொள்ளவேண்டும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன். ஆய்வு என்று வரும்போது கருத்துக்களைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, அவற்றின் பின் நிற்கும் அறிஞர்களை அன்று.

அதனால்தான், என் முதல் கருத்தரங்கக் கட்டுரையை உளமாரப் பாராட்டி, அரசு விழாவொன்றிலும் கட்டுரை வாசிக்க வாய்ப் பளித்த, நான் இன்றளவும் நேசிக்கும் இரா நாகசாமியின் கருத்துக்களை என்னால் தயங்காமல் மறுக்கமுடிந்தது

ஒரு கருத்தை மறுப்பதாலேயே, அக்கருத்தை வெளியிட்ட அறிஞரை மதிக்கவில்லை என்று பொருளல்ல. ஆய்வாளனாக எழுதத் தொடங்கிய காலம் முதல் இந்த இருபத்தைந்து ஆண்டு அனுபவத்தில் எத்தனையோ அறிஞர்களை மறுக்க நேர்ந்துள் ளது. ஆனால், அவர்கள் யாரையும் மதிக்க மறந்ததில்லை. அந்த ஆய்வாளர்கள் ஒவ்வொருவரும் எத்தனை பாடுபட்டுத் தரவுகள் சேகரிக்கிறார்கள் என்பதை நானறிவேன், நானும் ஒரு கள ஆய்வாளன் என்பதால், இன்றுவரை எந்த ஆய்வாளருடனும் எனக்குப் பகையில்லை. எல்லோரும் நல்ல நண்பர்களே.

கருத்துக்களை மறுத்த காரணத்தாலேயே, என்னை யாரேனும் பகையாகக் கருதினாலோ, அவமதித்தாலோ அவதூறு பேசி னாலோ நான் பொருட்படுத்துவதில்லை. பொதுவாழ்க்கையில் அதற்கெல்லாம் தயாராக இருக்கவேண்டும். தொடக்கக் கால மருத்துவ வாழ்க்கையில், புகழ்பெற்ற மனநோய் மருத்துவர் பேராசிரியர் சாரதாமேனனின் உதவியாளராகச் சில மாதங்கள் பணியாற்றிய அநுபவம் எனக்கு ஆய்வு வாழ்க்கையில் பெரிதும் கைகொடுத்தது. கடுமையான சந்தர்ப்பங்களில்கூட அமைதியாகப் போராட அந்த அனுபவம் உதவியது.

முள்ளிக்கரும்பூர் கோயிலை வழிபாட்டிற்குக் கொணர்ந்த சில மாதங்களில் அவ்வூர் வாழைத்தோப்பில் ஒரு சிற்பம் தென் படுவதாகச் செய்தி வந்தது. நானும் நண்பர் இரா. இராஜேந்திர னும் உடன் சென்று பார்த்தோம். தலையின் மேற்பகுதி மட்டுமே வெளித்தெரிந்த நிலையில் ஒரு சிற்பம் வாழைத்தோப்பில் புதைந் திருந்தது. மண்ணைத் தோண்டியபோது தலை தெரியவந்த தாகத் தோப்புப் பெரியவர் கூறினார். அந்த வார இறுதியிலேயே, மஜீது முன்னிலையில் கி. ஆ. பெ. விசுவநாதம் மேனிலைப்பள்ளி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களின் உதவியுடன் சிற்பத்தை அகழ்ந்தெடுத்தோம். பல ஆண்டுக் காலம் மண்ணில் புதைந் திருந்த அதைத் தூய்மை செய்து சிராப்பள்ளி அரசு அருங் காட்சியகக் காப்பாட்சியர் மோகனிடம் ஒப்புவித்தோம்.

சுகாசனத்தில் கிரீடமகுடத்துடன் இரண்டு கைகள் மட்டுமே பெற்றிருந்த அச்சிற்பத்தை, 'இன்ன தெய்வம்' என்று என்னால் உடன் அடையாளப்படுத்தக்கூடவில்லை. மஜீதிற்கும் அதே நிலைதான். இருவருமே நிறைய விவாதித்தோம். இருந்தும் பயனில்லை. மிக அரிய வகைச் சிற்பமாக அது அமைந்துவிட்டதால், செய்தித்தாள்களில் செய்தி தரத் தயக்கமாக இருந்தது. 'இன்ன சிற்பம்' என்று அடையாளப்படுத்திய பிறகு செய்தி தரலாம் என்று முடிவுசெய்து சிற்ப நூல்கள் அனைத்தையும் படித்தேன். 'விஷ்வக்சேனராக' இருக்கலாமோ என்று தோன்றியது. ஆனால், பார்வைக்குக் கிடைத்த விஷ்வக்சேனர் சிற்பங்கள் அனைத்துமே நான்கு கைகள் பெற்றிருந்தன.

இந்த நிலையில்தான், சிற்பரத்னா கைகொடுத்தது. இராமருடைய தோற்றங்களை வண்ணிக்கும் அந்நூலில், இது போன்ற அமைப்பும் சொல்லப்பட்டிருந்தது. மஜீதிடமும் கலந்து கொண்டு, அரிய வகை இராமர் சிற்பம் கண்டுபிடிப்பு என்று செய்தியிதழ்களுக்குத் தகவல் தந்தேன். படத்துடன் செய்தியைப் பார்த்த அறிஞர் ஒருவர் (பெயர் நினைவில் இல்லை), அச்சிற்பம் 'மஞ்சுஸ்ரீ' ஆகலாம் எனக் கருத்துத் தெரிவித்திருந்தார். தவறாகக் கூறிவிட்டோமோ என்றஞ்சி, புத்தமதச் சிற்பங்களைக் குறிக்கும் சிற்பவியல் நூல்களை வளனார் கல்லூரி நூலகத்தில் பெற்றுப் படித்தேன். அப்போதுதான் அது மஞ்சுஸ்ரீ அன்று என்பது விளங்கியது.

மஞ்சுஸ்ரீக்குரிய வாளோ, புத்தகமோ, தலையைச் சுற்றிக் காணப்பட வேண்டிய சிறு வடிவங்களோ, முள்ளிக்கரும்பூர்ச் சிற்பத்தில் இடம்பெறாமையைச் சுட்டி, அவ்வறிஞருக்கு எழுதினேன். அவரும் என் விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, கண்டுபிடிப்பைப் பாராட்டினார். பின்னாளில், தருமபுர ஆதீனச் சொற்பொழிவு ஒன்றிற்குச் சென்றபோது, திருமடத்தில் அவரைச் சந்திக்கும் வாய்ப்பமைந்தது. மதுரை காமராசர் பல்கலையில் ஓய்வு பெற்றுத் திருமடப்பணிக்கு வந்திருப்பதாகக் கூறினார்.

இரா. நாகசாமி சிராப்பள்ளி வருவதாகவும் அவரிடம் இச்சிற்பத்தைக் காட்டிக் கருத்துக் கேட்கலாமென்றும் மஜீது கூறினார். மகிழ்வுடன் ஒப்புக்கொண்டேன். இரா. நாகசாமி

யுடன் நான், மஜீது இருவருமே அருங்காட்சியகம் சென்று அச்சிற்பத்தைப் பார்த்தோம். சிற்பத்தை நன்கு ஆராய்ந்த அப் பெருந்தகை, அது ஓர் அரிய சிற்பமே என்று கூறியதுடன், தற்போதைக்கு அதைச் சிற்பரத்னா கூறுமாறு போல இராம ராகவே கொள்வோம் என்று கூறியதுடன், அது குறித்து மேலும் ஆராயலாம் என்று கருத்துரைத்தார்.

இதெல்லாம் நடந்து சில வாரங்களில் ஆலம்பாக்கம் போக நேர்ந்தது. அப்போது அங்கிருந்த மாடமேற்றளியான வரதராசப் பெருமாள் கோயிலுக்குச் சென்றேன். அக்கோயி லின் கருவறையில் முள்ளிக்கரும்பூரில் கிடைத்த சிற்பத்தைப் போலவே மற்றொரு சிற்பம் இருப்பதைக் கண்டேன். என் உள்ளம் களிகொண்டது. அந்தச் சிற்பத்தைப் படமெடுத்துக் கொண்டதுடன் நன்கு ஆராய்ந்து குறிப்புகள் எடுத்தேன். சிராப்பள்ளி மீண்டதும் மஜீதிற்குத் தொலைப்பேசியில் செய்தி தந்தேன். அடுத்த நாள் படத்துடன் அவரைச் சந்தித்தேன். இருவரும் அருங்காட்சியகம் சென்று முள்ளிக்கரும்பூர்ச் சிற்பத்தை ஆலம்பாக்கம் சிற்பத்துடன் ஒப்பிட்டு ஆராய்ந்தோம் அச்சிற்பங்கள் இரண்டும் ஒன்று போலேவே அமைந்திருந்தமை வியப்பளித்தது. இரண்டு அரிய வகை இராமர் சிற்பங்களைக் கண்டுபிடித்தமை அளவற்ற மகிழ்ச்சியளித்தது. இன்றுவரை அது போன்ற மூன்றாவது சிற்பத்தை நாங்கள் பார்க்கவில்லை.

புரப்பாரற்று நலிந்து கொண்டிருக்கும் ஆலம்பாக்கம் வரத ராசப் பெருமாள் கோயில் அருமையான மாடக்கோயிலாகும். சில ஆண்டுகளுக்கு முன்புகூட அங்குச் சென்றிருந்தேன். அந்தக் கோயிலுக்கு இன்னமும் விடியல் வரவில்லை. அதே ஊரில் உள்ள பிற்பல்லவர் காலக் கற்றளியான கயிலாசநாதர் கோயில் தப்பித்துக் கொண்டது. ஆனால், மாடமேற்றளியைக் காப்பாற்று வார் யாருமில்லை. மிக உயரமான வெற்றுத் தளமும் அதே கட்டமைப்பில் விமானமும் கொண்டமைந்த இக்கோயிலின் கட்டமைப்பைக் காஞ்சிபுரம் வைகுந்தப்பெருமாள் கோயில், மேலப்பழுவூர் பகைவிடைஈசுரவம் இவற்றின் கட்டமைப்புடன் ஒப்பிட்டுக் கட்டுரை எழுதியமையும் நினைவுக்கு வருகிறது. மூன்றுமே அற்புதமான கற்றளிகள். பகைவிடைஈசுவரம் சாந்தார அமைப்புடைய விமானம் பெற்ற முற்சோழர் காலக் கோயிலாகும்.

கும்பகோணத்துக்கு அருகில், முழையூர்ப் பரசுநாதர் கோயிலை அடுத்தமைந்துள்ள ஆறைவடதளி, வரலாற்றுப் புகழ் பெற்ற மாடக்கோயிலாகும். அப்பர் பெருமானோடு, நெருங்கிய தொடர்புள்ள அக்கோயிலின் கோபுரம் சிதைந்து, நொறுங்கி விட்டது. ஆறாண்டுகளுக்கு முன் சென்றிருந்தபோது, கோயிலின் சுற்றுப்புறம், நான் 1983ல் பார்த்த நிலையிலேயே இருப்பது கண்டு துணுக்குற்றேன். சைவக்கோயிலான அதைச் சமணர்கள் கைப்பற்றியிருந்தமையால் மனம் வருந்திய அப்பர் பெருமான், உடன்வந்தாருடன் அங்கேயே அமர்ந்து உண்ணாநோன்பியற்றி அக்கோயிலை மீட்டெடுத்ததாகச் சேக்கிழார் கூறுவார். பழை யாறையின் ஒரு பகுதியாக அக்கோயிலுள்ள இடம் இருந்தமை யால்தான் அது ஆறைவடதளியானது. அமர்நீதிநாயனாரின் வாழிடமாகப் பழையாறை அமைந்தமையால், கோயிலில் அவர் சிற்பம் இடம்பெற்றுள்ளது. இக்கோயிலைப் பற்றிய ஆய்வுக் கட்டுரை 1984ம் ஆண்டு செந்தமிழ்ச் செல்வி இதழ்களில் ஏப்ரல் முதல் ஜூன்வரை வெளியானது.

1982 டிசம்பரில் இலக்கிய இளவல் (பி. லிட்.) இரண்டாம் ஆண்டு தேர்வெழுதினேன். ஐந்து தாள்கள் இருந்தன. படிக்க நேரம் அமையாமையின், இலக்கியம் மூன்றாம் தாளும், இலக்கணம் இரண்டாம், மூன்றாம் தாள்களும் எழுதி வெற்றி பெற்றேன். இலக்கணப் படிப்பு என் எழுத்தைத் திருத்திக் கொள்ளவும் தொடர்களைச் சீரமைக்கவும் பெரிதும் உதவியது. 1983 செப்டம்பரில், விட்டுப்போன, தமிழ்நாட்டின் கலையும் நாகரிகமும் தாளும் மொழிபெயர்ப்புத் தாளும் எழுதித் தேறினேன். அத்துடன் மூன்றாம் ஆண்டுக்குரிய இலக்கியம் நான்காம், ஐந்தாம் தாள்கள், கல்வெட்டுகளும் கோயிற் கட்டடக் கலையும் தாள் இவற்றை எழுதித் தேறினேன். செப்டம்பர் 1984ல் தமிழிலக்கிய வரலாறு, தொல்லியல் தாள்கள் எழுதினேன். இலக்கியத் தாள் ஒன்று, இலக்கணத் தாள்கள் மூன்று என நான்கு தாள்கள் எஞ்சியிருந்தன. மருத்துவப் பணியும் ஆய்வுப் பணியும் அவற்றை எழுத முடியாதபடி செய்தன. தமிழ்க்குடில் செல்வதும் குறைந்து போயிற்று. ஆசிரியப் பெருமக்களுடன் ஒரு சாலை மாணாக்கனாய் அமர்ந்து படிக்கும் வாய்ப்பு அருகியது.

என்னுடைய முதல் ஆங்கில ஆய்வுக்கட்டுரை 17. 12. 1983ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் வெளியானது. 'A Rare Gangavatara Icon' என்ற தலைப்பில் ஆடல் செப்புத்திருமேனி ஒன்றைப் பற்றிப் படத்துடன் எழுதி வெளியிட்டிருந்தேன். அதே ஆண்டில் மார்ச்சு மாதம் சமயபுரத்திற்கு அருகிலுள்ள கூத்தூர் கிராமத்துக்கு அழைக்கப்பட்டேன். அவ்வூர்க் கோயில் பூசாரி ஒரு செப்பேட்டை என்னிடம் தந்து படித்துத் தரச் சொன்னார். திருமலைநாயக்கர் காலச் செப்பேடான அதை நானும் மஜீதும் இணைந்து படித்தோம். பூசாரியிடம் செய்தி யைத் தந்ததுடன், செய்தி இதழ்களுக்கும் தகவல் தந்தோம். கூத்தூர்க் கோயிலை ஆய்வு செய்தபோது, அங்கிருந்த ஓர் இலிங்கத்திருமேனி என்னைக் கவர்ந்தது. ஆண்குறியைப் போலவே அமைக்கப்பட்டிருந்த அது போல் இலிங்கத் திருமேனியை அதற்கு முன் நான் எங்கும் கண்டதில்லை.

கூத்தூர்க் கோயிலில் ஒரு செப்புத்திருமேனி இருந்தது. அதைக் கழுத்துவரை பட்டுத்துணி கொண்டு மூடியிருந்தனர். கோயிலைப் பற்றிக் கட்டுரை எழுதித் தருமாறு வேண்டிய பூசாரி, அத்திருமேனியைக் கொற்றவை என்று கூறி, அதைப் பற்றிச் சிறப்பாக நான்கு வார்த்தை எழுதுமாறு சொன்னார். அந்தத் திருமேனியை முழுவதுமாகப் பார்த்தால் தவிர, அது பற்றி எழுத முடியாது என்று கூறினேன். 'பூர்வ காலமாக அது இப்படித்தான் கழுத்துவரை துணியால் மூடப்பட்டுள்ளது. புதியவர்கள் முன் துணி நீக்கிக் காட்டிப் பழக்கமில்லை' என்று கூறிய பூசாரி, 'அந்தத் திருமேனி ஊர் உலாச் சென்றால்தான் காணிக்கை மிகுதியாகக் கிடைக்கிறது' என்றும் கூறினார். துணியை நீக்கினால் மட்டுமே திருமேனியின் சிறப்புக் குறித்து ஏதும் சொல்லமுடியும் என்று நான் உறுதிபடக் கூறியதால், வேறுவழியின்றித் துணியை அகற்றினார். நான் அதிர்ந்து போனேன். காரணம், துணி நீக்கிய அந்தத் திருமேனி கொற்ற வையாக இல்லை; விஷ்ணுவாக இருந்தது!

ஓர் ஆண் இறைத்திருமேனியைக் கழுத்துவரை துணி சுற்றிப் பெண் இறைத்திருமேனியாகக் காட்டிக் காணிக்கை பெற்றுக்கொண்டிருக்கும் அந்தக் கோயில் நடைமுறை என்னை ஆழ வருத்தியது. பின்னாளில் இது போன்ற நடைமுறைகளைப்

பல கோயில்களில் பார்க்க நேர்ந்தது. தஞ்சாவூர் இராஜராஜீசு வரத்திலேயே நாகர்கள் கழுத்துவரை புடவை சுமந்து நாக கன்னிகளாக மாற்றப்பட்டிருந்தமையைக் கண்டேன். கோயில் வழிபாடுகளிலுள்ள இத்தகு அவலங்களை யார் சரிசெய்வது? 'எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, சொந்த நாட்டிலே' எனும் பாடலடிதான் இன்றளவும் எனக்குள் எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

கூத்தூர்ப் பூசாரியிடம் நெடுநேரம் பேசி விஷ்ணு, கொற்றவை இரண்டும் வெவ்வேறு திருமேனிகள் என்பதைப் புலப்படுத்தினேன். விஷ்ணுவை, விஷ்ணுவாக வணங்குமாறு வேண்டினேன். அவர் நான் கூறியதையெல்லாம் புரிந்து கொண் டது போலவே என்னை வழியனுப்பி வைத்தார் ஆனால், விஷ்ணு மீண்டும் கொற்றவையாகவே மாறுவார் என்று என் உள் மனம் கூறியது. தெய்வங்களைவிடக் காணிக்கை பெரியது அல்லவா!

1984 அக்டோபரில் முள்ளிக்கரும்பூரில் இருந்து மீண்டும் அழைப்பு வந்தது. அவ்வூரின் புறப்பகுதியாக இருந்த கொத்தட் டையின் குட்டைக்கரையில் துணி துவைக்கும் கல்லாகப் பயன்பட்டுவந்த ஒரு சிற்பத்தைக் காப்பாற்ற நானும் நண்பர் இரா. இராஜேந்திரனும் அங்குச் சென்றோம். வானொலி நண்பர் தே. சந்திரனும் வந்திருந்தார். ஊர் இளைஞர்கள் துணை யுடன் அந்தத் துணி துவைக்கும் கல்லைப் புரட்டினோம். என்ன கொடுமை! பத்தாம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க சமண தீர்த்தங்கரர் சிற்பமாக அது இருந்தது. சமணச் சிற்பங்களைப் பற்றிய அடிப்படைத் தெளிவுகள் ஏதும் இல்லாமையின் அந்தத் தீர்த்தங்கரரை யார் என்று அடையாளப்படுத்தக்கூட வில்லை. ஊர் மக்களிடம் பேசி அந்தச் சிற்பத்தைச் சிராப்பள்ளி அருங்காட்சியகத்திற்குக் கொணரும் முயற்சி தொடங்கியது. அப்போது ஊர் நிருவாக அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவ ரின் அனுமதி பெறவேண்டும் என்றார்.

அன்று மாலையே மாவட்ட ஆட்சித்தலைவரைச் சந்திக்கச் சென்றேன். பி. நடேசன் மாற்றலான பிறகு, வ. விசுவநாதன் ஆட்சித்தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். அவரைச் சந்தித்த அந்த மாலை நேரம் மறக்கமுடியாதது. வரலாற்றில் ஆர்வம்

கொண்டிருந்த அப்பெருந்தகை என்னைக் கேள்விப்பட்டிருந் தார். அதனால், அன்புடன் உரையாடினார். அவருடைய கல்லூரிப் படிப்பு, நா. பார்த்தசாரதியின் நூல்கள் எனப் பலவும் பேசினோம். நா. பார்த்தசாரதியின் மணிபல்லவம் அவரை மிகவும் கவர்ந்த நூலென்று கூறினார். எனக்கும் அந்த நூல் பிடிக்கும் என்பதால், சுரமஞ்சரி பற்றி நிறையவே பேசினோம். கொத்தட்டை நிலை கூறியதும், உடனே ஆவன செய்யுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

கொத்தட்டைத் தீர்த்தங்கரரால் ஓர் இனிய மனிதரின் நட்பு கிடைத்தது. அந்த இனிய மனிதரால் கொத்தட்டைத் தீர்த்தங்கர ரும் துவைப்பில் இருந்து தப்பினார். அரசு அருங்காட்சியகத் திற்கு அவரைக் கொணர்ந்து சேர்த்ததும் மஜீது வந்து பார்த்தார். சிற்பச் செந்நூல் கொண்டு, தீர்த்தங்கரர் மகாவீரராகலாம் என்று அடையாளப்படுத்தினோம். செய்தி இதழ்களுக்குத் தகவல் தந்தோம். 27. 10. 1984 இந்தியன் எக்ஸ்பிரஸில் செய்தி சிறப்பாக வந்திருந்தது. இராமர், புத்தர், மகாவீரர் மூன்று சிற்பங்களுமே ஏறத்தாழ ஒரே காலகட்டத்தைச் சேர்ந்தவையாக இருந்தமை குறித்து நானும் மஜீதும் நிறைய விவாதித்தோம். முள்ளிக் கரும்பூர், குழுமணி, எட்டரை உள்ளடங்கிய பகுதி சோழர் காலத்தில் சிறப்புக்குரிய பெருவழியாக இருந்திருக்கலாம் என்ற எண்ணம் என்னுள் உருவெடுத்தது.

1984 நவம்பரில் முள்ளிக்கரும்பூரில் இருந்து மற்றோர் அழைப்புக் கிடைத்து. இம்முறை, முள்ளிக்கரும்பூருக்கு எதிர்ப் புறமிருந்த மஞ்சாங்குளம் என்ற சிற்றூர் வயலில் தென்னை மரத்தின் கீழ்த் தோண்டியபோது ஒரு சிற்பம் வெளிப்பட்டிருந் தது. மஜீது, இராஜேந்திரனுடன் சென்று பார்த்தபோது, அது திருமால் சிற்பம் என்பதை அறிந்தோம். மாவட்ட ஆட்சித் தலைவரின் அநுமதி பெற்றுக் கி. ஆ. பெ. விசுவநாதம் மேல் நிலைப்பள்ளி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களின் உதவியுடன் திருமாலைச் சிராப்பள்ளிக்குக் கொண்டுவந்தோம். அதுவும் பத்தாம் நூற்றாண்டுச் சோழர் சிற்பமாக விளங்கியது.

ஏறத்தாழ இதே காலகட்டத்தில் சிராப்பள்ளியிலிருந்த சக்தி சங்கத்தில் என்னைப் பேச அழைத்திருந்தார்கள். அந்தச் சங்கத்தின் தலைவியாக இருந்த செல்வி சந்திரசேகரன் மதுரை

யில் நாங்கள் வாழ்ந்த காலத்தே, என் சகோதரி சிவஅரசியின் வகுப்புத் தோழியாக இருந்தவர். செல்வியின் தங்கை மானமணி என் வகுப்புத் தோழியாக நான்காம் வகுப்புப் படித்தவர். இந்த உறவுகள் எல்லாம் செல்வியைக் கண்டபிறகுதான் நினைவிற்கு வந்தன. இவை யாவும் தெரியாத நிலையிலேயே என்னை அழைக்க வந்த செல்வி சந்திரசேகரன், பழைய நினைவுகள் புதுப்பிக்கப்பட்ட நிலையில் என்னை மிகுந்த அன்புடன் தம்பியாகக் கொண்டார். எப்போதுமே 'தம்பி' என்று பாசத் துடன் அழைப்பார் நான்கு மூத்த சகோதரிகளைப் பெற்ற எனக்கு அவர் ஐந்தாவது சகோதரியானார். அவருடைய ஒரே திருமகள் தான் என் முதல் மாணவியாக வந்து வாய்த்த வாணி செங்குட்டுவன்.

1984 செப்டம்பர் என் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு மாதமாகும் திருச்சிராப்பள்ளி ஜேசீஸ், அரிமாசங்கம், பன்னாட் டுத் தமிழுறவு மன்றம் எனப் பல அமைப்புகளில் தொடர் புடையவராய் இருந்த பொறியாளர் பட்டாபிராமன் திடீரென ஒரு நாள் என் இல்லம் வந்தார். தமிழ்நாடு ஜேசீஸின் சிறந்த இளைஞர் விருதுக்கு, என் பெயரைப் பரிந்துரைத்திருப்பதாக வும் அதற்கு, அதுநாள்வரையில் நான் செய்திருந்த ஆய்வுப் பணிகள், பிற பங்களிப்புகள் இவை தேவையென்றும் கேட்டார். பட்டாபிராமன் இதழ் சேகரிப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டவர். பழகுதற்கு இனியவர். அமுதசுரபி ஆசிரியர் விக்கிரமனுக்குத் திருவரங்கத்தில் பாராட்டு விழாவொன்று எடுத்தபோது எனக்கு அறிமுகமாகிப் பிறகு நட்பு பூண்டவர். அவர் கேட்டபோது என்னால் மறுக்கமுடியவில்லை. என்னிட மிருந்த கட்டுரைகள், அழைப்பிதழ்கள், சான்றிதழ்கள் தந்தேன். அனைத்தையும் நகல் எடுத்துக்கொண்டு, இரண்டே நாட்களில் அதுநாள்வரையிலான என் வாழ்க்கை வட்டத்தை என்னிடம் வழங்கினார். வியப்படைந்தேன். முதன்முதலாக என் வாழ்க்கைக் குறிப்புகளை நான் பார்த்த நாள் அது!

தமிழ்நாடு முழுவதுமிருந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இது போல் தேர்வுசெய்து அனுப்புவார்கள் என்றும் அவ்வாறு வரும் பெயர்களையும் அப்பெயர்களுக்கு உரியவர்களின் பணி களையும் தலைமைக் குழுவினர் சீர்தூக்கிப் பார்த்து உரியவர்

களை விருதுக்குத் தேர்ந்தெடுப்பார்கள் என்றும் பட்டாபிராமன் கூறியிருந்தார். ஓரிரு நாட்கள் நினைவிலிருந்த அந்தத் தகவல் பிறகு மறந்துபோயிற்று. திடீரென அக்டோபர்த் திங்கள் 25ம் நாள் பட்டாபிராமன் தொலைப்பேசினார். தமிழ்நாடு ஜேசீஸ் விருது எனக்குக் கிடைத்திருப்பதாகவும் சேலத்தில் நடைபெற வுள்ள தமிழ்நாடு ஜேசீஸ் மாநாட்டில் நேரில் வந்து இந்த விருதை வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக் கொண்டார். 31. 10. 1984ல் நிகழ்ந்த அந்த மாநாட்டிற்கு என் வாழ்வரசி, மகள், மகன் அனைவரும் சென்றிருந்தோம். மிகச் சிறப்பாக அறிமுகம் செய்து என் பணிகளை எல்லாம் ஒன்று விடாமல் எடுத்துரைத்து, ‘சகலகலா வல்லவர்’ என்ற அழைப் புடன் அந்த ஆண்டின் மிகச் சிறந்த இளைஞர் விருதினை அளித்துப் பெருமைப்படுத்தினார்கள். பெரியதொரு மேடையில் ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் நான் பெற்ற முதல் விருது அதுதான். உழைப்பிற்குக் கிடைத்த ஊதியம் என்ற மகிழ்வு எங்கள் அனைவருக்குமே இருந்தது.

பட்டாபிராமனால் என் பங்களிப்புகளை நான் உணர முடிந்தது. அதுநாள்வரை பிடித்ததையெல்லாம் செய்து வந்த நிலையிருந்ததே தவிர, என்ன செய்தோம், எவ்வளவு செய்தோம், எந்தெந்தத் துறைகளில் செய்திருக்கிறோம் என்ற தெளிவில்லாது இருந்தது. பட்டாபிராமன் என்னுடைய அனைத்துப் பணி களையும் அட்டவணைப்படுத்தி ஆராய்ந்திருந்தார். அவருடைய இறுதி அறிக்கை என்னை நான் விளங்கிக்கொள்ள எனக்குப் பேருதவியாக இருந்தது. என்னிடமிருந்த ஆற்றலை அடையாளப் படுத்தியதோடு, அந்த ஆற்றல் வெளிப்பட்ட திசைகளையும் அவர் கண்டறிந்து கூறியிருந்தார். என்னையே நான் ஆற்றுப் படுத்திக்கொள்ள ஜேசீஸ் விருது வழிவகுத்தது. அதன் விளை வாய்ப் பல வழிகளில் சிதறியிருந்த ஆற்றலை ஒருமுகப்படுத்த முடிந்தது. எனக்குள் ஒளிந்திருந்த நடிப்பாற்றலையும் பேச்சாற் றலையும் வளர்த்துக்கொள்ள முடிந்தது. அதற்கு மிகவும் உதவி யாக இருந்தவை இந்திய மருத்துவ மன்றத்தின் திருச்சிராப் பள்ளிக் கிளையும், ‘துடிப்பு’ என்ற பெயரில் நாங்கள் அமைத் திருந்த இலக்கிய அமைப்பும் ஆகும்.

'துடிப்பு' இலக்கிய அமைப்புத் தமிழ் ஆர்வமும் ஒத்த நோக்கமும் கொண்ட இளம் நண்பர்களால் உருவாக்கப் பட்டது. சிராப்பள்ளித் தென்னூர் நெடுஞ்சாலையில் மருத்துவ மனை வைத்திருக்கும் மருத்துவ முனைவர் மு. சிவக்கண்ணு தலைவராக இருந்தார். வானொலி நெல்லை ந. முருகனும் தொலைத்தொடர்பு அலுவலர் திரு. வள்ளிநாயகமும் நானும் பிற பொறுப்புகளில் இருந்தோம். இந்த அமைப்பிற்கு உரையாற்ற அழைக்கப்பட்ட நிலையில்தான் எழுத்தாளர் பாலகுமாரன், பேராசிரியர் மா. இராமலிங்கம் இவர்கள் அறிமுகம் கிடைத்தது. கவிதை புனையும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள எனக்குப் பெரிதும் உதவிய இவ்வமைப்பு மூன்றாண்டுகள் தொடர்ந்து நிகழ்ந்ததென்றாலும், பலருடைய பணிமாறுதல்களால் மெல்லத் தொய்வுற்றுப் பின் செயலிழந்தது.

என் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு என்னை வளர்த்த இதழ்களுள் தலையாயவையாகச் செந்தமிழ்ச் செல்வி யையும் தினமணி கதிரையும் கூறலாம். அப்போதெல்லாம் தினமணியில் வெள்ளிக்கிழமை நாளிதழில் சுடர்ப்பகுதியில் கோயில் கட்டுரைகள் தவறாமல் இடம்பெறும். நாராயணசாமி தொடர்ந்து எழுதுவார். அவற்றைப் படித்திருந்த நிலையில், உறையூர்த் தான்தோன்றீசுவரத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி அனுப்பியிருந்தேன். தினமணி இதழ் அக்கட்டுரையை 22. 11. 1982ல் வெளியிட்டது. அளவில்லா மகிழ்ச்சி ஏற்பட்ட நிலையில் தொடர்ந்து எழுதினேன். இரண்டாவது கட்டுரையான மனத் துணைநாதர் திருக்கோயில் 27. 2. 1983 இதழில் வெளியானது. மூன்றாவது கட்டுரையான 'கடம்பூர்க் கரக்கோயில்' தினமணி யின் இணைப்பாக வந்த தினமணி கதிரின் 23. 10. 1983 இதழில் வெளியானது. கங்காவதரணம் 1. 1. 1984ம் இதழிலும், 'சதுர தாண்டவப் பெருமான்' 6. 5. 1984ம் இதழிலும், 'சோழபுரத்து பைரவர் கோயில்' 13. 5. 1984ம் இதழிலும் வெளிவந்தன. புத்தர் கண்டுபிடிப்புப் பற்றிய கட்டுரை தினமணி கதிர் 8. 7. 1984ம் இதழில் வந்தது.

15. 7. 1984ம் இதழில் வெளியான, 'தழுவக் குழைந்தவர்' கட்டுரை பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், ஆளரவமற்று இருந்த திருச்சத்திமுற்றம் கோயிலுக்கு மக்களை இழுத்து

வந்தது. இக்கட்டுரையின் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து சங்கரன்கோயில் ந. சுப்பிரமணிய சிவாச்சாரியார் எழுதியிருந்த மடல், கதிர் 15. 7. 1984ம் இதழில் வெளியானது. 'திருச்சத்திமுற்றம் என்ற தலத்து வரலாறு வேறாக உள்ளது. அதனைக் காஞ்சிப் புராணத்தோடு ஒப்பத் தழுவக்குழைந்தநாதர் என்று தலைப் பிட்டுச் சொல்வது பொருத்தமுடையது அன்று. அப்பெருமை காஞ்சிபுரத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும்' என்று அவர் குறிப்பிட்டிருந்தார். அப்பெரியாருக்கு நான் எழுதிய மறுமொழியையும் கதிர் வெளியிட்டது. இந்த விளக்கம் 21. 10. 1984ல் வெளியானது. 7 10. 1984ம் இதழில், 'புதிய செப்பேடு' என்ற தலைப்பில் திருமலை நாயக்கர் செப்பேடு பற்றிய கட்டுரை வெளியானது. 2. 12. 1984ம் இதழில் போசளீசுவரம் கட்டுரை வெளியானது.

திருவாசி மாற்றுரை வரதீசுவரர் கோயில் சிராப்பள்ளியில் இருந்து பத்துக் கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அந்தக் கோயிலை எனக்கு அறிமுகப்படுத்தியவர் சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழக மேலாளர் இரா. காளத்தீசுவரன். பாம்பின் தலை மீது திருவடி வைத்துச் சிவபெருமான் நிகழ்த்தும் ஆனந்தத் தாண்டவச் செப்புத்திருமேனி இக்கோயிலில் உள்ளது. வியப் பூட்டும் அந்தத் திருமேனியைக் குறித்து, 'அரவத்தின் மீதாடும் அண்ணல்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையைக் கதிர் 20. 1. 1985ல் வெளியிட்டது. ஆலம்பாக்கம் கைலாசநாதர் கோயிலின் பரிதாபகரமான நிலைமையை விளக்கி எழுதப்பட்ட, 'மிதக்கும் கோயில்' கட்டுரை 3. 2. 1985ல் வெளியானது. ஒவ்வொரு கதிர் இதழிலும் வெளியாகும் கட்டுரைகளைப் படித்துக் கருத்துரைக்கும், 'வாரம் ஒரு கடிதம்' பகுதியும் கதிரில் தொடர்ந்து வெளிவந்தது. தேவகுமார் என்பார் இதை எழுதி வந்தார். 'மிதக்கும் கோயில்' கட்டுரை வந்த இதழ் குறித்த அவரது ஒரு பக்கக் கடிதத்தில், இரண்டு பத்திகள் ஆலம்பாக்கம் கைலாசநாதர் கோயிலுக்காக ஒதுக்கப்பட்டு இருந்ததைக் குறிப்பிடவேண்டும்.

'மிதக்கும் கோயில் கட்டுரையில் டாக்டர் கலைக்கோவன் தமிழ்நாட்டில் ஆலம்பாக்கத்தில் ஒரு பழைமையான கோவில் செல்வம் இன்று பரிதாபமாக புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையை விளக்கியுள்ளார். அவர் கண்ணீர் விட்டு எழுதியுள்ளார். நாமும்

*கண்ணீர் மல்க கட்டுரையைப் படிக்கிறோம். இவை போன்ற அரும்பெரும் செல்வங்களை நாம் இனி உருவாக்குவதல் இயலாது. பண்டைய சரித்திரம் நமக்குப் பிதிரார்ஜிதமாகத் தந்துள்ள அரிய சொத்தினை பராமரிக்கவும் முடியாமல் நாம் இனியும் இருக்கலாகாது. ஆகாது, ஆகாது காண்!*

*இந்தக் கட்டுரையின் நகல்களை எடுத்து, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர், தமிழக அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித்துறைத் தலைவர், H. R. & C. E. துறையின் ஆணையாளர், துறையின் அரசுச் செயலர், அப்புறம் மத்திய அரசின் தொல்பொருள் துறைத் தலைவர், அந்தக் கிராமம் இருக்கும் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் எல்லோருக்கும் தலா ஒன்றாக நீங்கள் ஒரு கடிதத்துடன் அனுப்பி இது பற்றி தொடர்ந்து செயல்படவேண்டுகிறேன். உரியவர்களிடமிருந்து வருகிற பதில்களையும் கதிரில் பிரசுரியுங்கள். இது மாதிரி ஒரு இயக்கம் தொடங்கட்டும் உடனே.'*

கதிரில் வெளிவந்த இந்தக் கட்டுரையும் மடலும் சிராப்பள்ளியில் இந்து சமய அறநிலையத்துறையின் துணை ஆணையராக இருந்த, வேணுகோபாலைத் துன்பம் கொள்ளச் செய்தது. அப்பெரியாரும் துணை ஆணையராக இருந்த நண்பர் அழகப்பனும் என்னுடன் தொடர்புகொண்டு தகவல்கள் அறிந்தனர். அவர்கள் கூறிய பிறகே தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையின் கீழ்ப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அக்கோயில் இருப்பது தெரியவந்தது. உடன் மஜீதைத் தொடர்பு கொண்டு அதை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

கதிரில் கட்டுரையைப் படித்த ஆலம்பாக்கத்தைச் சுற்றி இருந்த ஊர்ப் பெருமக்களும் கவலையோடு ஒத்துழைக்க, பல துறையினரின் பங்களிப்பில் கோயிலுக்குள் நுழைந்து கொண்டிருந்த தண்ணீரை வெளியேற்ற முடிந்ததுடன், மழை நீர் தேங்காது வெளிச்செல்லவும் வழியமைக்கப்பட்டது. அந்தப் பணியின்போதுதான் துறைசார்ந்த கருத்து வேறுபாடுகள், மக்கள் - அரசு மோதல்கள் எனப் பலவும் அறியமுடிந்தது. வேணுகோபாலின் பெருந்தன்மையும் மஜீதின் நட்பும் ஊர்மக்களின் உதவியும் மட்டுமே அந்தக் கோயிலைக் காப்பாற்றின என்றால் அது மிகையாகாது. பின்னாளில், இனிய நண்பரும் தமிழ்நாடு

அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் சிற்பியாக இருந்து ஓய்வுபெற்றவருமான இராமன் தனிக் கவனம் செலுத்தித் தம் தலைமையின் கீழ் அக்கோயிலைச் சீரமைத்தார். அவருடைய முயற்சியும் ஆற்றலுமே பல நெருக்கடிகளுக்கு இடையில் அக்கோயில் பொலிவு பெறத் துணையாயின.

சிற்பி இராமன் இனிமையான மனிதர். சென்னையில் இருந்து சிராப்பள்ளிக்கு அவர் மற்றலாகி வந்த பிறகு என்னுடன் நெருக்கமானார். நானும் அவரும் மணிக்கணக்கில் கட்டடக்கலை தொடர்பான செய்திகளை விவாதித்ததுண்டு. நான் கூ. ரா சீனிவாசன் நூல்களைப் பயின்று கட்டடக்கலை கற்றிருந்தேன். அவர் கணபதி சிற்பியின் மாணவர். அதனால் மரபுவழிக் கல்வி பெற்றிருந்தார். இருவருக்கும் தொடக்கத்தில் பலத்த மோதல்கள் ஏற்படும். அவருக்கோ, எனக்கோ எள்ளளவும் தன்முனைப்பு இல்லாதிருந்தமையால், அந்த மோதல்கள் கருத்து மோதல் களாகவே முளைத்து மடிந்தன. மனவேறுபாடு என்பது கடந்த பதினைந்தாண்டுகளில் ஒரு போதும் ஏற்பட்டதில்லை. கோயிற் கட்டடக்கலையில் எங்களுக்கு இருந்த பல அய்யப்பாடுகளை இந்த விவாதங்கள் நீக்கின.

தம்முடைய மாணவப் பருவக் கையேடுகளை எல்லாம் என்னிடம் தந்து படிக்கவைத்தவர் இராமன். எந்தத் தயக்கமும் இல்லாமல், ‘தெரியாமையை’ வெளிப்படுத்திக்கொள்ள நாங்கள் இருவருமே தயாராக இருந்ததால், ஒருவரிடமிருந்து மற்றொருவர் நிறைய கற்றுக்கொள்ள முடிந்தது. பல மரபுச் சொற்களை அவரிடமிருந்து நான் பெற்றேன். பல வழக்குச் சொற்களைக் கூ. ரா. சீனிவாசனிடம் அறிந்த வகையில் என்னால் அவருக்குத் தரமுடிந்தது. சில புதிய கலைச்சொற்களை இருவரும் இணைந்து விவாதித்து உருவாக்கியுள்ளோம். எங்கள் மையத்தில் பின்னாளில் கோயிற்கலைப் பட்டயப் படிப்புத் தொடங்கியபோது அவர்தான் கட்டடக்கலை வகுப்புகள் எடுத்தார். மிக எளிமையானவர்; துடிப்பானவர்; கற்கவும் கற்பிக்கவும் விரும்புபவர். வரலாறு இதழிலும், துறை சார்ந்த நூல்களிலும் நிறைய கட்டுரைகள் எழுதியுள்ள அவரது திறமை இன்றளவும் குடத்தில் இட்ட விளக்காகவே இருப்பது பெருங்குறையே.

பாரதிதாசன் பல்கலைக்கழகம் அனைத்துத் துறைகள் சார்ந்த இளநிலை, முதுநிலை மாணவர்கள் தத்தம் இறுதியாண்டில் ஏதேனும் ஒரு தலைப்பைத் தேர்ந்து ஆய்வுநடத்தி ஆய்வேடு வழங்க வேண்டுமென விதியமைத்திருக்கிறது. சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறையில் முதுகலை வரலாறு இரண்டாம் ஆண்டு பயின்றுகொண்டிருந்த வாணி எத்தகு ஆய்வு மேற்கொள்வதென்ற சிந்தனையில் இருந்தார். அவரது தாய்மாமன் மதுரை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். அவரிடமும் அவர் வழி மதுரைக் காமராஜர் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினருடனும் தலைப்புப் பற்றி விவாதித்து முடிவு காணா நிலையில், 1984ன் இறுதியில் சக்தி சங்கம் நிகழ்த்திய என் உரையில் பங்கேற்றார்.

உரை நிகழ்ந்த சில நாட்களில் வாணியும் அவர் அன்னையார் செல்வி சந்திரசேகரனும் இல்லம் வந்திருந்தனர். வாணியை அறிமுகப்படுத்திய செல்வி, வாணிக்குக் கோயில் சார்ந்து ஓர் ஆய்வுத் தலைப்புக் கூறுமாறு கேட்டார். வாணியைப் பார்த்து, ‘உங்கள் விருப்பம் என்ன?’ என்று கேட்டேன். அவர் ஏதேனும் ஒரு கோயிலைப் பற்றி ஆய்வு செய்ய விரும்புவதாகக் கூறினார். தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில் செய்யமுடியுமா என்று கேட்டார். அந்தக் கோயிலின் செறிவையும் ஆழத்தையும் சில வரிகளில் விளக்கி, அது பல முனைவர் ஆய்வுகளுக்கான களம் என்பதை விளக்கினேன். அரைமணி நேரப் பேச்சுக்குப் பிறகு மீண்டும் வருவதாகக் கூறிவிட்டு அவர்கள் சென்றனர்.

வாணியின் சந்திப்பிற்கு முன், ‘ஆய்வேடுகள்’ என்ற நிலையில் எதையும் நான் படித்ததில்லை. ஆய்வு அணுகுமுறைகளைப் பற்றியும் எனக்கு ஏதும் தெரியாது. அப்படி நூல்கள் இருப்பதையும் அறியேன். வரலாற்று வரைவியல் என்று ஒரு தனிப் பிரிவே இருப்பதை அறிந்துகொள்ளும் வாய்ப்புகளும் அப்போது எனக்கு அமையவில்லை. இருந்தாலும், ஓர் ஆய்வு எப்படி அமையவேண்டும் என்பதில் எனக்கென்று சில கருத்துக்கள் இருந்தன. அவை அநுபவத்தாலும் படித்த நூல்களாலும் உருவானவை. பின்னாளில் வாணிக்காகவும் முனைவர் ஆய்விற்காகவும் வகைவகையான ஆய்வு நெறிமுறை நூல்களைப் படித்த போது என் கருத்துக்கள் சரியான தளங்களிலேயே வடிவம்

பெற்றிருந்தமையை உணரமுடிந்தது. எந்த 'இசமும்' சாராமல் உண்மை நெறி நின்று ஆய்வு செய்வதில் பெருஞ் சுகம் உள்ளது. எல்லாவற்றையும் ஏதாவது ஓர் 'இசத்தின்' பின்னணியில் பார்ப்பது எனக்கு இன்றளவும் உடன்பாடு இல்லை.

ஒருமுறை புதுச்சேரிப் பல்கலைக்கழகத்தின் தமிழாய்வுத் துறையில் நிகழ்ந்த ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் கருத்தரங்கு ஒன்றில் நான் படித்தளித்த ஆய்வுக்கட்டுரை குறித்துக் கருத் துரைத்த பேராசிரியர் ஒருவர், அக்கட்டுரை எந்த நெறிமுறையும் சாராமல் இருப்பதாகக் குற்றம் கூறியதுடன், ஏதேனும் ஓர் ஆய்வுநெறியைத் தேர்ந்துகொள்ளுமாறு அறிவுரையும் கூறினார். அதே கூட்டத்தில் என்னுடன் கட்டுரை படித்த முனைவர் இ. சுந்தரமூர்த்தி (முன்னாள் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்) என் கட்டுரை உரிய நெறிமுறைகளின் அடிப்படை யிலேயே அமைந்திருப்பதாகக் கூறி என்னைத் தேற்றினார்.

ஆய்வாளனாக உருமாறிய நாளிலிருந்து இன்றுவரை முடிவு களை வைத்துக்கொண்டு சான்றுகளைத் தேடுவதில்லை என்ப தில் உறுதியாக இருந்துவருகிறேன். பல நூலாசிரியர்கள் ஒரு கருத்துருவை உருவாக்கிக்கொண்டு, அதற்கான சான்றுகளைத் தேடுவதைப் படித்த அநுபவத்தில் கண்டதுண்டு. அதை நான் எப்போதுமே செய்ததில்லை. இனிச் செய்யும் எண்ணமுமில்லை.

ஒரு வாரம் கழித்து வாணி வந்தார். மீண்டும் நெடிய கலந்துரை. இறுதியாக முள்ளிக்கரும்பூர் கண்டுபிடிப்புகள் தொடர்பாக ஆய்வு நிகழ்த்துவதென ஒப்புதலானது. அது கடினமான பணியாக இருக்குமென்று அவரிடம் கூறினேன். அவரோ சவால்கள் நிறைந்த ஓர் ஆய்வையே விரும்பினார். அவரும் நானும் இணைந்து ஆய்வுசெய்யும் தலைப்பாக முள்ளிக்கரும்பூர் அமைந்தது. அவராகவே முள்ளிக்கரும்பூர் சென்று சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களையெல்லாம் பார்த்துவந்தார்.

பிறகு நானும் அவருமாக முள்ளிக்கரும்பூர் சென்றோம். முள்ளிக்கரும்பூர், கொத்தட்டை, மஞ்சாங்குளம் பகுதிகளைப் பார்வையிட்டபோது வரலாறு பற்றிய அவரது கண்ணோட்டத் தைக் கலந்துரை வழி அறியமுடிந்தது. நான் அதுநாள்வரை

சந்தித்திருந்த வரலாறு தொடர்பான இளைஞர்களிடமிருந்தும் பேராசிரியர்களிடமிருந்தும் அவர் மாறுபட்டுத் தோன்றினார். எனக்கு அவருடன் உரையாடுவதில் ஆர்வம் ஏற்பட்டது. 'அசோகர்' பற்றிய அவருடைய கல்லூரிக் கட்டுரை அவரைப் பற்றிய என் மதிப்பீட்டை உயர்த்தியது.

இரண்டாவது முறை முள்ளிக்கரும்பூர் சென்றிருந்தபோது கொத்தட்டையருகே அழிந்துபோன சிவன் கோயில் ஒன்றின் சுவடுகளைக் கண்டுபிடித்தோம். அந்த இடத்தை விரிவான அளவில் ஆய்வுசெய்து குறிப்புகள் எடுத்தோம். அடுத்த சில பயணங்களின்போது பேரளவிலான சிவலிங்கம் ஒன்று புதர் களின் மறைவில் உடைந்த நிலையில் மறைந்திருந்ததையும் அவ்விடத்திலும் கோயிலொன்று இருந்து அழிந்தமைக்கான தடயங்கள் காணப்பட்டதையும் கண்டறிந்தோம். முள்ளிக் கரும்பூருடன் நிறுத்திக்கொள்ளாது பக்கத்திலிருந்த குழுமணி, அந்தநல்லூர், அல்லூர், ஜீயபுரம் எனப் பல ஊர்களுக்கும் சென்றோம். அவ்வூர்களிலிருந்த சோழர் கோயில்களையும் அங்கிருந்த கல்வெட்டுகளையும் விரிவாக ஆராய்ந்தோம்.

பெரும்பாலான எங்கள் ஆய்வுப் பயணங்களில் ஆறுமுக மும் மஜீதும் இடம்பெற்றிருந்தனர். ஒவ்வொரு பயணத்தின் போதும் கற்றவற்றை எல்லாம் அல்லூர்ப் பசுபதீசுவரர் கோயில் முன்பிருந்த மாந்தோப்பில் அமர்ந்து விவாதிப்போம். வாணி வீட்டிலிருந்து அருமையான உணவு வரும். செல்வி சந்திரசேகர னின் கைப்பாகம் இணையற்றது. அதனால் பெரும்பாலான மதியங்கள் அவர் வீட்டு உணவுதான். வாணி நிறைய கேள்விகள் கேட்பார். என் ஆய்வு அநுபவமே மூன்றாண்டுகள்தான் என்ற நிலையில் எனக்குத் தெரிந்த அளவில் விடையிறுப்பேன். சில நேரங்களில் அவருக்கு நிறைவேற்படும். ஆனால், பெரும்பாலான நேரங்களில் அந்த நிறைவை அவர் முகத்தில் காணமுடியாது.

விழைந்து கேட்கும் ஒருவருக்குச் சொல்ல முடியாமல் இருக்கிறோமே என்று வருந்துவேன். தேடிப் படித்துச் சிந்தித்து மறுமொழி உரைக்கும்போது அதில் அவர் கொள்ளும் மகிழ்வு கண்களில் பளிச்சிடும். அந்த மகிழ்விற்காகப் பல இரவுகள் கண் விழித்திருக்கிறேன். ஓர் ஆசிரியனை உருவாக்குவதே மாணவர்

கள்தான். அவர்களுடைய அணுகுமுறைதான் ஆசிரியனைச் செதுக்கிச் சிற்பமாக்குகிறது. என்னைச் செதுக்கியவர்கள் என் அன்பான மாணவிகளே என்பதில் எனக்கு என்றுமே பெருமை உண்டு. நான் பேறு செய்தவன்.

ஏறத்தாழ ஒரு மாதம் முள்ளிக்கரும்பூரின் அனைத்துப் பகுதி களையும் சுற்றிப் பார்த்தோம். கிடைத்த தரவுகளை எல்லாம் ஒருமுகப்படுத்திக் கலந்துரை நிகழ்த்தினோம். விளைவுகளை முன்னிலைப்படுத்தி ஆய்வேட்டை எழுதுமாறு வாணிக்கு அறிவுறுத்தினேன். மெல்ல, மெல்ல முள்ளிக்கரும்பூர் ஆய்வேடு வளரத் தொடங்கியது. ஜனவரி 1985ல் தொடங்கிய அந்தப் பணி மார்ச்சில் முற்றுப்பெற்றது. அந்தத் தொண்ணூறு நாட்களும் மறக்க முடியாதவை.

கல்லூரிக் காலத்தில் எம். பி. பி. எஸ். படித்தபோதும் கண் மருத்துவப் படிப்பின்போதும் எத்தனையோ பிரிவு மாணவர் களுக்கு வகுப்பெடுத்திருக்கிறேன். கற்றுத்தருவதை மிகுந்த ஈடுபாட்டுடன் செய்பவன்தான் என்றாலும், அப்போதெல்லாம் கிடைக்காத ஒரு பெரும் நிறைவு முள்ளிக்கரும்பூர் ஆய்வில் ஏற்பட்டது. மறக்கப்பட்ட ஒரு பின்னணியை, சிதறிப்போன ஒரு வரலாற்றை அங்குமிங்குமாய் அகழ்ந்தும் அலைந்து திரிந்து தேடியும் தோப்புகளிலும் குட்டைகளிலுமாய்க் கண்டெடுத் தும் மீட்டுருவாக்கம் செய்ய முடிந்த அந்தத் தொண்ணூறு நாட்களும் வரலாற்றைப் பற்றிய என் பார்வைக்குப் புதிய அளவீடுகளைத் தந்தன. முள்ளிக்கரும்பூர் ஒரு வரலாற்று விடியலாக மலர்ந்தமைக்கு முழுமுதற் காரணம் வாணிதான்.

ஆய்வேட்டை எழுதிமுடித்த நாளை மிகவும் கொண்டாடி னோம். 'கோச்செங்கணான் - மாடக்கோயில்கள்' தொடர்பான ஆய்வும் களஆய்வுதான் என்றாலும், அதில் கோயில்கள் கண் ணெதிர்ச் சான்றுகளாக இருந்தன. இலக்கியங்கள் ஏற்கனவே பல அறிஞர்களின் ஆய்வுகளுக்கு உட்பட்டிருந்தன. நுணுகித் தேடி உண்மைகளை ஒருங்கிணைத்த அந்தப் பணியிலும் புதியன வற்றை அறியமுடிந்தது உண்மைதான் என்றாலும், முள்ளிக் கரும்பூர் ஆய்வு முற்றிலும் களஞ்சார்ந்த ஆய்வாக அமைந்து, 'மீட்டுருவாக்கம்' என்ற தத்துவத்தின் அடிப்படைகளையும்

அதன் பன்முகங்களையும் உணர்த்தி, வரலாற்றாய்வின் செழுமையை எனக்குள் ஆழமாக விதைத்தது என்றால் அது மிகையாகாது. மூன்றாண்டுகளாக ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த என்னையே முள்ளிக்கரும்பூர் மயக்கியதென்றால் புதியவரான வாணி எத்தகு மகிழ்ச்சியை, அநுபவங்களைப் பெற்றிருப்பார்!

'முள்ளிக்கரும்பூர் ஒரு வரலாற்று விடியல்' என்ற தலைப்பில் எங்கள் கண்டுபிடிப்புகளையும் கலந்துரை முடிவுகளையும் செந்தமிழ்ச் செல்வியில் தொடராக எழுதினேன். செப்டம்பர் 1985ல் இருந்து பிப்ருவரி 1986வரை செந்தமிழ்ச் செல்வி இக்கட்டுரையை வெளியிட்டது. ஆய்வுக்கட்டுரை முழுக்க முழுக்க என்னால் எழுதப்பட்டதுதான் என்றாலும் கட்டுரையின் இணை ஆசிரியராய் வாணியின் பெயரையும் இணைத்திருந்தேன். அவருடைய உற்சாகமும் உழைப்பும் தூண்டலும் கூட்டுறவும்தான் ஆய்வை வளர்த்தன என்பதால், அந்த வெளிப்பாடுகளை மதித்துப் போற்றுவது என் கடமை என்று கருதி அவ்வாறு செய்தேன். ஆனால், வாணியும் சரி, பின்னால் வந்த நளினி, அகிலா இவர்களும் சரி, யாருமே தங்கள் பெயரை முன்னிலைப்படுத்திக் கொள்வதில் சற்றும் ஆர்வம் இல்லாதவர்கள். வரலாற்றுக்குத் தம்மால் இயன்றதைச் செய்கிறோம் என்ற மகிழ்வு தவிர வேறொன்றும் கருதாத அந்த அற்புத உள்ளங்கள் என்னைச் சூழ்ந்தமை என் பெரும் பேறு என்று தானே கூறமுடியும்?

இறைவன் எல்லாம் அறிந்தவன். யாரிடம் யாரை அனுப்புவது என்று அவனுக்கு ஒரு கணக்கு இருக்கிறது. எங்கு எது சேர்ந்தால் எது விளையும் என்ற அந்தக் கணக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக வரலாற்றை வளர்த்து வருகிறது. ஆய்வேடு முடிந்ததென்று வாணி விடைபெற்றுக் கொள்ளவில்லை. என்னுடன் இருந்து தொடர்ந்து உழைத்தார். நான் ஆய்வுக்காகச் சென்ற இடங்களுக்கெல்லாம் எங்களுடன் அவரும் வந்தார். ஒன்றிணைந்து தஞ்சாவூர் மாவட்டத்தில் பல கோயில்களை நாங்கள் ஆராயமுடிந்தது. வாணியுடன் நான் பார்த்து ஆராய்ந்த கோயில்களுள் முதன்மையானது புள்ளமங்கை ஆலந்துறையார் கோயில்.

தஞ்சாவூரிலிருந்து பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவில், 'பசுபதி கோயில்' என்னும் ஊரில் அமைந்துள்ள அந்தச் சின்னஞ்சிறு கோயில் சோழச் சிற்பிகளின் சாதனைக் களம். அந்தக் கோயிலை எனக்கு அறிமுகப்படுத்தியவர் தஞ்சாவூரில் அப்போது தொல்லியல்துறைப் பதிவு அலுவலராக இருந்த அமரர் கு. தாமோதரன் ஆவார். நான், அவர், அரசு, மஜீது நால்வருமாக அந்தக் கோயிலுக்குச் சென்றிருந்தோம். முதல் பார்வையிலேயே அந்தக் கோயில் என்னைக் கட்டிப்போட்டது.

அகிலனின் வேங்கையின் மைந்தனில், 'ரோகிணி' என்றொரு ஈழத்துப் பெண் வருவார். கொடும்பாளூர் இளவரசர் இளங்கோவின் மீது கொண்ட காதலால், கொடும்பாளூர்க் கோட்டைக்குப் பகைவர்கள் தீ வைத்த நிலையில் அதைக் காப்பாற்ற முடியாதவராய், ரோகிணி கோட்டையின் ஒவ்வோர் இடமாக ஓடி, 'இது என் கோட்டை', 'இது என் இடம்' என்று கண்ணீரோடு கூவி நெகிழ்வார். அந்த உணர்ச்சி வெள்ளக் கூவலை அகிலனின் வரிகளில் படிக்கவேண்டும்.

அந்த ரோகிணியின் நிலையில்தான் நான் அன்று இருந்தேன். கண்டபாதச் சிற்பங்களும் தாங்கு சிற்பங்களும் கோட்டச் சிற்பங்களும் மகரதோரணச் சிற்பங்களும் கொற்றவையின் ஒல்காப் பேரெழிலும் அம்மம்மா! அந்தச் சிற்பங்களைச் செதுக்கிய விரல்களை எல்லாம், அந்தச் சிந்தனைகளைக் கருஉயிர்த்த மனிதர்களை எல்லாம் கட்டித் தழுவிக் கொண்டாடி முத்தமிட ஆவேசம் பிறந்தது.

அழகான சிற்பங்கள் உள்ள கோயில்கள் தமிழ்நாட்டில் பல உள்ளன. ஆனால், கோயிலே அழகான சிற்பங்களால் உருவானதாய், உள்ளத்தில் கள்வெறியூட்டும் கலையழகு பொலிந்ததாய் தமிழ்நாட்டில் ஒரு கோயில் உள்ளதெனில், அது புள்ளமங்கை ஆலந்துறையார்தான். எனக்குப் பிடித்த மாணவர்களை எல்லாம் அந்தக் கோயிலுக்கு அழைத்துப் போயிருக்கிறேன். நூறு முறை போயிருப்பேன். ஆனால், ஒவ்வொரு முறையும் புள்ளமங்கலத்தில் புதிய அழகுகள் புலப்படுவதைப் பூரிப்போடு பார்த்து எனக்குள் நானே அதிர்வும் களிப்புமாய் உறைந்து

போயிருக்கிறேன். அந்தப் புள்ளமங்கையை என்னுள் நிறைத்துக் கொள்ள என் மூன்று மாணவிகளே துணைநின்றனர்.

தமிழ்நாட்டரசின் இந்து சமய அறநிலையத்துறையினர் 'திருக்கோயில்' எனும் திங்களிதழை வெளியிட்டு வந்தனர். கவிஞர் ந. ரா. முருகவேள் அதன் ஆசிரியராக இருந்தார். 1982ல் சிராப்பள்ளி வந்த அப்பெருமகனார் என்னை மருத்துவமனை யில் சந்தித்துத் திருக்கோயில் இதழிற்குக் கட்டுரைகள் அனுப்பு மாறு அறிவுறுத்தினார். அவரது அன்பினால் ஈர்க்கப்பட்ட நிலையில், 'திருக்கோழியூர்' என்ற தலைப்பிலான கட்டுரையை அனுப்பி னேன். உறையூர் நாச்சியார் கோயிலைப் பற்றிய அந்த ஆய்வுக்கட்டுரை 1982ம் ஆண்டு பிப்ருவரி இதழில் வெளி யானது. கட்டுரையைப் பெரிதும் பாராட்டிய ந. ரா. முருகவேள் தொடர்ந்து கட்டுரைகள் அனுப்புமாறு எழுதினார். அதன் விளைவாக மார்ச்சு இதழில், 'திருவைகல் மாடக்கோயில்' பற்றிய கட்டுரையும் ஜூலை இதழில், 'திருநன்னிலத்துப் பெருங் கோயில்' கட்டுரையும் செப்டம்பர் இதழில், 'திருஅரிசிற்கரைப் புத்தூர்' கட்டுரையும் வெளியாயின.

திருக்கோயில், என் தந்தையார் காலத்திலிருந்து வெளிவரும் திங்களிதழாகும். அவ்விதழில் தந்தையாரின் கட்டுரைகள் பல வெளியாகியுள்ளன. அதன் காரணமாகவும், ந. ரா. முருகவேளின் அன்பின் வலிமையாலும் அவர் ஆசிரியராக இருந்த காலம்வரை அவ்விதழிற்கு என்னால் இயன்றபோதெல்லாம் கட்டுரைகள் அளித்துவந்தேன். நவம்பர் 1982 இதழில் 'உறையூர்த் தான் தோன்றீசுவரர் திருக்கோயில் கல்வெட்டுகள்' கட்டுரை வெளி யானது. பிப்ருவரி 1983 இதழில் 'கோச்செங்கட்சோழரின் கோணேசர் பெருங்கோயில்' கட்டுரையும் மார்ச்சு 1983 இதழில் 'திருத்தேவூர்' கட்டுரையும் ஜூலை 1983 இதழில் 'கீழ்வேளூர் மாடக்கோயில்' கட்டுரையும் வெளியாயின. மாடக்கோயில்கள் பற்றிய பெரும்பாலான கட்டுரைகள் திருக்கோயில் இதழிலேயே வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

கோனேரிராசபுரமென்று அழைக்கப்படும் திருநல்லம் உமைக்குநல்லவர் கோயில் ஆய்வு என்னுடைய தொடக்கக் கால ஆய்வுகளுள் குறிப்பிடத்தக்கது. அக்கோயில் தொடர்பான இரண்டு கட்டுரைகள் திருக்கோயில் இதழ்களில், 'திருநல்லம்

கல்வெட்டுகள்' என்ற தலைப்பில் செப்டம்பர் 1983லும் 'உமைக்கு நல்லவன்' என்ற தலைப்பில் பிப்ருவரி 1984லும் வெளியாயின. கும்பகோணம் அணைக்கரைச் சாலையிலுள்ள கருப்பூர்க் கோயில் பற்றிய கட்டுரை 'இன்கருப்பூர் விருப்பன்' என்ற தலைப்பில் டிசம்பர் 1983 இதழில் வெளிவந்தது. குமார வயலூர்க் கல்வெட்டுகள் தொடர்பான ஆய்வுக்கட்டுரையைப் பிப்ருவரி 1984 இதழில் வெளியிட்டிருந்தார் ந. ரா. முருகவேள்.

ந. ரா. முருகவேள் சைவசித்தாந்தம் தொடர்பாகப் பல ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தார். அதனால், சிராப்பள்ளி வரும்போ தெல்லாம் சைவசமயம் குறித்து விரிவாகப் பேசுவார். சமய ஆய்வுகளில் எனக்கு அதிக நாட்டம் இல்லாதிருந்தபோதும் அவரது உரைகளைக் கவனத்துடன் கேட்டுவந்தேன். 'சைவ சித்தாந்தம்' என்ற தமது ஆய்வுநூலின் படியொன்றினை என்னிடம் அளித்துப் படித்துக் கருத்துரைக்கக் கேட்டிருந்தார். எந்த நூலைப் படித்தாலும் ஒன்றிப் படித்துக் கருத்துப் பெறுவது வழக்கம் என்பதால் அந்நூல் பற்றிய என் கருத்துக்களை தெளிவாகச் சுட்டியிருந்தேன்.

அப்போது தருமபுர ஆதீனத்தின் சார்பில் சிராப்பள்ளியில் சைவசித்தாந்தப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந் தன. அவ்வகுப்பில் பொழிவொன்று தர அழைக்கப்பட்டிருந்தேன். அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ந. ரா. முருகவேளின் 'சைவ சித்தாந்தம்' நூலைத் திறனாய்வு செய்தேன். சிராப் பள்ளியில் ஆதிமுருகவேள் என்ற பெயரில் சைவசித்தாந்தப் புலவர் ஒருவர் இருந்தார். அவரும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தார். நான் முருகவேள் பெயரைக் குறிப்பிட்டபோதெல்லாம் அவர் தம்மைக் குறிப்பிடுவதாகக் கருதிக்கொண்டார் போலும். கூட்ட இறுதியில் நான் குறிப்பிட்ட முருகவேள் தாம் இல்லை என்பதை அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். அவர் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தேன்.

நூல் பற்றிய என் திறனாய்வோ, கருத்துரையோ எனக்கும் முருகவேளுக்கும் இடையில் இருந்த அன்பான பிணைப்பை ஏதும் செய்யக்கூடவில்லை. அதற்கு அப்பெருந்தகையின் பேருள்ளமே காரணம். தொடர்ந்து என் கட்டுரைகளைப் பெற்றுத் திருக்கோயில் இதழில் வெளியிட்டார். 'புதையுண்ட

தலைநகரும் புகழ் விளங்கும் திருக்கோயிலும்' கட்டுரை ஜூன் 1984 இதழிலும், 'திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்' கட்டுரை ஜூலை 1984 இதழிலும் வெளியாயின. நீரிழிவு நோயினால் துன்பப்பட்டு வந்த முருகவேள் மறைவிற்குப் பிறகு டாக்டர் த. அமிர்தலிங்கம் திருக்கோயில் இதழின் ஆசிரியரானார்.

அருங்கலை வளர்த்த அருமொழிவர்மன் (ப்பிருவரி 1985), சமயபுரம் மாரியம்மன் (ஜூலை 1985), அப்பக்குடத்தான் (மார்ச்சு 1986), தடங்கல் உந்து சாய்க்காடே (ஆகஸ்டு 1986), தாமரைத் திருவடிக்கீழ் (டிசம்பர் 1986) எனும் ஐந்து கட்டுரைகளுடன் எனக்கும் திருக்கோயிலுக்கும் இருந்த தொடர்பு முடிவுக்கு வந்தது. 1986க்குப் பிறகு ஆய்வுகள் ஆழப்பட்ட நிலையில் அடிக்கடி கட்டுரைகள் எழுதியனுப்புவது இயலாமற் போன மையே அதற்குக் காரணம். திருக்கோயில் இதழில் கட்டுரைகள் வெளியான காலத்தில் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் நல்ல வரவேற்பு இருக்கும். அவர்கள் துறை சார்ந்த இதழில் எழுதுபவன் எனபதால் தடையின்றி ஆய்வுசெய்ய அநுமதியும் ஒத்துழைப் பும் கிடைத்தன. அந்தக் காலகட்டத்தில் பல கோயில்களை ஆய்வுசெய்ய வாய்த்தமை இறையருள்தான். எல்லாவற்றிற்கும் காரணர் இனியவர் முருகவேளே எனலாம்.

மாலைமுரசு இதழின் செய்தி ஆசிரியராக இருந்த இரா. ஜேசுவடியான் அருமையான நண்பராக அமைந்தார். மாலைமுரசு சனிக்கிழமைகளில் வாரமலர் வெளியிட்டு வந்த காலமது என்பதால் என்னைச் சிறுகதைகள் எழுதத் தூண்டினார் அவர். ஏற்கனவே மருத்துவக் கல்லூரியில் படித்துக்கொண்டி ருந்த காலத்தே சிறுகதைகள் எழுதி வெளியிட்டிருந்தமையால் அது ஒன்றும் கடினமான பணியாக இருக்கவில்லை. 'பொய் முகம்' (10.1.1981), 'சில நினைவுகள் சில கனவுகள்' (12.4.1981), 'ஒரு நிலா கதை சொல்கிறது' (25.10.1981) எனும் கதைகள் மாலை முரசில் வெளியாயின. ஜேசுவடியானிடம் சிறுகதைகளுக்கு மாற்றாகக் கோயில் கட்டுரைகள் தருவதாகக் கூறினேன். அவரும் ஒப்புக்கொண்டு அவர் ஆசிரியராக இருந்த காலம்வரை தொடர்ந்து என் கோயிற்கலைக் கட்டுரைகளைப் பெற்று மாலைமுரசில் வெளியிட்டார். நான் தந்திருந்த கட்டுரைத் தலைப்புகளை மாற்றி, மாலைமுரசு படிப்பவர்களை ஈர்க்கும்

தலைப்புகளில் அக்கட்டுரைகளை அவர் வெளியிட்டார். பல தலைப்புகள் எனக்கு ஒப்புதல் இல்லையாயினும், உள்ளீடு மாற்றப்படாதவரையில் சரியென்று வாளாவிருந்தேன். கோயில் தொடர்பான செய்திகள் மக்களைச் சென்றடைந்தால் போதும் என்பதே அப்போது என் கருத்தாக இருந்தது.

கல்வெட்டு சொல்லும் காவியம் (14. 8. 1982), புதையுண்ட தலைநகர் புகழ்மிக்க வரலாறு (3. 12. 1982), கங்கைகொண்ட சோழபுரம் (30. 12. 1982), கல்வெட்டுக் கூறும் கோவணத் திருட்டு (13. 11. 1982), குடமுழுக்குக் காணவிருக்கும் குமாரவயலூர் (12. 3. 1983), தழுவக் குழைந்த இறைவனும் தவமிருந்த தேவியும் (16. 4. 1983), திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகம் (30. 7. 1983), காதல் சிலைகள் (3. 11. 1983), ஊழலை அம்பலப்படுத்தும் கல்வெட்டுகள் (7. 11. 1983), வங்காளத்திலிருந்து வந்த நடராஜர் (22. 12. 1983), இராஜராஜ னின் காதலி (15. 9. 1984) என்னும் அக்கட்டுரைகளால் எளிய மக்களிடைச் சென்றடைய முடிந்தது. அந்தக் கட்டுரைகளை எழுதிய காலத்தில் கோயில்கள் மக்கள் வரத்தின்றி இருந்தன. ஆனால், பாழ்படாமல் இருந்தன. இன்று அதே கோயில்களைப் பார்க்கும்போது கண்களில் நீர் வருகிறது. இறைவனை எப்படி வழிபடுவது, வழிபடும் இடத்தை எப்படி வைத்துக்கொள்வது என்ற தெளிவுகூட இல்லாமல் கோயில்களை, அவை சார்ந்த அத்தனை பேருமே அழித்துக்கொண்டிருப்பது வேதனையான உண்மை.

நெய்வேலித் தமிழ்ச் சங்கம் 2007 ஜூலைத் திங்கள் இறுதி யில் நடத்திய, 'தமிழின் தொன்மையும் தமிழர் பெருமையும்' கருத்தரங்கில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகள் வழங்கிய நானும் நளினியும் திருமுதுகுன்றம் கோயிலுக்குச் சென்றிருந்தோம். செம்பியன்மாதேவி கற்றளியாக்கிய பாடல் பெற்ற திருக்கோயில் அது. கருவறைப் புறச்சுவர்களில் சோழர் கல்வெட்டுகள். அந்தக் கல்வெட்டுகள் மீதே மக்கள் தங்கள் பெயர்களையும் வண்டி எண்களையும் எழுதுவதைப் பார்க்கமுடிந்தது. எங்களால் ஆனவரை தடுத்தோம். 'ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?' என்று கேட்டால், அப்படி எழுதினால், எது எண்ணி எழுதுகிறார் களோ அது நன்றாக அமையும் என்று யாரோ சொன்னார் களாம். 4. 8. 2007 கும்பகோணம் சென்றிருந்தபோது அங்கேயும்

கோயில் ஒன்றின் விமானச் சுவர்களில் மக்கள் இப்படிக் கரிக்கோலம் போடுவதைக் காணமுடிந்தது.

மக்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு வயிறு வளர்க்கும் கூட்டம் இது போல் பல தவறான வழிகாட்டல்களால் உள்ளிருந்தே கொல்லும் நோயாகக் கோயில்களை அழித்துக் கொண்டிருப்பதை யார் எப்போது தடுக்கப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. இரண்டு கோயில்களிலும் நிருவாக அலுவலர்களிடம் கூறி இக்கொடுஞ் செயலைத் தடுக்குமாறு வேண்டி வந்தது மட்டுமே எங்களால் முடிந்த செயலாக அமைந்தது. மடைமை என்பது அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியுள்ளது. கருவறையிலுள்ள இறைவன் திருமேனி நோக்கி வீச்சொளி விளக்கு அமைத்திருக்கும் ஒரு கோயிலின் நிருவாக அலுவலர், இருள் சூழ்ந்த உள்மண்டபத்திற்குள் விளக்கமைப்பது மரபு அன்று என்கிறார். அந்த உள்மண்டபத்திற்குள் எலிகள் துள்ளி விளையாடுகின்றன. அற்புதமான சோழர் காலத் தூண்கள் மக்கள் பார்வைக்குக் காட்சியாக முடியாதவாறு இருள் ஆட்சி செலுத்துகிறது. வான்முட்டுவது போல் வளர்ந்துள்ள ஒரு கோபுரத்தின் அனைத்துத் தளங்களிலும் புறாக் கழிவுகள். கால் வைக்க இயலாதவாறு பல ஆண்டு கழிவுகள் தேங்கிக் கிடக்கின்றன. யார் எந்தக் காலத்தில் இவற்றை எல்லாம் சரி செய்யப் போகிறார்கள்?

சார்ங்கபாணி கோயில் கோபுரத்தில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பார்த்துப் படியெடுத்த கரணப் பெயர்களுள் பெரும்பான்மையன இன்று அழிக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகளுக்கு மேலாகக் காப்பற்றப்பட்டு வந்த அந்தக் கிரந்த வரிவடிவங்கள் இன்று விரல்விட்டு எண்ணக் கூடிய சிற்பங்களின் கீழ் மட்டுமே காணப்படுவது எத்தனை துன்பமானது! 'திருப்பணி' என்ற பெயரால் தமிழரின் அடையாளங்கள் தமிழர்களாலேயே அழிக்கப்படுவது வேதனையல்லவா! கல்வெட்டுகளையும் சிற்பங்களையும் இழந்துவிட்டால் தமிழன் தலைப்பெழுத்தின்றிப் போய்விடுவான் என்பது ஏன் இன்னும் இந்த மக்களுக்குப் புரியாமல் இருக்கிறது?

என்னுடைய இருபத்தைந்து ஆண்டு கோயில் வாழ்க்கையில் அனைத்து இடங்களும் தூய்மையாக விளங்கிய ஒரு பழங்

கோயிலை இதுநாள்வரை கண்டதில்லை. பல கருவறைகளைப் பார்த்திருக்கிறேன். தரையில் கால் வைக்கக் கூசுமளவிற்குத்தான் அவை இருந்திருக்கின்றன. சில கருவறைத் தரைகளில் நடப்ப தற்கே அச்சமாக இருக்கும். அத்தனை வழுக்கல்!

வழிபாட்டிலுள்ள ஒரு குடைவரைக் கோயிலில் இரண்டு சுவர்த் தெய்வங்கள் உள்ளன. ஒன்று எப்படியோ உலகப் புகழ் பெற்றுப் பெருங்கூட்டத்தைக் கூட்டிவருகிறது. இன்னொன்று பாவம், கூட்டத் தெய்வத்தின் மீது அணிவிக்கப்பட்டு அகற்றப் படும் கழிவுகளைச் சுமந்தே உருக்குலைந்து கொண்டிருக்கிறது. இத்தனைக்கும் அது அப்பனும் அண்ணனும் மாமனுமான கூட்டி ணைவு! என்ன செய்யலாம்! எடுத்துச் சொல்லி எவ்வளவோ முயன்றும் ஏற்பட்டதெல்லாம் தோல்விதான்! இந்த வளாகத்தில் இப்படியொரு இறைத்திருமேனி இருப்பதே வருகின்ற கூட்டத் திற்கும் வழிபடும் கூட்டத்திற்கும் தெரியாத உண்மை!

அண்மையில் இலங்கை அரசின் அழைப்பை ஏற்றுக் கொழும்பு சென்றிருந்தேன். அரசின் ஓர் அங்கமான இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் சார்பில் அங்கு மூன்று நாள் கருத்தரங்கம். ஓர் அமர்விற்குத் தலைமை தாங்கினேன். கருத் தரங்கம் முடிந்ததும் கண்டி சென்றிருந்தேன். அங்கிருக்கும் புத்தரின் 'பல்' வைக்கப்பட்டிருக்கும் கோயிலைப் பார்த்தேன். அந்தக் கோயிலின் வெளி வளாகத்தில் விளக்கேற்றுவதற்கு என்றே ஓர் அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த அமைப்பில் பல வரிசைகளில் இரும்புச் சட்டங்களில் அகல்கள் உள்ளன. விரும்புவார் அவற்றில் எண்ணெய் ஊற்றித் திரியிட்டு விளக்கேற்றுகிறார்கள்.

கோயிலுக்குள் புகையில்லை! எண்ணெய் வழுக்கல் எங்கும் இல்லை! அந்தக் கோயிலின் வரலாற்றைத் தெரிவிக்கும் அருங் காட்சியகங்கள் வளாகத்திற்குள்ளேயே உள்ளன. மலர்களைச் சுமந்து வரும் மக்கள் கருவறைக்கு முன்னுள்ள பெருந்தட்டில் இட்டு வணங்கிப் பின் திருநடையில் யாருக்கும் இடையூறாகாத வாறு அமர்ந்து வழிபட்டுச் செல்வதைப் பார்க்கமுடிகிறது.

நம் ஊர்ப் பெருங் கோயில்களிலாவது இவற்றை நடை முறைப்படுத்த முயலலாமே என்று தோன்றுகிறது. திருமுது குன்றம் கோயிலில் நாங்கள் சந்தித்த விளக்குத் துன்பம் சொல்லி

மாளாது. எங்காவது அசைவின்றி ஓரிரு நிமிடம் நின்றிருந்தால் எங்கள் தலையிலும் அன்று எண்ணெய் ஊற்றி விளக்கேற்றி யிருப்பார்கள்! கருவறை சூழ்ந்த திருச்சுற்றில் நடக்க முடியாத வாறு புகை மண்டலமும் எண்ணெய்ப் பிசுக்கும்! அப்பப்பா! அந்த முதுகுன்றத்தானை வேண்டியபடியே தப்பிப் பிழைத்து வெளியில் வந்தோம். கோயிலில் விளக்கேற்றுவது புண்ணியம் என்று பாடியதும், வழிகாட்டியதும் கோயில்கள் விளக்கின்றி இருந்த காலங்களில்!

இன்று மின்விளக்கு இல்லாத கோயில் இல்லை. இறைத் திருமுன்களில் கோயிலாரே விளக்கேற்றுகின்றனர். இருள் சூழ்ந் திருக்கும் இடங்களை வெளிச்சப்படுத்த கூடுதல் மின்விளக்கு களுக்கும் அதற்கான மின் செலவுக்கும் விழைவார்கள் கொடை வழங்கித் துணை நிற்கலாம். விளக்கு ஏற்றுவது மரபு, விட்டுவிடக் கூடாது எனக் கருதுவார் கோயில் வளாகங்களின் வெளியே விளக்குத்தூண்கள் அமைத்து விளக்கேற்ற உதவலாம். அதை விடுத்து, ஏற்கனவே காற்று அடைபட்டிருக்கும் கருவறைச் சுற்றுகளில் புகைமண்டலத்தைப் பெருக்குவது எத்தனை கேடு!

இந்தச் சிந்தனைகளெல்லாம் இன்றைக்கிருக்கும் பத்திமைப் பேரலையில் யாரையும் வயப்படுத்தா. மக்கள் எது செய்தாவது கடவுளின் கணக்குகளிலிருந்து தப்பிக்க விரும்பும் காலமிது. கோயில்களின் வாயில்களுக்கு மக்களை இழுக்கப் பதினைந் தாண்டுகளுக்கு முன் போராடியதை நினைத்துப் பார்க்கிறேன். இப்போது எல்லாம் தலைகீழாகிவிட்டது. மக்கள் வந்தால் கோயில்கள் வாழும் என்று நினைத்த நிலைமை மாறி, மக்கள் வரத்துக் குறைந்தால் நன்றாக இருக்கும் என்று சிந்திக்கும்படி யாகிவிட்டது. ஒரு பிரதோஷ நாளில் ஏதாவது ஒரு கோயிலில் நடை சாத்தப்படும் நேரம் அங்கிருந்தால்தான், அந்தக் கோயில் வளாகம் அந்த ஒரு மாலைப் போதில் எவ்வளவு துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம். திருமுது குன்றத்தில் முழு நிலா நாளில் சிக்கிக் கொண்டதால், நானும் நளினியும் பார்த்த காட்சிகள்தான் இந்த அளவிற்கு எழுதுமாறு செய்துவிட்டன.

1983, 84, 85களில் நான் பார்த்த கோயில்கள், கோயில் வகைகளைப் பற்றிய பல சிந்தனைகளை எனக்குள் வளர்வித்தன. ஒரு கோயிலை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டுமானால்,

சிற்ப, கட்டடக்கலை நூல்களில் ஆழமான பயிற்சி வேண்டும். மயமதம் அப்போது எனக்குக் கிடைக்கவில்லை. எனக்குக் கிடைத்த முதல் நூல் சிற்பச் செந்நூல். அதையடுத்து ஸ்ரீதத்துவ நிதியும் சிற்பரத்னாவும் கிடைத்தன. அவற்றைப் புரிந்துகொள்வது எளிதானதாக இல்லை. கேட்டால் சொல்லித்தரும் அளவு அவற்றில் ஆழமான புலமை உடையவர்களையும் நான் சந்திக்கக் கூடவில்லை. பலமுறை படித்து, கோயில் வளாகங்களில் அம்மொழிவுகளை அடையாளப்படுத்த முயன்ற காலங்களில் பட்ட துன்பங்கள் அளவிறந்தன. அந்தச் சிற்ப, கட்டடக்கலை நூல்களுக்கும் கோயில் அமைவுகளுக்கும் நிறைய வேறுபாடு களைக் காணமுடிந்தது. அவற்றில் கூறப்பட்டிருக்கும் சில கட்டட உறுப்புகளை இன்றுவரை எந்தக் கோயிலிலும் காண முடிந்ததில்லை.

ஆனந்தத் தாண்டவம் பற்றி அறிவதற்காகச் சகளாதிகாரம் வாங்கிப் படித்தேன். கோயில் நடைமுறைகளைப் பற்றி அறிய விழைந்து சிவச்சாரியார்களிடம் கேட்டபோதெல்லாம், 'காரணாகமம், காமிகாகமம்' எனும் இரண்டு ஆகமங்களின் பெயர்களைச் சொன்னார்களே தவிர, அந்த ஆகமங்கள் வழிபாடு, படையல் பற்றி என்னவெல்லாம் கூறுகின்றன என்று யாரும் தெளிவுபடப் பகிர்ந்துகொண்டதில்லை. துருவித் துருவிக் கேட்டாலும் பதில் ஒரே மாதிரியாகத்தான் வரும். ஆறுகாலப் பூசை, படையல்கள், நாளும் சொல்லும் மந்திரங்கள் இவை தவிர சிவாச்சாரியார்களிடமிருந்து பயனுள்ள தகவல்கள் எவற்றையும் பெறமுடிந்ததில்லை. பல சிவாச்சாரியார்களுக்கு அவர்கள் பணி யாற்றும் பாடல் பெற்ற கோயில்கள் தொடர்பான பதிகங்கள்கூட முழுமையாகத் தெரியாத நிலையையும் பார்த்திருக்கிறேன்.

கோயில் தொடர்பான அனைவர் திருவாய்களிலிருந்தும் பிறந்து விரியும் ஒரு சொல் 'ஆகமம்'. அந்தச் சொல்லை உச்சரிக் கும் அன்பர்களை அன்புடன் அணுகி, 'ஆகமம் என்றால் என்ன? அந்த ஆகமங்களின் காலம் என்ன? அந்த ஆகமங்களுள் ஒன்றை யாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? 'ஆம்' என்றால் படித்திருக் கிறீர்களா?' என்றெல்லாம் மெல்ல விசாரித்துப் பார்த்தால் வியப்பூட்டும் உண்மைகளை அறியமுடியும். நான் கேட்டறிந்த வரையில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில், 'ஆகமம்' பற்றிய

அறிமுகம் பெற்ற சிவாச்சாரியார்கள் மிகச் சிலரே. அவருள்ளும், 'ஆகமம்' பற்றிய தெளிவுடையவர்களை எண்ணிவிடலாம்.

திருக்கோயில் கட்டமைப்பு, சிற்ப அமைதிகள், அக்கோயில் களில் உள்ள இறைத்திருமேனிகள் பற்றிய விரிவான, தெளிவான அறிமுகம் பெற்ற கோயில் தொடர்பானவர்களும் எண்ணிக் கையில் குறைவானவரே. நாளும் பூசை செய்யும் திருமேனி களை மட்டுமே பலருக்கு அடையாளம் தெரியும். அவர்கள் ஆளுகையில் உள்ள கோயில் வளாகத்தில் காணப்பெறும் அனைத்து இறைத்திருமேனிகளையும் அறிந்து, சொல்லி விளக்கக்கூடியவர்களைத் தேடவேண்டியிருக்கும். இதுதான் இன்றைய கோயில்களில் காணக்கிடைக்கும் ஆகமநிலை. ஆனால், 'ஆகமம், ஆகமம்' என்று எதற்கெடுத்தாலும் இந்த ஆகமங்களை இழுத்து நம்மை அல்லல்படுத்தும் ஆத்மாக் களுக்கு மட்டும் குறைவே இல்லை.

ஆகமம் தொடர்பாகப் பல அவலமான அனுபவங்கள் எனக்கு உண்டு. திருமடத்துத் தலைவர்களிலிருந்து தத்துவ ஆசான்கள், ஆய்வாளர்கள், மொழி அறிஞர்கள், சிவாச்சாரியார் கள் எனப் பலரிடமும் ஆகம உரையாடல்களின்போது கிடைத்த அனுபங்கள் அவை. அவற்றை எல்லாம் அனைவரும் அறியு மாறு பகிர்ந்துகொண்டு மக்களின் நம்பிக்கைகளை, எதிர்பார்ப்பு களை இற்றுப் போகச் செய்வது நியாயமாகாது. நெஞ்சு பொறுக்குதில்லையே என்று குமுறிய காலங்களில்கூட அந்த அனுபவங்களை எழுத்து வடிவில் இறக்கி வைக்க விழைந்தேன் இல்லை. எல்லா உண்மைகளையும் எல்லாரிடமும் எந்தக் காலத்திலும் பகிர்ந்துகொள்ள முடிவதில்லை. காரணம் அந்த உண்மைகள் கசப்பானவை. என்றாவது ஒரு நாள், என்னினும் துணிந்தவர் ஒருவர் இந்த உண்மைகளை எல்லாம் ஊருக்கு உரைக்க முன்வரக்கூடும். ஒருவேளை, கோயில் ஆய்வுகளை இத்துடன் நிறுத்திவிடலாம் என்று முடிவெடுக்கும் நாள் என்றேனும் எனக்கு அமையுமானால், நானேகூட அந்த அனுபவங்களை பகிர்ந்துகொள்வது இயலுவதே.

1985 என் ஆய்வு வாழ்க்கையில் மறக்கமுடியாத ஓர் ஆண்டாக அமைந்தது. அதுநாள்வரை கோயில்களைப் பார்த்த என் பார்வையில் அந்த ஆண்டு சில மாற்றங்களை ஏற்படுத்தியது.

பார்த்துப் பரவசப்பட்டு, இருப்பதை எடுத்துரைப்பதே பணி எனக் கருதியிருந்த என்னிடம் கோயில்கள் உரையாடத் தொடங்கிய ஆண்டு 1985. ஆய்வு என்ற சொல்லின் முழு வீச்சையும் அந்தச் சொல்லுள் உறைந்திருக்கும் பேரின்பத்தை யும் உணரத் தொடங்கிய ஆண்டும் 1985தான். அந்த ஆண்டில் வாணிக்காகப் படிக்க நேர்ந்த நூல்கள் பல புதிய தடங்களில் என்னைப் பயணப்பட வைத்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன வரலாற்று வரைவியல் பற்றிய நூல்கள். வரலாறு அறிவியல் பாடமே என்று உணருமாறு செய்த அந்நூல்கள், சான்றுகள் குறித்த தேடலைப் பரவலாக்கின. இரண்டாம் நிலைச் சான்று கள் நம்பிக்கைக்குரியன அல்ல என்பதை மூன்றாண்டு ஆய்வு வாழ்க்கை கற்றுத்தந்திருந்தபோதும் முதன்மைச் சான்றுகளைச் சுற்றி ஆய்வு வளரவேண்டிய நுட்பங்களை வரைவியல் நூல்களே முன்வைத்து முதன்மைப்படுத்தின.

சிராப்பள்ளி சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியின் வரலாற் றுத்துறை நான் வளரப் பெருந்துணையாக அமைந்தது. அந்தத் துறை நூலகத்திலிருந்துதான் வரைவியல் நூல்களை வாணி பெற்றுத்தந்தார். துறைத் தலைவி முனைவர் இராஜலட்சுமியும் துறைப் பேராசிரியர்களாக இருந்த கோ. வேணிதேவி, சீ. கீதா இவர்களும் வாணியின் ஆய்விற்குத் துணைநின்று ஊக்குவித்த மையைக் குறிப்பிடவேண்டும். கோ. வேணிதேவி, சீ. கீதா இவர் களுடன் என் நட்பு வளரவும் வாணியின் அறிமுகமே காரண மாக அமைந்தது. வாணியின் வருகைக்கு முன் கி. ஆ. பெ. விசுவ நாதம் மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர் களே என் கண்டுபிடிப்புகளை அருங்காட்சியகங்களில் சேர்க்கும் பணிகளுக்குத் துணையிருந்தனர். பேராசிரியர் சீ. கீதா, நாட்டு நலப்பணித் திட்டஅலுவலராகவும் இருந்தமையால் எங்கள் அறிமுகம் பல கோயில்களைச் சீரமைக்கவும் வழிபாட்டிற்குக் கொணரவும் பாதை அமைத்தது.

நடந்தவற்றை நினைத்துப் பார்ப்பதில் ஒரு சுகம் இருக்கிறது. நடந்தவை நல்லவையாக அமையாத போதும்கூட அவற்றைத் தாண்டி வந்துவிட்டோம் என்ற நினைவும் அந்த நெருக்கடி நேரங்களில் நமக்குத் துணைநின்ற நல்ல உள்ளங்களின் அன்பும் அணைப்பும் நினைக்குந்தோறும் இன்பம் பயப்பன.

என்னுடைய கோயிலாய்வு வாழ்க்கையில் என் வாழ்வரசி தொடங்கி, இன்று என் பயணங்களுக்குத் துணை நின்று, என் ஆய்வுகளுக்கெல்லாம் தம் பங்களிப்பை உளம் நிறைந்த மகிழ்வுடன் வழங்கி வரும் இனிய நண்பர்கள் சு. சீதாராமன், பால. பத்மநாபன் வரை என் வளர்ச்சிக்கு உதவியவர்கள் எண்ணிக்கை மிகப் பெரியது. 2007 செப்டம்பர் 8, 9ம் நாட்களில் செம்பனார் கோயில், தலைச்சங்காடு, ஆக்கூர், திருமீயச்சூர், பழையாறைப் பஞ்சவன்மாதேவீசுவரம், திருநல்லூர் மணவழகர் கோயில் இவற்றைப் பார்த்து ஆய்வுசெய்து வந்தோம். நானும் சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கோ. வேணிதேவியும் இணைந்து உருவாக்கும் 'மலைக்கவைக்கும் மாடக்கோயில்கள்' நூலிற்கான முதற் கட்டப் பணியாக அது அமைந்தது.

பேராசிரியர் கோ. வேணிதேவி, 'கி. பி. 300க்கும் கி. பி. 600க்கும் இடைப்பட்ட காலத் தமிழ்நாட்டு வரலாறு' குறித்து ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றவர். அவர் ஆய்வுக்கு உட்பட்ட கலைப் பண்பாட்டு வரலாற்றில் மாடக்கோயில்கள் இடம்பெற்றமையின், அவற்றை ஆய்வுசெய்ய 1998-2000ல் நானும் நளினியும் அகிலாவும் அவருடன் பெரும்பாலான மாடக் கோயில்களுக்குச் சென்று வந்தோம். அப்போதே இவற்றை விரிவாக ஆராய்ந்து நூலாக்கம் செய்யவேண்டும் என்று கருதி இருந்தோம்.

நான் முதன் முதலாகத் தொடங்கிய ஆய்வு மாடக்கோயில்கள் பற்றியதுதான் என்றாலும், அப்போது கோயில் ஆய்வில் எனக்கிருந்த அனுபவக் குறைவால் என் கட்டுரைகள் கட்டடக் கலை பற்றிய தரவுகளை முழுமையாகப் பெறாமலேயே வெளியாகி இருந்தன. பேராசிரியர் வேணிதேவியுடன் பயணப்பட்ட காலங்களில்தான், எவ்வளவு சிறுபிள்ளைத்தனமான கட்டுரைகள் அவை என்பதை என்னால் உணரமுடிந்தது. அதனால், நானும் நளினியும் அகிலாவும் வேணிதேவியுடன் இணைந்து மாடக்கோயில்கள் ஆய்வில் முழுமையாக ஈடுபட்டோம்.

வேணிதேவியின் ஆய்வு மாடக்கோயில்கள் பற்றியது அன்று எனினும், வரலாற்றிலும் தமிழிலும் களஆய்வுகளிலும் அவருக்கிருந்த பேரார்வம் காரணமாக அனைத்து மாடக்

கோயில்களையுமே நேரில் பார்த்து ஆய்வுசெய்ய விழைந்தார். ஆவூர், ஆறைவடதளி, நாலூர், நறையூர், ஆலம்பாக்கம், பசுபதி கோயில், குடவாயில், அம்பர், வைகல், நல்லூர் மாடக்கோயில்கள் முனைப்பான ஆய்வுக்கு ஆளாயின. இவ்வாய்வுகளின் போது பல புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்த முடிந்தது. அவற்றுள் குறிப்பிடத்தக்கது நல்லூர் கோயிலில் கிடைத்த கோவண நாடகக் கல்வெட்டு. இக்கண்டு பிடிப்புச் செய்தி அறிந்து மகிழ்ந்த கோயில் நிருவாகம் இக்கோயிலை முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தச் சொல்லி அழைத்தது. அப்போது எங்களுக்கு வாய்ப்பு அமையாமையின் அந்த அன்பழைப்பை ஏற்கக்கூடவில்லை.

வேணிதேவியுடன் இணைந்து நிகழ்த்திய மாடக்கோயில் ஆய்வுகளின்போது பல சுவையான அனுபவங்களையும் மாடக் கோயில் பற்றிய தெளிவான சிந்தனை வடிவங்களையும் பெற்றோம். 2007 செப்டம்பர் 8, 9ம் நாட்களில் நிகழ்ந்த பயணம் அந்த அனுபவங்களின் ஊடே ஓர் உல்லாச ஊர்வலம் போகத் தூண்டிவிட்டதால்தான் இவ்வளவும் எழுத நேர்ந்தது. 'அறி தோறும் அறிதோறும் அறியாமை' எனும் வள்ளுவர் வாக்கு எத்தனை உண்மையானது என்பதையும் இந்த இருநாள் பயணங்கள் நன்கு உணர்த்தின. அருள்தரு சுவாமிமலைத் திருக்கோயில் துணை ஆணையர் ச. இலட்சுமணன் எங்களுடன் இரண்டாம் நாள் பயணத்தில் இணைந்து கொண்டமை பெரு மகிழ்வு அளித்ததுடன், பஞ்சவன்மாதேவீசுவரத்துக்கும் பெரும் பயன் அளித்தது.

1983ல் நான் பார்த்த பஞ்சவன்மாதேவீசுவரத்தின் சூழல் இன்று பெருமளவிற்கு மாறியிருந்தது. பட்டீசுவரம் கோயிலின் செயல் அலுவலர் திரு. மாரியப்பன் வந்திருந்தார். அவர் ஆளுகையில்தான் பஞ்சவன்மாதேவீசுவரம் கோயிலும் உள்ளது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் சென்றமுறை ஆட்சிப் பொறுப் பில் இருந்தபோதுதான் அந்தக் கோயிலைக் காப்பாற்றுமாறு மன்றாடினோம். முதல்வருக்கு எழுதிய விரிவான மடலும் அறநிலையத்துறை அமைச்சரிடம் நாங்கள் நேரில் அளித்த கட்டுரைத் தகவல்களும் என்னோடு கோயிலை வந்து பார்த்து வருந்தித் தாமும் முதல்வருக்கு எழுதி இக்கோயிலைக் காப்பாற்ற

வேண்டிய பேராசிரியர் க. ப. அறவாணன் வைத்த வேண்டுகோளும் இக்கோயிலுக்கு வாழ்வளித்தன. அறநிலையத்துறை பெருந்தொகை ஒதுக்கி இக்கோயிலைத் திருப்பணி செய்துள்ளது.

உள்ளூர் மக்களுக்கு அந்தக் கோயிலின் அருமை தெரியாமையால், இன்னமும் அதைத் தொழுவமாகவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். வெளிக் கதவிற்குப் பூட்டில்லாக் காரணத்தால் இந்தத் துன்ப நிலை. பூட்டு இட நிருவாக அலுவலர் ஏற்பாடு செய்வதாகக் கூறியுள்ளார்.

பஞ்சவன்மாதேவி முதலாம் இராஜராஜரின் தேவி; பழுவேட்டரையர் குல இளவரசி. அந்த அம்மை முதலாம் இராஜேந்திரருக்குச் சிற்றன்னைதான் என்றபோதும் தாயினும் மேலாக அளவிலா அன்பைப் பொழிந்திருக்க வேண்டும். அந்த அன்பில் செழித்துக் களித்தமையால்தான் போலும், மாபெரும் வீரரான இராஜேந்திரர் தம்மை நேசித்து வளர்த்த அன்னையினும் மேலான அம்மை பஞ்சவன்மாதேவி மறைந்தபோது அவர் நினைவாகப் பஞ்சவன்மாதேவீசுவரம் எனும் பள்ளிப் படைக் கோயிலை எழுப்பினார். தமிழ்நாட்டளவில் தாய்க்காக ஒரு மகன் எழுப்பிய ஒரே நினைவுக் கோயில் இதுதான்.

இனி, திரும்பிப் பார்ப்போம். சிராப்பள்ளிச் சென்னை நெடுஞ்சாலையில், சிராப்பள்ளியில் இருந்து பத்துக் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிற்றூரே பனமங்கலம். மிக எளிய ஊரான இதன் நடுப்பகுதியில், நெடுஞ்சாலையில் செல்வார் காணுமாறு நாயக்கர் கட்டமைப்புக் கற்றளி ஒன்று மிகச் சிதைந்தநிலையில் மரங்கள் முளைத்து வழிபாடற்று இருந்தது. சமயபுரம் அருகில் இருந்த மருதூர்க் கோயில் ஆய்வுக்காகச் சென்றபோது இக்கற்றளியைப் பார்க்க நேர்ந்தது. உடன் ஊருக்குள் சென்று கோயிலை நெருக்கத்தில் பார்த்து ஆராய்ந்தோம் கல்வெட்டுகள் ஏதுமற்ற அக்கோயிலின் ஆரஉறுப்புகள், சிகரம், கிரீவம் எல்லாம் சிதைந்திருந்தன. கோயில் முகமண்டபக் கிழக்குச் சுவரில் ஒரு வேப்பமரமும் விமானத்தின் தென்சுவரில் ஓர் அரசமரமும் நன்கு வளர்ந்து செழித்திருந்தன. மரம் வேர் விட்ட இடங்களில் எல்லாம் கற்கள் சிதறிச் சுவர்கள் விரிசல் விட்டிருந்தன.

ஊராரிடம் கேட்டபோது, அது வாரணபுரீசுவரர் கோயில் என்றும் பல ஆண்டுகளாக வழிபாடற்றுப் போய்விட்டதாகவும் திருப்பணி செய்வார் யாருமில்லை என்றும் கூறினர். ஊர்ப் பெரியவர்களிடம் இக்கோயிலைச் சீரமைக்க உதவமுடியுமா என்று கேட்டபோது மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டனர். மருதூர்ப் பணி முடித்துத் திரும்பியதும் மஜீதுடன் பேசினேன். அவர் உடனிருப்பதாக உறுதியளித்தார். நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுடன் தாம் வந்துவிடுவதாகக் கூறிய நண்பர் இராஜேந்திரன், அது மார்ச்சுத் திங்களாக இருந்தமையால் (1985) குறைவான அளவிலேயே மாணவர்கள் கலந்துகொள்ள முடியும் என்று தெரிவித்தார். அதனால், சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சீ. கீதாவின் உதவியை நாடினேன். செயலூக்கமும் அன்புள்ளமும் கொண்ட சீ. கீதா உடன் ஒப்புக்கொண்டார். ஊர்ப் பெரியவர்கள் கோயிலுக்கு அருகில் நீர்க்குழாய் ஒன்று வைத்துத் தருமாறும் நெடுஞ் சாலையில் இருந்து ஊருக்குள் நுழைய பெருஞ்சுற்றுச் சுற்றி வரவேண்டியிருப்பதால், நெடுஞ்சாலையிலிருந்து கோயிலுக்கு நேர்ப்பாதை ஒன்று அமைத்துத் தருமாறும் கேட்டார்கள். அவர்கள் கேட்பில் நியாயம் இருப்பதை உணர்ந்தேன்.

கோயிலைச் சுற்றி வயல்வெளிகள்தான். அவை கோயில் இருந்த மேட்டுப்பகுதியை முப்புறத்தும் சூழ்ந்திருந்தன. கோயி லின் மேற்கில் ஊர் அமைந்திருந்தது. அதனால், நெடுஞ்சாலை யில் இருந்து கோயிலுக்கு நேரடிச் சாலை அமைக்கவேண்டு மாயின் வயல்வெளியை அகற்றிச் செய்யவேண்டியிருக்கும் ஊரார் பயன்பாட்டில் இருந்த அந்நிலப்பகுதியை எப்படிக் கேட்டுப் பெறுவது என்பது எனக்குத் தெரியவில்லை. அதற்குள் கோயில் சீரமைப்பிற்கு 11. 3. 1985 என நாள் குறித்தாயிற்று.

சீரமைப்புப் பணியைத் தொடங்கிவைக்கக் காவல்துறைத் துணைத் தலைவர் வெங்கடேசனையும் அவரது துணைவி யாரையும் அழைத்திருந்தோம். காலையில் சீரமைப்புப் பணி தொடங்கியது. காவல்துறைத் துணைத் தலைவர் கோயிற் பணிக்கென வந்திருந்த மாணவர்கள், ஊர்மக்கள் இடையே சிறிது நேரம் பேசிய பின், மாணவர்களைப் பாராட்டி ஊக்கு வித்தார். நண்பர் மஜீது கோயில்களின் அருமை பற்றிக் கூறச்

சீரமைப்புப் பணி தொடங்கியது. வாணி தம் அன்னையாருடன் வந்திருந்தார். பேராசிரியர் கீதாவும் இராஜேந்திரனும் தம் மாணவர்களுடன் பணியில் ஈடுபட்டனர். ஊர் இளைஞர்கள் கோயில் மீதேறி மரங்களை வெட்டி வீழ்த்தினர். ஐந்தரை மணியளவில் மாணவர்களும் ஊர் இளைஞர்களுமாய்ச் சேர்ந்து பல்லாண்டுகளாய்ப் பாழ்பட்டுப் போயிருந்த அந்தக் கோயிலுக்குப் புதிய வடிவமளித்தனர்.

ஊரார் உதவியுடன் மாணவிகளும் மாணவர்களும் கோயிலை மெழுகி, அழகழகான கோலங்கள் போட்டனர் மாலையில் வழிபாட்டைத் தொடங்கி வைக்க மாவட்ட ஆட்சித் தலைவரும் அவர் துணைவியாரும் வந்திருந்தனர். கி. ஆ பெ. விசுவநாதம் மேனிலைப் பள்ளித் தாளாளர் அமரர் கோவிந்தம் பிள்ளை, சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி முதல்வர் காமாட்சி இவர்களும் உடனிருந்தனர் சரியாக ஆறு மணிக்குக் கோயிற் பணியில் உழைத்தவர்களே கூட்டுறவாய் வயலூர் சிவாச்சாரியார் அமரர் ஐம்புகேசுவரரின் உதவியுடன் அந்தப் பரம்பொருளை முழுக்காட்டி, விளக்கேற்றி, தேவார இசை முழங்கப் பூத்தூவி வழிபாட்டைத் தொடங்கினர். அந்தக் கோயில் அன்று புது வாழ்க்கை பெற்றது.

மாணவர்கள் தொடங்கிய வழிபாட்டைத் தொடர்ந்து நாளும் கோயிலில் பூத்தூவி விளக்கேற்றி மக்களில் ஒரு சிலரேனும் வழிபட்டபோதும், சாலை அமையாமையும் நீர்க் குழாய் இல்லாமையும் மீண்டும் அக்கோயில் பழைய நிலைக்குப் போய்விடுமோ என்ற அச்சத்தை எனக்குத் தந்தது. அதனால் மாவட்ட ஆட்சித்தலைவர் வ. விசுவநாதனைச் சென்று பார்த்தேன். அவர் அனைத்து உதவிகளும் செய்ய முன்வந்தார். பனமங்கலத்தை உள்ளடக்கிய கோட்ட வளர்ச்சி அலுவலரைத் தொலைப்பேசியில் அழைத்து உடனே பனமங்கலம் சென்று மக்கள் தேவைகள் அறிந்து வருமாறு அறிவுறுத்தினார்.

ஊர்மக்களை அரசு அலுவலர் தொடர்பு கொண்டார். பொதுமக்கள் என்னிடம் வைத்த வேண்டுகோள்களை அவரிடமும் கூறினர். இது அரசின் பொறுப்பு என்றும், ஆனால், சாலை அமைப்பதற்கான வழியிலுள்ள நிலப்பகுதிகள் ஊர்மக்களின் சொத்தாக இருப்பதால், யாரேனும் நிலத்துண்டுகளைக் கொடை

யாகத் தந்தால்தான் சாலை அமைத்தல் கூடுமென்றும் அவர் தெரிவித்தார். அரசு அமைக்கும் சாலை ஊர் முழுவதற்கும் பயன் படும் என்பதறிந்த நிலையில் பெரியவர் ஒருவர் தம்முடைய நிலப்பகுதியை அரசு எடுத்துக்கொண்டு சாலை அமைக்கலாம் என அறிவித்தார். உடன் பணிகள் தொடங்கின. இரண்டே நாட்களில் கோயில் உள்ள பகுதிக்கு குழாய் இணைப்புக் கிடைத்தது. ஊர் மக்களின் கொண்டாட்டத்திற்கு அளவே இல்லை. சாலை அமைக்கும் பணியை மேற்கொண்ட வளர்ச்சி அலுவலர் அப்பணியை ஒரு வாரத்தில் முடித்துத் தந்தார்.

சாலைத் திறப்பு விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வ. விசுவநாதன், அவர் துணைவியார் ஆதிரைச்செல்வி அம்மை யார் காவல்துறைத் துணைத் தலைவர் வெங்கடேசன் அவர் துணைவியார் இராணியம்மையார் இவர்கள் வந்திருந்தனர். கோயிலைச் சீரமைத்து வழிபாடு தொடங்கத் துணைநின்ற அனைவரும் கலந்து கொண்ட அந்நிகழ்வில் நிலமளித்த பெரிய வருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். அன்று கோயில் வழிபாடு மிகச் சிறப்பான நிலையில் அமைந்தது. விருந்தினர்கள் அனைவருக்கும் ஊரார் பொங்கல் வழங்கினர். 'பனமங்கலத்தில் ஒரு புது மங்கலம்' என்னும் தலைப்பில் இக்கோயில் புதுவாழ்வு பெற்ற வரலாற்றைக் கதிர் கட்டுரையாக வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

பனமங்கலம் பணியின்போது எனக்கு உறுதுணையாய் இருந்த பேராசிரியர் சீ. கீதா உழைப்பில் சளைக்காதவர். வாணியின் நெறியாளரராக அறிமுகமாகி, என் பணிகளுக்குத் துணைநின்ற நாட்டு நலப்பணித் திட்டஅலுவலராய் வளர்ந்து, நாளடைவில் தம் அன்பினாலும் ஊக்கம் மிகு உழைப்பாலும் என் இனிய தங்கையாய் வரலாற்றாய்வுக் குடும்பத்தில் தம்மை இணைத்துக் கொண்ட பேராசிரியர் கீதாதான், என் வழிக் கோயிற் கட்டடக் கலையை முறையாகப் பயில முன்வந்த முதல் பேராசிரியர். அதற்குத் தூண்டலாகவும் துணையாகவும் இருந்தவர் பேராசிரி யர் கோ. வேணிதேவி. சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியில் வரலாற்றில் முதுகலை பயிலும் மாணவியருக்குக் கோயிற் கட்டடக்கலையையும் கல்வெட்டியலையும் இரண்டு முதன் மைப் பாடங்களாக அறிமுகப்படுத்தி, இன்றளவும் தொடர்ந்து

அவை மாணவியரைச் சென்றடையச் செய்து வரும் அப்பெரு மக்கள் இருவரும் வணங்கத்தக்கவர்கள்.

கோயிற் கட்டடக்கலையைக் கற்றுக்கொள்ளப் பேராசிரியர் சீ. கீதா மேற்கொண்ட பயணங்கள் பெரும் பொருட்செலவின. வீட்டை விட்டு வெளியில் சென்று ஆய்வு செய்வதால் குடும்ப நிருவாகத்தில் ஏற்படும் சங்கடங்கள் வேறு. எனினும் சற்றேனும் தயங்காமல், ஓர் அரிய கலையைக் கற்றுக் கொள்கிறோம் என்ற உணர்வுடன் அவர் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு கட்டடக்கலை பயின்றார். பல்லவ மண் பலமுறை எங்களைத் தாங்கி மகிழ்ந்தது. வேணிதேவி, கீதா, நளினி, அகிலா, நான் என எங்கள் பயணங்கள் அவர் கல்விக்குத் துணை நின்றதுடன், கோயில் கட்டடக்கலையில் மேன்மேலும் தெளிவு பெற எனக்கும் நளினிக்கும் பேருதவியாயின. அத்யந்தகாமத் தின்பால் நாங்கள் ஈர்க்கப்பட்டதும் அது போல் அமைந்த பயணங்கள் ஒன்றின் போதுதான்.

1983-84ல் நான் மேற்கொண்ட சில கோயிலாய்வுப் பயணங்கள் மறக்கமுடியாதவை. அவற்றுள் முதன்மையானது வங்கநாட்டைச் சேர்ந்த பாலா மரபுக் கலைவடிவம் ஒன்றை மேலைக்கடம்பூர் அமிர்தகடேசுவரர் கோயிலில் கண்டமை தான். முதல் குலோத்துங்க சோழரின் கட்டுமானமாக அடையா ளப்படுத்தப்பட்டுள்ள மேலைக்கடம்பூர் கோயிலைக் 'கரக் கோயில்' என்று அப்பர் குறித்துள்ளார். சம்பந்தராலும் பாடப் பெற்றுள்ள இவ்வூரிலுள்ள கோயில் தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் பார்க்கவேண்டிய கலைக்கோயில். விமானம், தேர் வடிவில் அமைந்த இந்த அழகுக் கோயிலின் சிற்பங்களும் கட்டுமானமும் கோயிற்கலைகளில் தெளிவு பெற விழையும் ஒவ்வொருவரும் காணவேண்டிய அமைவுகளாகும்.

தனியார் பொறுப்பில் இருந்த இக்கோயிலுக்கு நாங்கள் முதன் முறையாகச் சென்றபோது கோயிலின் மரபுவழி அறங் காவலர் கோவிந்தப்பிள்ளை எங்களை அன்புடன் வரவேற்றார். கோயிலைப் பற்றி அறிந்துகொள்ளவும் விழைந்தார். அவர் இல்லத்திலேயே மதிய உணவளித்துப் போற்றினார். அவரது மகன் மாசிலாமணி அப்போது அண்ணாமலைப் பல்கலையில்

படித்துக்கொண்டிருந்தார். கோயில் முழுவதும் பார்வையிட்டுக் கல்வெட்டுகளைத் தேடிப் படித்ததுடன், கட்டுமானம் பற்றித் தெரிந்தவரையில் குறிப்பெடுத்தோம். இந்தக் கோயிலின் உமை யன்னைதான் என் முதல் நூலான கலை வளர்த்த திருக்கோயில் களின் அட்டையை அழகுபடுத்தியவர்.

பாதுகாப்புக் கருதி நிலவறையில் வைக்கப்பட்டிருந்த செப்புத்திருமேனிகளிலிருந்து பாலா நடராசரை வெளிக் கொணரச் செய்து என் ஆய்வுக்கு வழங்கிய கோவிந்தப்பிள்ளை, அதைப் பற்றி விரிவாக அறிந்து கொள்ளவும் விழைந்தார். ஏறத்தாழ அரைமணி நேரம் பல கோணங்களில் அந்த ஆடவல் லான் திருமேனியை நானும் என் வாழ்வரசியும் ஆராய்ந்தோம். நந்தியின் மேல் இறைவன் ஆடுமாறு அமைந்த அபூர்வமான செப்புத்திருமேனி அது. பத்துத் திருக்கரங்களுடன் அமைந்த அந்த நந்தி தாண்டவமூர்த்தியின் தளத்தில் இறைவனுடன் ஆடுமாறு போலப் பல இறைவடிவங்கள் இடம்பெற்றிருந்தன.

அறிஞர் சி. சிவராமமூர்த்தி தம்முடைய நடராசர் பற்றிய நூலில் அந்தச் செப்புத்திருமேனியைப் பற்றி விரிவாகப் பேசி யுள்ளார். ஆனால், அவர் தரவுகளில் பல பிழையாக இருந்த மையை நேரடி ஆய்வில் அறியமுடிந்தது. பத்துக் கைகள் உள்ள அந்த இறைத்திருமேனிக்குப் பதினாறு கைகள் இருப்பதாக அவர் குறிப்பிட்டிருப்பது கொண்டு நோக்குகையில், செப்புத் திருமேனியை நேரடியாகப் பார்க்காமல் ஒளிப்படத்தை வைத்துக் கொண்டே சிவராமமூர்த்தி எழுதியிருப்பாரோ என்றே நினைக் கத் தோன்றுகிறது. ‘ஆடவல்லான்’ எனும் நூலை எழுதியுள்ள மகாவித்துவான் தண்டபாணி தேசிகரும் இத்திருமேனியைப் பற்றித் தவறான தகவல்களே தந்துள்ளார். இத்திருமேனிக்கு எட்டுக் கைகளே இருப்பதாகக் குறித்துள்ளார் அவர்.

இந்தத் திருமேனியைப் பற்றிய என் ஆய்வுக்கட்டுரை, ‘பேரறிஞரையும் மயக்கிய பாலா நடராசர்’ என்ற தலைப்பில் அமுதசுரபி தீபாவளி மலரிலும், கோயிலைப் பற்றிய விரிவான கட்டுரை, ‘கடம்பூர்க் கரக்கோயில்’ என்ற தலைப்பில் 22. 10. 1983ம் நாள் தினமணி கதிரிலும் வெளியானபோது பெரும் வரவேற்பு கிடைத்தது. பாலா நடராசர் பற்றி ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை தருமாறு கோபாலன் வேண்ட, ‘A Unique Bronze from

Bengal' என்ற தலைப்பில் கட்டுரை தந்தேன். அக்கட்டுரை 10. 1. 1984ம் நாள் இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியாகிப் பரவலான வாசகர் வட்டத்தைப் பெற்றுத் தந்தது.

அக்கட்டுரை பெற்ற வரவேற்பில் 11. 2. 1984ம் நாள் இதழில், 'Vayalur Chaturan' கட்டுரையும் 2. 6. 1984ம் நாள் இதழில், 'Novel Nataraja of Nallur' என்ற கட்டுரையும் 11. 8. 1984ம் இதழில், 'Rare Icons of Chandesvarar' என்ற கட்டுரையும் 1.12.1984ம் நாள் இதழில், 'ஆனந்தத் தாண்டவர்' என்னும் கட்டுரையும் வெளியாயின. அவற்றுக்கெல்லாம் முன்பே, 'A Rare Gangavatarana Icon' என்ற தலைப்பில் என் முதல் கட்டுரையை 17. 12. 1983ம் நாள் எக்ஸ்பிர ஸில் கோபாலன் வெளியிட்டிருந்தார்.

ஒரு தமிழ் நாளிதழில் வெளியாகும் கட்டுரைக்குக் கிடைக் கும் வரவேற்பிற்கும் ஓர் ஆங்கில நாளிதழில் வெளியாகும் கட்டுரைக்குக் கிடைக்கும் வரவேற்பிற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. தமிழ் நாளிதழ்களில் கட்டுரைகளைப் படிப்பவர்கள் குறைவான எண்ணிக்கையினரே. ஆனால், ஆங்கில நாளிதழ் களில் அவற்றைப் படிப்பவர் எண்ணிக்கை மிகுதி. எனக்கு வந்த மடல்களே அதற்குச் சான்றாகும். ஆனால், தினமணி கதிரில் என் கட்டுரைகள் வெளியாகத் தொடங்கிய பிறகு நான் பரவலாக அறியப்பட்டமையைக் கோயிலாய்வுகளுக்குச் சென்ற போது அறியமுடிந்தது. கதிரும் எக்ஸ்பிரஸும் என் பணிகளைத் தமிழகமெங்கும் கொண்டு சேர்த்தன. அந்த அரும்பணியைச் செய்தவர் என் அருமை நண்பர் அமரர் கோபாலனே ஆவார். வரலாற்றை நேசித்த அந்த மனிதர் என் பணிகளையும் நேசித்தார். அவற்றிலிருந்த உண்மைத் தன்மையும் அறிவியல் பார்வையுமே தம்மைக் கவர்ந்ததாகப் பலமுறை கூறியுள்ளார். திரு.கோபாலன் போல் என்றென்றும் நினைவில் வாழும் இனிய நண்பர்கள் வாய்த்தமை என் பயணத்தில் நான் பெற்ற பேறுகளுள் தலையாயதாகும்.

(வளரும்)



பஞ்சவர்ணசாமி கோயில் சிற்பம்



புத்தர் சிற்பத்தை மீட்ட பெருமக்கள்



தான்தோன்றீசுவரம் வரகுணர் கல்வெட்டு



மஞ்சாங்குளம் திருமால் மீட்கப்படல்



மிதக்கும் கோயில்



ஆலம்பாக்கம் மாடமேற்றளி இராமர்

88059

## இராசமாணிக்கனார் புகழ் மீண்டும் ஒலித்தது

ஆண்டு தோறும் ஆவணி மூலத் திருநாளைக் கொண்டாடி வரும் தருமபுரம் ஆதீனம், கடந்த ஐம்பத்தேழு ஆண்டுகளாக சிறப்புப் புலமை பெற்ற அறிஞர் ஒருவரைத் தேர்ந்து, அந்நாளில் சிறப்பித்து வருகிறது 1962ல் இவ்விழாவில் மூதறிஞர் டாக்டர் மா. இராச மாணிக்கனாருக்கு 'சைவ இலக்கியப் பேரறிஞர்' எனும் விருது வழங்கப்பட்டது அந்நிகழ்ச்சி நடந்து 45 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு (2007) மூலத் திருநாளில் இராசமாணிக்கனாரின் மாணாக்கனாகிய எனக்கு விருது வழங்கப்பட்டது. விழா நாளன்று நான் எழுதித் தினமணி நாளிதழ் வெளியிட்ட 'நானறிந்த இராசமாணிக்கனார்' என்ற கட்டுரை படிக்கப்பெற்று அதன் ஒளியச்சுப் படிகள் வந்திருந்தாருக்கு வழங்கப்பட்டன.

'இராசமாணிக்கனார் தலைசிறந்த தமிழ் அறிஞர் என்பதை அவருடைய பல நூல்களையும் கட்டுரைகளையும் படித்தவர்கள் உணர்ந்திருப்பார்கள். அவருடன் நேரில் பழகும் வாய்ப்புப் பெற்றவர்களுக்கே புலமைக்கும் அப்பாற்பட்ட அவருடைய குண நலன்கள் தெரிந்திருக்கும் பண்பாளர்; நிதானப் போக்குப் படைத்தவர்; தணிந்த குரலில் மென்சொற்களில் அவருடைய பேச்சு இருக்கும். ஆழ்ந்த புலமை இருந்தது; ஆனால் அகந்தை இல்லை. மாணவர்களிடம் அவர் காட்டிய பரிவையும் மாணவர்களும் மற்ற ஆசிரியர்களும் அவர்மீது வைத்திருந்த பெருமதிப்பையும் நான் நேரில் அறிவேன். சமூக சீர்திருத்தங்களைப் பற்றிய அவரது கொள்கைகள் தீவிரமானவை; அவற்றைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தார், ஆனால் பிறர் மீது திணிக்க முயலவில்லை. அவரது தமிழறிவும் சீரிய வாழ்வும் இராசமாணிக்கனாருக்கு அழியாப் புகழைத் தேடித் தந்துள்ளன' என்ற பகுதி படிக்கப்பட்ட போது அந்த மாமன்றமே அதிரும் வண்ணம் கையொலி எழுந்தது.

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, இராசமாணிக்கனாரின் நூற்றாண்டின் பொழுது அதே மாமன்றத்தில் ஆவணி மூலத் திருநாளில் அவருடைய புகழ் மீண்டும் ஒலித்தது இறைவன் திருவருளால் நிகழ்ந்த ஓர் அற்புதம் என்றே கருதுகிறேன். இதற்கு ஒரு நிமித்தமாக மட்டுமே இருந்த எனக்கு அளவற்ற மன நிறைவு உண்டாயிற்று.

- ஐராவதம் மகாதேவன்

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

வரலாற்றாய்வு மையத்தின் ஆய்விதழ்

| | | |
|---|---|---|
| வரலாறு | 7, 8, 9-10, 11, 17 (ஒவ்வோர் இதழும்) | ரூ. 150 |
| ஆவணம் | 1 | ரூ. 50 |
| ஆவணம் | 2 | ரூ. 100 |

## ஆய்வுநூல்கள் விற்பனைக்கு

### இரா. கலைக்கோவனின்

| | |
|---|---|
| வரலாற்றின் வரலாறு | ரூ. 100.00 |

### மு. நளினி, இரா. கலைக்கோவனின்

| | |
|---|---|
| மகேந்திரர் குடைவரைகள் | ரூ. 100.00 |
| பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும் | ரூ. 120.00 |
| வலஞ்சுழி வாணர் | ரூ. 120.00 |
| கோயில்களை நோக்கி . . . | ரூ. 120.00 |
| தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள் - தொகுதி 1 | ரூ. 100.00 |
| மதுரை மாவட்டக் குடைவரைகள் | ரூ. 150.00 |

*நூல்களைப் பெற விழைவோர், நூல்களுக்குரிய தொகையுடன் அஞ்சல் செலவிற்கென ரூபாய் ஐம்பது சேர்த்து டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் பெயரில் எடுக்கப்பட்ட வரைவோலையாகத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவேண்டும்.*

**டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்**

C87, பத்தாவது குறுக்குச் சாலை, தில்லைநகர் மேற்கு,

திருச்சிராப்பள்ளி - 620 018.